காங்கிரஸ் சரித்திரம்















அல்லயன்ஸ்
கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை

இதை பஸ்பு சொல்லாதமில் இருக்கது.
சூ ஆத்தியவர்கு.

பொன் விழா பிரசுரம்

காங்கிரஸ் ::
சரித்திரம் ::

இது
'தமிழ் சுயராஜ்யா' பத்திரிகையின் ஆசிரியராகவும்,
'சுதேச மித்திரன்' உதவி ஆசிரியராகவுமிருந்தவரும்,
'சுயராஜ்ய பேரிகை' நூல்களின் ஆசிரியருமான

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

இயற்றியது

"தினமணி" ஆசிரியர்

திரு. T. S. சோக்கலிங்கம் அவர்கள்

எழுதிய முன்னுரையுடனும்

ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி அம்மாள், M. L. C., அவர்கள்

சிறப்புரையுடனும் கூடியது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

 [விலை அணா 5

ஆரியமத உபாக்யானம்

எங்கள் வெளியீடுகளில் தலைமை வகிப்பது. தெலுங்கு, கன்னடப் பதிப்புக்களும் உண்டு. **150,000**-பிரதிகள் வரை செலவாகி யிருப்பதே, இவைகளின் சிறப்புக்கும், உயர்வுக்கும் தகுந்த அத்தாட்சி அல்லவா? இவைகளில், அரிய நீதிக் கதைகளும், கண்ணைக்கவரும் போடோ படங்களும் நிறைந்துள்ளன. சிறுவர் சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கக்கூடிய இனிய எளிய நடையில் இவை எழுதப்பட்டுள்ளன.

(முதல் பாகம், 22-ம் பதிப்பு.) : : (2-ம் பாகம், 16-ம் பதிப்பு.)

முதல் பாகம் அணு 8 : : இரண்டாம் பாகம் அணு 10

Printed at the Model Press, Madras. (Formes 11 to 17
Printed at the Jubiter Press)

உ

விஷய அட்டவணை

முகவுரை

காங்கிரஸ்! என்ன கம்பீரமான வார்த்தை! என்ன கவர்ச்சியான வார்த்தை! காங்கிரஸ் என்ற வார்த்தையைக் கேட்கும்போது ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் பெருமை பொங்குகிறது; கவலை பறக்கிறது. தாய்க்கு தன் குழந்தையிடம் இருப்பதைப்போன்ற அன்பு ஏற்படுகிறது; அதே சமயத்தில் குழந்தைக்கு தாயைக் காணும்போது ஏற்படும் பூரிப்பும், நம்பிக்கையும், பாதுகாப்பு உணர்ச்சியும் ஏற்படுகின்றன. இம்மாதிரி அன்பும், ஆதரவும் நம்பிக்கையும் ஏற்படக் காரணமென்ன? காங்கிரஸ் என்ற வார்த்தையில் மந்திரம் எதுவுமில்லை. ரஷியாவிலோ இங்கிலாந்திலோ "காங்கிரஸ்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன், அங்குள்ள ஜனங்களுக்கு இந்தியருக்கு ஏற்படும் பெருமையோ உணர்ச்சியோ ஏற்படுவதில்லை. இந்தியாவில் மட்டும் "காங்கிரஸ்" என்ற நாமத்திற்கு அவ்வளவு மகத்துவம் ஏற்பட்டிருக்கும் ரகசியமென்ன? இந்த ரகசியத்தையும் காரணத்தையும் இப்புத்தகத்தை படித்தால் அறிந்து கொள்ளலாம். காங்கிரஸ் என்ற வார்த்தையைக் கேட்டவுடன், லட்சக் கணக்கான தியாகிகள் செய்த தியாகமும், எண்ணிலடங்காதவர்கள் அடிகளையும், ஜெயில் வாசத்தையும், அபராதங்களையும் பொருட்படுத்தாமல் காங்கிரஸின் உத்தரவை நிறைவேற்றிவைக்க முன் வந்ததும், இந்தியாவிலேயே சிறந்த அறிவாளிகள் எல்லாரும் சேர்ந்து அதற்கு சேவை செய்ததும், அந்த சேவைக்காக அவர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்ததும், ஜாதி, மத பேதமில்லாமல் எல்லா இந்தியரும் சகோதரர்கள், இந்தியா ஒரே

சமூதாயம் என்ற உணர்ச்சியை ஊட்டி வளர்க்க அது இதுவரை செய்துவந்த வேலைகளும் ஒரே உருவாய்த் திரண்டு நம் கண் முன்னால் வருகின்றன. இவையே காங்கிரஸின் சக்தி. இந்த சக்திதான் "காங்கிரஸ்" என்ற பெயரைக் கேட்டவுடன் இந்தியர் பெருமை கொள்ளும்படி செய்கிறது. இந்த சக்திதான் இந்தியரை இன்று தலை நிமிர்ந்து நடக்கும்படி செய்கிறது. இந்த சக்திதான் இந்தியாவை உலகம் மதிக்கும்படி செய்தது. இதனால்தான் காங்கிரஸிடம் இந்தியருக்கு அன்பும், அதே சமயத்தில் எதற்கும் அஞ்சாத நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த சக்தியை பூர்ணமாய் அறிந்தவர்களு முண்டு; அறியாதவர்களு முண்டு. அறியாதவர்கள், காங்கிரசுக்கு பின் பலமாக ஏதோ ஒரு பெரிய சக்தி இருக்கிறதென்பதை மட்டும் நிச்சயமாய் அறிவார்கள். பூர்ணமாய் அறிய வேண்டுமானால் காங்கிரஸ் சரித்திரத்தை படிக்கவேண்டும். அதைப் படித்தால், காங்கிரசுக்கு இவ்வளவு பெரிய மதிப்பும், சக்தியும் எப்படி ஏற்பட்டதென்பதை எல்லாரும் அறிந்துகொள்ளலாம். வர வர பலத்திலும், பெருமையிலும் வளர்ந்துகொண்டே போகும் 50-வருஷமான ஸ்தாபனம் காங்கிரஸைத் தவிர வேறு எதுவும் இந்தியாவில் இல்லை. இவ்வருஷத்தோடு, காங்கிரஸ் ஸ்தாபிதமாகி 50 வருஷங்களாகின்றன. அதற்காக இந்தியாவெங்கும் காங்கிரசுக்கு தங்க ஜூபிலி விழா நடைபெறுகிறது. எத்தனையோ அடக்கு முறைகள் ஏற்பட்டும், இன்று காங்கிரஸ் முன்னைவிட அதிக துடி துடிப்பு உள்ளதாகவே இருக்கிறது. இந்த ஆச்சரியமான மகத்தான ஸ்தாபனத்தின் சரித்திரத்தை இப் புத்தகம் கூறுகிறது. 50-வருடங்களாய் காங்கிரஸை வளர்த்த கதையைச்

சொல்லுவதென்றால் அவ்வளவு சுலபமல்ல. இருந்தாலும், முக்கியமான விஷயங்களை விடாமலும், தமிழர் சுலபமாயும், தெளிவாயும் அறியும் விதத்திலும் ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் இந்த காங்கிரஸ் சரித்திரத்தை எழுதியிருக்கிறார். தமிழருக்கு ராஜீய ஞானம் வளர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, தமிழரின் செல்வ நிலைமைக்கு ஏற்றவாறும், படிக்கும் பொறுமையை கெடுக்காத வழியிலும் டஜன் கணக்கான சிறு சிறு நூல்கள் எழுதி ஸ்ரீ அய்யர் வெளியிட்டு வந்திருக்கிறபடியால், காங்கிரஸ் சரித்திரத்தை சுருக்கமாய் கூறுவதிலும் அவர் வெற்றி பெற்றுவிட்டார். ஸ்ரீ அய்யரின் சரித்திர ஞானமும், தமிழ் பாஷையில் அவருக்குள்ள ஆற்றலும், அவர் தேசாபிமானமும், இந்த சரித்திரத்தின் மூலம் வெளிப்படுகிறது. ஒத்துழையாமைக்குப் பின்னால் தான், காங்கிரஸின் செல்வாக்கு படித்தவர், பாமரர் என்ற வித்தியாச மில்லாமல் எல்லாரிடமும் பரவ ஆரம்பித்தது. ஆகவே அதற்கு முன்னுள்ள காங்கிரஸ் சரித்திரத்தை அநேக தமிழர் அறிந்தேயிருக்க மாட்டார்கள். எனவே இச்சரித்திரம் எழுதியதன் மூலம் ஸ்ரீ அய்யர் தமிழ் நாட்டிற்கும், காங்கிரஸிற்கும் ஒரு சிறந்த தொண்டு செய்திருக்கிறார். இந்தச் சரித்திரம் முதலில் "தினமணி"யில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்ததை "தினமணி" நண்பர்கள் அறிவார்கள்.

அதனைச் சீர்திருத்தி, ஒழுங்குபடுத்தி புத்தகரூபமாகவும் வெளிவர வேண்டும் என்ற உயரிய நோக்கங்கொண்டு அல்லயன்ஸ் கம்பெனியார் இதை பிரசுரிக்கிறார்கள். பண்டித நேரு, ஸ்ரீ வித்தல்பாய் பட்டேல், பாபு ராஜேந்திர பிரசாத், ஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் முதலிய தேசியத் தலைவர்கள்

சரித்திரங்களேயும் இக்கம்பெனியார் முன்னுல் பிரசுரித்திருக்கிறார்கள். அவற்றில் விசேஷம் லாபம் அடையாமலிருந்தும், இச்சரித்திரத்தையும் பிரசுரிக்க முன் வருவதிலிருந்து அவர்களின் தேசத் தொண்டை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. காங்கிரஸின் தங்க ஜூபிலி சமயத்தில், லாப நஷ்டத்தை எதிர்பார்க்காமல் மிகவும் சொற்ப விலேயில் இப்புத்தகத்தை பிரசுரிக்க அல்லயன்ஸ் கம்பெனியார் முன் வந்திருக்கிறபடியால், அவர்களுடைய எதிர்கால தேசீய வேலேக்கு ஊக்கங் கொடுக்கும் விதத்தில், இப்புத்தகத்தை தமிழர் ஏராளமாய் வாங்கி ஆதரவளிப்பார்களென்று நம்புகிறேன். காங்கிரஸ் வாழ்க! வந்தே மாதரம்.

25–12–35
சென்னே.

டி. எஸ். சோக்கலிங்கம்.

சிறப்புரை

தேசீய மகா சபையின் பொன் விழாவை முன்னிட்டு ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ‘காங்கிரஸ் சரித்திரம்’ எழுதியிருக்கிறார். இதனை மகா ஜனங்கள் அன்புடன் வரவேற்பரென நம்புகிறேன். பொன் விழா மிகவும் மகத்தான விழா. உதித்த நாள் தொடங்கி, இந்த ஐம்பது ஆண்டுகளாக நமது காங்கிரஸ் மகா சபை பெருமிதமாக வளர்ந்து வந்துள்ளது. அது கண்டு, இந்தியர் அனைவரும் ஆனந்த பரவசமடைதல் கடமையாகும்.

ராஜீயம், பொருளாதாரம், கைத்தொழில், ஜனசாரம் முதலிய துறைகளில் நெருக்கடியான பல பிரசினைகள் தோன்றியுள்ள இச்சந்தர்ப்பத்தில் ‘காங்கிரஸ் சரித்திரம்’ வெளியாகிறது. அந்நிய ஆதிக்கத்தை உதறித்தள்ளி, சுதந்திர மக்களாக நாம் ஆக வேண்டுமானால், நாம் அனைவரும் ஒரு மனங்கொண்டு, பலமனைத்தையும் ஒன்று கூட்டி, சுயராஜ்யத்திற்குத் தடையாயிருக்கும் விபரீதங்களை யெல்லாம் போராடித் தொலைக்கவேண்டும்.

இன்று நாம் அடைந்துள்ள உயர்நிலைக்கு நமது காங்கிரஸ் மகா சபையே மூலகாரணம். ‘ஜயமுண்டு, பயமில்லை’ என்பதே அச்சபையின் போதனை. நாம் கோழைகளோ? அன்று! தீர புருஷர்! வீர மாதர்! எந்தத் தியாகத்துக்கும் சளைக்க மாட்டோம். பொன் விழாவைக் கொண்டாடுகையில், இன்னும் நாம் அடிமைகளாகவே உள்ளோம் என்பதை மறப்பதற்கில்லை. பொன் விழா நமக்கு ஊக்கம் ஊட்டும் நாள்!

மறைந்துபோன சுதந்திர வீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாள்! சுயராஜ்ய சித்தி எய்த முனைப்புக்கொள்ளும் நாளுமாம்!


ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் பிரபல நூலாசிரியர் என்பது பிரசித்தம். அவர் தேச பக்தர்; தீவிர தேசீய வாதி; தேசத்திற்காகக் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்; 'காங்கிரஸ் சரித்திரம்' எழுதி நமது பெருமதிப்புக்குப் பாத்திரமானவர். அவருடைய இந்நூல் பொன் விழா சமயத்தில் வெளி வருதல் மிகவும் விசேஷம். ஆனதால், அனைவரும் அவரைப் பெரிதும் பாராட்டவேண்டும்.

இந்தச் சரித்திரத்தை வெளியிடும் 'அல்லயன்ஸ் கம்பெனி'யாரும் பிரபல பிரசுரகர்த்தர்கள். இதற்கு முன்னம் தேசீய நூல்கள் பல வெளியிட்டிருக்கின்றனர். அந்நூல்களுள், இவ்வருஷம் காங்கிரஸ் மகா சபையின் தலைவரான **பாபு ராஜேந்திரப் பிரஸாதின்** ஜீவிய சரிதம் குறிப்பிடத்தக்கது. அதனையும் எழுதியவர் ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயரே. தேசீய நூல்கள் வெளியிடுவதே ஒரு கடமையாகக் கொண்ட அல்லயன்ஸ் கம்பெனியாரும், ஆசிரியர் ஐயரும் இன்னும் ஓங்கு சிறப்பு எய்துவார்களாக!


வந்தே மாதரம்!

சென்னை,
27-12-35.

இங்ஙனம்
ருக்மணி லட்சுமீபதி.



உமேச சந்திர பானர்ஜி




பத்ருதீன் டயாப்ஜி




ராய்பகதூர் பி. அனந்தாசார்லு



ரோமேச சந்திர தத்தர்




ஏ. ஸி. மஜும்தார்



ராஷ் பிஹாரி கோஷ்




டி. இ. வாச்சா




ஸர். ஹாசன் இமாம்




ஹக்கிம் அஜ்மல்கான்



ஆல்ப்ரெட் வெப்




ஹென்ரி காட்டன்



ஆண்ட்ரூ யூல்



நவாப் சையத் மகமது


பாபு பூபேந்திரநாத் பாசு


மகமத் ரஹிமுதுல்லா ஸயானி



டாக்டர் அன்சாரி




பண்டித மோதிலால் நேரு




அப்துல் கலாம் அஸாத்




கோபாலகிருஷ்ண கோகலே



பிஷன் நாராயண தார்



ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்


சர். சி. சங்கரன் நாயர்


ராவ்பகதூர்
ஆர். என். முதஹோல்கர்


தாதாபாய் நௌரோஜி



என். ஜி. சந்தாவர்க்கர்




ஸ்ரீமதி நெல்லி சென் குப்தா



ஸர் பெரோஸ்ஷா மேதா



டாக்டர் அன்னிபெசண்ட்



மதன் மோகன் மாளவ்யா




ஸ்ரீமதி ஸரோஜினி தேவி



ஸர்தார் வல்லபாய் படேல்



லார்ட் ஸின்ஹா



பாபு ராஜேந்திரப் பிரசாத்



மஹாத்மா காந்தி



பண்டிட் ஜவஹர்லால் நேரு

உ

காங்கிரஸ் சரித்திரம்

1. முன்னுரை

"காங்கிரஸ்" என்பது இங்கிலீஷ் வார்த்தை. சபை கூட்டம் என்று அதற்கு அர்த்தம். நாட்டுப் புறங்களிலே 'ஊர் கூடுதல்,' 'நாடு கூடுதல்' உண்டல்லவா? அவ்விதம் நம்மவரிலே, தேசபக்தர் ஆண்டுதோறும் ஒரு நகரில் கூடுவர்; தேச நிலையை நோக்குவர்; ஆட்சி முறையின் அவலத்தை ஆராய்வர்; சுகமே அனைவரும் வாழ வழிகோலுவர்; சுயராஜ்யம் எய்தும் வகை, துறைகளை வகுப்பர். அக்கூட்டமே காங்கிரஸ் மகாசபை எனப்படும். அச்சபை தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. அதன் பொன் விழாவை இவ்வாண்டு (1935-ஆம் வருஷம்) டிசம்பர் மாதம் 28-ந் தேதி சனிக்கிழமை கொண்டாடப் போகின்றனர். ஆதலின், அதன் சரித்திரத்தை ஆதியோடு அந்தமாக இங்கே சுருங்கச் சொல்லி விளங்க வைப்போம்.

மேகங்கள் ஆகாயத்திலே சஞ்சரிக்கும்; மலையுச்சிகளின் மீதும் படிந்து கிடக்கும்; குளிர்ந்த காற்று வீசினால், மழையாக மாறும். மலையுச்சியில் விழும் மழையோ சிறு சிறு அருவியாகக் கீழே ஓடிவரும்; தரையில் விழுந்து ஓடுகையில், பல அருவிகள் வந்து கலக்கும்; அப்பால் உபநதிகளும் ஓடிவந்துசேரும். சேரவே, பெரிய ஆறாகப் புரண்டு பெருகும். காங்கிரஸ் மகா சபையின் உற்பத்தியும் அத்தன்மைத்தாம்.

பூலோக போக பூமி:—பூலோக போக பூமி நமது பாரத பூமி. ஆதி முதல் இத்தேசத்தின் சரக்குகளும், பண்டங்களும் பிற நாடுகளுக்குப் போகலாயின. அவற்றின் அருமை பெருமை கண்டு, அயல் நாட்டார் அனைவரும் வியந்தனர்; எடைக்கு எடை பொன் கொடுத்தும் வாங்கினர். எனவே, செல்வமெல்லாம் அங்கிருந்து இங்கு வந்து குவிந்தது. பொன் விளையும் பூமியென எல்லோரும் எண்ணினர். மகா அலெக்சாந்தரின் கால முதல் அயலகத்தார் பலரும் இத்தேசத்தின்மீது படையெடுத்து வந்தனர்; பேரரசு கண்டனர்; பெரு வாழ்வும் கொண்டனர். அவர்களில் பலரும் இத்தேசத்தை விட்டு அகலவில்லை. செல்வத்தையும் இங்கிருந்து கொண்டுபோகவில்லை; நாளடைவில் மக்களோடு மக்களாகக் கலந்துவிட்டனர். அவ்விதம் படைகொண்டு இங்கே கடைசியாக வந்தோர் இஸ்லாமியர். சுமார் ஐந்நூறு வருஷம் அவர்களின் ஆட்சி இங்கே நிலைத்திருந்தது.

2. ஆங்கிலேயரின் தோற்றம்

இப்போது நம்மையும் தேசத்தையும் கட்டியாளுவோர் ஆங்கிலேயர். அவர்களின் சுயதேசம் இங்கிலாந்து. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஏழாயிரம் மைல் தூரம். இங்கே வியாபாரம் செய்து பிழைக்கும் நோக்கத்துடன் 1600-ஆம் ஆண்டில் அங்கே ஒரு கம்பெனி ஏற்பட்டது. அதன் பெயர் 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி.' இங்கிலாந்தின் அரசியான எலிஜபத் ராணி அதற்கு வியாபார சன்னது கொடுத்தாள். அக் கம்பெனியில் சேர்ந்தோர் அனைவரும் ஒன்றுகூடி, "கம்பெனியிலே பொறுப்பு வாய்ந்த எந்தப் பதவியிலும் கனவான்களை நியமிப்பதில்லை; மற்று நம்மைப் போன்ற பேர்வழிகளையே நியமிக்கவேண்டும்," என்று தீர்மானித்தனர்.

சண்டையும் சமாதானமும் :—அக்கம்பெனியைச் சேர்ந்தோர் 1612-ஆம் ஆண்டிலே இந்தியாவுக்கு வந்தனர். அப்போது இங்கே பேரரசு கொண்டிருந்தோர் இஸ்லாமியரில் ஒரு பிரிவான மோகலாயர். சூரத் நகரில் வியாபாரம் செய்ய அந்த ஆங்கிலேயர்களுக்கு அநுமதி கிடைத்தது. பின்பு, பல இடங்களில் வர்த்தகம் புரியவும், பண்டகசாலை கட்டிக் கொள்ளவும் உரிமைகள் கிட்டின. மொகலாய வல்லரசு கலகலக்கத் தலைப்பட்ட காலம், தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாக விரும்பிய சமயம். மதியூகிகளான அவ்வர்த்தகர் பார்த்தனர். இந்திய மன்னர், மக்கள் இவர்களுடன் சண்டை போடவும் சமாதானம் கொள்ளவும் அவ்வர்த்தகர் அதிகாரம் பெற்றனர். அவ்விதம் ஆணை தந்த ஆங்கில அரசன் இரண்டாவது சார்லஸ்.

நாடு சேர்க்கும் நாட்டம் :—அந் நிலையில் திரவியம் தேட 1668-ஆம் ஆண்டிலே பிரஞ்சுக்காரரும் இங்கே வந்த

னர். வியாபாரத்தில் இருவருக்கும் போட்டி உண்டா யிற்று. இதற்கு இடையில் இங்கிருந்த சிற்றரசரும் சுய நலங் கருதி, தம்முள் சண்டை யிட்டு, அன்னிய வர்த்தக ரின் உதவியை நாடி நின்றனர். பிரஞ்சுக்காரருக்கும் ஆங் கிலேயருக்கும் கடும்போர் மூண்டது. பிரஞ்சுக்காரர் சலித் துப் போயினர்; மண்ணுசையும் மறைந்தது. ஆங்கிலே யருக்கோ போட்டி என்பதே இல்லை. வியாபாரத்துடன், நாடு சேர்க்கவும் தலைப்பட்டனர். ராஜ தந்திரம், பிரித்தாளும் முறை, சமயோசித ஊக்கம் எல்லாம் துணை புரிந்தன. நம்மவரின் மதிமோசமும் கூடிக்கொண்டது. மொகலாய வல்லரசில் கடைப்பவல் அவுரங்கசீபும் காலகதி ஆயினன்.

பிளாஸிச் சண்டை:—வங்காளம் தனியரசாக இருந் தது. ஸ்ரீராஜதௌலன் அதன் அதிபனாக விளங்கினான். வங்கத்திலே முறை தவறி வர்த்தகம் புரிய அக் கம்பெனி முயன்றது. ஸ்ரீராஜதௌலன் அதற்கு இடங்கொடுக்க வில்லை. அப்போது, கம்பெனியின் பெருவீரனாக விளங்கி யவன் கிளைவ். சூழ்ச்சி பல செய்து அவன் வங்க வேந் தனை எதிர்த்தான். 1757-ஆம் ஆண்டிலே பிளாஸி என்னு மிடத்தில் சண்டை நடந்தது. கம்பெனியார் வெற்றி அடைந்தனர். ஸ்ரீ ராஜதௌலன் கொலையுண்டான். அவ் வெற்றியே இந்தியாவில் ஆங்கில அரசு ஏற்படுவதற்கு அடிப்படையாகும். பின்பு வர்த்தகரின் அரசு நான்கு திக்கிலும் பெருகிவந்தது.

ராஜதந்திர வலை வீச்சு:—உடனே சென்னை, பம்பாய், வங்காளம் என மூன்று மாகாணங்களை அக் கம்பெனியார் வகுத்தனர்; ஒவ்வொன்றையும் ஆள ஒரொரு கவர்னரை யும் நியமித்தனர்; மூன்று மாகாணங்களுக்கும் தலைவனாக 1774-ஆம் ஆண்டிலே கவர்னர் ஜெனரல் என்னும் மேலதி காரியையும் ஏற்படுத்தினர். முதல் கவர்னர் ஜெனரல்

வாரன் ஹேஸ்டிங்ஸ். அடுத்தடுத்து, பல கவர்னர் ஜெனரல்கள் வந்தார்கள். ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சமாக அரசைப் பெருக்கலாயினர். வடக்கே மகாராஷ்டிரரும் சீக்கியரும், தெற்கே ஹைதரும் திப்பு சுல்தானும் சும்மா இருக்கவில்லை; சுயவரசை நிலை நாட்ட முடிவுவரையில் போர் புரிந்தனர். கம்பெனியின் ராஜதந்திர வலை வீச்சின் முன்னே அவர்களின் போர் முயற்சி பலிக்கவில்லை. 1856-ஆம் ஆண்டுக்குள் வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானம் முதல் கிழக்கே கடல் வரையிலும், பாரத பூமியிலே மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் கம்பெனியின் ஆட்சிக்குள் அடங்கிவிட்டன. மற்றொரு பங்கில் இருந்த சிற்றரசரோ கம்பெனியின் கட்டுக்கு அண்ணைந்து நின்றனர்.

நாடு கொண்ட விதம்:—கம்பெனியார் நாடு கொண்ட பான்மையைக் குறித்து டாக்டர் கான்கிரீவ் என்பார் சொல்லியிருப்பது இது:—"வியாபாரம் செய்யவே இந்தியாவுக்குப் போனோம். நம்மை இந்தியர் அன்பும் பரிவும் காட்டி நடத்தினர். அதன் துறைமுக நகரங்களில் பண்டகசாலை கட்டிக்கொள்ள அனுமதி பெற்றோம். இந்தியர் வலுவற்றும், ஒற்றுமை குலைந்தும், போர்க்குணம் இன்றியும் கிடந்தனர். எனவே இந்தியாவை நாம் எளிதில் வசம் செய்துகொண்டோம். கொள்ளையில், பண்ணையில் வஞ்சனையும் சூதும் கொடுமையும் துரோகமும் கையாண்டோம்."

தரித்திர தாண்டவம்:—இங்கிருந்து வியாபாரம் செய்து பணம் திரட்டியது ஒரு புறம், ஆட்சி பலங்கொண்டு வரி விதித்துப் பணம் பெற்றது ஒரு புறம், ஆக இருவகையில் தேசச் செல்வம் கப்பலேறியது. தேசத் தொழில்களும் நசுக்கிப்போயின. கம்பெனியில் வேலை பார்த்த ஸர் ஜான் ஷோர் என்பார் 1837-ஆம் ஆண்டில் கூறியது இது:—

"இந்தியாவில் சுகவாழ்வு என்பது மலையேறிப்போய்விட்டது. ஒரு சமயம் இந்தியாவில் பெருஞ் செல்வம் இருந்தது உண்மைதான். அச் செல்வத்தின் பெரும் பாகம் இங்கிருந்து போய்விட்டது. நீதியற்ற ஆட்சி முறையால், இந்தியாவின் வளப்பங்கள் நசித்துப்போயின. சிலருடைய நன்மையை மதித்து, கோடானுகோடி மக்களின் நலபலங்கள் பறியுண்டு போயின. தேசத்திலிருந்து போய்விடும் செல்வக் கொள்ளையே மக்களின் ஏழ்மை நிலைக்குக் காரணம்."

கூர்ஜர நாட்டில் வேலை பார்த்த மிஸ்டர் ஜீபர்ன் என்பவர் 1840-ஆம் ஆண்டில் சொல்லியது இது:— "முன்னம் தேசமக்களில் பலர் செல்வச் சீமான்களாக இருந்தனர். இப்பொழுதோ அவ்விதம் பல சீமான்களை நான் காணவில்லை. பிரபுக்களில் பலர் உல்லாச வாகனங்களும் குதிரைகளும் ஏவலாளரும் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்து வந்தனர். தற்சமயம் அந்த ஆடம்பரங்கள் எல்லாம் மறைந்தே போய் விட்டன. இப்போது ஒரு காசுகூட இல்லை, என் செய்வோம் என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள்."

சிப்பாய்க் கலகம்:—பொன் விளையும் பூமி, பூலோக போக பூமி வறுமைக்கு உறைவிடம் ஆயிற்று. கம்பெனியின் அரசு பெருகவே, புராதன ராஜ வம்சங்கள் பதவி இழந்தன; அரச குடும்பத்தார் சிம்மாசனம் இழந்தனர். செல்வச் சீமான்கள் சிறுமை அடைந்தார்கள். விவசாயிகள் வாடி வதங்கினார்கள். 1806-ஆம் ஆண்டிலே ராய வேலூரில் குட்டி சிப்பாய்க் கலகம் ஒன்று கிளம்பிற்று. ஐரோப்பியரில் பலர் ஆவி இழந்தனர். பின்னர் சிப்பாய்களிலும் பலர் பலி ஆயினர். அந்த வெட்டுப்பழி, குத்துப் பழி கண்டும் கம்பெனி எச்சரிக்கை கொள்ளவில்லை.

சுதந்திர தாகம்:— வடக்கே 1857-ஆம் ஆண்டில் பிரமாதமான 'சிப்பாய்க் கலகம்' கிளம்பிற்று. "கம்பெனி

ஆட்சியைத் தொலைப்போம், சுயவரசை நிலைநிறுத்து வோம்!'' என்று சிப்பாய்கள் கொதித்தார்கள். அக்கலகத்தை வெறும் சிப்பாய்க் கலகம் என்பர் சிலர்; 'சுதந்திர மகா யுத்தம்' என்பர் வேறு சிலர். இது எங்ஙனமாயினும் அக் கலகம் ஒரு வருஷம் நீடித்து நடந்தது. இரண்டு பக்கத்திலும் உயிர்ச் சேதம் மிக அதிகம். எங்கும் பிணக்காடு.

---

3. உரிமைச் சாஸனம்

அப்போது இங்கிலாந்தின் அரசி விக்டோரியா ராணி. அரசியின் மனம் இளகியது. கம்பெனி ஆட்சி தொலைந்தது. இத்தேச அரசை அம் மகாராணி ஏற்றுக் கொண்டார் ; மன்னருக்கும் மக்களுக்கும் உரிமைப் பட்டய சாஸனமொன்று விடுத்தார்.

உரிமைச் சாஸனம்:—மகத்தான அச் சாஸனத்தின் சாரம் இது :—"(1) இனிமேல் இந்தியாவில் நாடுபிடிக்க நாட்டமில்லை. (2) இந்திய மன்னரது உரிமை, மதிப்பு, அந்தஸ்து இவற்றிற்கு ஒரு குறைவும் நேராது. (3) மக்களின் மத விஷயத்தில் தலையிட உத்தேசம் இல்லை. (4) தகுதியையும் திறமையையும் மதித்து, ஜாதி மத பேதமின்றி இந்தியரனைவருக்கும் எந்த உத்தியோகமும் கொடுக்கப்படும். (5) தேசத்தின் கைத் தொழில்களுக்கு ஆதரவளித்து, பொதுநல வேலைகளை விருத்தி செய்து, மக்களின் நன்மைக்காகவே அரசு நடந்துவரும். (6) தேச மக்களின் க்ஷேம லாபமே நமது பலத்துக்கு அஸ்திவாரம். அவர்களின் திருப்தியே நமக்குப் பாதுகாப்பு. அவர்களின் நன்றியறிவே நமக்கு நல்ல வெகுமதி.''

ஏட்டளவில் :—அந்த விளம்பரம் ஏற்பட்டபின்பே, கவர்னர் ஜெனரல்கள் ராஜப்பிரதிநிதி என்னும் பட்டம் பெற்

றனர். இனி ஆட்சி முறை அவலமாக இராதென அனை வரும் நம்பினர். ஜனக்கொதிப்பும் அடங்கியது. சக்கர வர்த்தினி என்று 1877-ஆம் ஆண்டு விக்டோரியா ராணி முடி சூடிக்கொண்டார். அப்போதும், தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லோருக்கும் சுதந்திரமும் நியா யமும் கட்டாயம் கிடைக்கும் என்று அறிக்கை செய்தார். 1887-ஆம் ஆண்டிலும் அதனை மீண்டும் ஒருமுறை உறுதி செய்தார். மகாராணி என்ன செய்வாள்? மகா நல்லவள் தான். இங்கே காரியத்தில் ஒன்றும் இல்லை. எல்லாம் ஏட்டள வில்! சில அம்சங்களிலே கம்பெனியின் ஆட்சியைவிட மோசமான காரியங்கள் நடக்கலாயின.

பதினெட்டுப் பஞ்சங்கள்:—தேச நிலவளம் குன்றி, தொழில்கள் நசுங்கவே, தேசத்தில் பஞ்சம் தோன்றுவது இயற்கை. 1770-ஆம் ஆண்டிலிருந்து 1880-ஆம் வருஷத் திற்குள் 18 முறை பஞ்சங்கள் தோன்றின. ஒவ்வொரு பஞ்சத்திலும் இலட்சக் கணக்கான ஜனங்கள் மாண்டு போனார்கள். 1770-ஆம் ஆண்டு வங்காளத்தில் நேர்ந்த பஞ்சத்திலே இறந்து போனவர்கள் நூறு லட்சம் பேர். 1883-ஆம் ஆண்டிலே குண்டூரில் மட்டும் மாண்டவர் இரண்டு லட்சம். 1837-ஆம் ஆண்டில் இறந்தோர் எட்டு லட்சம்; 1877-ஆம் ஆண்டில் 52 லட்சத்து 50 ஆயிரம் பேர்கள். இது நிற்க.

ராஜா ராம் மோகன் ராய்:—கம்பெனியின் ஆட்சிக் காலத்திலேயே ஜனங்களைப் பல வகையிலும் தட்டி யெழுப் பத் தலைவர்கள் கிளம்பினர்; இயக்கங்களும் தோன்றின. தலைவர்களில் முதல்வர் ராஜா ராம் மோகன் ராய். அவர் 1774-ஆம் வருஷத்தில் பிறந்தவர்; பல பாஷைகளில் வல்லவர். இங்கிலீஷில் தேர்ந்தவர்; முதலாவதாக, மதக் கோட்பாடுகளில் காலத்துக்கு ஒவ்வாத அம்சங்களைப்

போக்க முயன்றார். அதற்காக, 'பிரம்ம சமாஜம்' எனும் சங்கம் கண்டார். அதன் மூலம் மத விஷயத்தில் புதிய உணர்ச்சி பரவிற்று. பலரும் ஆங்கிலக் கல்வி பயில வேண்டுமென அவருக்குத் தோன்றியது. உடனே கல்கத்தாவில் 'ஹிந்து கலாசாலை' ஏற்படுத்தினர். அதுவே தற்போது 'பிரஸிடென்ஸி கலாசாலை'யாக விளங்குகிறது.

தூது போதல்:—மொகலாய வல்லரசின் பாகங்கள் கம்பெனி ஆட்சிக்கு உட்பட்டும், அவுரங்கசீபின் சந்ததியொருவன், பேருக்கு மட்டும் சக்கரவர்த்தியாக இருந்து வந்தான். கம்பெனியார் அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தனர். அது விஷயமாய் அவனுக்கும் கம்பெனிக்கும் பிணக்கு ஏற்பட்டது. அச்சக்கரவர்த்தியின் தூதராக ராம் மோகன் ராய் இங்கிலாந்துக்குச் சென்றார். அப்போது 'சூயஸ் கால்வாய்' வெட்டவில்லை. ஆபிரிக்காவைச் சுற்றிக்கொண்டே கடல் மார்க்கமாக இங்கிலாந்துக்குப் போகவேண்டும். ஆபிரிக்காவில் 'நன்னம்பிக்கை முனை' என ஒரு முனை உண்டு. அதன் வழியேதான் கப்பல்கள் செல்லும். அங்கே பிரஞ்சுக் கப்பல் ஒன்று இருந்தது. பிரான்ஸ் தேசத்தில் ஜனநாயகம் ஏற்பட்டுவிட்டதால், அக்கப்பலிலே சுதந்திரக்கொடி பறந்தது.

---

4. சுதந்திர ஆவேசம்

கண்டார் அதனை ராம் மோகன் ராய். "சுதந்திரக் கொடி பறக்கும் கப்பலில்தான் பிரயாணம் செய்வேன்!" என்றார். "சுதந்திரக் கொடியே, வாழ்க வாழ்க! உனக்கு வந்தனம்!" என்று கூறி மகிழ்ந்தார். அக்கப்பலிலேயே அவர் இங்கிலாந்துக்குச் சென்றார். சென்றதும், சக்கரவர்த்தியின் பக்கமாக வாதாடினர்; தேச மக்களின் குறைகளையும் எடுத்

துச் சொன்னார். அது சமயம் கம்பெனி ஆட்சியின் அதிகாரத்தை ஒடுக்கவும், இங்கிலாந்தின் அரசாங்கம் ஓரளவு மேலதிகாரம் வகிக்கவும், அங்கே 'காமன்ஸ் சபை'யில் ஒரு சட்டம் ஆலோசனையில் இருந்தது. அச்சட்டம் நிறைவேற வேண்டுமென அவர் பெரிதும் பாடுபட்டார். "நிறைவேறா விட்டால், ஆங்கில ராஜ்யத்தில் வசிப்பதில்லை. அதனை விட்டகன்று, அமெரிக்காவில் சென்று வசிப்பேன்!" என்றும் சொன்னார்.

சமாஜங்கள் :—அதிகாரிகள் அவருக்கு ஒரு விருந்து நடத்தினார்கள். அப்பால் அவர் அங்கேயே 1833-ஆம் ஆண்டில் காலகதி ஆனார். அவருடைய சொல்லும் செயலும் இந்தியருக்கு ஒரு வகையில் புத்துயிர் ஊட்டின. பிரம்ம சமாஜத்தில் சேர்ந்து, பெருக்கங்கொண்டு அப்பால் தேச சேவை செய்யத் தலைப்பட்டவர்கள் ஆனந்த மோகன் போஸ், விபின சந்திர பாலர் ஆவர். இருவரும் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்துழைத்ததை அடுத்த அதிகாரங்களில் காணலாம்.

பிரம்ம சமாஜத்திற்கு அடுத்தபடி ஜனங்களுக்குள்ளே ஓர் உணர்ச்சி ஊட்டிய சங்கம் 'ஆரிய சமாஜம்.' அதனை 1875-ஆம் ஆண்டில் கண்டவர் சுவாமி தயானந்த சரஸ்வதி. வேதமார்க்கத்தையும் உயர்வையும் அவர் வற்புறுத்தினார்; இந்து மதத்தின் சிறப்பை விளக்கிக் காட்டினார்; மனவலியினும் மிகுந்த வலி இல்லையென எடுத்துரைத்தார்; உரைக்கவே, நம்மால் என்ன ஆகும் என்று மக்கள் கொண்டிருந்த ஈன நிலை அகன்றது. முனைந்து முயன்றால் முடியாத காரியம் ஒன்றும் இராது என்று மனத் துணிவு பிறந்தது.

உணர்ச்சி உதித்தல் :—சென்னை அடையாற்றிலுள்ள 'பிரம்மஞான சங்கம்' ஆதியிலே 1875-ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் ஏற்பட்டது. பின்பு அதன் தலைமை ஸ்தானம் அடையாறாக மாறியது. மாறிய வருஷம் 1882. அப்போது

அதன் தலைவர் கர்னல் ஆல்காட். இந்தியாவின் புராதனப் பெருமையை அவர் சுட்டிச் சொன்னார்; பாரத பூமி மங்கி மடியக் கூடாதென அறிவுறுத்தினர்; ஆகாயத்தை அளாவும் ஆலயமும் கோபுரமும் கட்டிய பரம்பரையில் வந்தோர், பட்டுக் கிடப்பதோ என்றும் தட்டி எழுப்பினர். அயல் நாட்டார் வந்து அவ்விதம் உரைத்தனர். ஜனங்களுக்கு அச்சங்கமும் ஓர் உணர்ச்சி ஊட்டி வந்தது.

சங்கங்கள் தோன்றல்:—மதச் சங்கங்கள் அவ்வாறு ஒரு புறம் உணர்ச்சி ஊட்டி வர, ராஜீய சங்கங்களும் இல்லாமலில்லை. சட்டத்தின் முன்னிலையில் யாரும் சரி நிகர் சமானம் என்பதே ஏற்கும். ஆயினும் இங்கே ஆங்கிலேயருக்கு ஒரு சட்டம், இந்தியருக்கு ஒரு சட்டம் இருந்தது. அந்த வேற்றுமையைத் தொலைக்க வேண்டும் என்று 1849-ஆம் ஆண்டிலே முயற்சி நடந்தது. ஆங்கிலேயர் அனைவரும் ஒரு முகமாக நின்று அம்முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டனர். வங்க ஜமீன்தார்கள் சும்மா இருக்கவில்லை. ஒன்று சேர்ந்து 'பிரிட்டிஷ் இந்திய சங்கம்' என்பதை ஏற்படுத்தினர். சங்கத்தின் மூலம் கிளர்ச்சி செய்தனர். முயற்சி பலிக்காவிடினும் ஓர் உணர்ச்சி உதித்தோங்கி வந்தது.

பிரிட்டிஷ் இந்திய சங்கம் தோன்றிய பின்னர், 'பம்பாய் சங்கம்' என்பது பம்பாயில் கிளம்பிற்று. தாதாபாய் நௌரோஜி என்பார் அதை ஏற்படுத்தியவர்களில் ஒருவர். சில வருடங்கள் ஆனதும் நமது சென்னையிலும் 'சென்னை சுதேசிகள் சங்கம்' ஏற்பட்டது. ஆயினும் ஹிந்து பத்திரிகை தோன்றும் வரையில் அச்சங்கம் தக்க சுறுசுறுப்புக் கொள்ளவில்லை. வீரராகவாச்சாரியார், ஜி. சுப்பிரமணிய ஐயர் இருவரும் சேர்ந்து, 1878-ஆம் ஆண்டு அப்பத்திரிகையைத் தோற்றுவித்தனர். அனந்தாச்சார்லு, ரங்கய்யநாயுடு முதலிய

வர்கள் தக்க ஆதரவு அளித்தார்கள். பூனா நகரில் 'ஸர்வ ஜன சபை' உதித்தது.

மாகாணந்தோறும் அவ்விதம் ராஜ்ய சங்கங்கள் இருந்தும், குறிப்பான வேலைத் திட்டம் அவைகளுக்கில்லை. நலங்களுக்கு ஆபத்து நேருகையில், அதனைக் காத்துக்கொள்வதே அவைகளின் நோக்கம். தவிர, அரசாங்கத்தின் காரியங்களை அவ்வப்போது கண்டிப்பதோடு அச் சங்கங்கள் திருப்தி கொண்டுவிட்டன. ஆயினும் வங்காளத்திலோ பல வகையில் புதிய ஊக்கமும் உணர்ச்சியும் ஓங்கி வளரலாயின.

பத்திரிகைகளின் முயற்சி:—கம்பெனியாரின் ஆட்சிக் காலத்திலேயே, வங்காளத்தில் ஆங்கிலேயர் தமது சுய பாஷையில் பத்திரிகை நடத்தி வந்தனர். ஆட்சி முறையின் ஊழல்களைக் குறித்து அப்பத்திரிகைகள் கண்டித்து எழுதும். அது கண்டு அதிகாரிகள் சகியார். அதனால் பத்திராசிரியர் அடிக்கடி நாடு கடத்தப்பட்டுப் போவது உண்டு. தவிர, பத்திரிகைகளை அதிகாரிகள் தணிக்கை செய்தும் வந்தனர். 1835-ஆம் வருஷம் வரையில் அத் தணிக்கை முறை அமுலில் இருந்தது. ஸர் சார்லஸ் மேட்காப் என்பார் அம் முறையை ஒழித்தார்.

முதல் இந்தியப் பத்திரிகை ஸம்பத் கௌமதி. வங்க பாஷையில் அது பிரசுரமாகி வந்தது. அதனை நடத்தியவர் ராம் மோகன். மதத்திலும் ஆசாரத்திலும் சீர்திருத்தம் செய்வதே அதன் நோக்கம். சிப்பாய்க் கலகத்திற்குப் பின், பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுச் சட்டம் ஏற்பட்டது. ஆயினும், அச்சட்டம் மிடுக்காகக் கையாளப்படவில்லை. நாளடைவிலே எல்லா மாகாணங்களிலும் இந்தியப் பத்திரிகைகள் கிளம்பின. 1875-ஆம் ஆண்டில், எல்லா மாகாணங்களிலுமாக இருந்த பத்திரிகைகளின் தொகை 478. அவற்றில் பலவும் தேச பாஷைப் பத்திரிகைகளே. அங்

நாளில் அவற்றிற்குச் செல்வாக்கு அதிகம். ஜனங்கள் பேராவ லுடன் படித்து வந்தார்கள். அவ்விதம் ஒருபுறம் பத்திரிகை களும் புத்துயிர் ஊட்டிவந்தன.

5. ஆங்கில நண்பர்கள்

பத்திரிகைகளுக்கு அடுத்தபடியாக, ஆங்கில நண்பர்கள் நமது தேசத்தில் அக்கறை கொண்டார்கள். அவர்களில் முதன்மையானவர் ஜான் பிரைட். அவர் காமன்ஸ் சபை அங்கத்தினர். இந்தியாவின் திக்கற்ற நிலை மையை நன்கு அறிந்தவர். நிர்வாக ஊழல்களையும் உள்ளபடி உணர்ந்தவர். "தர்ம சொத்துப் போன்றது இந்தியா. சரிவர அதனை ஆட்சி புரியவேண்டும். வரிமுறை விபரீதமாயுளது. நீர்ப்பாசன வசதிகளை அரசாங்கம் கவனிக்கவில்லை. அடிக்கடி பஞ்சம் உண்டாகிறது. கொள்ளை நோய்களும் தோன்று கின்றன. ஜனங்கள் பரம ஏழைகளாகி விட்டனர்," என்று காமன்ஸ் சபையில் அவர் மிகவும் வாதாடி வந்தார்.

நன்றி :—மற்றோர் நண்பர் ஹென்றி பாஸெட். "இங் கிலாந்தின் சில்லரை விஷயங்கள் என்றால், காமன்ஸ் சபையில் தடபுடல் ஏற்படுகிறது. லட்சக் கணக்கான இந் திய மக்களின் விஷயம் வந்தாலோ, அவ்வளவு சிரத்தை இல்லை!" என்று அவர் வற்புறுத்தி வந்தார். அவருடைய அபிமானங் கண்டு, இந்தியர் பாராட்டலாயினர். 1872-ஆம் வருஷத்தில், கல்கத்தாவிலே பிரம்மாண்டமான கூட்டம் நடந்தது. அவரை வாழ்த்தி அனைவரும் பேசினர். காமன்ஸ் சபையிலே அவர் வகித்து வந்த ஸ்தானம் போய்விட்டது. மீண்டும் அவர் தேர்தலுக்கு நின்றார். அப்போது தேர்தல் செலவுக்காக 12 ஆயிரம் ரூபாய் அனுப்பி, இந்தியர் நன்றி காட்டினர்.

சார்லஸ் பிராட்லா இன்னொரு நண்பர். வாக்கு வன்மை விறல் அவர் சகாயம் செய்துவந்தார். இன்னும் பல நண்பர்களும் உண்டு. அவர்களில் ஹியூம், காட்டன், வெட்டர்பர்ன் மூவரும் கடைசி வரையில் இந்தியாவுக்காகப் பரிந்து பேசி வந்தனர். அவ்விதம் ஆங்கில நண்பர் பலர் பரிந்து நின்றதால், ஜனங்களின் கொதிப்பு சற்றே ஆறுதல் கொண்டது. இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் ஒருவாறு இருப்பினும், இங்கிலாந்திலே நல்லவர்கள் உண்டு. எனவே, நியாயம் கிடைக்கும் என்று பலரும் நம்பிக்கை கொள்ளலாயினர்.

கவியும் காவியமும்:—ராஜா ராம் மோகன் ராய் 1833-ஆம் ஆண்டு காலமான பின்பு, வங்காளத்திலே தேவேந்திர நாத் தாகூர், கேசவ சந்திர சேனர் முதலியோர் தோன்றி, ஜனங்களுக்கு ஊக்கம் ஊட்டி வந்தனர். அத்துடன் அங்கே கவிகளும், நாலாசிரியர்களும் தோன்றிப் புத்துயிரை வளர்க்கலாயினர். ஈசுவர சந்திர வித்தியா சாகரர் என்ன, மதுசூதன தத்தர் என்ன, ரங்கலால் பானர்ஜி என்ன, பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ன, இவர்கள் முக்கிய புருஷர்கள். சட்டர்ஜியின் ஆனந்த மடம் என்னும் நாவல் பலவையும் தட்டி எழுப்பியது. வந்தே மாதரம் என்னும் தேசிய வீர கோஷத்தைக் கிளப்பியவர் அவரே. இங்கிலாந்து சென்று, ஐ. ஸி. எஸ். பரீட்சை கொடுத்துத் திரும்பிய மாணவரும் கோஷம் புரிந்தனர்.

இனி, லார்டு லிட்டன் 1876-ஆம் ஆண்டு முதல் 1880-ஆம் ஆண்டு வரை, ராஜப்பிரதிநிதியாக இருந்தார். அவருடைய ஆட்சி முறையின் போக்கும் ஜனங்களைக் கிளப்பிவிட்டது. மிக்க ஏழ்மை ஒரு புறம், வரி பளு ஒரு புறம், தொழில் நாசம் ஒரு புறம், அரசாங்க நிராதரவு ஒரு புறம், பஞ்சம் ஒரு புறம், ஆங்கிலேயரின் ஜாதி கர்வம் ஒரு புறம்; இச்சமயத்தில்தான் லிட்டன் வந்தார். பத்திரிகை

களுக்கு வாய்ப்பூட்டு இட்டார். ஆப்கானிஸ்தானத்தைக் கண்டு அஞ்சி, வடமேற்கு எல்லைப்புறத்தில் பிரமாதமான காவல் ஏற்பாட்டுக்கு வழி கோலினர். ராணுவச் செலவு அபாரமாக வளர்ந்தது. தேசமெங்கும் பஞ்சம் தாண்டவமாடியும், ராணுவச் செலவைக் குறைக்கவில்லை. டில்லியிலே தர்பார் நடத்தியும் பெருஞ் செலவு செய்தார்.

வாலிபரின் துடிப்பு:—அந் நிலையில் கல்கத்தாவிலே 1876-ஆம் ஆண்டு இந்தியச் சங்கம் தோன்றியது. ஆனந்த மோகன் போஸும், சுரேந்திர நாத பானர்ஜியும் அதன் மூல புருஷர்கள். தேச நிலை கண்டு வாலிபர் துடிப்புக் கொண்டனர். தேசத்தின் நல்ல காலம், ஐ. ஸி. எஸ். உத்தியோகம் பானர்ஜிக்குக் கிடைக்காமல் போயிற்று. தேச சேவை செய்ய அவர் விரதம் பூண்டார். எங்கும் சென்று பிரசங்கம் புரிந்து, இளைஞரைக் கிளப்பினர். பேச்சு வன்மையில் அவருக்கு நிகர் அவர்தான். சீக்கியரின் எழுச்சி, வாலிப இத்தாலியரின் கிளர்ச்சி, இளை ஜூரிஷ்காரரின் ஆவேசம், இவை குறித்து அவர் செய்த பிரசங்கங்கள், வங்க வாலிபரின் மனதைக் கவர்ந்தன.

---

6. இந்தியருக்குப் பாடம்

"தகுதியையும் திறமையையும் மதித்து ஜாதி மத பேதமின்றி உத்தியோகங்களில் இந்தியரை அமர்த்தத் தடையிராது," என்பதே மகாராணியின் வாக்குறுதி. ஆயினும், அவ்விதம் காரியம் நடக்கவில்லை. மேலும், பெரிய உத்தியோகம் வேண்டுமானல், இங்கிலாந்துக்குச் சென்று இந்தியர் ஐ. ஸி. எஸ். பரீட்சை கொடுக்கவேண்டும் என்பது விதி. 22 வயதில் பரீட்சைக்குப் போகலாம் என்றிருந்தது. 19-வது வயதிலேயே பரீட்சை கொடுக்க வேண்டும் என்று

புதிதாக விதித்தனர். 19 வயதுக்குள் இந்திய வாலிபர் இங்கிலாந்துக்குப் போவது எங்ஙனம்? இதுகண்டும் இந்திய சங்கம் கிளர்ச்சி செய்ய எண்ணியது.

கிளர்ச்சி:—சுரேந்திரநாத பானர்ஜி, வட இந்தியா வெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார்; பிரமாதமாகப் பிரசங்க மாரி பொழிந்தார். இந்துக்கள், முகம்மதியர் அனைவரும் ஒரு முகமாக நின்று அவரை ஆதரித்தனர். அப்பால் அவர் பம்பாய்க்கும், சென்னைக்கும் சென்று கிளர்ச்சி பண்ணினர். அதன் பலனாக அகில இந்திய மஹஜர் ஒன்று காமன்ஸ் சபைக்கு அனுப்பப்பட்டது. விஷயம் இப்படி யிருக்க, 1880-ஆம் வருஷம் லார்டு ரிப்பன் ராஜப் பிரதிநிதியாக வந்தார். பத்திரிகைகளின் வாய்ப்பூட்டுச் சட்டம் ஒழிந்தது. ஸ்தல சுய ஆட்சி சபைகளை இந்தியரிடம் ஒப்படைக்க ஏற்பாடு பிறந்தது. ஜனங்களில் பலரும் கொஞ்சம் ஆறுதல் அடைந்தனர்.

ரிப்பனுக்கு ஆபத்து:—அப்போது இல்பர்ட் மசோதா ஏற்பட்டது. "ஆங்கிலக் குற்றவாளிகளை இந்திய மாஜிஸ்டிரேட்டுகள் விசாரிக்கக் கூடாது," என்று ஒரு சட்டம் உண்டு. "அது அநீதம், சட்டத்தின் முன்னிலையில் வேற்றுமை கூடாது," என்பதே அம் மசோதாவின் சாரம். அது கண்டு இங்குள்ள ஆங்கிலேயர் கொதித்து எழுந்தனர். இந்தியர் எங்களுக்குச் சமமோ என்னும் கூச்சல் போட்டனர். மசோதா சட்டமானால், லார்டு ரிப்பனை பலவந்தமாய்க் கட்டிப்பிடித்துக் கப்பலில் ஏற்றி இங்கிலாந்துக்கு அனுப்பி விடவும் அவர்களில் சிலர் சதியாலோசனை செய்தார்கள். இது விஷயத்தை அறிந்தும் ஒரு கவர்னர் வாளா இருந்தார். அம்மசோதா சட்டமாக வேண்டும் என்பதே ரிப்பனது ஆவல். அரசாங்கத்திலே அவரை ஆதரிப்பார் இல்லை.

ஆயினும் இந்தியர் ஒருமுகமாக நின்று ஆதரிக்கத் தொடங்கினர். வங்காளத்தில் பிரம்மாண்டமான கூட்டங்கள் நடந்தன. பம்பாயிலும் இந்தியர் பெருங் கிளர்ச்சி செய்தனர். நமது சென்னை மாகாணம் சோம்பிக் கிடந்தது. ஆங்கிலேயரின் கிளர்ச்சியோ கட்டுக்கு அடங்கவில்லை. அதனால் மசோதா சட்டமாகாது போய்விட்டது.

பாடம் கொள்ளுதல்:—எல்லாம் ஒரு நன்மைக்கே என்பர். மாகாணங்கள் ஒன்று சேர்ந்து முயலவில்லை. ஆதலினால் சட்டம் நிறைவேறாது போயிற்று. தவிர, பெருத்த அவமானமும் நேர்ந்துளது. ஆதலின், இனி நாம் சும்மா இருத்தல் ஆகாது. இமயம் முதல் குமரி வரையில் அனைவரும் ஒன்றாக நின்று இனிமேல் எதற்கும் கிளர்ச்சி செய்தல் வேண்டும்; என்று இந்தியர் அனைவரும் ஒரு பாடம் கொண்டனர். உடனே ராஜீயக் கிளர்ச்சி செய்வதற்கென்று கல்கத்தாவில் 1884-ஆம் ஆண்டு (நேஷனல் லீக்) தேசீய சங்கம் ஏற்பட்டது. சென்னையிலும் அதே வருஷம் ஜி. சுப்பிரமணிய ஐயர் மகாஜன சபையை ஏற்படுத்தினர். பம்பாயிலே 1885-ஆம் ஆண்டின் துவக்கத்தில் 'பம்பாய் மாகாணச் சங்கம்' உதித்தது. பம்பாய் சங்கத்தைக் கண்டவர்கள் பத்ருதீன் தயாப்ஜி, காசிநாத தேலங்க், பிரோஸ் ஷா மேத்தா.

இதற்கு இடையில் 1883-ஆம் ஆண்டிலே கல்கத்தாவில் நாஷனல் கான்பரன்ஸ் கூடியது. ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். காமன்ஸ் சபை மெம்பரான நீ என்பவரும் வந்திருந்தார். மக்கள் அனைவரும் ஒருமித்து நின்று ராஜீயக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர் சுரேந்திரநாத பானர்ஜி. 1885-ஆம் ஆண்டிலே கல்கத்தாவில் மறுபடியும் இரண்டாவது கான்பரன்ஸ் நடந்தது. வங்காளம், பம்பாய், பீரார் முதலிய பல இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இது இப்படியிருக்க, காங்கிரஸ் மகா

சபை ஓர் உருக்கொள்வதற்குக் காரணமாக இருந்து, பெரிதும் உழைத்து, அதன் பிதா என்று பெயர் பெற்றவர் ஹியூம் எனும் ஆங்கிலேயர்.

ஹியூமின் ஊழியம் :—ஹியூம் என்பவர் அரசாங்கத்தில் வேலை பார்த்தவர். அப்போது தம்மாலான நன்மை புரிந்தார். ஜனங்களுக்கு சிப்பாய்க் கலகத்திலே அரசாங்கத்தின் பக்கம் போர் புரிந்தார். கலகம் அடங்கியபின், முன்போல் ஜனங்களிடம் அவருக்கு அபிமானம் பிறந்தது. ஜன நண்பன் எனும் தேச பாஷைப் பத்திரிகை தோன்ற உடனிருந்து உதவினார். சிப்பாய்க் கலகம் அடங்கியும், மகாஜனங்களின் மனக்கொதிப்போ வெளிக்குத் தோன்றவில்லை; நீறு பூத்த நெருப்புப்போல் இருந்தது. போதாக்குறைக்கு விட்டனது ஆட்சிப்போக்கும், இல்பர்ட் மசோதா விஷயத்தில் ஆங்கிலேயர் கொண்ட பான்மையும் கூடிக்கொண்டன. நிலைமை மோசமாக மாறியது.

நீறுபூத்த நெருப்பு :—“வேறு வகையில்லையே, என்ன செய்வோம்? பகிரங்கமாகக் கலகஞ் செய்தாலும் பலனிராது. ஆதலால் உபத்திரவம் புரியும் பேர்வழிகளைக் கொன்று போடவேண்டும் ; நாணயசாலைகளைக் கொள்ளையாடவேண்டும்; சந்தைப் பேட்டைகளைச் சூறையாடவேண்டும்” என்று பற்பல ஜில்லாக்களிலும் ஜனங்கள் அந்தரங்கமாகச் சதி செய்து வந்தனர் என்று அவர் கண்டுகொண்டார். அவ்விதம் அமைதிக்குறைவு தோன்றினால், அனர்த்தம் விளையுமென்று அவருக்குத் தோன்றியது. ஆதலின், ஜனக்கொதிப்பை அடக்கவும், ராஜீயக் கிளர்ச்சியை ஓர் ஒழுங்கு படுத்தவும் இந்தியரின் மகா சபை யொன்றைக் கூட்டவேண்டு மென்று அவர் தீர்மானித்தார்.

மதியூகிகளின் முயற்சி:—ஆனந்த மோகன் போஸ், சுரேந்திர நாத பானர்ஜி இவர்கள் வாலிபரின் மனதைக்

அவர்ந்து நிற்பதும் ஹியூமுக்குத் தெரியவந்தது. உடனே (1883-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ந்தேதி) கல்கத்தா கலாசாலையின் மாணவருக்கு அவர் ஒரு கடிதம் விடுத்தார். "உண்மை நினைவும் ஊழிய சிந்தையும் வாய்ந்த ஐம்பது வாலிபர் கிடைப்பின், தேசிய மகாசபை யொன்று காண லாம்," என்பதே அக்கடிதத்தின் முக்கிய சாரம். அதன் பலனாக நாஷனல் யூனியன் என்னும் சங்கம் உதித்தது. அதுவும் பிறவும் சேர்ந்து, காங்கிரஸ் மகா சபைக்கு விதைகளாயின. "படித்த இந்தியரை அவமதிப்பாக நடத்தி, கண்ணிருந்தும் குருடர்போலவும், காதிருந்தும் செவிடர் போலவும் அதிகாரிகள் நடந்துவரின், முடிவில் அழிவே ஏற்படும்!" என்று எச்சரிக்கை செய்த பெருமை அவரைச் சேரும். நாஷனல் யூனியனுக்கு அவரே பொதுக் காரியதரிசி ஆனார். கல்கத்தா, பம்பாய், பூனா, கராச்சி, சூரத், ஆமதா பாத், சென்னை, காசி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, லாகூர் முதலிய இடங்களில் அச் சங்கத்திற்குக் கிளைகள் ஏற்படுத்த முயற்சிகள் நடந்தன.

---

7. மூல புருஷர்

பதினேழு பெரியார்கள் :—சென்னை அடையா ற்றிலே பிரம்ம ஞான சங்கம் ஏற்பட்டதல்லவா? அதன் வருஷாந்தரக் கூட்டம் 1884-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் நடந்தது. இந்தியாவின் பல பாகங்களிலிருந் தும், பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் பதினேழு பேர்கள் திவான் பகதூர் ரகுநாத ராவின் மாளிகையிலே கூடினர். அவர்களின் விவரம் பின்வருமாறு :—

சென்னை வாசிகளான (1) கனம் எஸ். சுப்பிரமணிய ஐயர்; (2) ரங்கய்ய நாயுடு; (3) அனந்தாச் சார்லு.

கல்கத்தா வாசிகளான (1) நரேந்திரநாத சேனர்; (2) சுரேந்திர நாத பானர்ஜி; (3) கோஷ்.

பம்பாய் வாசிகளான (1) ஸ்ரீ மண்டலீகர்; (2) தேலங்கர்; (3) தாதாபாய் நௌரோஜி.

பூனா வாசிகளான (1) விஜயரங்க முதலியார்; (2) பாண்டுரங்க கோபாலர்.

காசி வாசியான ஸர்தார் தயாள சிங்கர்.

அலகாபாத் வாசியான ஹரிச்சந்திரர்.

வடமேற்கெல்லை மாகாண வாசிகளான (1) காசிப்பிரஸாதர்; (2) இலட்சுமீ நாராயணர்.

வங்காள வாசியான சாரு சந்திர மித்திரர்.

அயோத்தி வாசியான ஸ்ரீராம்.

இப்பதினேழு கனவான்களும் கூடி ஆலோசித்து ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதன் முக்கிய சாரம் இது:—

தேசீய பார்லிமெண்டு:—"இந்திய தேசீய சங்கம் (இண்டியன் நாஷனல் யூனியன்) 1885-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந் தேதி முதல் 31-ந் தேதி வரையில் பூனா நகரில் கூடும்.

"வங்காளம், பம்பாய், சென்னை மாகாணங்களிலிருந்து ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்ற பிரபல ராஜீய வாதிகள் அக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். கூட்டத்தின் நேர்முகமான நோக்கம் என்னவென்றால், (1) தேசிய முன்னேற்றத்தில் மிக்க அக்கறைகொண்டு உழைப்பவர்கள் அனைவரும் ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொள்ளுதல்; (2) அடுத்த வருஷத்திலே என்னென்ன ராஜீய வேலைகள் செய்யவேண்டுமென்று ஆராய்ந்து ஒரு முடிவு செய்தல்.

"மேலும், கூட்டத்தின் நோக்கம் என்னவென்றால், தேசிய பார்லிமெண்ட் சபை ஏற்படுத்துவதற்கு அடிகோலுவதாம். தேசிய சங்கக் கூட்டம் சரிவர வருஷந்தோறும் நடக்குமானால், பிரதிநிதித்துவம் வாய்ந்த சபைகளை நடத்து

வதற்கு இந்தியருக்குத் தகுதி இல்லை என்னும் வார்த்தை பொய்யாகும்.

"வருஷந்தோறும் ஒவ்வொரு நகரில் கூட்டம் நடப்பதைப்பற்றி பூனா நகரில் நிச்சயம் ஆகும். பூனாவில் சிப்லோங்கரும் பிறரும் உபசரணை சபை ஏற்படுத்த ஒப்புக் கொண்டுளர். பார்வதி குன்றுக்கு அருகிலுள்ள பீஷ்வா தோட்டத்தில் கூட்டம் நடக்கும்.

"பூனா நகரம் வந்து சேர்ந்ததும் வாகன வசதி, இட வசதி, சாப்பாட்டு வசதி எல்லாம் பிரதிநிதிகளுக்கு இனாமாகத் தேடித் தரப்படும். உபசரணை சபையாரே அச்செலவு அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுவர். சௌகரிய மிருந்தால் பிரதிநிதிகளும் ஏதேனும் பணம் கொடுத்து உதவலாம்."

ராஜப்பிரதிநிதியின் யோசனை :—மேலே சொல்லிய வண்ணம் 1885-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் தேதி மகா சபை பூனாவில் கூடுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் நடந்தன. எல்லாவற்றையும் ஹியூம் என்பவர் கவனித்து விட்டு, இங்கிலாந்துக்குச் சென்றார். இதைத் தொடர்ந்து இங்கிலாந்திலும் கிளர்ச்சி நடக்க வேண்டுமென்பது அவர் கருத்து. இங்கிலாந்துக்குப் போகு முன், அவர் இங்கே ராஜப்பிரதிநிதியாக இருந்த லார்ட் டப்பரின் என்பவரைக் கண்டு பேசினார். ராஜீயக் கிளர்ச்சியை விடுத்து, இதர துறைகளிலேயே மகா சபை கவனம் செலுத்த வேண்டும் என்பதே ஹியூமின் கருத்து.

ஆனால் ராஜப்பிரதிநிதியோ, "அது கூடாது; ராஜீய விஷயத்தையே மகா சபை கவனிக்க வேண்டும். ஜனங்களின் உண்மையான ஆசாபாசம் இன்னது என்று எனக்குத் தெரியவில்லை. ஆதலின், பொறுப்பு வாய்ந்த சபை யொன்று இருந்து ராஜீய ஆசா பாசங்களை எடுத்துரைத்தால், அரசாங்கத்துக்கு அனுகூலமாக இருக்கும்" என்றார்.

கவர்னர் கூடாது :—மகா சபையின் வருஷாந்தரக் கூட்டங்களில் மாகாண கவர்னர்களே தலைமை வகிக்கவேண்டும் என்றும் ஹியூம் விரும்பினர். டப்பரினே, "மகாசபையின் இயக்கம் வளர வேண்டுமானல், கவர்னர்கள் அக்கிராசனம் வகிக்கக் கூடாது. மாகாண அதிகாரிகள் இல்லாதிருந்தால் தான், ஜனங்கள் தாராளமாக மனம்விட்டு விஷயத்தை எடுத்துச் சொல்லுவார்கள்" என்றும் வற்புறுத்தினர். முதல் வருஷக் கூட்டத்திற்கு கவர்னர் லார்ட் ரீ என்பவரை அக்கிராசனராக நியமிக்க ஏற்பாடாயிற்று. அப்போது, "இந்தியரே அக்கிராசனம் வகிக்க வேண்டும்," என்று டப்பரின் ஆலோசனை சொன்னர்.

பின்பு ஹியூம் இங்கிலாந்துக்குப் போனர். அங்கே காமன்ஸ் சபை மெம்பர்களில் பலரைக் கண்டு பேசினர். பத்திரிகாசிரியர்களையும் பார்த்து, மகா சபையின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்கவேண்டும் என்று கோரினர். இவ்விதமெல்லாம் இங்கிலாந்திலே ஏற்பாடுகள் செய்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினர்.

இதற்குள் பூனவிலே உபசரணை சபையார் சகல ஏற்பாடுகளும் செய்து வைத்தனர். சிவாஜி மகாராஜனது குல தெய்வமான அம்மை பவானியின் ஆலயத்தினருகே ஒரு தோட்டத்தில் தேசிய சங்கக் கூட்டமான முதலாவது காங்கிரஸ் மகா சபை கூடுவதாக இருந்தது.

காரணங்கள் :—ஆட்சி முறையின் அவலம், பரம தரித்திரம், வாழ்வில்லாச் சங்கடம், ஆளுவோரின் ஜாதிக் கர்வம், படித்த இந்தியரின் விழிப்பு, வாலிபரின் துடிப்பு, சமயச் சீர்திருத்தம், பத்திரிகைகளின் ஊக்கம், நூல்களின் போதம், கவிகளின் உற்சாகம், ஆங்கில நண்பர்களின் ஆதரவு, காலத்தின் போக்கு இவை எல்லாம் கூடிக்கொண்டு மக்களிடையே

புத்துயிரும் உணர்ச்சியும் ஊட்டி வர, சுதந்திர இயக்கம் உதயமாகத் தொடங்கியது.

ஆதி காங்கிரஸ் கூடுவதற்குப் பூனா நகரமே தகுந்த இடமென்று தீர்மானித்தனர். அங்குள்ள சர்வ ஜன சபை எல்லா ஏற்பாடுகளும் செய்தது. நகரவாசிகளும் உத்ஸாகத்துடன் இருந்தனர். மகா சபை கூடுவதற்கு ஒரு வாரம் முன்னதாக, அந்நகரில் வாந்தி பேதி தோன்றிவிட்டது. வெளியூர்களிலிருந்து வரும் பிரதிநிதிகளை ஆபத்துக்கு ஆளாக்க மனம் இல்லை. ஆதலின், பம்பாய் நகருக்கு மாற்றிவிட வேண்டுமென்று முடிவாயிற்று. பாக்கியம் பண்ணவில்லையே என்று பூனா நகரவாசிகள் பெரிதும் வருந்தினர்.

---

8. முதல் காங்கிரஸ்

தேச மகா சபையைக் கூட்டும் யோசனை நமது சென்னையில் உதித்தது. அதனால் நமது சென்னை நகருக்கு ஒரு பெருமை! முதல் காங்கிரசை நடத்தி வைத்த பெருமையோ பம்பாய்க்குத்தான். பம்பாய் மாகாணச் சங்கத்தார் இரண்டு மூன்று நாட்களில் எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்தார்கள். 'கோகுல தாஸ் தேஜ்பால் சம்ஸ்கிருத கலாசாலை'யின் அதிகாரிகள் இடங் கொடுத்து உதவினர். இந்தியாவின் முதல் தேசீய மகா சபை அக்கலாசாலையின் அழகிய மாளிகையில் நடைபெற்றது. அடிகோலிய 72 பிரதிநிதிகளும் அம் மாளிகையிலேயே தங்கியிருந்தார்கள்.

முதல் புருஷர் :—இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்தும், 1885-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ந் தேதி காலை முதல், பிரதிநிதிகள் வந்திறங்கினர். ரயிலடியில் அன்பர்கள் காத்திருந்து, அவர்களை மாளிகைக்கு அழைத்துச்

சென்றார்கள். வந்து சேர்ந்த பிரதிநிதிகள் 72 பேர். மாலையிலே அரசாங்க அதிகாரிகளும், இதர கனவான்களும் அம்மாளிகை சென்று, பிரதிநிதிகளைக் கண்டு, அளவளாவி ஆனந்தம் அடைந்தனர்.

விஜயம் செய்த பிரதிநிதிகளின் விவரம்:—கராச்சியிலிருந்து இருவர்; வீரமகத்திலிருந்து ஒருவர்; சூரத் 6; பூனா 8; கல்கத்தா 3; ஆக்ரா 2; காசி 1; சிம்லா 1; லக்னோ 3; அலகாபாத் 1; லாகூர் 1; அம்பாலா 1; ஆமதாபாத் 3; பம்பாய் 18; சென்னை நகரம் 8; சென்னை ஜில்லாக்கள் 13.

சென்னைப் பெரியார்:—சென்னை நகரிலிருந்து சென்ற பிரதிநிதிகளின் விவரம்:—(1) ஹைக்கோர்ட்டு வக்கீலும், நகர சபை மெம்பரும், மகாஜன சபைத் தலைவருமான ரங்கய்ய நாயுடு; (2) ஹைக்கோர்ட்டு வக்கீலும், சட்ட சபை மெம்பருமான கனம் எஸ். சுப்பிரமணிய ஐயர்; (3) ஹைக்கோர்ட்டு வக்கீலும், நகர சபை மெம்பருமான அனந்தாச்சார்லு; (4) 'ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியரான ஜி. சுப்பிரமணிய ஐயர்; (5) 'ஹிந்து' பத்திரிகையின் உதவி ஆசிரியரும், மகாஜன சபையின் காரியதரிசியுமான வீரராகவாச்சாரியார்; (6) பச்சையப்பன் ஸ்தாபன தர்மகர்த்தாவும், வியாபாரியும், நகர சபை மெம்பருமான சிங்கார வேலு முதலியார்; (7) ஹைக்கோர்ட்டு வக்கிலான ஸ்ரீ ரங்காச்சாரியார்; (8) டாக்டர் எஸ். வி. அதலீ.

தமிழக பக்தர்:—சென்னை மாகாணத்தின் ஆந்திர ஜில்லாக்களிலிருந்து (1) நகர சபை மெம்பரும், ஜில்லாக் கோர்ட்டு வக்கீலுமான விசுவநாதய்யர்; (2) ஹைக்கோர்ட்டு வக்கிலான வேங்கட சுப்பராயடு; (3) வக்கில் நாகேசுவர ராவ்; (4) வக்கில் குத்தி கேசவப் பிள்ளை; (5) வியாபாரியும், மிராசுதாரும், பல்லாரி நகர சபைத் தலைவருமான சபாபதி முதலியார்.

தமிழ நாட்டிலிருந்து (1) செங்கல்பட்டு வக்கீல் ராகவா ஜனுஜாச்சாரியார்; (2) தஞ்சை ஜன சங்கத்தின் தலைவரும், அரசாங்க வக்கீலுமான எஸ். ஏ. சுவாமிநாத ஐயர்; (3) தஞ்சை மிராசுதாரான என். நாராயணசாமி ஐயர்; (4) கும்பகோணம் மிராசுதாரான கே. பட்டாபிராம ஐயர்; (5) மதுரை பி. சுப்பிரமணிய ஐயர்; (6) திருநெல்வேலி மிராசுதாரும், ஆசிரியருமான பீடர் பால் பிள்ளை; (7) கோயமுத்தூரில் 'கிரஸண்ட்' எனும் ஒரு பத்திரிகையை நடத்திவந்த எஸ். பி. நரஸிம்மலு நாயுடு; (8) சேலம் கிருஷ்ணசாமி ரௌத்.

இவர்களைத் தவிர சென்னையிலிருந்து டிப்டி கலெக்டர் திவான்பகதூர் ரகுநாத ராவும், புரொபஸர் கடாம்பி சுந்தரராம ஐயரும் விஜயம் செய்திருந்தனர்.

பூர்வாங்க யோசனை:—டிசம்பர் 27-ந் தேதி பகல் முழுதும் இரவு நெடு நேரம் வரையிலும், பிரதிநிதிகள் தங்களுக்குள் ஆலோசனை செய்து, அடுத்த தினங்களிலும் என்ன தீர்மானங்கள் செய்வது என்று முடிவுக்கு வந்தார்கள். அடுத்த நாள் (டிசம்பர் 28-ந் தேதி திங்கட்கிழமை) பகல் 12 மணிக்கு அக்கலாசாலையின் பெரிய மண்டபத்தில் மகா சபை ஆரம்பமாயிற்று. பிரதிநிதிகளைத் தவிர பம்பாய் நகரப் பிரமுகர்களும், அரசாங்க அதிகாரிகளும் இருந்தார்கள்.

வந்திருந்த விருந்தினர்களில் முக்கியமானவர்கள்:—(1) யூரேஷிய சங்கத் தலைவர் ஒயிட்; (2) சென்னை டிப்டி கலெக்டர் திவான்பகதூர் ரகுநாத ராவ்; (3) பூனா ஜட்ஜ் மஹாதேவ கோவிந்த ரானடே; (4) ஆக்ரா நகர வாசியான லாலா வைத்திய நாதர்; (5) ஆமதாபாத் புரொபஸர் விஷ்ணு; (6) புரொபஸர் கே. சுந்தரராம ஐயர்; (7) புரொபஸர் பந்தார்க்கர்.

9. புதிய சகாப்தம்

மகாசபையின் கூட்டத்தைக் கண்டு, பம்பாய் கெஜட் எனும் (ஆங்கிலேயரால் நடத்தப்பட்ட) பத்திரிகை அப்போது எழுதியது இது:—"ராஜீயச் சரித்திரத்தில் புதிய சகாப்தம் உதித்துளது. தேசிய மகாசபை முதன் முதல் பம்பாயில் கூடியிருப்பதே சாட்சி. பலவாறான ஜாதி, மதம், வகுப்பு, உட்பிரிவு உள்ளவர்கள் ஒரு மனங்கொண்டு கூடியிருக்கும் காட்சியே சாட்சி! இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்தும் பலர் வந்துளர். சென்னை மாகாண வாசிகள் தங்கள் சுய உடையில் விளங்கினர். வங்காளிகளில் சிலரோ உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ஐரோப்பிய உடையில் தோன்றினர். சிலரோ பாபுகளுக்குரிய குல்லாயுடன் குலவினர். நீண்ட தாடியும், பருத்த உடம்பும், பெரிய சட்டையும், பல வர்ணத் தலைப்பாகையும் கொண்ட வட மேற்கெல்லை மாகாண வாசிகள் ஆஜானுபாகுகளாகத் துலங்கினர். பிரதிநிதிகளில் பலர் பிரபல வக்கில்கள். பலர் பிரபல பத்திரிகாசிரியர்கள். 'பொது நலம் பெருக அனைவரும் ஒரு மனங்கொண்டு, ராஜீயக் கிளர்ச்சி புரிய வேண்டும்' என்ற எண்ணம் அனைவர் முகத்திலும் ஜொலித்தது."

ஹியூம் என்பார் பிரேரிக்க, சென்னை கனம் சுப்பிரமணிய ஐயர் ஆமோதிக்க, பம்பாய் கனம் தேலங்கர் ஆதரிக்க, வங்காள வாசியும், முதல் இந்திய பாரிஸ்டரும், கல்கத்தா வக்கீல்களின் தலைவருமான உமேச சந்திர பானர்ஜீ (கிறிஸ்தவர்) அக்கிராசனத்தில் அமர்ந்தார். உபசரணை சபையின் தலைவர்கள் நீண்ட பிரசங்கங்கள் செய்வது பிந்திய வழக்கம். முதல் காங்கிரஸ் மகாசபையில் உபசரணை சபைத் தலைவர் ஒன்றும் பேசவில்லை. அக்கிராசனர் பானர்ஜி பேசியதின் முக்கிய சாரம் இது:—

அக்கிராசனப் பிரசங்கம் :—“தேசத்தின் நானு பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். சுதேச அதிகாரிகளில் சிலர் ஆலோசனை சொல்வோராக விஜயம் செய்திருப்பது விசேஷமே. தேசத்தின் எல்லா ராஜீய சங்கங்களும் பிரதிநிதிகளை அனுப்பியுள. இம்மட்டோ? பிரபல பத்திராசிரியர்களும், சொந்தக்காரர்களும் மகத்தான இச்சபையில் இருக்கின்றனர். இத்தகைய சபை இன்றளவும் கூடியதில்லை. வந்திருப்போர் அனைவரும் பிரதிநிதிகளோ என்று சிலர் கேட்கலாம். உணர்ச்சி, ஊக்கம், நோக்கம், போக்கு இவற்றில் நம் அனைவருக்குள்ளும் வித்தியாசமே இல்லையாது; மற்று ஒரு மனமே உண்டு. மகா சபை கூடப் போகும் விஷயம், சென்ற ஒரு வருஷமாக மிகவும் பிரபலமாக இருந்தது. தேசத்தின் மூலை முடுக்குகளில் உள்ளவர்களும் சபை கூடப் போவதைக் கேட்டுச் சந்தோஷம் கொண்டிருந்தது பிரசித்தம்.

உள்ளன்பு உண்டாக:—“தேசிய மகா சபையின் நோக்கங்கள் என்ன, கருத்துக்களும் என்ன என்று சிறிது நாளாகச் சிலர் வினவி வருகின்றனர். நடைபெறப்போகும் நடவடிக்கைகள் தக்க பதில் சொல்லும். எனினும் சுருக்கமாகச் சொல்லுவேன். (1) பற்பல பாகங்களிலும் தேச நன்மைக்காக ஊக்கமுடன் உழைத்து வருவோருக்குள்ளே நேச பாசத்தை வளர்த்தல்; (2) தேசபக்தருக்குள்ளே ஜாதி, மதம், மாகாணம் இவை காரணமாக இருக்கக்கூடிய வேற்றுமைகளை அகற்றி, உள்ளன்பு உண்டாக்குதல். தவிர, தேசிய ஒற்றுமைக்கான அம்சங்களை வளர்த்து, ஓர் உருவாக்குதல்; (3) மிகவும் முக்கியமான ஜனச்சார விஷயங்களில் படித்த இந்தியரின் தீர்க்கமான கருத்தை அறிந்துகொள்ளுதல்; (4) அடுத்த 12 மாத காலத்தில் பொதுநல வேலையைச் செய்வதற்குரிய வகை, துறைகளை வகுத்தல்.

சதிகாரர் கூட்டம்:—“இந்தக் கருத்துக்களைக் கண்டு யாருக்கு ஆட்சேபம் இருக்கமுடியும்? இந் நிலையில், ‘சதி காரரின் கூட்டம், ராஜ விசுவாசம் இல்லாதவர்களின் கும்பல்,’ என்று சிலர் சொல்லி வருதல் ஆச்சரியமே. கிரேட் பிரிட்டன் நமக்கு எவ்வளவோ நன்மை செய்துளது. உண் மைதான். என்றாலும், இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டுமே! கல்வியும், பொருளாதாரமும் வளர வளர, ராஜீய தீர்க்க திருஷ்டி வளரும்; ராஜீய முன்னேற்ற ஆசை யும் பெருகும். ஐரோப்பாவில் உள்ளதைப்போன்ற ஆட்சி முறை தேவை என நாம் விரும்புவது ராஜ விசுவாசக் குறைவு அன்று. மகா சபையின் நடவடிக்கைகள் அரசாங்க அதி காரிகளுக்கும் சரி, மகா ஜனங்களுக்கும் சரி, நன்மையே செய்யும்.”

தீர்மானங்கள்:—மகா சபையின் கருத்துக்களை ஆதரித் துப் பலர் வெளியிடங்களிலிருந்து தந்தி கொடுத்தனர். கல்கத்தாவிலுள்ள ‘பிரிட்டிஷ் இந்திய சங்கத்தார்’ அபி மானச் செய்தி அனுப்பினர். அங்கே ‘நாஷனல் கான் பரன்ஸ்’ எனும் தேசிய மகாநாடு இதே தினங்களில் நடை பெற்றதால், அங்கிருந்து பலர் பம்பாய்க்கு வர முடியவில்லை. அம் மகாநாட்டாரும் ஒரு தந்தி கொடுத்து வாழ்த்தினர். அஸ்ஸாமில் நடந்த ஒரு பொதுக் கூட்டமும் அபிமானத் தந்தி பேசியது. மேலே நடவடிக்கை தொடங்கலாமென அக்கிராசனர் அறிவித்தார். உடனே நடவடிக்கை தொடங் கியது.

---

10. ஆட்சியின் அவலம்

‘இந்தியாவின் ஆட்சி முறையைக் குறித்து ராயல் கமிஷன் விசாரித்தல் வேண்டும். அக்கமிஷனில் தகுந்த அளவு இந்தியப் பிரதிநிதிகள் இருத்தல் அவசியம்’ என்னும் தீர்மானமே முதலில் ஆலோசனைக்கு வந்தது. முதல் காங்கிரஸில், முதல் தீர்மானத்தை முதலில் பிரேரித்துப் பேசியவர், மதுரை சென்னை ஜி. சுப்பிரமணிய ஐயர். அவர் பேச்சு பலரையும் பரவசப்படுத்தியது.

“ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் காலத்திலே இருபது வருஷத்துக்கு ஒருமுறை அதன் சன்னது புதுப்பிக்கப்படும். அப்போது இந்தியாவின் நிர்வாகம் பார்லிமெண்ட் சபையில் ஆலோசனைக்கு வரும். அதனால் தேச நிலை இன்னது என்று பார்லிமெண்ட் சபை அறிந்துகொள்ளும். கம்பெனியின் ஆட்சி தொலைந்து, இங்கிலாந்தின் நேர்முகமான ஆட்சி 1858-ம் ஆண்டு ஏற்பட்டது. இந்த 27 வருஷ காலமாக இந்தியாவின் நிலை இன்னது என்பதை அந்தப் பார்லிமெண்ட் சபை அறிந்து கொள்ளவில்லை. இந்தியாவின் மேலதிகாரம் பார்லிமெண்டுக்கே என்பது பேரளவில்தான். இங்குள்ள நிலைமை அச்சபை அறிதல் வேண்டும். ஆதலினால்தான் ராயல் கமிஷன் வேண்டுமென்கிறோம். 25 கோடி மக்களின் விஷயத்தில் இங்கிலாந்து நியாயம் செலுத்த வேண்டாமோ?” என்று பொருள்பட அவர் பேசினார்.

பிரோஸ்ஷா மேதாவும், நரேந்திரநாத சேனரும் ஆதரித்துப் பேசினர். தீவிரமான விவாதம் நடந்தது. முடிவில் சபையார் ஒருமனதாக அதை ஒப்புக்கொண்டனர். தீர்மானம் நிறைவேறியது. இத்துடன் முதல் நாள் நடவடிக்கை முற்றுப்பெற்றது.

பழைய கறுப்பன் :—' இந்தியா மந்திரி சபை ஒழிய வேண்டும். ஒழிந்தால்தான், இதர சீர்திருத்தங்கள் ஏற்பட இடம் உண்டு' என்பது இரண்டாவது தீர்மானம். டிசம்பர் 29-ந் தேதி (பூனா நகரவாசியான) சிப்லோங்கர் அத் தீர்மானத்தைப் பிரேரித்தார். "இந்தியாவை இங்கிலாந்தின் அரசு ஆளவில்லை. இங்கே வேலை பார்த்துவிட்டு, இந்தியா மந்திரி சபையில் உத்தியோகம் பார்க்கும் அதிகாரிகளே இந்தியாவை ஆளுகின்றனர்" என்பது அவர் பேசியதின் சாரம்.

"இங்கே வேலை பார்த்தபின் ஓய்வுகொள்ள உபகாரச் சம்பளம் பெற்று, ஊருக்குச் சென்று ஒடுங்கி யிருக்க வேண்டிய மாஜி அதிகாரிகள், இந்தியாவின் ஆட்சியில் மேலதிகாரம் வகித்தல் ஆச்சரியமே. அச்சபை ஒழிந்தாலன்றி இதர சீர்திருத்தங்கள் ஏற்படா" என்று சென்னை அனந்தாசார்லு பேசினார். "மாஜி அதிகாரிகள் தங்கள் இனத்தாராய் இங்குள்ள ஆங்கில அதிகாரிகளைத் தாங்கி நிற்பரேயன்றி, இந்திய நிர்வாகத்தை உண்மையில் மேற்பார்வை செய்யார்" என்று பிரோஸ்ஷா மேத்தா வற்புறுத்தினார். பின்பு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பொம்மை சபை :—மூன்றாவது தீர்மானம் சட்டசபைகளைப்பற்றியது. அப்போது தேர்தல் கிடையாது. எல்லாரும் நியமனமான மெம்பர்கள். அவர்களிலும் இரண்டொருவரே இந்தியர். கேள்வி கேட்க உரிமை கிடையாது. வரவு செலவு திட்டமும் சபையில் ஆலோசனைக்கு வாராது. புதிய வரி விதிப்பதாயிருந்தால், அப்போது சபையின் ஆலோசனை உபசாரமாகக் கேட்கப்படும். ஆதலால் "சட்ட சபைகளை விரிவாக்கித் தேர்தல் மூலம் இந்தியரை அதிகமாகச் சேர்த்துக்கொண்டு, சட்ட சபை இல்லாத மாகாணங்களிலும் சபைகளை ஏற்படுத்தவேண்டும்" என்று கனம் தேலங்கர்

பேசினர். அவர் பம்பாய் சட்ட சபையில் ஒரு மெம்பர். சென்னை சட்ட சபையில் மெம்பராயிருந்த கனம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆதரித்துப் பேசுகையில், "நாங்கள் சபையில் ஸ்தானம் வகித்து என்ன பயன்? நன்மை செய்யவும் முடியாது, தீமை செய்யவும் இயலாது. தேசத்திற்குப் பிரயோஜனமே இல்லை," என்று தெளிவாக சுட்டிச் சொன்னர்.

நாம் அடிமைகளா? :—தாதாபாய் நௌரோஜி பேசியதின் சாரம் இது :—"நம்மிடமிருந்து வரி வாங்கும்போது நம்மைக் கேட்காமல் காரியம் நடத்துவதா? இங்கிலாந்திலுள்ள உயர்ந்த ஸ்தாபனங்கள் நமக்கு இல்லையென்றல், இங்கிலாந்தின் ஆட்சிக்கு நாம் உட்பட்டுக் கிடப்பதில் யாது பலன்? நமக்குப் பிரதிநிதித்துவம் இல்லையென்றல், ஆட்சி முறை யதேச்சாதிகார ஆட்சி முறையே யாம். நாமும் பிரிட்டிஷ் பிரஜைகளென்றல், ஆங்கிலேயருக்குச் சரி சமானமான உரிமைகளும், சலுகைகளும், இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஆங்கிலேயருக்கு ஏவின வேலை செய்யும் கையாள் அல்லது அடிமைகளே. நம்மை இங்கிலாந்து அடிமையாக ஆக்குமோ? ஆக்காது என்றே எண்ணுகிறேன்."

போட்டிப் பரீட்சை :—அடுத்த தீர்மானம் ஐ. ஸி. எஸ். போட்டிப் பரீட்சையைக் குறித்தது. கம்பெனி ஆட்சியின் காலத்திலே உயர்ந்த உத்தியோகங்களில் ஆங்கிலேயரையே அமர்த்தி வந்தனர். பின்பு தகுதி, திறமைகளை மதித்து நமக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுப்பதாக 1833-ஆம் ஆண்டில் சொல்லினர். ஆனல் காரியத்தில் ஒன்றும் இல்லை. அப்பால் 1854-ஆம் ஆண்டில், சிவில் சர்விஸ் பரீட்சை ஏற்பட்டது. அது லண்டனில் மட்டும் நடக்கலாயிற்று. நம் இளைஞர் அங்கே சென்று பரீட்சை கொடுத்தால், உயர்ந்த

உத்தியோகம் கிடைக்கும். நமது வாலிபர் அங்கே சென்று பரீட்சை கொடுப்பது மிகவும் கஷ்ட சாத்தியமான காரியம். ஆதலால் அப்பரீட்சையை ஏக காலத்தில் இந்தியா, இங்கிலாந்து இரண்டு இடங்களிலும் நடத்த வேண்டுமென்று 1860-ஆம் ஆண்டு சிபார்சு பிறந்தது. பின்பு 16 வருஷம் வரையில் அது வெளியாகவில்லை. வெளியான பின்பும் காரியத்தை மழுப்பி விட்டனர். 1870-ஆம் வருஷம் 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' என்ற சபை ஏற்பட்டது. இந்தியருக்கு அதிகமாக உத்தியோகம் கொடுக்கும் வழியை அச்சபையார் ஆராய்ந்து பார்த்தனர். ஓரளவு உத்தியோகம் கொடுப்பதைத் தவிர வேறு பரிகாரம் பிறக்கவில்லை. தவிர அப்பரீட்சைக்குப் போவோரின் வயதுக் கிரமத்தையும் குறைத்துவிட்டார்கள்.

ஆதலால் 'அப்போட்டிப் பரீட்சையை ஏக காலத்தில் ஒரே மாதிரியாக இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நடத்த வேண்டும். 23 வயது வரையில் அப்பரீட்சைக்கு ஆஜராகலாம் என்று ஏற்படவேண்டும்' என்பதே நாலாவது தீர்மானத்தின் சாரம். தாதாபாய் நௌரோஜி அதனைப் பிரேரித்துப் பேசினர். சென்னை வீரராகவாச்சாரியார் ஆமோதித்தார்.

மனித இறக்குமதி :—யூரேஷிய சங்கத்தின் தலைவரான ஒயிட் என்பவர் பேசியதின் சாரம் இது :—

"வயதை உயர்த்தவும் ஏக காலத்தில் பரீட்சையை நடத்தவுமே நீங்கள் விரும்புகிறீர்கள். இரண்டையும் நான் ஒப்பவில்லை. சிவில் சர்விஸ் பரீட்சை என்பதையே எடுத்துவிடவேண்டும். உயர்ந்த உத்தியோகங்களுக்கு இங்கிலாந்திலிருந்து ஆட்களைத் தருவிப்பதையும் நிறுத்தவேண்டும். இங்கேயே தகுதியான ஆட்கள் இருக்கின்றனர். இல்லாமல் போனல் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யலாம். நீதி

இலாகாவிற்கும் பையன்களான சிவிலியன்களை அமர்த்தவும், வேலை கற்றுக்கொள்ள அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் அவசியம் உண்டோ? இப்பொழுது வேலையில் உள்ளவர் களைப் போகச் சொல்லவேண்டாம். போட்டிப் பரீட்சை முறை ஒழிய வேண்டுமென்பதே எனது யோசனை. பொது வான உரிமைகளும், சலுகைகளும் கிடைக்கவேண்டி இந் தியாவின் சுதேசிகள் அனைவரும் ஒற்றுமைகொள்ள வேண்டு மென்பதே இம் மகா சபையின் கருத்து. அவ்விதம் ஒற்றுமை ஏற்பட்டால்தான், காரிய சித்தி உண்டு. என்னாலானதை நான் செய்யத் தயார். இச் சபை என்னை ஆதரிக்குமானால், எனது இனத்தாருடன் பேசி, வேண்டியதை நாம் செய்து கொள்ளலாம்.'' தீர்மானம் நிறைவேறியது.

ராணுவ பூதம் :—'' இந்தியாவின் ராணுவச் செலவு 1857-ஆம் வருஷம் 115 (நூற்றுப் பதினைந்து) லட்சம் பவுன். 1884-ஆம் வருஷத்திலோ, 170 (நூற்று எழுபது) லட்சம் பவுன். இவ்விதம் விஷம்போல் செலவு ஏறிவரக் கூடாது. இந்தியரின்மீது அவநம்பிக்கை வேண்டாம். தாராள மாக நம்புவதே தகுதி. சுதேச சேனையை வளர்த்து, சுதேசிகளை 'வாலண்டியர்' படையில் சேர்த்துக்கொண்டால், ஆங்கில சோல்ஜர்களைத் தருவிக்க வேண்டிய அவசியம் இராது'' என்று சென்னை ரங்கைய நாயுடு விவரித்து ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். பம்பாய் வாசியான வாச்சா என்பவர் தக்க புள்ளிக் கணக்குகளைக் காட்டி ஆதரித்தார். தீர்மானம் நிறைவேறியது.

' ராணுவச் செலவைக் குறைக்க முடியாவிட்டால், சுங்க இறக்குமதித் தீர்வை விதித்து ஈடு செய்து கொள்ளலாம்' என்பதே ஆறுவது தீர்மானத்தின் சாரம். ' வட பர்மாவைக் கட்டிக் கொள்வதாயின் இந்தியாவினின்று அதனைப் பிரித்து வைத்துத் தனியே ஆண்டு வரவேண்டும்' என்பது அடுத்த

தீர்மானம். எட்டாவது தீர்மானம் என்னவென்றால், மேலே நிறைவேறிய தீர்மானங்களை யெல்லாம் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள ராஜீய சங்கங்களுக்கு அனுப்பி, மகா ஜனங்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்பதாம். அடுத்த காங்கிரஸ் மகா சபை 1886-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 28-ந் தேதியிலும், அதற்கு அடுத்த தினங்களிலும் கல்கத்தா நகரில் கூடவேண்டும் என்பதே கடைசித் தீர்மானம்.

---

11. கிழச் சிங்கத்தின் கர்ஜனை

'கிழச் சிங்கம்' என்று சிறப்புப் பெயர் வாய்த்த தாதாபாய் நௌரோஜி, முதல் மகா சபையிலே ஒரு சந்தர்ப்பத்தில் பேசியது இது:—"காங்கிரஸ் மகா சபையின் முடிவான ஆசாபாசங்கள் என்னென்ன, மிகவும் உன்னதமான லக்ஷியங்கள் என்னென்ன, என்று நாம் திட்டமாகவும், தீரமாகவும் வரையறுத்துச் சொல்லிவிடவேண்டும். இதுவே மகா சபையின் முக்கியமான வேலை. அவை உடனே நமக்குக் கிட்டினாலும் சரி, கிட்டாவிட்டாலும் சரி, நமது மேலான ஆசாபாசங்கள் என்னென்ன என்பதை நம்மை ஆளுவோர் அறிந்து கொள்ளவேண்டும். இந்தியாவின் ஆட்சி, இங்கிலாந்தில் உருக்கொள்வதென்பது கூடாது. இந்தியாவிலேயே உருக்கொள்ள வேண்டும். வரி விதிப்பதும் சட்டஞ் செய்வதும் இங்கே ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய சட்ட சபைகளாலேயே நடத்தல் வேண்டும். இதுவே எங்கள் நோக்கம்; எங்கள் கருத்து."

இந்தியாவின் பணம் கப்பலேறிப் போய்விடுவதைக் குறித்து அவர் சொல்லியது இது:—"அன்னியருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு காசும் தேசத்துக்கு அடியோடு

கஷ்டம். சுதேசிக்குக் கொடுக்கும் ஒவ்வொரு காசும் தேசத்துக்கு மிகுந்த லாபம்.”

ரானடேயின் தீரம்:—மகாதேவ கோவிந்த ரானடே பூனா நகரின் நீதிபதி வேலை பார்ப்பவர். அரசாங்கத்தினிடமிருந்து சம்பளம் பெறுபவர். ‘தேசிய மகா சபை சதிகாரர்களின் கூட்டம்’ என்று சிலர் தூற்றிய போதிலும், அஞ்சாநெஞ்சுடன் சபையிலே மூன்று தினங்களிலும் பிரசன்னமாயிருந்தார். அத்துடன் நிற்கவில்லை. இந்தியா மந்திரி சபையை எடுத்து விட வேண்டும் என்ற தீர்மானத்தின்மீது பேசவும் செய்தார். அடுத்த காங்கிரஸ் கூட்டங்களுக்கும் விஜயஞ்செய்ய அவர் தவறவில்லை.

மூன்று தினங்களுக்குப் பின் முதல் காங்கிரஸ் மகா சபை கலைந்தது. அப்போது ‘காங்கிரஸின் பிதா’ எனப்படும் ஹியூமுக்கு மூன்று முறை ‘ஜே’ கூறினர். உடனே விக்டோரியா மகாராணிக்கு அவர் ஒன்பது முறை ‘ஜே’ கூறினார்.

எதிரிகளின் எதிர்ப்பு:—மகா சபையின் நடவடிக்கையைக் குறித்து லண்டன் ‘டைம்ஸ்’ பத்திரிகைக்கு அதன் பம்பாய் நிருபர் அறிவித்ததின் சாரம் “இல்பர்ட் மசோதாவின் மீது கிளர்ச்சி நடந்த காலத்தே மனக்கொதிப்பு மிகவும் அதிகம். கல்கத்தாவிலே ஆங்கிலேயர் இந்தியர் எனும் பிரிவு மிகவும் பிரமாதம். சில ஆங்கிலேயருக்குள்ளும் பேச்சு வார்த்தை கம்மி. பம்பாயிலோ அவ்விதம் மனக்கொதிப்பு கிடையாது. சாந்தமே நிலவிற்று. அத்தகைய பம்பாய் நகரில் காங்கிரஸ் மகா சபை கூடியது. உலகம் தோன்றிய நாள் முதல் இப்போதுதான் இந்திய மக்கள் ஒரு தலைப்பட்ட ஜன சமூகமாகக் கூடினர். ஜாதி, மதம், வகுப்பு இவற்றில் வேற்றுமையிருந்தும், ராஜீய ஆசாபாசங்களில் அனைவரும் ஒன்றாகவே இருந்தனர். ஒரு பெரிய ஜாதிதான் மகா சபைக்கு வராமல் விலகியே நின்றது. அவர்கள் முகம்மதியர். என்றாலும் மகா

சபை தக்க பிரதிநிதித்துவம் வாய்ந்ததே. பிரதிநிதிகளில் பலரும் லாயர்கள், அல்லது பள்ளிக்கூட ஆசிரியர்கள், அல்லது பத்திராசிரியர்கள். வேறு சிலரும் உண்டு. இந்தியாவிலுள்ள புத்திசாலிகளான படித்த வகுப்பாரின் பிரதிநிதிகளடங்கிய சபை என்பதில் ஆக்ஷேபம் கிடையாது. தங்கள் தேசத்தைத் தாங்களே ஆண்டுகொள்ளத் தங்களுக்குத் தகுதி உண்டு என்பதே அப்பிரதிநிதிகளின் கருத்து. இந்தியருக்குத் தகுதி இல்லை என்பது மேனாட்டு முட்டாள் தனம் என்பது அவர்களின் கருத்தாம்."

அதன்மேல் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை தலையங்கத்தில் எழுதியதின் சாரம்;—

---

12. வாள் வரிசைப் பூச்சி

"இந்தியாவிலே தேசீய உணர்ச்சியும், உயிரும் உண்டென்று பம்பாயில் புலனாயிற்று. அதன் அரசியலில் சீர்திருத்தத்திற்கு இடம் உண்டு. ஆனால் காங்கிரஸ் விரும்பும் வழியிலும், சொல்லும் முறையிலும் அன்று. சில தீர்மானங்களை நாம் ஒப்புக்கொள்வோம். மற்றவை அப்படி அன்று. முக்கியமான ஒவ்வொரு ராஜீய சங்கத்தின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர் என்று நமது நிருபர் சொல்லுகிறார். ஆனால் அந்த ராஜீய சங்கங்கள், பிரதிநிதித்துவம் வாய்ந்தனவா என்று நமது நிருபர் கூறவில்லை. முகம்மதியரில் ஒருவர்கூட நடவடிக்கையில் கலந்துகொள்ளவில்லை. சுதேச லாயர்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும், பத்திராசிரியர்களுமே வந்திருந்தனர். தீர்மானங்களின்படி பார்த்தால், சீர்திருத்தங்களுக்கு இந்தியா தகுதியுடையதா என்பதே கேள்வி. தகுதியுள்ளது என்றால், ஆங்கில ஆட்சியின்

காலத்தை விரல் விட்டு எண்ணவேண்டியதுதான். அத் தீர்மானங்களின்படி நாம் எல்லாச் சீர்திருத்தங்களும் செய்து விட்டு ஊருக்குப்போக மூட்டை கட்ட வேண்டியதுதான். இது அநுபவத்தில் நடக்கமுடியாத அவலக்ஷணமே. பிரதிநிதிகள் அனைவரும் படித்த புத்திசாலிகள் என்று நமது நிருபர் கூறுகிறார். அவர்கள் அழகாகப் பேசுவர், நன்றாக எழுதுவர். இதில் நமக்கு சந்தேகம் இல்லை. ஆட்சியை நடத்த அவர்களுக்குத் தகுதி உண்டா? காங்கிரஸின் காற்றே தங்களுக்கு வேண்டாமென்று முகம்மதிய சமூகம் அடியோடு ஒதுங்கி நின்றுவிட்டது. இதுவே போதுமான கெட்ட சகுனம். முடிவாக ஒரு விஷயம். படைபலம் கொண்டே நாம் இந்தியாவை ஜயித்தோம்; படை பலம் கொண்டே இந்தியாவை ஆளவும் வேண்டும். நாம் இந்தியாவை விட்டு வந்துவிட வேண்டுமானால், நாவன்மைக்கோ, எழுத்து வன்மைக்கோ அஞ்சி வந்துவிட மாட்டோம். நம்மைவிட மிகுந்த படை பலமும், கூரிய வாள் முனையும் கிளம்புமேயானால், நாம் இந்தியாவை விட்டுவர நேரலாம். வேறு வகையில் இல்லை. இதனை காங்கிரஸ் மகா சபை எண்ணிப் பார்த்துத் தனது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்."

முகம்மதியரின் சிரத்தை:—மகா சபையின் காரியதரிசிகளில் ஒருவரான கனம் தெலங்கர் அப்பத்திரிகைக்குப் பதில் கொடுத்ததின் சாரம் இது:—"முகம்மதியர் காங்கிரஸுக்கு வரவே இல்லை என்பது சரியன்று. தகுந்த அளவு முகம்மதியர் வரவில்லை எனலாம். ஆயினும் முகம்மதியப் பிரமுகர்களில் இருவர் வந்திருந்தனர். ஒருவர் ஸயானி, மற்றவர் தரப்ஜி. இருவரும் கலாசாலைப் பட்டதாரிகள். பம்பாய் ஹைக்கோர்ட்டில் அட்டர்னிகள். போன வருஷம் ஸயானி பம்பாய் 'ஷெரிப்'பாக இருந்தார். நகர சபையிலும் பல வருஷமாக அங்கம் வகிப்பவர். தரப்ஜியும் நகர சபை அங்கத்

தினர். பம்பாய் சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும் கனம் பத்ருதீன் தயாப்ஜி என்பாரும், கம்ருருதீன் தயாப்ஜி என்பாரும் அவசர காரியமாக வெளியூர் போயிருந்தனர். இல்லாவிட்டால் காங்கிரஸுக்கு வந்திருப்பார்கள். கனம் பத்ருதீன் தயாப்ஜி பம்பாய் மாகாணச் சங்கத்தின் தலைவர். கம்ருருதீன் தயாப்ஜியோ அச்சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவர். பூனா சர்வஜன சங்கத்துடன் சேர்ந்து, பம்பாய் மாகாணச் சங்கமே காங்கிரஸ் மகா சபையை நடத்தி வைத்தது.''

தேச மெங்கும் கூட்டம் :—காங்கிரஸ் மகா சபை தீர்மானித்த வண்ணம் தேச முழுவதும் பற்பல இடங்களில் மகா நாடுகள் கூடின. தீர்மானங்களை எல்லாம் வாசித்து ஆங்காங்குள்ள தலைவர்கள் விளக்கினர். எல்லாத் தீர்மானங்களும் மகா ஜனங்களால் அங்கீகரிக்கப்பெற்றன. நமது தமிழகத்திலே கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர், கடலூர், ஈரோடு, குளித்தலை, கும்பகோணம், மதராஸ், மதுரை, மன்னார்குடி, மேலூர், மேட்டுப்பாளையம், மயிலாப்பூர், நாகப்பட்டினம், பண்ருட்டி, சாத்தூர், ஸ்ரீரங்கம், சங்கரிதுர்க்கம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்செங்கோடு, திருச்சிராப்பள்ளி, திருவல்லிக்கேணி, திருவள்ளூர், வேலூர் முதலிய இடங்களில் மகாநாடுகள் நடந்து காங்கிரஸ் தீர்மானங்கள் ஆதரிக்கப்பட்டன.

உருசிகண்ட பூனை :—உருசி கண்ட பூனை உறியைத் தாவும். நெடு நாளாக ஏகபோக ஆட்சி கொண்ட எடுப்பு. நெடுக மாமன் காணிபோல் ஆளவேண்டும் எனும் ஆசை. மக்கள் ஒரு மனங்கொண்டு, வாய்திறக்கத் தலைப்பட்டதும், உருசி கண்டோருக்கு வந்துவிட்டது ஆத்திரம். ஆதலின், 'சதிகாரரின் கூட்டம், ராஜ விசுவாசம் இல்லாதாரின் கும்பல்' என்று சிலர் நமது மகா சபையைத் தூற்றத் தலைப்பட்டனர். லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையோ வாள் வரிசை பேசத்

தொடங்கிற்று. ஆனால் ராஸ்ஸம் எனும் ஆங்கிலேயர் உள்ளதை உள்ளபடி உரைக்கத் தவறவில்லை. அவர் ஒரு நூலில் எழுதியதின் சாரம் இது :—

சுய நலக் கூக்குரல் :—"இந்தியாவை நாம் விட்டு விடுவதானால், இங்கிலாந்துக்குப் பயங்கரமான பலாபலன் நேரும். (துணி நெசவில் கொழுக்கும்) லங்காஷயர் அடியோடு அழிந்து போம். யார்க்ஷயர் எனும் இடமும் பேரடி கொள்ளும். இந்தியாவினால் நமக்கு எவ்வளவு லாபம் தெரியுமா? நமது பிள்ளை குட்டிகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் இந்தியா பெரிய பொக்கிஷம். இந்தியாவின் கதியைக் கண்டு நாம் அலட்சியமாக இருந்தாலும் சரி, அதனை நம் கைக்குள் வைத்திருப்பதில் தளர்ந்தாலும் சரி, நமது பலங்களெல்லாம் போய்விடும்; இனிமேல் பிறக்கப்போகிற லட்சோப லட்சக் கணக்கான நம் சந்ததியின் நலபலங்களும் நாசமாகி விடும்."

பிள்ளையார் பூஜை :—வாள்வரிசைப் பேச்சு ஒரு புறம், சதிகாரரின் கூட்டமெனும் தூற்றல் ஒரு புறம், ஆங்கிலேயரால் நடத்தப்பட்ட சில பத்திரிகைகளின் எதிர்ப்பு ஒரு புறம், நல்ல பிள்ளைகளாக நடந்துவிடுவோம் என்று நம்மவரில் பலருக்குள்ளே தோன்றிய எண்ணம் ஒரு புறம், இங்கிலையில் திகைப்பு ஏற்பட்டது. நாம் எது செய்தாலும் 'பிள்ளையார் பூஜை' செய்தே தொடங்குவோம். அவ்விதம் பல காங்கிரஸ்களில் ராஜ பக்தித் தீர்மானங்கள் செய்ய நேர்ந்தன. தவிர, ராஜபக்தி ராஜபக்தி என்று சிலர் ஜபமும் செய்து வந்தனர்.

---

13. எல்லாரும் ஓரினம்

நல்ல காரியத்துக்கு நாலு தடை என்பர். நானூறு தடைகளும் நேரும். பம்பாய் நகரில் காங்கிரஸ் மகாசபை உதித்தது தான் தாமதம். ஒன்றன்பின் ஒன்றாக, அநேக இடையூறுகள் நேர்ந்தன. ஆயினும், சபையின் ஆதி புருஷர் சிறிதும் சளைக்கவில்லை. பம்பாய்க்குச் சென்று திரும்பியதும், ஊர் ஊராகச் சென்றனர்; கூட்டங்கள் போட்டனர்; சபையின் லக்ஷியத்தை எடுத்துச் சொல்லினர். அதனால் காங்கிரஸ் பேச்சே எங்கும் பலமாய் இருந்தது.

மாதரின் சிரத்தை:—இரண்டாவது காங்கிரஸ் கல்கத்தாவில் கூடிற்று. அங்கே பல மாதங்களாக மாதர் அனைவரும் கங்கைக்கு நீராடச் செல்லும்போதும் சரி, நீராடித் திரும்பும் போதும் சரி, காங்கிரஸைப்பற்றியே பேசிக்கொள்வது வழக்கம். பம்பாயில் உதித்த காங்கிரஸ் குழந்தை, கல்கத்தாவில் ஊட்டி வளர்க்கப் பெற்றது. இந்துக்கள், முஸ்லிம்கள் இருவரும் மிக்க சிரத்தை கொண்டனர். தேசமெங்கும் கூட்டங்கள் நடந்தன. காங்கிரஸ் பிரதிநிதிகளை ஜனங்களே தேர்ந்தெடுத்தனர். நாலு பாகங்களிலிருந்தும் 434 பேர் கல்கத்தாவுக்குப் போயினர். போகும்பொழுது, ரயிலடியில் ஜனங்கள் கூடி நின்று, அவர்களை வாழ்த்தி வழியனுப்பினர். தாதாபாய் நௌரோஜியே அக்கிராசனர் ஆனார்.

எல்லாரும் ஓர் இனம்:—டிசம்பர் 28-ந் தேதி நகர மண்டபத்தில் இரண்டாவது காங்கிரஸ் மகா சபை தொடங்கியது. பிரதிநிதிகளைத் தவிர, விருந்தினரும் ஏராளமாக வந்திருந்தனர். மண்டபத்தில் எள் விழ இடமில்லை. சிறந்த கல்விமானும், பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தின் தலைவருமான டாக்டர் ராஜேந்திரலால் மித்திரர் உபசாரணை சபையின் தலைவராகி அனைவரையும் வரவேற்றார்.

மணப் பெண் இல்லாமலா?:—"தேசிய அரசியலில் நாம் வசிக்கவில்லை. அந்நிய அதிகார வர்க்கத்தின் கீழ் வசிக்கிறோம். நம்மை ஆளும் அந்நியர், எவ்வகையிலும் அந்நியரே. நமது உள்ளக் கருத்தை அவர்கள் உணர முடியாது. நமது தேவை, உணர்ச்சி, ஆசை இவற்றையும் அவர்கள் கண்டுகொள்ள இயலாது. இன்று வரை கண்டு கொள்ளவும் முடியவில்லை," என்று அவர் சுட்டிச் சொன்னார்.

மேலும், "இம்மாதிரி இந்தியரனைவரும் ஒன்றுபட வேண்டுமென ஆதிமுதல் நான் கருதி நின்றேன். எல்லோரும் 'ஓர் இனம்' என்று உலகினுக்கு அறிவிக்க இன்று நாம் கூடி இருப்பதைக் கண்டு, ஆனந்தம் அடைகிறேன். ஏராளமான முஸ்லிம் பிரதிநிதிகள் வந்திருப்பது கண்டு, மெத்தவும் சந்தோஷம். முஸ்லிம் மக்கள் இல்லாமல் இம்மகா சபை நடக்க முடியுமோ? நடந்தால், மணப் பெண் இல்லாது கலியாணம் நடப்பதுபோல்தான் இருக்கும்," என்றும் சொன்னார்.

அபாண்டமான வார்த்தை:—பின்பு, பூ சொத்தில் பெருத்த ஜய கிருஷ்ண முக்கர்ஜி என்பவர், "நானோ தொண்டு கிழவன். வயது எண்பது ஆகிறது. கண் பஞ்சடையும் சமயம். மகா சபையின் மகத்தான லக்ஷியத்தை முன்னிட்டு, நம் தேசத்தின் நாலு பாகங்களிலிருந்தும் பலர் வந்திருக்கிறார்கள். இக்காட்சி கண்டு களிக்கிறேன். தாதாபாய் நௌரோஜி அக்கிராசனம் வகிப்பாராக," என்று பேசினார். "இந்துக்கள், முஸ்லிம்கள் இருவரையும் பிரிக்க முடியுமோ? இருவர் நலமும் ஒன்றேயாம். மகா சபையில் முஸ்லிம்களுக்கு அக்கறை இல்லை என்பது அபாண்டமான வார்த்தை. அக்கூற்றை நீங்கள் சட்டை செய்யவேண்டாம்," என்று அயோத்தியா வாசியான நவாப் பீர் அலி கான் என்பவர் உருது பாஷையில் உருக்கமாகப் பேசினார். உடனே

"முஸ்லிம் சமூகம் ஓங்கி உயர்க! தேசிய ஒற்றுமை வானுற வளர்க!!" என்று சபையினர் ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

ஏராளமான சம்பளம் ஏன்?:—தாதாபாய் நௌரோஜி அக்கிராசனத்தில் அமர்ந்து, அரிய பிரசங்கம் செய்தார். "ஆட்சி முறையின் அவலத்தை ஆராய்ந்தறிய, ராயல் கமிஷன் வேண்டுமென்று போன வருஷமே கேட்டோம். அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. தேசமோ பரம தரித்திர நிலைக்கு ஆளாகிவிட்டது. எங்கும் பரவியுள்ள வாழ்வில்லாச் சங்கடத்தையும், அதைப் போக்குவதற்கான வகை, துறைகளையும் வகுத்துச்சொல்ல, மகா சபைக்கு உரிமை யுண்டு. சொல்லுதல் கடமையும் ஆகும். தேசத்தின் நிலையை நோக்குகையில், ஏராளமான சம்பளம் வாய்ந்த உத்தியோகஸ்தர்களை நியமிப்பதா? நிலைமைக்கும், தேவைக்கும் ஏற்றபடி உத்தியோகங்களை ஒழுங்கு படுத்தவேண்டும். ராஜீய விஷயங்களை மட்டுமே மகா சபை கவனிக்க வேண்டுமென்பது மிகவும் சரிதான்," என்று பலவாறாக அக்கிராசனர் பேசினார்.

தொண்டு கிழவன் ஆசி:—அக்கிராசனப் பிரசங்கம் முடிந்ததும், முதல் தினம் சபை கலையத் தொடங்கியது. அப்போது பாபு ஜய கிருஷ்ணர் பேசியது இது:—

"1835-ஆம் வருஷம் நம் தேசம் இருந்த நிலைமைக்கும், இப்போது (1886-ஆம் வருஷம்) உள்ள நிலைமைக்கும், எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. பழங் காலத்தை அறிந்துள்ள என்போலுள்ள தொண்டு கிழவர் சிலரே. இம் மகா சபையினால் விளையக்கூடிய பலனை நான் காணமுடியாது. அதற்குள் என் காலம் ஆகிவிடும். எனினும், இச்சபையின் உதயத்தைக் காணும் பாக்கியம் படைத்தேன். பெருந்தன்மை வாய்ந்த பிரமாதமான வேலையில் இறங்கி இருக்கிறீர்கள். தொண்டு கிழவன் என்ற முறையில் உங்களை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன்."

ஒரே வேளை சாப்பாடு :—இரண்டாவது தினம் கூட்டம் தாங்கவில்லை. நகர மண்டபத்தை விடுத்து, பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தில் மகா சபை நடந்தது. ராஜ பக்தித் தீர்மானம் நிறைவேறிய பின் இந்தியாவின் வறுமையைக் குறித்து, வார்ச்சா என்பவர் ஒரு தீர்மானம் பிரேரித்தார். "தேச மக்களிலே 400 லக்ஷம் பேருக்கு ஒரே வேளை சாப்பாடுதான். அதுவும் தினம் கிடைக்காது. இங்கிருந்து ஏராளமான பணம் போய்விடுகிறது. போவதில் ஒரு காசு கூடத் திரும்புவதில்லை. போய்விடும் பணமோ நெற்றி வியர்வை நிலத்தில் விழ ஏழை மக்கள் பாடுபட்டுச் சேர்த்த தாம்," என்று அவர் வற்புறுத்தினர். "ரெவின்யூ அதிகாரிகள் பணம் பறிப்பதைத் தடுக்க வகை இல்லையே!" என்று நமது சென்னை கனம் எஸ். சுப்பிரமணிய ஐயர் வருந்தினர். தீர்மானம் நிறைவேறியது.

சிங்க கர்ஜனை :—மூன்ருவது தீர்மானம் சட்ட சபைகளை விரிவாக்க வேண்டும் என்பதாம். வாக்கு வன்மையில் இணை யாரும் இல்லாதவரும், கோடை இடிபோல் கர்ஜனை செய்பவரும், வங்க சிங்கமுமான பாபு சுரேந்திரநாதபானர்ஜி அத்தீர்மானத்தின்மீது வெகு அழகாகப் பேசினர்.

"இந்து-முஸ்லீம்களுக்கு இடையே ராஜீய வேற்றுமை கிடையாது. இருவரின் நலபலங்களும் ஒன்ருேடொன்று பிணைந்துள. வடமேற்கெல்லை மாகாணத்தில் நாங்கள் இருவரும் நேசமாகவே வாழ்ந்து வருகிருேம். அங்கே எங்களுக்குப் பேனு முனையைவிட வாள் முனையே மிகவும் சுலபம். வங்காள பாபுக்களே அரசியலில் திருத்தம் வேண்டுகின்றனர் என்பதாகச் சிலர் சொல்லுகின்றனரே. நான் என்ன, வங்காள பாபுவா ? பாருங்கள், என் உடம்பை" என்று சட்டையைத் திறந்து, கட்டமைந்த தமது பருத்த சரீரத்தைக் காட்டினர் வடமேற்கொல்லை வாசியான மஸீக் பகவான் தாஸ்.

வாய் ஏது ? :—முதன் முதல் இரண்டாவது காங்கிரஸில் தோன்றிய பண்டித மதன மோகன மாளவியா பேசுகையில், "பிரதிநிதித்துவம் வாய்ந்த சபைகளே ஆங்கிலேயருக்கு அரிய பூஷணம். அச் சபைகளின்றேல் ஆங்கிலேயர் ஆங்கிலேயரல்லர். நமக்குப் பிரதிநிதிகள் சபை கொடுக்க மறுத்தால், ஆங்கிலேயரென்று சொல்லிக்கொள்ள அவர்களுக்கு வாய் உண்டோ ?" என்று வாதித்தார். தீர்மானம் நிறைவேறியது.

உள்ளதைச் சொன்னல் :—நீதி நிர்வாகப் பிரிவினை, ஜூரி விசாரணை, வாலண்டியர் படை இவற்றைக் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. ஜூரி விசாரணைத் தீர்மானத்தின்மேல், பஞ்சாப் வாசியான லாலா முரளீதரர் பேசியது இது :—"நான் சிறையிலிருந்து நேரே காங்கிரசுக்கு வந்தவன். ஜாமீன் கொடுத்து விடுதலைபெற்றவன். தக்க சாட்சியம் இல்லாமல் தண்டிக்கப்பட்டவன். நான் ராஜீயக் கலகக்காரனும். எனக்குப் பட்டதைப் பேசுகிறேன். பயமில்லாமலும் பேசுகிறேன். என் குற்றம் இதுதான். எனது நிலை பிறருக்கு நேராதிருக்க, ஜூரி விசாரணை அவசியம். ஊழலைச் சொன்னல் அதிகாரிகளுக்குக் கோபம் வருகிறது. என்ன செய்யலாம் ?"

ராஜப்பிரதிநிதியின் உபசாரம் :—அடுத்த மகா சபை சென்னையில் கூடுவதென்று தீர்மானம் ஆயிற்று. பிரதிநிதிகளில் பலரை ராஜப்பிரதிநிதி வரவேற்று உபசரித்தார்; தோட்டக் கச்சேரியும் நடத்தினர். ஆயினும், "ஜனப்பிரதிநிதிகளாக மதித்து உங்களை உபசரிக்கவில்லை; மற்று, தலைநகருக்கு வந்த கீர்த்திவாய்ந்த விருந்தினர் என்றே உபசரிக்கிறேன்," என்று சொன்னர்.

பேச்சுப் படிக்கும் சபை :—லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையோ, "மகா சபையை நடத்துவோர் பதவி மோகம்

வாய்ந்த பேர்வழிகளே. துரும்புக்குச் சமானமானவர்கள். தேசத்திலே அவர்களுக்குச் செல்வாக்கு ஏது? அரசியல் என்றால் அடியோடு அறியாதவர்கள். பேச்சுப் படிக்கும் சபைகளின் பிரதிநிதிகளே யன்றி வேறல்லர். தேசத்தின் அமைதிக்கு அவர்களால் பிரமாதமான ஆபத்து நேரும்" என்று எழுதியது.

முஸ்லிமே தலைவர்:—கல்கத்தா காங்கிரஸிலே இளையோரும் முதியோரும் ஒன்று சேர்ந்து உழைக்கத் தலைப்பட்டனர். தவிர, முஸ்லிம்களே மிகுதியாகச் சேர்ந்து கொண்டனர். சென்னைக் காங்கிரஸிலோ இந்து - முஸ்லிம் ஒற்றுமை ஓங்கி உறுதிகொண்டது. பம்பாய் வக்கீல் பத்ருதீன் தயாப்ஜி அக்கிராசனராக விளங்கினார். மாகாண மக்களுக்குள் பெருமிதமான உத்ஸாகம் உதித்தோங்கிற்று.

14. மகாஜன ஆதரவு

அடுத்த வருஷம் மே மாதத்திலேயே உபசரணை சபையை அமைத்தனர். மூன்று சமஸ்தானங்களில் திவான் பதவி வகித்த ராஜா ஸர் டி. மாதவ ராவ் தலைவரானார். இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், யூரேஷியர் ஆகிய அனைவரும் உபசரணை சபையில் சேர்ந்து கொண்டனர். மைசூர், திருவாங்கூர், கொச்சி சமஸ்தான மன்னர்கள் பணம் கொடுத்து உதவினர்.

ஏழைகளின் உதவி:—மகா ஜன சபையின் காரியதரிசியான வீரராகவாச்சாரியார் காங்கிரஸ் சபையின் லக்ஷியத்தை விளக்கி ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டார். 30 ஆயிரம் பிரதிகள் விநியோகம் ஆயின. ஜில்லாக்களிலெல்லாம் கமிட்டிகள் ஏற்பட்டன. ஓரணு முதல் எட்டணு வரை, 8 ஆயிரம் ஏழைகள் காணிக்கைபோல் காங்கிரசுக்கு பணம் கொடுத்

தார்கள். ஒன்றரை ரூபாய் முதல் முப்பது ரூபாய் வரையில், நூற்றுக்கணக்கான பேர்கள் காணிக்கை செலுத்தினர். மாண்டலே, ரங்கூன், சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்தும் அன்பர்கள் பணம் அனுப்பினார்கள். விஜயநகர ராஜா, வேங்கடகிரி ராஜா, பொப்பிலி ராஜா ஆகிய இவர்களும் திரவிய சகாயம் செய்தனர். தோட்டி முதல் தொண்டமான் வரையில் மகா சபையை ஆதரிக்காதவர்கள் கிடையாது.

விசேஷ வரவேற்பு :—'மக்கே' தோட்டத்தில் டிசம்பர் 27-ந் தேதி மகா சபை ஆரம்பமாயிற்று. பெரிய பந்தலில் பிரதிநிதிகள் கூடினார்கள். மூவாயிரம் பேர்கள் சபையைக் கண்டு களிக்க வந்தார்கள். மாதவ ராவ் சுருங்கக் கூறி அனைவரையும் வரவேற்றார். கப்பல் மார்க்கம் வந்த வங்காளப் பிரதிநிதிகள், கடலிலே சண்டமாருதத்தால் மூன்று நாள் தவித்தனர். சென்னைக்கு வந்ததும், வரவேற்பு நடந்தது.

அரசியல் நடக்குமோ ? :—"காங்கிரஸை 'இந்துக்கள் சபை' என்பது மோசம். எல்லா வகுப்பினரும் காங்கிரஸைச் சார்ந்து நிற்கின்றனர். ராஜீய விஷயத்தையே மகா சபை கவனிப்பது மிகவும் பொருத்தம். அதன் ராஜ விசுவாசத்தில் யாருக்கும் அவநம்பிக்கை வேண்டாம். படித்த வகுப்பாரிடம் ராஜ விசுவாசம் இல்லை யென்றால், தேச அரசியல் எவ்வாறு நடக்கும் ? தீர்மானங்களை முன்னதாகவே ஆலோசித்து முடிவு செய்ய ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும்," என்று அக்கிராசனரான பத்ருதீன் தயாப்ஜி அழகாகப் பேசினார்.

ராஜத் துவேஷி :—சட்ட சபைகளை விரிவாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதே முக்கியமான தீர்மானம். மகா சபையின் மதிப்புக்குப் பாத்திரமான சுரேந்திரநாத பானர்ஜியே அத்தீர்மானத்தைப் பிரேரித்து, சபையோர் பிரமிக்கும்படி பேசினார். பாரிஸ்டர் நார்ட்டன் அதை ஆமோதித்

தார். "என்னை 'மறைமுகமான ராஜத் துவேஷி' என்று சிலர் சொல்லுகின்றனர். நல்லது. தப்பிதங்கள் கண்டு சகியாமல் கிளம்பி எழுவதும், அரசியலில் தேச மக்களுக்குத் தகுந்த பங்கு இருக்கவேண்டும் என்பதும், தீர்ப்பளிக்கு முன் விசாரிக்கவேண்டும் என்பதும், மனித சுதந்திரத்தை வற்புறுத்துவதும் ராஜத்துவேஷமானால், ராஜத்துவேஷி என்னும் பெயர் வாங்க எனக்குச் சந்தோஷமே. தவிர, இம் மகா சபையிலுள்ள பெரியார்களுடன் என்னையும் சேர்த்து ராஜத்துவேஷி என்பது இன்னும் விசேஷமாகும்," என்று நார்ட்டன் மொழிந்தார்.

இருப்பதா, போவதா ? :—"இந்தியாவில் ஆங்கிலேயர் இருப்பதா, விட்டுப் போய்விடுவதா, என்பது இந்திய மக்களின் சம்மதத்தைச் சார்ந்தது என்று இங்கிலாந்தின் பிரதம மந்திரி கிளாட்ஸ்டன் கூறியிருக்கையில், நமது விருப்பத்தை மதித்துச் சீர்திருத்தம் செய்ய இங்கிலாந்து மறுக்கலாமோ?" என்பதாகப் பலர் பேசினர்.

குமார தத்தர் பேசியது:—"சீர்திருத்தம் வேண்டுமென்று 45 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட மஹஜர் இதோ உளது. நான் காங்கிரஸ் பிரசாரம் செய்தபோது, சட்ட சபையில் எங்கள் ஆளே இருக்கவேண்டும் என்றான் ஒரு பஞ்சமன். ஓர் ஏழை முஸ்லிம் முன் வந்து, இதோ நாலணா காங்கிரஸிற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றான். எங்கள் ஆள் இருந்து சட்டம் செய்தால்தான் நாங்கள் ஒப்புக்கொள்ளுவோம் என்றான் இன்னொருவன். சாமானிய ஜனங்கள் மகா விவேகிகள். அரசின் அவலப்போக்கு அவர்களுக்கு நன்கு தெரியும்."

சுத்தப் போய் :—முடிவில் தீர்மானம் நிறைவேறியது. இந்தியருக்கு உயர்தர ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டு

மென்ற தீர்மானத்தின்மேல், சங்கரன் நாயர் பேசியதின் சாரம் :—"ஐரோப்பாவிலே யுத்த மூட்டம் காண்கிறது. சண்டை நேர்ந்தால் இந்தியராகிய நாம் என்ன செய்ய முடியும்? நாம் ஆயுதம் தரிக்கக்கூடாது. ராணுவத்திலும் நம்மைச் சேர்த்துக்கொள்வதில்லை. எனவே, ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைக்கவேண்டும் என்று நாம் ஆண்டவனை வேண்டிக்கொள்ளலாம். இவ்வளவுதான் நாம் செய்யமுடியும். நம்மீது அவநம்பிக்கை கொள்ளுவதேன்? அவநம்பிக்கை கொண்டு நமக்கு ராஜ பக்தி இல்லை என்பது சுத்தப் பொய்."

தெருவில் அலைதல் :—கைத்தொழில் கல்வியைப் புகட்ட வேண்டுமென்பது மற்றொரு தீர்மானம். தஞ்சையிலிருந்து பிரதிநிதியாக வந்திருந்த மூக்கன் ஆசாரி என்னும் தச்சர் தமிழில் பேசியது இது :—"சிறிய கைத்தொழில் சாலைகள் ஏற்பட்டால் ஆயிரக்கணக்கான பேருக்கு யோக்கியமான பிழைப்புக் கிடைக்கும். இப்போதோ பதினாயிரக்கணக்கான நம்மவர் பிழைக்க வகை இல்லாது தெருவில் அலைகின்றனர்; திண்டாடுகின்றனர்; தேம்புகின்றனர். இந்தியாவிலே சிறிய கைத்தொழில்கள் எங்கும் பெருகுமானால், சோற்றுக்குத் திண்டாடும் 450 லக்ஷம் ஜனங்களுக்கு ஒரு வேளை ஆகாரமேனும் கிடைக்குமே. ஒரு வேளை கூட ஆகாரம் இல்லாமல் லக்ஷோப லக்ஷம் ஏழை ஜனங்கள் வாடி வதங்குவதை அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது."

அவமானம் :—அப்பால் ஆயுதந்தரிக்கும் உரிமையைக் குறித்த தீர்மானம் ஆலோசனைக்கு வந்தது. "அந்த உரிமை இல்லாதிருத்தல் அவமானம், அவமானம்!" என்பதாக ராவ் பகதூர் சபாபதி முதலியார் ஆணித்தரமாகப் பேசினார். தமது எழுதுகோலையும், கூரிய நாவையும் தவிர, வேறு ஆயுதம் வேண்டாத விபின சந்திர பாலரும், தீர்மானத்தை ஆதரித்தார். அது நிறைவேறியது.

கவர்னர் கருத்து :—சென்னை கவர்னருக்கு, நேரே சபைக்கு வர ஆசை. ராஜப்பிரதிநிதியோ, "அது வேண்டாம். வரவழைத்து விருந்து நடத்தினுல் போதும்" என்ருர். அதன்படியே அக்கிராசனரையும் அவரது நண்பர்களையும் கவர்னர் லார்ட் கனிமரா, அன்புடன் அழைத்து, ஓர் விருந்தளித்தார். சேலம் ராமஸ்வாமி முதலியாரும், பாரிஸ்டர் நார்ட்டனும் ஒரு விருந்து கொடுத்தனர். அதற்கும் அவர் வந்திருந்தார்.

சென்னையின் சிறப்பு :—நமது சென்னை நகரில்தான் காங்கிரஸிற்குப் பந்தல் போட்டனர். அடுத்த வருஷங்களிலே காங்கிரஸ் கூடுவதற்கு அமைக்கப்பட்ட இடங்களை 'பந்தல்' என்றே அழைக்கலாயினர். இன்றும் அப்பெயரையே கையாளுகிருர்கள். சென்னைக் காங்கிரஸில்தான் முதலாவதாக ஐரோப்பியர் பலர் கலந்து கொண்டனர். பாரிஸ்டர் நார்ட்டனும், பச்சையப்பன் கலாசாலைத் தலைவர் ஆடம் என்பவரும் முக்கியமானவர்கள். பிரதிநிதிகளாக 45 விவசாயிகளும், கைத்தொழிலாளிகள் 19 பேரும் கலந்து கொண்டது ஒரு விசேஷம். அப்போது 'சென்னை மெயில்' பத்திரிகை நேசப்பான்மை கொண்டிருந்தது. திருப்பதி மகந்து அபிமானத் தந்தி அனுப்பினுர். மகாதேவ கோவிந்த ரானடேயும் பிரசன்னமாய் இருந்தார். வந்திருந்த பிரதிநிதிகள் 607 பேர்கள்.

அதிகாரிகளின் போக்கு :—வைத்தியனே விஷங்கொடுத்தால் என்ன செய்யலாம்? கேவலம் ஐனுசார சபையாக ஆக்கக் கருதினுர் 'காங்கிரஸ் பிதா'வான ஹியூம். ராஜப்பிரதிநிதியான லார்டு டப்பரினே, அசல் ராஜீய சபையாக இருக்க வேண்டும் என்ருர். அவ்விதம் பெரிய ராஜீய சபையாகவே காங்கிரஸ் உதித்தது; மூன்று வருஷத்திற்குள் ஓங்கி உயர்ந்தது. ஆயினும் என்ன? தேச விரோதிகளான

எழுத்தாளர் கிளம்பினர்; காங்கிரஸைத் தாக்கியும் தூற்றியும் பத்திரிகைகளில் எழுதினர்; புத்தகங்களும் போட்டனர்; உண்மையைப் புரட்டியும் ஓதினர்; தேசிய இயக்கத்தின் கழுத்தை நெறிக்க அதிகாரக் கூட்டத்திலும் பலர் புறப்பட்டனர்; மாகாண கவர்னரொருவர் காங்கிரஸைக் கேலி பண்ணினார்; ராஜப்பிரதிநிதியோ தாக்கிப் பேசினார்.

வீரம் ஓங்குதல்:—வேல் வந்து தாக்கத் தாக்க வேங்கையின் வீரம் ஓங்கும். காங்கிரஸ் தலைவர்கள் சும்மா இருக்கவில்லை; தேசத்தைப் பல தொகுதிகளாகப் பிரித்தார்கள். ஆங்காங்கே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கச் செய்தார்கள்; லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களைப் போட்டார்கள்; ஜனங்களுக்கு இனாமாக வழங்கினார்கள்; மூலை முடுக்குகளிலெல்லாம் கூட்டம் கூட்டினார்கள்; காங்கிரஸின் நோக்கத்தை எடுத்துக் கூறினார்கள். போட்ட கூட்டங்களுக்கும், வழங்கின பிரசுரங்களுக்கும் ஒரு கணக்கு இல்லை. காங்கிரசுக்கு எதிர்ப்பு நேர நேர, மகா ஜனங்களின் ஆதரவும் வலுத்துக் கொண்டே வந்தது.

---

15. அதிகார ஆவேசம்

பலவாறான ஜாதி, மதம், வகுப்பு பிரிவு கொண்ட இந்தியர் அனைவரும் மகா சபைக்கு முட்டுக் கொடுக்க முன் வந்தனர்; துறவிகளைப்போல் வாழ்ந்து வந்தவர்களும் மார் தட்டிக்கொண்டு வந்தார்கள். மாதருக்குள் பரபரப்பு ஏற்பட்டது; காங்கிரஸை இலேசாகப் பேசியவர்களை விரோதிகளென்று மதித்துப் பேச்சு வார்த்தையும் விடுத்தனர். சில மாதரோ, காங்கிரசுக்காகப் பூஜை செய்தனர். சிலர் நோன்பும் கொண்டனர். 1888-ஆம் வருஷக் கடைசியிலே, இந்திய மக்களில் மூன்றில் ஒரு பங்கு ஜனங்களுக்குக் காங்கிரஸில் பற்று

மிருந்தது. காங்கிரஸ் பிரதிநிதிகளின் தேர்தலில் முப்பது லக்ஷம் ஆடவர் கலந்து கொண்டனர். அந்த முப்பது லட்சம் பேர்களின் மனைவி மக்களையும் சேர்த்தால், காங்கிரஸ் அபிமானிகள் 750 லட்சமாகும். "காங்கிரஸ்காரர் எத்தனை பேர்? அவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்" என்றார் மனம் மாறிப்போன லார்டு டப்பரின்!

பிரதிநிதிகளின் பாகுபாடு:—அலகபாத் நகரில் கூடிய நாலாவது காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகள் 1,248 பேர்கள். சென்னைக் காங்கிரசுக்கோ 607; கல்கத்தா காங்கிரசுக்கோ 431. அலகபாத் காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகளை ஜாதி, மதவாரியாகப் பார்த்தால், ஆரிய, பிரம்ம சமாஜத்தார் உள்பட ஹிந்துக்கள் 965 பேர்; முஸ்லிம்கள் 221 பேர்; சுதேச கிறிஸ்துவர் 22 பேர்; ஐரோப்பியக் கிறிஸ்துவர் 16 பேர்; ஜைனர் 11 பேர்; பார்சிகள் 7 பேர்; சீக்கியர் 6 பேர்.

மன்னரும் பிரமுகரும்:—அந்தப் பிரதிநிதிகளில், மன்னர்கள் 6 பேர்; ராஜாக்கள் 4 பேர்; நவாபுகள் 17 பேர்; ஸர்தார்கள் 3 பேர்; பிரபுக்கள் 54 பேர்; சட்ட சபை மெம்பர்கள் 3 பேர்; கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் 73 பேர்; நகர சபைகளின் தலைவர்கள் 12 பேர்; உப தலைவர்கள் 19 பேர்; அங்கத்தினர் 127 பேர்; ஜில்லா போர்டுகளின் தலைவர்கள் 10 பேர்; அங்கத்தினர் 69 பேர்; சர்வகலாசாலை மெம்பர்கள் 27 பேர்; கவர்ன்மெண்டு வக்கீல்கள் 4 பேர்.

தொழில்வாரிக் கணக்கு:—தொழில் வாரியாகப் பார்த்தால், வக்கீல் தொழிலில் ஈடுபட்டோர் 455 பேர்; வைத்தியத் தொழிலில் ஈடுபட்டோர் 42 பேர்; எஞ்சினீயர் 5 பேர்; வியாபாரிகள் 127 பேர்; லேவா தேவிக்காரர் 85 பேர்; பத்திராசிரியர் 73 பேர்; மிராசுதார் 297 பேர்; சின்ன மிராசுதார் 102 பேர்; உழவர் 17 பேர்; சிற்பிகள் 2 பேர்; கடைக்காரர் 7 பேர்; மத ஊழியக்காரர் 31 பேர்; கல்வித் துறையில்

ஈடுபட்டோர் 59 பேர்; அச்சாபீஸ்காரர் 6 பேர்; கண்ட்ராக்டர் 18 பேர்.

எல்லாம் நன்மைக்கே :—அயோத்தி உள்பட வட மேற்கெல்லை மாகாணத்திலிருந்து வந்த பிரதிநிதிகள் 583 பேர். அவர்களே மிக அதிகம். காரணம் இது:— ஸர் ஸையத் அகமது கான் என்பாரும், இன்னும் பலரும் சேர்ந்து, அம் மாகாணத்தில்தான் காங்கிரஸ் மகா சபைக்கு விரோதமாக மிக மிக உக்கிரத்துடன் வேலை செய்தனர். அதற்கு உடந்தையாக இருந்தோர் அதிகாரிகளே. ஆதலினால்தான் ஜனங்களுக்கு உணர்ச்சி ஓங்கியது; காங்கிரஸினிடம் அபிமானம் வளர்ந்தது. ஏராளமான பேர்கள் பிரதிநிதிகளாக வந்தார்கள். காற்று கடுமையாக வீசுவதற்கு ஏற்ப, நெருப்பும் கொழுந்து விட்டெரியும் அல்லவா?

கட்டணமும் தொகையும்:—வருகிற பிரதிநிதிகள் அனைவருக்கும் இடம், வாகனம், சாப்பாடு முதலிய வசதிகள் எல்லாம் இனாம். சபையைக் கண்டு களிக்க வருவோரோ, பிரதிநிதிகளைவிடப் பன்மடங்கு அதிகம். அத்தனை பெயரையும் தாங்கும்படியான பந்தல் அமைப்பது கஷ்டம்; வேண்டிய வசதிகள் தேடித் தருவதும் கஷ்டம். ஆகலால், பிரதிநிதிகளிடம் ஓரளவு கட்டணம் வாங்கவேண்டும் என்று நாலாவது காங்கிரஸில்தான் விதி ஏற்பட்டது; மேலும், பிரதிநிதிகளின் தொகையையும் ஆயிரத்துக்கு உள்ளாக்கிவிட வேண்டும் என்றும் அப்போதே யோசனை உண்டாயிற்று. (இந்த 1935-ஆம் ஆண்டில் இந்த யோசனை அமுலுக்கு வரப்போகிறதை அன்பர்கள் அறிவர்). இது நிற்க.

திண்டாட விட :—கூடுவதற்கு இடமில்லாமல் காங்கிரஸைத் தெருவில் திண்டாடவிட நடந்த முயற்சிகளைச் சொல்லுவோம். அலகபாத் நகரிலே 'குஸ்ரு பாக்' என்னும் தோட்டத்தில் பந்தல் போட உபசரணை சபையார்

விரும்பினர். முதலில் அதிகாரிகள் சம்மதித்தார்கள். அப்புறமோ, மறுத்துவிட்டார்கள். பின்பு, அங்குள்ள கோட்டைக்கு அருகே ஒரு மைதானத்தில் பந்தல் போட்டுக்கொள்ள அனுமதி கிடைத்தது. அதற்குரிய வாடகையை உபசரணை சபையார் உடனே செலுத்தினர். நான்கு மாத காலம் ஆனதும் பணத்தைத் திருப்பியனுப்பி, இடம் கிடைக்காது என்று சொல்லிவிட்டார்கள். பின்பு, சில வீடுகளை அச் சபையார் வாடகைக்கு அமர்த்தினர். அவ் வீடுகளோ காங்கிரஸ் விரோதியான 'பயோனீர்' பத்திரிகையின் ஆபீசுக்கு அருகில் இருந்தன. பத்திரிகைக்கு இஷ்டமில்லை. சில வீடுகள் கண்டோன்மெண்டு எல்லைக்குள் இருப்பதால், ராணுவ அதிகாரிகள் கூடாதென்றார்கள். மகா சபை கூட ஏழு வாரங்களே இருந்தன.

கவர்னரின் ஓட்டம்:—தேசமெங்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தாகிவிட்டது. சபையை எங்கே கூட்டுவது? நகரிலே ஒரு பெரிய பங்களா காலியாக இருந்தது. அதைச் சுற்றிப் பெரிய மைதானம் உண்டு. அதன் சொந்தக்காரர் இலட்சுமணபுரியில் இருந்தார். உபசரணை சபை மெம்பரொருவர், ஒருவருக்கும் தெரியாமல் இலட்சுமணபுரி சென்றார். உடையவரிடம் அதை வாடகைக்குப் பேசிப் பணமும் கொடுத்தார். மறுதினம் காலையில் உபசரணை சபையார் அதில் ஏற்பாடுகள் செய்யலாயினர். அந்த இடமோ கவர்னரின் மாளிகையை அடுத்தது. இடத்தைக் குறித்து, அதிகாரிகள் ஆட்சேபிக்க வழியில்லை. பார்த்தார் கவர்னர் ஸர் ஆக்லண்டு கால்வின்! என்ன செய்வார்? இடத்தின் உடையவரான நவாபை அதிகாரிகள் பேதிக்க முயன்றார்கள். நவாபோ சொன்ன சொல்லை மீறி நடக்க விரும்பவில்லை. சபை நடக்கும்போது ஊரில் இருக்க மனம் தாளாமல் வெளியூருக்குப் போய்விட்டார் கவர்னர்.

துலாம் சபைகள் :—தர்பங்கா மகாராஜாவும், இதர பிரபுக்களும் பிரதிநிதிகள் தங்கியிருக்க மாளிகை கொடுத்தனர்; கூடாரம் அடித்துத் தந்தனர். ஒரு மாதத்திற்குள் அந்த இடம் பெரிய நகரம்போல் ஆகியது. கடையும் கண்ணிகளும் ரஸ்தாக்களும் வீதிகளும் அமைக்கப்பட்டன. இதற்கு இடையில் அலகபாத் நகரிலே காங்கிரசுக்கு விரோதமான சங்கங்கள் முளைத்தன. கூட்டங்கள் கிளைத்தன; அதிகாரிகள் பிரசன்னமானார்கள். ஆயினும் ஜனங்களுக்கோ காங்கிரசிடம் உற்சாகமும் ஊக்கமும் பொங்கி வழியத் தலைப்பட்டன.

கனவான் கதி :—இனி, ஒரு கனவானை சென்னைக் காங்கிரசுக்குப் போகாதே என்று ஒரு ஜில்லா கலெக்டர் கட்டளையிட்டார். அக்கனவானோ அதை மீறிப் போனார். உடனே அவரிடமிருந்து இருபதாயிரம் ரூபாய்க்கு நன்னடக்கை ஜாமீன் வாங்கப்பட்டது. அப்பீல் செய்தால், கேஸ் ஜயித்துவிடும். ஆயினும் அவரோ பேசாமல் ஜாமீன் கட்டிவிட்டார். ஏனென்றால், கேஸ் ஜயித்தாலும் வேறு பெரிய கேஸ் சிருஷ்டிக்கப்படும், அதிலிருந்து தப்ப முடியாது என்பதே அவருடைய பீதி. பஞ்சாபிலே ஒரு ஜில்லாவில் மட்டும் சுமார் ஆறாயிரம் பேரிடமிருந்து நன்னடக்கை ஜாமீன் வாங்கப்பட்டது. காரணம் அவர்களது காங்கிரஸ் பற்றேயாம். இவ்விதம் பல இடங்களில் அடக்கு முறையும் அமுலில் இருந்தது.

பணம் சேர்ந்த விதம் :—அக் காங்கிரசுக்கு மொத்தச் செலவு 45 ஆயிரம் ரூபா. அதில் நாலிலொரு பங்கே பிரதிநிதிகளின் கட்டணமாக வந்தது. பாக்கிச் செலவுக்கு என்ன செய்வது? அதிகாரிகளின் எதிர்ப்பைக் கண்டதும், பிரபுக்களிலும் தனவந்தரிலும் பலர் காங்கிரசினிடம் பரிவுகொண்டனர். உடனே அவர்களின் குமாஸ்தாக்கள் இரவிலே காங்

கிரஸ் உபசாரணை சபையின் ஆபீஸ் சென்று, “இது அவர் கொடுத்தார், இது இவர் கொடுத்தார்,” என்று கூறிப் பணத்தைச் சொரிந்தனர். பணங் கொடுத்த பேர்வழிகள் இன்னுரென வெளியில் தெரியவேண்டாமென்றும் சொல்லினர். இப்பட்டோ? காங்கிரசுக்கு விரோதமாக அதிகாரிகள் சிருஷ்டித்த சங்கங்களின் தலைவர்களிலும் பலர் பணமனுப்பி உள்ளம் பூரித்தனர்.

காசி ராஜா எதிரி:—1888-ஆம் வருஷம் டிசம்பர் 29-ந் தேதி பிற்பகல் மகா சபை ஆரம்பமாயிற்று. பிரபல வக்கிலும் பெருமானுமாகிய பண்டித அயோத்தியா நாதர் அனைவரையும் வரவேற்றார். சமஸ்தான மன்னரும், டில்லி, அயோத்தி, பாஜி ராஜ குடும்பத்தினரும் ஆதரவாக நிற்பதைக் குறிப்பிட்டார்; காசி மகாராஜா ஒருவர்தான் எதிராளி என்றார். முந்திய காங்கிரசினும் மும்மடங்கு முகம்மதியப் பிரதிநிதிகள் வந்திருப்பது விசேஷமென்றார். பின்பு கல்கத்தா பிரபல வியாபாரியான ஆண்ட்ரூ யூல் என்பவர் அக்கிராசனத்தில் அமர்ந்தார். அவரை ஆதரித்து, ஷைக்ராஸா ஹூஸேன் கான் பேசியதின் சாரம்:—

பத்வா பாருங்கள்:—“முகம்மதியர் காங்கிரசுக்கு விரோதிகளாம். நான் முகம்மதியன். முந்திய காங்கிரசுகளுக்கு வாராது போயினும், ஆதி முதல் எனக்கு மிக்க சிரத்தை உண்டு. எனது சமூகத்தில் பெரும்பாலரும் இம் மகா சபையிடம் மிகுந்த சிரத்தை உள்ளவர்கள். ஸூன்னி முகம்மதிய சமூகத்தின் மத குருவான ஷம்சுல் உலேமா இதோ ‘பத்வா’ கொடுத்திருக்கிறார் பாருங்கள். எல்லா முகம்மதியரும் காங்கிரசுக்குப் போகவேண்டும் என்பதே பத்வாவின் கருத்து. முகம்மதிய மேதாவிகள் உள்ள லட்சுமணபுரியின் ஆதரவு இது. முகம்மதியர் எதிரிடையாக இல்லை. எஜமானர்களான அதிகாரிகளே எதிராளிகள்; வேறில்லை.”

16. தர்ம சொத்து

தேசத்தின் இராஜப் பிரதிநிதிக்கும் இதர ஆங்கிலேயருக்கும் சரியான பதில் கொடுத்து அக்கிராசனர் விரிவாகப் பேசினர். அதில் ஓர் அம்சம்:—"ஆண்டவன் செயலால் தர்மசொத்தாக நம்மிடம் இந்தியா வந்துளது என்று ஆங்கிலேயரும், காமன்ஸ் சபையாரும் சொல்லுகின்றனர். நல்லது. தர்மசொத்தை அவர்கள் சரிவர பரிபாலித்தனரா? ஆண்டவனிடமே அதனை வீசி எறிந்துவிட்டனரே. 770 லட்சம் பவுன் இந்தியா வரி செலுத்துகிறது. அதைச் செலவு செய்வதில் இந்தியரெவருக்கும் வாய் கிடையாது. இங்கிலாந்திலே என் போன்றவர்களுக்கு மிக்க மதிப்புண்டு. மகா சபையிடம் அன்பு காட்டுவதால் இங்கோ துரோகத்திற்கு மூல புருஷராம்."

'பேழை எனக்கு':—அடுத்த நாள் பம்பாய் வணிகரொருவர் பணம் நிரம்பிய வெள்ளிப் பேழை யொன்றை அக்கிராசனருக்கு அளித்தார். "பேழையிலுள்ள பணம் உபசரணை சபைக்கு. பேழை எனக்கு. ஏன் என்றால், ஆயுள் அளவும் காங்கிரஸ் ஞாபகம் நிலைக்க" என்றார் அக்கிராசனர். வருஷம் முழுதும் சென்னை மாகாணத்தில் நடந்த காங்கிரஸ் வேலையைக் காட்டும் அறிக்கை யொன்றை பாரிஸ்டர் நார்ட்டன் அம் மகாசபை முன் சமர்ப்பித்தார்.

அலட்சியமா?:—சட்ட சபைத் திருத்தம் வேண்டும் என்பது முதல் தீர்மானம். தேலங்கர், சுரேந்திர நாதர் இருவரும் ஆதரித்துப் பேசினர். "சிறப்பு வாய்ந்த இந்திய மக்களிடையே தோன்றிவரும் ராஜீய ஆசாபாசத்தை அலட்சியமாகவோ, அருவருப்பாகவோ எண்ணுதல் ஆங்கிலேயருக்கு அடாது என்பதாக முதன் மந்திரி கிளாட்ஸ்டன் கூறியிருக்கையில், அரசாங்கம் வாளா இருப்பதோ" என்றார்

பானர்ஜி. நாலாவது காங்கிரசில் முதன் முதலாகப் பிரசன்ன மான லாலா லஜபதிராய் பேசியதின் முக்கிய சாரம் இது :—

லாலாவின் சாட்டை :—“அலிகார் வாசியான ஸர் ஸையத் அகமது கான் இப்போது நமது சபைக்கு எதிராக நிற்கிருரே. அவரது யோக்கியதையைப் பார்ப்போம். சிப்பாய்க் கலகம் அடங்கியதும், ‘கலகத்தின் காரணங்கள்’ என்று அவர் ஒரு புத்தகம் எழுதினுர் உருது பாஷையில். மாகாண கவர்னரான ஸர் ஆக்லண்டு கால்வின் என்பவரே அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். ‘அரசாங்க ஆலோசனை சபைகளில் ஜனப் பிரதிநிதிகள் இல்லை. ஆதலின் ஜனங்களின் கருத்தை அறிய முடியவில்லை. அறிந்து கொள்ளவுமில்லை. ஜனங்களுக்கு அவநம்பிக்கை பிறந்தது. அதுவே கலகத்திற்குக் காரணம்’ என்று அகமதுகான் அதில் சொல்லியிருக்கிருர். அந்த ஜனப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றே நாம் கேட்கிறோம். தீர்மானமும் அதுதான். இங்கிலையில் அந்த அகமது கான் இன்று காங்கிரசுக்கு விரோதமாக இருப்பது ஏன் ?”

அங்கும் இங்கும்:—அடுத்தபடி பேசிய சென்னைவாசி, சேலம் ராமஸ்வாமி முதலியார் சொன்னது இது:—“ஆங்கில இந்தியாவிலே நமக்குச் சிறிதும் பிரதிநிதித்துவம் கிடையாது. புதுச்சேரியிலோ ஒவ்வொருவருக்கும் வாக்குரிமையிருக்கிறது. வயது வந்த அனைவருக்கும் வாக்கு சுதந்திரம் உண்டு. பிரான்ஸில் உள்ள ஜன சபைக்கும் பிரதிநிதியை அனுப்பலாம். புதுச்சேரியிலே சட்ட சபையைக் கலந்து கொள்ளாமல் எதுவும் செய்வதில்லை. வரவு செலவு திட்டம் அங்கீகாரமானுல்தான, செலவு நடக்கும். அங்கும் இங்கும் பாருங்கள் உள்ள நிலைமையை.”

காங்கிரஸ்காரரைத் தண்டிக்க :—பின்பு ராஜா சிவப் பிரசாத் என்பவர் பேச எழுந்தார். திருத்தமொன்று செய்ய

வேண்டும் என்றார். என்ன என்று கேட்டதற்கு, காங்கிரஸ்காரரைத் தண்டிக்க சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என்று கூறினார். "திருத்தமா, அது பொருந்தாதே" என்றார் அக்கிராசனர். பேசிக்கொண்டே போனார் அந்தப் பேர்வழி. காலங் கடந்து விட்டதால் உட்கார வேண்டும் என்று தலைவர் ஆணை இட்டார். பின்பே விதியின்றி உட்காரலானார். அவர் கதை வெகு ருசி.

கோலாகலப் பேர்வழி :—அவர் சின்ன குமாஸ்தாவாக இருந்தவர். ஆரம்ப முதல் அதிகாரிகளின் கையாளானார். படிப்படியாக ராஜா பட்டம் பெற்றார். அரசாங்க செல்லப் பிள்ளையாகி ஆனந்தம் அடைந்தார். தினம் அதிகாரிகளையே தெய்வமாகக் கும்பிடுவது வழக்கம். காசி மகாராஜாவுக்கு அவர் அந்தரங்க காரியதரிசி ஆனார். அவரோடு சேர்ந்து கொண்டு காங்கிரஸைத் தூற்றி வந்தார். இல்பர்ட் மசோதாவின் கிளர்ச்சிக் காலத்தில் அம்மகாராஜாவும், ராஜாவும் ஐரோப்பியருடன் கூடிக்கொண்டு கோலாகலம் கண்டவர்கள்.

மோகமும் கோபமும் :—உபசாரனை சபையை ஏமாற்றி அந்த ராஜா ஒரு பிரதிநிதியாக வந்தார். காசியிலிருந்து பிரதிநிதிகள் வந்ததும், ராஜாவைப் பார்த்துத் திக்பிரமை கொண்டனர். அந்தப் பேர்வழியை ஒருவரும் தேர்ந்தெடுக்கவில்லையே என்று வாதாடினர். அவருடன் சேர்ந்து உட்காரவும் அவர்கள் சம்மதிக்கவில்லை. ஒரு கூட்டத்தில் ஸர் ஸையத் அகமது கானோடு சண்டை போட்டுக்கொண்டு அவர் விலகியதால், அவர் மாறி விட்டார்போலும் என்று உபசாரணை சபையார் எண்ணி மோசம் போயினர். காசிப் பிரதிநிதிகளின் மன உணர்ச்சியை மதித்து, அவரைத் தனியாக ஓர் இடத்தில் உட்கார வைத்தனர்.

சபையின் பொறுமை :—காங்கிரஸைத் தாக்கியும், தூற்றியும் அவர் பேசிய காலையில் சபையோர் ஆத்திரம்

அடையவில்லை. அக்கிராசனரின் வார்த்தையை மதியாமல் அவர் பேசியபொழுதும் சாவதானமாக இருந்தார்கள். சபையில் இருந்த ஐயாயிரம் பேருக்கும் அவர் பேச்சு சிறிதும் பிடிக்கவில்லை. எனினும் சாந்தியே நிலவியது. அது கேட்டு ஊராரும் ஆச்சரியமடைந்தனர். சபை கலைந்து அவர் தமது வீட்டுக்குப் போகையில், தக்க காவலுடன் உபசாரணை சபையார் அனுப்பினர். தீர்மானத்தின் மேல் பலர் பேசியது கண்டு, எதிரிகளுக்கும் பரவசம் பிறந்தது. உதாரணமாக, ராஜா சிவப் பிரசாதரும் தீர்மானத்துக்குச் சாதகமாகக் கை தூக்கினர். எதிர்ப்புக்கெல்லாம் காரணபூதமான 'பயோனீர்' பத்திரிகையின் சொந்தக்காரர், அங்கே பத்திரிகைப் பிரதிநிதியாக வந்திருந்தும், பரவசம் மிகுந்து, கையைத் தூக்கி ஓட் செய்தார்.

போலீஸ் பயங்கரம் :-போலீஸ் நிர்வாகத்தைக் குறித்து ஒரு தீர்மானம் வந்தது. அப்போது, 'பஞ்ச்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் முன்ஷி ஸஜத் ஹுசேன் பேசியது:—"பிரிட்டிஷ் அரசின் நன்மைகளில் ஒன்று போலீஸ். கிராமக் கூலியாளும் சரி, நகரவாசியான பிரபுவும் சரி, கீர்த்தி வாய்ந்த போலீஸ்காரனுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். மகாகனம் தங்கிய போலீஸ் இல்லாத இடம் இல்லை. நமனைப்போல் எங்கும் இருப்பர். போலீஸாரின் மனம் கடுகளவு கோணும்படி நாம் நடந்தால் போதும். அன்புள்ள போலீஸ் கிளம்பிவிடும். பர்த்தாவா, பூலோகமா என்று நாம் இருந்தாலும், நம்மீது கிரிமினல் கேஸ் தோன்றி விடும். நன்னடக்கை ஜாமீன் கொடுத்தால்தான், நாம் வீட்டுக்குப் போகலாம்."

விபசார வேலை :—பல தீர்மானங்கள் நிறைவேறின. ஒன்று இது. ஆங்கில பட்டாளங்கள் இருக்கும் இடத்திலே சோல்ஜர்களின் நன்மைக்காக நூற்றுக் கணக்கில் இந்திய மாதரை விபசாரத்துக்கு அமர்த்தி யிருந்தனர் அதிகாரிகள்.

அதைக் கண்டித்து காப்டன் பானன், காப்டன் ஹொர்ஸே, ஹோவர்டு முதலிய யூரேஷீயர் பேசினர். "இந்திய மாதரை, அழகுள்ள இந்திய மாதரைத் தேடிக்கொணர்ந்து, கண்டோன்மெண்டுகளில் விபசாரத்துக்கு வைத்தல் நாகரிகமோ? தர்மந்தான் ஆகுமோ? கிறிஸ்துவருக்கு அடுக்குமோ? பெரும் பதவியிலுள்ள ஆங்கிலேயர் அவ்வேலையில் ஈடுபடுதல் அக்கிரமம், அக்கிரமம்! சட்டம் சம்மதி தருவதும் மோசமே. இந்த அவமானம் விரைவில் தொலையவேண்டும்" என்று அவர்கள் அனைவரும் வற்புறுத்தினார்கள்.

---

17. ஜன சக்தி

காங்கிரஸின் செல்வாக்கைக் கண்டதும், ஆங்கிலப் பத்திரிகைகளான 'பயோனீர்,' 'இங்கிலீஷ்மன்,' 'ஸ்டேட்ஸ்மன்' எனும் பத்திரிகைகளுக்குச் சகிக்கவில்லை. "பாபு காங்கிரஸ், இந்துக்கள் காங்கிரஸ், ராஜ விசுவாசமில்லாத காங்கிரஸ், பேச்சுப் படித்த காங்கிரஸ்," என்று பலவாறாக அவை எழுதி வந்தன. லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையோ கேட்க வேண்டியதில்லை. ஆனால் இங்கிலாந்திலுள்ள சில பத்திரிகைகளோ பாரபட்சமின்றி எழுதின. "இந்தியரின் தேவை இன்னதெனத் தெரியவில்லை என்று இனிமேல் சாக்குச்சொல்ல முடியாது" என ஒரு பத்திரிகை எழுதியது. "இந்தியர் நம்மை வெறுத்து விரோதங் கொள்ளின், இந்தியாவை நாம் இழந்து விட வேண்டியதுதான்" என்று இன்னொரு பத்திரிகை எச்சரிக்கை செய்தது.

நாடு கடத்தினாலும்:—காங்கிரஸ் மகாசபையின் அறிக்கையில் காணும் விஷயம் இது:—"காங்கிரஸின் லட்சியம் மக்களின் மனத்தில் வேரூன்றிவிட்டது. எனவே எந்த

சக்தியும் அதனை அழிக்க முடியாது. காங்கிரஸ் பிரமுகர்களில் பத்தாயிரம் பேரை நாளைய தினம் நாடு கடத்தினாலும் சரி, காங்கிரஸ் லட்சியம் தலைதூக்கும். தேசத்திலுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் காங்கிரஸ் என்றே கோஷிக்கும் நிலைமை ஏற்படும். காங்கிரஸ் வளருமேயன்றி, சாகவே சாகாது. அடக்கு முறையின் பலனாக, தேச நலத்துக்கான முயற்சி அடங்கி ஒடுங்குமோ? ஒடுங்காது. மற்று அந்தரங்கமாக முனைந்து முயலவே நேரும். லார்டு லிட்டனது ஆட்சியின் விளைவாக அந்தரங்க சங்கங்கள் பல இடங்களில் தோன்றின. அவற்றால் என்ன விளைந்திருக்குமெனச் சொல்லமுடியாது. நல்ல வேளையாக லார்டு ரிப்பன் வந்தார்; அபிமானம் காட்டினார்; அந்தரங்க சங்கங்கள் மறைந்தன. நேர்வழியில் பகிரங்கமான நல்லியக்கம் உதிக்கலாயிற்று. தங்கள் அதிகாரத்தையும், சக்தியையும் அதிகார வர்க்கம் விபரீதமாகக் கையாளின், தேச மக்களிலே ஒரு சிலர் இரகசியமான வழிகளில் இறங்க நேரும். அதற்கு அதிகாரவர்க்கமே காரணமாகும்.

ஆட்சி நிலைக்க வழி:—"இந்தியாவை நம்பி, அதன் தேவைகளை அன்புடன் ஆலோசித்து, இங்கிலாந்து நடக்குமானால் இந்தியா இங்கிலாந்து இரண்டுக்கும் நன்மையே நிகழும். இந்தியரின் கோரிக்கைகளை ஈடேற்றினால், ஆங்கில ஆட்சி நிலைக்கும் என்பதாக சமஸ்தான மன்னரிலே சிறந்த ஒருவர் சொல்லியுள்ளார். ஆனால், சிறப்பு வாய்ந்த மக்களின் ராஜீய ஆசைகளைக் கண்டு ராஜப்பிரதிநிதியும், மாகாண கவர்னர்களும் முகங் கடுத்துத் திரித்துக் கூறினாலும், நேரான ராஜீய இயக்கத்தை இதர அதிகாரிகள் எதிர்த்து, மனம் விட்டுப் பேசும் யோக்கிய புருஷரைத் துன்புறுத்தி வந்தாலும், இரண்டு தேசங்களுக்கும் பிரமாதமான கஷ்டங்களே விளையும். அன்பினால் ஆளாமல் அச்சங் காட்டி ஆளமுடியுமோ?"

18. பிராட்லா காங்கிரஸ்

ஐந்தாவது காங்கிரஸ், பம்பாய் நகரிலே 1889-ஆம் வருஷம் கூடியது. அதற்கு 1889 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களில் 12 பேர் ஸ்திரீகள். பம்பாய் காங்கிரஸை பிராட்லா காங்கிரஸ் என்றும் சொல்லுவர். நமது ஆங்கில நண்பர்களில் ஒருவரான சார்லஸ் பிராட்லா இங்கிலாந்திலிருந்து விஜயஞ் செய்தார். "உலகமே எனது தேசம். மானிட கோடிகளுக்கு உழைப்பதே என் மதம்" என்பதே அவரது உள்ளக் கருத்து.

விவசாய பாங்கு:—பிரோஸ் ஷா மேத்தா உபசாரணை சபையின் தலைவராக விளங்க, ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்னும் ஆங்கிலேயர் அக்கிராசனம் வகித்தார். விவசாயிகள் ஏழ்மை நீங்கிக் கடன் சுமையிலிருந்து விடுபட வேண்டுமானால், விவசாய பாங்குகள் ஏற்பட வேண்டும் என்றார். ஜெர்மனியிலே 2 ஆயிரம் பாங்குகள் இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். பால கங்காதர திலகரும், கோபால கிருஷ்ண கோகுலரும் முதன் முதலாகக் காங்கிரஸில் கலந்து கொண்டனர்.

அரசியல் மசோதா:—இந்தியாவின் அரசியலைத் திருத்த பிராட்லா ஒரு மசோதா வரைந்திருந்தார். அதை காமன்ஸ் சபையில் ஆஜர் செய்யவேண்டுமென்பது அவர் கருத்து. அதற்கு முன்னதாக இந்தியரின் அபிப்பிராயத்தை அவர் அறிய விரும்பினர். அம் மசோதாவை நமது மகா சபை ஆராய்ந்து பார்த்தது. "சட்ட சபைகளிலே பாதிப் பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதிகாரிகள் காலில் ஒரு பங்கு இருக்கலாம். இதரர் நியமனம் செய்யப்படலாம். 21 வயதுக்கு மேற்பட்ட ஆடவர் அனைவருக்கும் குறிப்பிட்ட

ஒரு யோக்கியதையை மதித்து ஓட்டுரிமை இருக்கவேண்டும்" என்பதே அம் மசோதாவின் சாரமாகும்.

அம்மசோதாவின் மீது விவாதம் நடந்தது. திலகர், கோகுலர் முதலிய பலர் பேசினர். ஹிந்துக்களுக்கு எத்தனை ஸ்தானங்களோ அத்தனை முகம்மதியருக்கும் இருக்க வேண்டும். முகம்மதிய ஜனத்தொகை குறைவாக இருப்பின் என்ன, என்று ஒரு முகம்மதியப் பிரதிநிதி வாதாடினர். உக்கிரமாக இதனை முகம்மதியரே எதிர்த்துப் பேசினர் மிகவும் அநீதமென்று.

வேஷமா வஞ்சகமா?:—உத்தியோக விஷயம் ஆலோசனைக்கு வந்தது. அப்போது கோகுலர் பேசியது இது:— "ஜாதி, மத, வகுப்பு பேதம் காட்டாமல் தகுதியை மதித்து, யாரையும் உத்தியோகத்தில் அமர்த்துவதாக 1833-ஆம் வருஷமே வாக்குறுதி பிறந்தது. அப்பால் விக்டோரியா மகாராணியும் அவ்விதமே வாக்குறுதி தந்தார். தந்துமென்ன? அந்த உரிமைகள் நமக்குக் கிடைக்கா வண்ணம் செய்யச் சிலர் முயலுகின்றனர். முயலுகையில், வாக்குறுதி என்பது வெறும் வேஷம், அல்லது வஞ்சகம் என்பதற்கு அவர்கள் ஆளாகவேண்டும். வாக்குறுதி செய்கையில் உதடு பேசியதா? உள்ளம் பேசியதா? வாக்குறுதியின்படி காரியம் நடத்த உத்தேசம் இல்லை யென்று ஆங்கில ஐட்ஜ் ஒருவர் கூசாமல் கூறுகிறார்."

விழலுக்கு இறைத்த நீர்:—எங்கும் சாசுவத நிலத்தீர்வை ஏற்பட வேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்தது. சென்னை கனம் சுப்பிரமணிய ஐயர் வெகு நேர்த்தியாகப் பேசினர். முன்ஷி ஸதருத்தீன் அகம்மது என்பார் ஸெட்டில்மெண்டு உத்தியோகஸ்தரைக் குறித்துப் பேசியது இது:—"ஐக்கிய மாகாண கவர்னரான ஸர் கால்வின் முன்பு ஸெட்டில்மெண்டு உத்தியோகஸ்தராக இருந்தார். ஏழை

ஜமீன்தாரொருவர் வரி உயர்வைத் தாங்க முடியவில்லை. கலெக்டரை மிகவும் வேண்டிக் கொண்டார். எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்று. முடிவில் அந்த ஜமீன்தார் மேற்படி கலெக்டருக்கு எழுதிய மனு என்னவென்றால்:—

நீங்களே கட்டிக்கொள்ளுங்கள்:—"எனது கிழத் தந்தை சாகக் கிடந்தார். அப்போது என்னைக் கூப்பிட்டு, 'அப்பா மகனே! ஒரு அதிகாரி வருவார். அக்காலத்திலே வறுமை தலை மிஞ்சிவிடும். வீடுகளிலே எந்திரம் ஆடாது, மினுக்கு மினுக்கு என்று விளக்கும் எரியாது. அத்தகைய நிலைமை நேர்ந்ததும், கிராமத்தை அரசாங்கத்தினிடம் ஒப்படைத்து விட்டு, நீ பிச்சைக்காரனாகப் போய்விடு' என்று சொல்லிப் போனார். ஆதலின் என் கிராமத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பேரில் பட்டாவை மாற்றிக் கொள்ளுங்கள்."

கலால் வரும்படி:—கலால் வரும்படியைக் குறித்த தீர்மானத்தின்மேல் பாதிரி இவான்ஸ் பேசியதின் சாரம் இது:- "மதுபான வகை வியாபாரம் எவ்விதம் பெருத்து வருகிறது பாருங்கள்! முகம்மதியரின் ஆட்சிக் காலத்திலே இந்தியாவின் கலால் வருமானம் 25 லட்சம் ரூபாதான். அதுவும் அபராதமாகவே விதிக்கப்பட்டது. அயோத்தி தேசம் நவாபுக்கு உட்பட்டிருந்தபொழுது, லட்சுமணபுரியைச் சுற்றிப் பத்து மைல் தூரத்துக்கு மதுபானக் கடையே கிடையாது. இப்போதோ ஆங்கில ஆட்சியில் நூறு கடைகள் இருக்கின்றன. தீபா என்னும் அரசன் பர்மாவை ஆண்ட காலத்தில், மேல்பர்மாவிலே மதுபானக் கடை ஒன்றுகூட இல்லை. போன வருஷம் அம் மாகாணத்தின் கலால் வருமானம் இரண்டு லட்சம் ரூபா. 1858-ம் ஆண்டிலே கம்பெனியின் ஆட்சி ஒழிந்தபோது, இந்தியாவின் கலால் வருமானம் ஐம்பதே லட்சம். இப்போதோ 500 லட்சம்."

ஏழைகளின் அன்பு :—பல தீர்மானங்கள் நிறைவேறிய பின், பிராட்லாவுக்கு உபசாரம் நடந்தது. கணக்கு வழக்கில்லாமல் உபசாரப் பத்திரங்கள் வந்து மலைபோல் குவிந்தன. காங்கிரஸ் மகா சபை ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தது. வந்து குவிந்த கம்பளங்கள், சால்வைகள், பேழைகள் முதலியவற்றிற்கு ஒரு கணக்கு இல்லை. பலவும் ஏழைகளிடமிருந்தே வந்தவை. விலையேறப் பெற்ற சம்மானங்களை அவர் எடுத்துக் கொள்ளவில்லை. சம்மானங்களைச் சுருக்கமாக எடுத்துச் சொல்ல ஒரு மணி நேரம் பிடித்தது. அவர் பதில் சொன்னதின் சாரம் :—

உலகமே ஜன்ம தேசம் :—“ கண் மூடித்தனமாக அடங்கிக் கிடத்தல் உண்மையான ராஜ பக்தி ஆகாது. கடமையை மதித்து உரிமையைப் பாராட்டுவதே ராஜ பக்தியாம். ஜனங்களுக்கு உழைக்காமல் வேறு யாருக்கு நான் உழைப்பது ? ஜனங்களிடையே பிறந்தேன், ஜனங்களுக்கே உழைப்பேன். ஜனங்களுக்காகவே சாவேன். என் ஜன்ம தேசம் என்பதற்கு எல்லை கிடையாது. உலகமே என் ஜன்ம தேசம். உலகினிடம் எனக்குப் பேரபிமானம்.

சிறையில் போடின் :—“ நூற்றுக்கணக்கும், ஆயிரக் கணக்குமான மைல் தூரத்திலிருந்து இங்கே பலர் வந்திருக்கின்றனர். மகா சபையைக் கண்டு எனக்கு வியப்பு ஏற்படுகிறது. ஏமாற்றம் அடையவேண்டாம். இங்கிலாந்து மெதுவாகத்தான் சீர்திருத்தத்திற்கு இசையும். இங்கிலாந்திலும் ஆதியில் சீர்திருத்தம் வேண்டியவர்களை ராஜத் துவேஷி என்றனர்; சிறைக்கும் அனுப்பினர். அனுப்பியும் அவர்களது பேச்சும், எண்ணமும் அழியவில்லை. சிறையில் போட்டு, சத்தியத்தை நசுக்கிவிட முடியுமோ ? சிறையில் போடப்போட, சத்தியமோ மின்சாரத்தைப்போல் இழையும், வளரும் ; கிளம்பினல் உலகத்தையே ஆட்டும். முடியு

மானால் பார்லிமெண்டு சபைக்குப் பிரமாண்டமான மகஜர் அனுப்புங்கள். கேள்வி பிறக்கும்.

இழிவே பெருமை :—“ இந்தியாவின் மெம்பர் என்று என்னைச் சிலர் ஏளனமாகப் பேசுகின்றனர். நானோ அதனைப் பெருமையாகவே மதிக்கிறேன். என்னால் ஆன ஊழியம் புரிவேன். இது நிச்சயம். ஸ்திரீ பிரதிநிதிகள் இருப்பதைக் கண்டு களிக்கிறேன். இந்தியாவின் சுகபோகம் பெருக வேண்டும், ஆங்கில ஆட்சி மிக்க அமைதியாக இருக்க வேண்டும் என்பதே என் கருத்து.”

தந்தி பறத்தல் :—ஐந்தாவது காங்கிரசுக்கு அதிகாரிகளால் அவ்வளவாகத் தடை ஏற்படவில்லை. ஆனால் காங்கிரசுக்குப் போக வேண்டாமென்று பார்ஸிகளைச் சிலர் தடுத்துப் பார்த்தனர். அது பலிக்கவில்லை. பத்து, இருபது பெயரை ஒரு காஜி கூட்டிவைத்து, வேண்டாம் காங்கிரஸ் என்றார். உடனே அச் செய்தி இங்கிலாந்துக்குப் பறந்தது. மற்றொரு முகம்மதியர் பெரிய கூட்டம் கூட்டி அனைவரையும் காங்கிரசுக்கு அழைத்தார். எல்லாரும் சரி என்றனர். பலர் பிரதிநிதிகள் ஆயினர். இச் செய்தியை யாதும் தந்திகள் இங்கிலாந்துக்கு அறிவிக்கவே இல்லை.

மாறு வேஷத்தில் :—சென்னை சட்ட சபையில் அங்கம் வகித்த ராஜா டி. ராம ராவும், இவான்ஸ் என்பவரும் ஆதியில் காங்கிரஸை நம்பவில்லை. அலட்சியமாக இருந்தனர். பம்பாய் காங்கிரசில் வந்து அவர்கள் சேர்ந்துகொண்டார்கள் மிக்க ஆவலுடன். மகத்தான மகா சபையைக் காண விரும்பி உத்தியோகஸ்தர்களில் பலர் மாறு வேஷத்துடன் வந்து கண்டு களித்தார்கள். நாலாவது காங்கிரசிலே பிரதிநிதிகளின் தேர்தலில் கலந்துகொண்டோர் 30 லட்சம் பேர் என்றால், ஐந்தாவது காங்கிரசிலே 50 லட்சத்துக்கு மேலாகும். விஜயம் செய்திருந்த 12 ஸ்திரீ பிரதிநிதிகளில் ஒருவர்

ஆடவர் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெற்றார். மற்றவர்களையோ ஸ்திரீகளின் சங்கங்களே தேர்ந்தெடுத்தன.

துறவியின் பக்தி:—காங்கிரசுக்கு 45 ஆயிரம் ரூபா செலவு பிடித்தது. வரும்படி போதவில்லை. உடனே காரட்டன் ஆயிரம் ரூபா கொடுத்தார்; சபாபதி முதலியாரும் ஆயிரம் தந்தார். அரை மணி நேரத்தில் காசும் பணமும் நோட்டுமாக ஒன்பதாயிரம் வசூலாயிற்று. தவிர பலர் அப்பால் தருவதாக வாக்களித்தனர். வாக்களித்த தொகை 56 ஆயிரம்; மொத்தம் 65 ஆயிரம் ரூபா சேர்ந்தது. சுவாமி அலாரம் என்பவர் சந்நியாசி. காங்கிரசிடம் பற்றுள்ளவர். பணம் வேண்டுமென்று சபையில் கேட்டவுடனே, "நான் முப்பது வருடமாகக் காசைத் தொட்டதே இல்லை. என்னிடம் இருப்பது ஒரே கம்பளி. அதுவே என் ஆஸ்தி. இதோ அதையும் தந்தேன்" என்று கொடுத்துவிட்டு, உடை கோவணத்துடன் சபையை விட்டகன்றார்.

ஆறு பொத்தல்:—இந்தியாவின் செல்வ நிலையைக் குறித்து ஒருவர் பேசியது இது:—"ஒரு சிறிய மண்குடம். அதில் கொஞ்சமே ஜலம். முன்பு ஒரே பொத்தல்; இப்போதோ ஆறு பொத்தல்கள். இப்படி இருக்கிறது இந்தியா. இந்த நிலையில் வரி அதிகம். குறைகளும் ஜாஸ்தி. கேட்பார் யார்? கதிதான் யார்? தெய்வந்தான். அதனிடம் முறையிடுவோம்."

19. செங்கோல் சிறல்

ஊர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது முதுமொழி. அதிகார ஆவேசம் அடங்கவில்லை; உள்ளூரக் கொழுந்து விடலாயிற்று. காங்கிரஸைத் தாக்கி, அதன் செல்வாக்கைக் குறைத்துப் பேசி, பிரிட்டிஷாருக்கு அவநம்பிக்கை உண்டாக்கும் வண்ணம், இங்கிலாந்திலே சூழ்ச்சி நடந்தது. ஆறுவது காங்கிரஸ் கல்கத்தாவிலே கூடும் சமயம். ஜன உற்சாகம் அதிகம்.

ஆங்கிலேயரின் பத்திரிகைகளிலே ஒரு வெடி குண்டு கிளம்பியது. காங்கிரஸினிடம் ஒளிவு மறைவு ஒன்றும் இல்லை. ஆதலின், ஸ்தல அதிகாரிகளுக்கு அழைப்பும் டிக்கட்டும் அனுப்புவது வழக்கம். அது கண்டு வங்காள கவர்ன்மெண்டாருக்குப் பொறுக்கவில்லை.

அதிகார வெடிகுண்டு :—" பற்பல அதிகாரிகளுக்கு டிக்கட்டு வந்திருப்பதாகக் கேள்வி. விதிகளின்படி பார்த்தால், காங்கிரஸ் கூட்டங்களைக் கண்டு களிக்கவும் உத்தியோகஸ்தர்கள் போகக்கூடாது. ஆதலினால், நடவடிக்கைகளிலே கலந்து கொள்ளுதல் தகுதியன்று. இலாகாத் தலைவர்கள் கவனிப்பார்களாக" என்பதே வெடி குண்டின் சாரம். இவ்வளவுதானே? வங்காள கவர்னருக்கும் உபசரணை சபையார் டிக்கட்டு அனுப்பியிருந்தனர். கவர்னரின் மாளிகையிலிருந்து வந்த பதில் இது:—

துள்ளிக் குதித்தல் :—" ஏழு டிக்கட்டுகள் அனுப்பியிருந்தீர்கள். அந்த ஏழையும் இதோ திருப்பி அனுப்பியிருக்கிறோம். கவர்னரும் சரி, அவர் வீட்டாரும் சரி, டிக்கட்டுகளை உபயோகிக்க முடியாது. ஏனென்றால், காங்கிரஸ் கூட்டங்களுக்கு உத்தியோகஸ்தர் போகக்கூடாது என்பதாக இந்தியா கவர்ன்மெண்டார் திட்டமாக ஆணையிட்

டுளர்.'' கவர்னரின் பதிலைக் கண்டதும், காங்கிரசுக்கு நல்ல "குட்டு" என்று ஆங்கிலேயரின் பத்திரிகைகள் பலவும் துள்ளிக் குதித்தன.

சூடு கொடுத்தல் :—வழக்கம்போல் டிசம்பர் கடைசியில் (1890) மகா சபை கூடியது. எழுநூறு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பத்து லட்சம் ஜனத்தொகைக்கு ஐந்து பிரதிநிதிகளே வரலாம் என்பது விதி. ஆதலின், அவர்களின் தொகை குறைந்தது. விருந்தினராக ஏழாயிரம் பேர் வந்திருந்தனர். மனமோகன கோஷ் அனைவரையும் வரவேற்றார். பிரோஸ் ஷா மேத்தா அக்கிராசனம் வகித்து அரிய பிரசங்கம் செய்தார். அதன் சாரம் :—

"பார்சிகள் இந்தியரோ; அந்நியரே; என்கின்றனர் சிலர். பதின் மூன்று நூற்றாண்டுகளாக எங்களுக்குத் தஞ்சம் தந்துளது இந்தியா தேசம். இந்தியாவே எங்கள் தாய் நாடு. இனி, 'கீழ் நாடுகளுக்குப் பிரதிநிதி சபைகள் பொருந்தா, கீழ் நாட்டாருக்கும் அவை ஏற்கா, எனவே பிரதிநிதி சபை மூலம் இந்தியாவை ஆள முடியாது' என்று பார்லிமெண்டு சபையிலே லார்டு ஸாலிஸ்பரி என்பவர் பேசுகிறார். பஞ்சாயத்து சபைகளுக்குக் கீழ் நாடே பிறப்பிடம் என்பதை அவர் அறியவில்லை'' என்று சூடு கொடுத்தார் பிரோஸ் ஷா மேத்தா.

தக்க பாதுகாப்பு :—பிராட்லாவின் அரசியல் மசோதாவுக்குப் பதிலாக, சட்டசபைத் திருத்த மசோதா ஒன்று காமன்ஸ் சபையில் கிளம்பியது. பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அதில் வகை செய்யவில்லை. எனவே சட்டசபைத் திருத்தம் பற்றி முதல் தீர்மானம் ஏற்பட்டது. முதலில் லால் மோகன் கோஷ் பேசினார்.

"வகுப்புவாரித் தேர்தல் கூடாது. மத விஷயத்தைப் பொருட்படுத்தாமல் அக்பர் சக்கரவர்த்தி ஆண்டார். அவ்

விதம் ஆங்கில அரசு ஆளப்போகின்றதா, இல்லையா? தெரியவேண்டும். விரோதமான மதத்தினர் இந்தியாவில் இருத்தலே நமது நிலைக்குத் தக்க பாதுகாப்பு என்று ஓர் ஆங்கில உத்தியோகஸ்தர் கூறினர். இப்படியா காரியம் நடக்கும்?" என்றார் பண்டித விஷ்ணு நாராயணதரர்.

மது மோகம்:—பழைய காங்கிரஸ் தீர்மானங்கள் நிறைவேறியபின், கலால் நிர்வாகத்தைக் குறித்து ஒரு தீர்மானம் வந்தது. "கீழ் நாட்டாராகிய நாம் மேனாட்டாருக்குக் கணிதம், வான சாஸ்திரம் முதலிய கலை ஞானங்களை ஊட்டினோம். மேனாட்டாரோ நமக்குக் கள்ளை ஊட்டுகின்றனர். கலால் கூடாது என்று கண்டிப்பாக முகம்மதிய அரசரும் நடந்து வந்தனர். நம்மை யாளும் கிறிஸ்தவரோ கள்ளின் மீது அன்பு கொள்ளுகின்றனர்; அதனுடன் கொஞ்சுகின்றனர், பெருக்கவும் முயலுகின்றனர்; அதன் மூலம் கோடிக் கணக்கில் பணமும் சேர்க்கின்றனர்" என்றார் லாலா முரளீதரர் எனும் வாக்சாலகர்.

குட்டி தேவதை:-கவர்னரின் பதிலைக் குறித்து வாதம் நடந்தது. அப்போது ஆண்ட்ரூ யூல் பேசியது:—"யாரோ அதிகார குட்டி தேவதை அவ்விதம் எழுதி யிருக்கிறது. இம்மகா சபை சாமானியமா? என் இதன் மீது இவ்வளவு கடுகடுப்பு? இச்சபையார் எத்தகைய அதிகாரிக்கும் எந்த விதத்திலும் தாழ்ந்தவரல்லர். ஞாபகம் இருக்கட்டும். இம் மாதிரி பதில் எழுதுதல் நமக்கு மிக்க அவமதிப்பே. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இச்சபைக்கு வந்தால் என்ன? யோக்கியதை குறைந்து விடுமோ? ஆண்மைத்தனத்திலும் அந்தஸ்திலும் நாம் யாருக்கும் குறையோம்!"

மாது பேசல்:—காங்கிரஸின் செல்வாக்கையும், பிரதிநிதிகளின் தன்மையையும் அறிவுறுத்தவேண்டி, ஒருமுறை மகா சபையை இங்கிலாந்தில் நடத்த வேண்டுமென்று தீர்

மானம் ஏற்பட்டது. ஆயினும் அவ்விதம் நடக்கவில்லை. நான்கு தினம் நடந்து சபை முடிந்ததும், ஸ்ரீமதி கடம்பினி கங்குலி என்னும் மாதே அக்கிராசனருக்கு வந்தனம் கூறினாள். மகா சபையில் ஒரு மாது பேசத் தொடங்கியது அதுதான் முதல் தடவை.

நடு நிலைமை:—கவர்னரின் பதிலைக்கண்டு காங்கிரஸ் சும்மா இருந்து விடவில்லை. இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதிக் கேட்டது. அதற்குக் கிடைத்த பதிலின் சாரம் இது:— "காங்கிரஸ் இயக்கம் நியாயத்திற்கு ஒத்ததேயாம். மிக்க முற்போக்குடையவர்களின் கூட்டம் காங்கிரஸ் மகா சபை. மகா ஜனங்கள், அதிகாரிகள் ஆகிய இரு திறத்தாரிடமும் பாரபட்சமின்றி நடு நிலைமையாக நடந்துகொள்வதே இந்தியா கவர்ன்மெண்டின் கருத்து. உத்தியோகஸ்தர்களாக இருப்போர் காங்கிரஸின் நடவடியில் கலந்து கொள்ளக்கூடாது என்பதே எங்கள் விதி. உத்தியோகத்தை விட்டவர்களும், பென்ஷன் பெற்றவர்களும் கலந்துகொள்வதில் ஆட்சேபம் இல்லை."

20. ஆயிரம் குற்றம்

லார்டு லான்ஸ்டௌன் 1890-ஆம் ஆண்டில் ராஜப்பிரதிநிதியாக இருந்தார். அதிகார ஆவேசம் அவரை நெருங்கவில்லை. தேசமோ வரவரச் சீரழிந்து வந்தது. அதைக் குறித்து காங்கிரஸ் அறிக்கையில் காணப்படுவது என்னவென்றால்:—

ஆயிரம் குற்றம்:—"இந்தியாவின் நிர்வாகம், ஐயோ, கொஞ்ச நன்மைக்கும், ஆயிரம் குற்றத்துக்கும் இடமாகவே உளது. ஒரு சிறு தொகையேயுள்ள அதிகாரிகளின் நலத்தை மதித்தும், அவர்களின் அசூயையைத் தழுவியும், லட்சோப

லட்சக் கணக்கான படித்த இந்தியர், தேச பக்தி வாய்ந்த இந்தியர், ராஜீய அடிமைகளாக நடத்தப்படுகின்றனர். மிக்க பொறுப்பும், முக்கியமும் வாய்ந்த பதவிகளிலே 100-க்கு 95 பேர் ஐரோப்பியரே. அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் பாதி கொடுத்தால் போதும், அவர்களைவிட மிகவும் திறமையான இந்தியர் கிடைப்பர்.

இரத்தக் களறி :—" தேச மக்களிலே ஐந்தில் ஒரு பங்கு ஜனங்கள் பட்டினியால் வாடுகின்றனர். பஞ்சம் தோன்றினுல் போதும், லட்சோப லட்சக்கணக்கான பேர் இறந்துவிடுவர். முந்திய வருஷங்களில் 200 லட்சம் பேர் பஞ்சத்தால் மாண்டுவிட்டது பிரசித்தம். இப்படியிருக்க அவர்களுக்கு உதவி புரியாமல், தனிப்பட்ட அதிகாரிகளின் கியாதிக்காக, அயல் தேசத்தின் மீது படையெடுத்து இரத்தக் களறி காண்பதில் பண விரயம் ஆகிறது.

எங்கும் இல்லையே :—" தேசத்தின் பூர்வீகமான தொழில்களெல்லாம் நசுக்கப்பட்டுப் போயுள. நூற்றுக்கு 90 பேருக்குப் பிழைப்புத் தரும் விவசாயமும் தளர்ந்து போகிறது. பாமர மக்களோ மதுபானம் காரணமாக மனோபலமும் சன்மார்க்கமும் குன்றிக் குன்றி வருகின்றனர். நீதி எனப்படும் அநாகரிகமான முறையின் பலனுக நிர்வாக அதிகாரம், நீதி பரிபாலனம், பண அதிகாரம், போலீஸ் அதிகாரம் எல்லாம் ஒருவர் கைக்குள்ளே. எங்கும் இல்லாத நிலைமை இது.

நியாயம் ஏது ? :—" பணக்காரன் மீது கேஸ் தொடுத்தால், ஏழைக்கு நியாயம் கிடைப்பதில்லை ; அதிகாரியின் மீது கேஸ் தொடுத்தால் ஜனங்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. போலீஸின் மீது கேஸ் தொடுத்தாலோ கேட்கவே வேண்டாம். யோக்கியரையும் ஏழைகளையும் காக்கக் கடமைப்பட்டுள்ள போலீஸோ அவர்களுக்குப் பயங்கரம் ஊட்டி

வருகிறது. எனவே எத்தனை நாள் பொறுப்போம், என்று மனோபலம் வாய்ந்தவர்களும் மனமொடிந்து மறுகுகின்றனர்.

விதியும் வெறியும் :—"பொறுமை என்பது கீழ்நாட்டாரின் பூஷணம். இவ்வளவுதான் விதி என்றும் எண்ணிக் கிடத்தல் கீழ் நாட்டாரின் இயற்கை. ஆதலினால், 'கீழ்க்கடை போனதெல்லாம் கிருஷ்ணனுக்குப் பிரீதி' என்று எதையும் மறந்து, யாரையும் மன்னிக்கும் சுபாவம் உண்டு. எனவே இப்போதாவது நியாயம் கிடைக்காதா என்று துதிக்கிறோம். வேறு ஜாதியாராக இருந்தால் வெறிகொண்டு கிளம்பி இருப்பார்களே.

பாவச் சுமை :—"நன்மைக்கோ தீமைக்கோ இங்கிலாந்து விட்ட வழி என்றிருக்கிறோம். இங்கிலையில், வெறுக்கத்தக்க கொள்கை இன்னும் நீடிக்குமானால், இங்கிலாந்தின் பாவச் சுமை இன்னும் பெருகும். பிரிட்டிஷ் சோதரர் கண் விழித்துப் பார்ப்பாரா? ஐயோ! யார் பதில் சொல்வர்? கெடு நாளாகக் கண்விழிக்கவில்லையே. ஒரு சமயம் இனிமேல் கண் விழிக்கலாமோ, என்னவோ?"

---

21. மகா சபையே தஞ்சம்

நாகபுரியில் ஏழாவது காங்கிரஸ் கூடியது. லால் பாக் எனும் தோட்டத்தில் 800 பிரதிநிதிகள் கூடினர். விருந்தினர் மூவாயிரம் பேர். நாகபுரி நகர சபையின் தலைவர் நாராயணசுவாமி நாயுடு உபசரணை சபையின் தலைவர். வங்காள கவர்னரைப்போல் மத்திய மாகாணத் தலைவர் செங்கோல் பிறப்பிக்கவில்லை; மற்று, காங்கிரஸுக்குப் போக விரும்பும் உத்தியோகஸ்தர்கள் போகலாம் என்று கூறினர். சென்னை வாசியான அனந்தாசார்லு அக்கிராசனராக விளங்கினர்.

கோபம் மூட்டும்:—முக்கிய தீர்மானம் சட்டசபைத் திருத்தத்தைப் பற்றியது. பாபு சுரேந்திர நாத பானர்ஜி வழக்கம்போல் கர்ஜித்தார். "இந்தியாவைச் சரிவர ஆள வில்லை. ஆளும் முறை அவலம், அவலம்! அதிகாரிகளுக்கு யதேச்சாதிபத்தியம். இது அடுக்குமா? நாகரிக உலகம் சகிக்குமா? இந்திய மகா ஜனங்களும் ஒப்புவரா? கோபம் மூட்டும் கொள்கையாக இருக்கிறதே. பிரிட்டிஷ் பெருமைக்கு ஒத்ததா இது?" என்று வருந்தினர் சுரேந்திர நாத பானர்ஜி.

பசி கிள்ளல்:—முந்திய காங்கிரஸ் தீர்மானங்களை ஆதரித்து கென்னடி என்பவர் பேசியது:—"1878-ஆம் வருஷம் அன்னியரின் படையெடுப்பு நேரும்போல் இருந்தது. பொக்கிஷத்தில் பணமும், ஜனங்களிடம் திருப்தியும், தேசத்தில் சுபிட்சமும் நிறைந்திருப்பின், தேசத்துக்கு வேறு பாதுகாப்பு வேண்டியதில்லை என்றார் லார்டு டர்பி. வருஷ ஆரம்ப முதல், வருஷ முடிவு வரையில் லட்சோப லட்சக்கணக்கான ஜனங்களுக்கு வயிறு நிரம்ப ஆகாரம் கிடையாது. வயிறு நிரம்பச் சாப்பிடுவது என்றால் என்ன என்று அறியார் அந்த ஏழைகள்."

வயிற்றில் அடித்தல்:—லாலா முரளீதரர் வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசியது இது:—"சபையோரே! உங்களைச் சுற்றிப் பாருங்கள். சீமை விளக்குகள், சீமை நாற்காலிகள், சீமை வேஷ்டிகள், சீமைத் தொப்பிகள். உங்கள் வீடுகளில் உள்ள ஆடம்பரப் பொருள்கள் போதிக்கும் பாடம் யாது? இந்தியாவின் வறுமை, இந்தியாவின் திண்டாட்டம் இவற்றையே போதிக்கும்; சீமைச் சாமானில் செலவாகும் ஒவ்வொரு ரூபாயும் உங்கள் ஏழைத் தொழிலாளரின் வயிற்றில் அடிப்பதாம். அவர்களின் காசைக் கொள்ளையடிப்பதும் ஆகும். ஞாபகம் இருக்கட்டும்.

பரோபகாரம் :—"இந்தியாவிலே சிமைச்சாமான்களைப் பரப்பியது பரோபகாரச் செயலே. ஒவ்வொரு கைத்தொழிலையும் அழித்ததும் பரோபகாரமே. இந்தப் பரோபகாரம் விரைவில் சித்தியாக இறக்குமதி வரியை எடுத்தனர்; பணக்காரர் செலுத்தும் உப்பு வரியை உயர்த்தினர். போதாக்குறைக்கு, இப்போது புதிதாக மூளைத்துத் தலை தூக்கும் ஆலை நெசவுத் தொழிலை அழுத்தவும் விதிகள் கண்டுளர். ஆம், ஆம். எல்லாம் பரோபகாரம். பலன் என்ன? உங்கள் சோதரர் பசியால் வாடுகின்றனர். வேறு என்ன வேண்டும்? நமது மக்களுக்கு வேலை கிடைப்பதற்காக முப்பது கோடி ஜனங்களுக்கு 10 கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியுளரே."

கோள்ளைச் சேலவு :—ராணுவச் செலவைக் குறித்து வாச்சா பேசியது:—"1864-ஆம் ஆண்டில் ராணுவச் செலவு 14 கோடி. 1890-ஆம் வருஷம் 54-கோடி. இவ்வளவுதானா? இன்னும் விஷம்போல் ஏறிக்கொண்டே போகிறது." அலிமுகம்மது பீம்ஜி சொல்லியது :—"ஜெர்மனியிலே ஒரு ஸோல்ஜருக்குச் செலவு ரூ. 145; பிரான்ஸில் 185; இங்கிலாந்தில் 285; நம் இந்தியாவிலோ 775 ரூபா. இங்கிலாந்திலே தலைக்கு சராசரி வருமானம் 42 பவுன்; பிரான்ஸிலே 23; ஜெர்மனியிலே 18; இந்தியாவிலோ ஒரு பவுன் பத்து ஷில்லிங்."

காங்கிரசே கதி :—திருநெல்வேலியிலுள்ள தென்காசி வாசி பீடர் பால் பிள்ளை காட்டிலாகா நிர்வாகத்தைக் குறித்துக் கூறியது:-"காடுகளிலே ஆடு மாடு மேய்த்துக்கொள்ள, விறகு தழை வெட்டிக்கொள்ள, ஆதிமுதல் கிராமத்தாருக்கு உரிமை உண்டு. இப்போதோ ஒன்றும் கிடையாது. காட்டிலாகா நிர்வாகங் கண்டு, ஆங்கில ஆட்சியில் விவசாயிகளுக்கு அபிமானம் கிடையாது. உப்பு வரி மகா கெட்டது; ஸெட்

டில்மெண்டோ கொடுமை. காட்டிலாகா விதிகளோ கோரம். 1890-ஆம் ஆண்டிலே மேய்ச்சல் கூலியாக அரசாங்கம் அடைந்த வருமானம் ஒன்றரை லட்சம்; அத்துமீறி மேய்ந்த மாடுகளைப் பிடித்து வைத்து அபராதம் போட்டதிலோ வருமானம் மூன்றரை லட்சம். வட ஆற்காடு ஜில்லாவில் மட்டும் மேய்ச்சல் இல்லாமல் 3 லட்சம் கால்நடைகள் மாண்டு போயின. பத்திரிகைகளில் எழுதிப் பார்த்தேன், அரசாங்கத்துக்கும் மனுச் செய்து பார்த்தேன். வழி பிறக்கவில்லை. இனிமேல் காங்கிரஸ் மகா சபைதான் கதி.''

---

22. கோகுலர் குமுறல்

மறுபடியும் அலகபாத் நகரில் காங்கிரஸ் மகா சபை கூடியது. முன்னம் கூடிய பங்களாவை இதற்குள் தர்பங்கா மகாராஜா விலைக்கு வாங்கிவிட்டார். வாங்கியபின், அந்த இடத்தில் மகாசபை கூடுதல் பெரும் பாக்கியம் என்று மனம் பூரித்தார். விஜயஞ் செய்த பிரதிநிதிகள் 632 பேர்; விருந்தினர் மூவாயிரம் பேர்; பண்டித விசுவம்பரநாதர் அனைவருக்கும் முகமன் கூறி வரவேற்றார். முதல் காங்கிரஸ் தலைவர் உமேச சந்திர பானர்ஜியே மீண்டும் தலைமை வகித்தார்.

கறுப்பு மனிதன் :—தாதாபாய் நௌரோஜி அப்போது காமன்ஸ் சபையில் மெம்பரானார். அதுகேட்டு மகாசபை அவரைப் பாராட்டியது. அவரை 'கறுப்பு மனிதன்' என்று இழிவாகப் பேசினார் லார்டு ஸாலிஸ்பரி என்பவர். அதையும் பலர் கண்டித்துப் பேசினர். சட்ட சபைகளைத் திருத்துவதாகச் சட்டம் பிறந்தும், தேர்தலுக்கு மார்க்கம் இல்லை. அதுபற்றி வழக்கம் போல் தீர்மானம் வந்தது. சுரேந்திரநாத பானர்ஜி மறுபடியும் கர்ஜனை புரிந்தார்.

துரதிருஷ்ட தேசம் :—“சட்ட சபைகளில் நம்மைச் சேர்த்துக் கொள்வதில்லை. இது எத்தனை நாளைக்கு? எல்லாம் நமது கையில் இருக்கிறது. காங்கிரசின் பரம்பரையை நாம் காப்பாற்றினல், தியாக புத்தியுடன் ஊழியம் புரிந்தால், பணத்தையும் பாராமல் தியாகம் பண்ணினல், சிறிதும் தளராமல் இருந்தால், ஆண்டவனுக்குக் கருணை பிறக்கும். இப்போது நாம் தூக்கும் கொடி நம் கையிலிருந்து நழுவிவிடலாம். ஆயினும் நமக்குப் பின்வருவோர் அக்கொடி தாங்கிச் சென்று வெற்றி எய்துவர்; இந்தத் துரதிருஷ்டமான தேசத்தில் சுதந்திரத்தை நிலை நாட்டுவர்.”

கஷ்ட காலம் :—பின்பு, போட்டிப் பரீட்சையைக் குறித்து கோபால கிருஷ்ண கோகுலர் கோபமுடன் கூறியது இது :—“ஏன் வாக்குறுதி கொடுத்தோம் என்று நம்மை ஆளுவோர் இப்போது வருந்துகின்றனர். காரியத்தில் நடத்தி வைப்பதாக உத்தேசம் இல்லை என்று ஒரு நாள் அவர்கள் சொல்லவும் சொல்லுவார்கள் ; எனவே வாக்குறுதி எல்லாம் குப்பைக் காகிதம் என்று கூறி நெருப்பில் அவர்கள் எறிந்து விடுதலே மேல். ஜயித்துப் பிடித்த உங்களுக்கு உரிமை ஏது என்று ஏன் சொல்லிவிடக் கூடாது? வர வர அரசாங்கம் நம்மிடம் அதிக அருவருப்பும் அவநம்பிக்கையுமே கொண்டு வருகிறது. அவநம்பிக்கை என்பது விரைவில் மாறுவிடின், அபிமானத்துடன் அரசாங்கம் ஆளாவிடின், துர்ப்பாக்கியமான நம் தேசத்துக்குச் சீக்கிரம் கஷ்ட காலமே சம்பவிக்கும்.”

கொள்ளையே :—கோகுலர் அவ்விதம் எச்சரிக்கை கொடுத்தும் என்ன? அதிகாரிகள் பாடம் கொண்டனரோ? இல்லை, இல்லை. அவரை போலீஸ் உளவாளிகள் தொடரலானார்கள். அதுதான் கைமேல் பலன். ஜோதீந்திரநாத சௌத்ரி என்பார் பேசியது இது :—“ஒருவன் தன் தேசத்

திற்காக உழைத்தல் பிரிக்கமுடியாத உரிமை. ஆகவே உத்தியோகங்கள் எல்லாம் நம்மவருக்கே கிடைக்கவேண்டும். ஆனால் அன்னியருக்கே கிடைக்கின்றன. இயற்கையான உரிமையை அங்ஙனம் பறித்தல் நம்மவரைக் கொள்ளையடிப்பதாகும்.''

வழக்கம்போல் சம்பிரதாயமான தீர்மானங்கள் நிறைவேறின. அடுத்த காங்கிரஸ் லாகூர் நகரில் கூடிற்று. இந்தியாவின் வடமேற்குக் கோடியிலுள்ளது லாகூர். ஆயினும் 867 பிரதிநிதிகள் வந்திருந்தனர். விருந்ினராக வந்தோர் மூவாயிரம் பேர். ஸர்தார் தயாளசிங் உபசரணை சபைத் தலைவர். அவருக்கு உடம்பு குணமில்லை. ஆதலின் அவர் சார்பாக ஹரிகிருஷ்ணலால் அனைவரையும் வரவேற்றார். அக்கிராசனம் வகிக்க, இங்கிலாந்திலிருந்து தாதாபாய் நௌரோஜி வந்தார்.

ஐரிஷ்காரரின் ஆதரவு:—காமன்ஸ் சபையில் அவரது சகாக்களான ஐரிஷ் மெம்பர்கள் நம்மவருக்கு ஆசிச் செய்தி அனுப்பினார்கள். அது என்னவென்றால், "காமன்ஸ் சபையிலே இந்திய விஷயம் ஆலோசனைக்கு வருகையில் ஐரிஷ் மெம்பர் ஒவ்வொருவரும் தக்க ஆதரவு அளிப்பர்'' என்பதாம்.

பேராபத்து:—"சட்ட சபையிலே பெயரளவில் பிரதிநிதித்வம் கொடுத்துளர். கேள்வி கேட்கவும் ஓரளவு உரிமை கிடைத்துளது. படித்த வகுப்பாரின் அபிமானத்தை அதிகாரிகள் இழந்துவிடுதல் ஞான சூன்யமாகும். ஆட்சி முறையின் போக்கைக் கண்டித்தால் அதிகாரிகளுக்குக் கோபம் பிறக்கிறது. அவர்களிடம் நிதான புத்தி குறைவு. இந்தியரின் சராசரி வருஷ வருமானம் ரூபா 20 தான். இத்தகைய வறுமை பேராபத்தாகும். என்னவோ உயிருள்ள

வரை எதிர்பார்க்கிறேன் நல்ல காலம் பிறக்குமென்று," என்பதாக அக்கிராசனர் பேசினர்.

இருபதே இந்தியர்:—போட்டிப் பரீட்சைத் தீர்மானம் ஆலோசனைக்கு வந்தது. சுரேந்திர நாத பானர்ஜி வழக்கம் போல் இடி முழக்கம் செய்தார். "வாக்குறுதியின்படி காரியம் நடத்தவே இல்லை. இந்தியா கவர்ன்மெண்டார் தவறிவிட்டனர். ஆங்கில வெகு ஜன வாக்கும் சரி, நம்ம வரின் வெகு ஜன வாக்கும் சரி, கவனித்தல்வேண்டும். வாக்குறுதிகளுக்கு நேர்மாறுகவே காரியங்கள் நடந்துவருகின்றன,' என்று குறிப்பிட்டும் என்ன? 35 வருஷம் ஆகிவிட்டது. உள்ள நிலைமை என்ன? பெரிய உத்தியோகங்களிலே 950 ஐரோப்பியர் இருக்கின்றனர். இந்தியரோ இருபது பேர்தான்," என்று ராஜா ராமபாலசிங் மனம் வருந்திப் பேசினர்.

மோச நிலை:—நீதி நிர்வாகப் பிரிவினை இன்னும் நடக்கவில்லையே என்று ஓலமிட்டார் காளி சரண பானர்ஜி. ராஜா ராம மோகனது முயற்சியால் முன்னம் இரண்டும் பிரிக்கப் பட்டும், 1858-ஆம் வருஷம் இரண்டையும் இணைத்துவிட்டனரே என்று இன்னொருவர் ஏங்கினர். மக்களின் வறுமை நிலையைக் குறித்து மதன மோகன மாளவியா பேசியது இது: "நெசவாளர் எங்கே? பலவகையான தொழில்கள் எங்கே? வருஷா வருஷம் ஏராளமாக இங்கிலாந்துக்கும் பிற தேசங்களுக்கும் போன சாமான்கள் எங்கே? எல்லாம் பழங்கதையாகிவிட்டதே. இச்சபையில் வீற்றிருப்போர் அனைவரும் சீமைத் துணியே தரித்துளர். எங்கே போனாலும் சரி, எங்கே பார்த்தாலும் சரி, பிரிட்டிஷ் சாமான்களே கண்ணில் உறுத்தும். மக்களுக்கு மிஞ்சியிருப்பது என்ன? கொஞ்சம் விவசாயம்; வாழ்வில்லாச் சங்கடம். உத்தியோகத்திலாகட்டும், வியாபாரத்திலாகட்டும், அன்னியருக்கு 100 பங்கு

என்றால் நம்மவருக்கு ஒரு பங்குதான். 50 வருஷத்துக்கு முன் இவ்வளவு மோசமாக இல்லையே. இங்கிலேயில் தேசத்திலே சுகம் ஏது? சந்தோஷம் ஏது?"

பெரு விபத்து:—"சாசுவத நிலத்தீர்வை இல்லையே, வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறக்கின்றனவே, தேசத்திற்குப் பெரு விபத்து ஏற்படுகிறதே" என்று தென்காசி பீடர் பால் பிள்ளை பொறுமினர். ஸர்தார் குருசரண சிங் பேசியது இது:—"விளைவு இல்லை என்பதால் என்ன கெடுதி தெரியுமா? குடும்பம் சிதறுகிறது; கடனுக்காகக் கால்நடைகளை விற்கவேண்டி யிருக்கிறது. குடும்பத்தலைவன் மனமொடிந்து சாகிறான், அல்லது ஸிவில் சிறையில் மங்கி மடிகிறான். பிள்ளை இருந்தால், விதியின்றி வீட்டைவிட்டு ஓடுகிறான், சேனையில் சேருகிறான். அங்கே என்ன சம்பளம் தெரியுமா? மாதம் 'முழுசாக' ஏழு ரூபா."

யார் கொழுக்க:—வாச்சா என்பார் ஒரு தீர்மானத்தின் மேல் பேசியது:—"காலை முதல் மாலை வரையில் உழைக்கும் தொழிலாளர், வரிச்சுமை தாங்காத விவசாயிகள் முதலியோர் இன்னும் ஏழைகளாக்கப்படுகின்றனர். ஏன்? உத்தியோகஸ்தர்களும், வட்டிக்குப் பணம் கொடுப்போரும் கொழுப்பதற்காக! விவசாயிகளுக்கு உள்ளதும் போய்விடுகிறது; வரி சுமருகிறது. உலகெங்கும் இவ்வளவு சம்பளம் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதில்லை. அவர்களோ மிக மிகச் சிறிய தொகையினர். அத்தகையவர்களுக்கு இன்னும் கொட்டி நிரப்பவேண்டுமாம்."

குற்றச் சாட்டு:—நாணய மாற்றில் நஷ்டம் நேராதபடி ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு ஈடு செய்வதைக் குறித்து பாபு சுரேந்திரர் பேசியது:—"பெரிய குற்றம் இது. இந்திய மக்களின் நன்மையை அரசாங்கம் அசட்டை செய்கிறது. தர்ம சொத்துப்போலுள்ள இந்தியாவுக்கு

அநீதம் இழைக்கிறது. ஐரோப்பியருக்கு நாணய மாற்று நஷ்ட ஈடு தருதல் பிரமாதமான குற்றம். குற்றமென்று கண்டிப்பாகக் கூறுகிறேன். சீர்திருத்தம் செய்வதென்றால் அரசாங்கம் பணம் இல்லை என்கிறது. சுகாதாரத்தை விருத்தி செய்யப் பணம் இல்லை என்கிறது. உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதென்றால் ஏராளமான பணம் வருகிறது. இப்பணம் அவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? பஞ்சத்தால் 200 லட்சம் பேர் செத்துப் போனார்கள். 400 லட்சம் ஜனங்களுக்கு ஒரு வேளை சாப்பாடுதான். இந்த 400 லட்சத்துக்கு வரி சுமரப் போகிறது. கஞ்சி குறையும், உப்பு குறையும். ஏராளமான சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கோ பிராண்டி, பீர், ஷாம்பேன் முதலிய மதுபானங்கள் நிரம்பக் கிடைக்க வேண்டும். தேச மக்களான நாமோ அடிமைகள், விறகு வெட்டிகள், மூட்டை தூக்கிகள். உத்தியோகஸ்தர்கள் சுகமே வாழ நாம் ஜவாப்! அதிகார தேவதைகளுக்குப் பூஜை, நைவேத்தியம் நடக்க நாம் பொறுப்பு. பம்பாய் வாசிகளே! பஞ்சாப் மக்களே! வங்காள வாசிகளே! நாம் அனைவரும் ஒன்று படுவோம். அத்தேவதைகளின் குறைகளை எடுத்துரைப்போம்; அவர்களை நம்பச் செய்வோம். தேசம் நம்முடையது, அவர்களுடையது அன்று என்று அவர்களுக்குப் படும்வரையில் நாம் சும்மா இருக்கக்கூடாது." இது நிற்க.

அபாரச் செலவு:—இந்தியாவுக்காக இங்கிலாந்தில் ஏராளமான செலவு உண்டு. முப்பது வருஷத்திற்குள் 70 லட்சம் பவுனிலிருந்து 160 லட்சம் பவுனாக உயர்ந்தது. ராணுவ சம்பந்தமாக இங்கிலாந்தில் நடக்கும் செலவும் 20 லட்சத்திலிருந்து ஐம்பது லட்சமாக வளரலாயிற்று. இந்தியச் சேனைக்கு ஓர் ஆளைச் சேர்ப்பதில் அங்கே யுத்த மந்திரி ஆபீசுக்கு 19 பவுனே செலவு. ஆனால் ஆளுக்கு 105 பவுன்

என்று இந்தியாவின்மீது கணக்கு எழுதுவர். இந்தியத் துருப்புகள் இங்கிலாந்தின் நன்மைக்காக உபயோகமானால், செலவை இங்கிலாந்து ஒப்புக்கொள்ளாது. இங்கிலாந்திலிருந்து இந்தியா படை பெற்றால், அதன் செலவை, அபாரமான செலவை, இந்தியா கொடுத்தாக வேண்டும். இதையும் பலர் கண்டித்தனர். 1893-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ந் தேதி ஒன்பதாவது காங்கிரஸ் கலைந்தது.

23. மோட்ச வாசல்

அடுத்த வருஷம் காங்கிரஸை நடத்தும் பொறுப்பும், சிறப்பும் சென்னைக்குக் கிட்டின. மகாசபை கூடுவதற்கு முன்பே உபசரணை சபையார் 40 ஆயிரம் ரூபா சேர்த்தனர். 1163 பிரதிநிதிகள் வந்தார்கள். விருந்தினரின் தொகை நாலாயிரம். கனம் ரங்கைய நாயுடு உபசரணைத் தலைவர். அவர் பேசியதின் சாரம்:—

மனக் கசப்பு:—"நமது செல்வாக்கு வளர வளர எதிர்ப்பும் வளருகிறது. படித்த இந்தியருக்கும் அதிகாரிகளுக்கும் இடையே கசப்பு ஓங்குகிறது. படித்த இந்தியர் ராஜவிசுவாசம் இல்லாதவர்களாம். செல்வாக்கு அற்றவர்களாம். பொறுப்பு என்பது தெரியாதவர்களாம். பணம் சம்பாதிக்க மட்டும் இங்கே வரும் ஆங்கிலேயரால் அனர்த்தம் நேருகிறது. அவர்களுக்கோ தேச நலத்தில் அக்கறை கிடையாது. தேசத்தின் செல்வநிலையோ பயங்கரமாகக் குறைந்து வருகிறது. ராணுவச்செலவு வானுற வளருகிறது. தேச வருமானத்திலே மூன்றில் ஒரு பங்கை ராணுவம் விழுங்கிவிடுகிறது. தடையில்லா வியாபாரம் எனும் கொள்கையால் நமது தொழில்கள் அழிந்து விட்டன. வருஷா வருஷம் தரித்திரம் முற்றிவருகிறது."

நன்கொடை :—அயர்லாந்து தேச வாசியும் காமன்ஸ் சபை மெம்பருமான ஆல்ப்ரட் வெப் என்பார் அக்கிராசனம் வகித்தார். "தேச வருமானத்திலே நாலில் ஒரு பங்கை வெளி தேசத்தில் செலவிடுதல் சரியன்று; நியாயமுமன்று. அவ்விதம் பெருந்தொகை கப்பலேறி விடுதல் சகிக்க முடியாதது. தேச நன்மைக்கே மகா சபை இருப்பது கண்டு களிக்கிறேன்," என்றார். ராமநாதபுரம் ராஜா காங்கிரஸ் நிதிக்கு 10 ஆயிரம் ரூபா நன்கொடை அளித்தார்.

முளையில் கிள்ள :—இந்திய நெசவாலைகளில் தயாராகும் துணிகளுக்கு வரி போட்டிருந்தனர். சீமையிலிருந்து வரும் துணிக்கு அந்த எதிர் வரி மிக்க அநுகூலம். நம் நாட்டுத் துணிக்கோ மிக்க கஷ்டம். இதைக் கண்டித்து வாச்சா பேசியது :—"எதிர் வரி அக்கிரமமானது. இந்தியாவில் முளைத்துள்ள ஆலை நெசவுத்தொழில் மண்டையில் அடிபட்டுப் போம். லங்காஷயரின் நன்மையைப் பறிகொடுப்பதா? இந்த விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் நியாயமாக நடந்துகொண்டனர்; இந்தியா மந்திரியோ விரோதமாக இருக்கிறார். இந்தியா மந்திரியின் சொற்படி நடக்கவே இந்தியா கவர்ன்மெண்டு இருக்கிறது. இது தகுமா?" பின்பு ராவ்பகதூர் சபாபதி முதலியார் ஆதரித்துப் பேசினார்.

ஸீமூர் கே என்பார் காமன்ஸ் சபை மெம்பர். அவரும் காங்கிரசுக்கு வந்திருந்தார். இந்தியாவின் வறுமை அகல வேண்டுமென்ற தீர்மானத்தின்மேல் அவர் பேசினார் வெகு அழகாக. அதன் சாரம் இது :—

பதினாறு கோடி :—"ஐரோப்பிய ஸோல்ஜர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தியாவில் உள்ள ஐரோப்பியர் 70 ஆயிரம் பேர். அவர்களில் ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் பெறுவோர் 28 ஆயிரம் பேர். அவர்களின் மொத்தச் சம்

பளம் வருஷத்திற்கு 15½ கோடி ரூபாய்; இன்னும் பாருங்கள். உங்கள் சம்பளத்தை வாங்கிக்கொள்ளும் அந்த 28 ஆயிரம் பேரில், சுமார் 10 ஆயிரம் பேர் இந்தியாவில் வசிக்கவில்லை; இங்கிலாந்திலுள்ள அந்தப் பேர்வழிகள் சம்பளமாகவும், பென்ஷனுகவும் பெறும் தொகை 6 கோடி ரூபாய். அத்தொகை வருஷா வருஷம் வளர்கிறது! இதை எந்தத் தேசம் தாங்கமுடியும்?

மூன்றே கோடி:—“ இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் 70 ஆயிரமே. நீங்களோ முப்பது கோடி மக்கள். இந்த முப்பது கோடி மக்களில், மாதம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுவோர் 17 ஆயிரம் தான். இந்தப் பதினேழாயிரம் பேரும் வாங்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? மூன்றே கோடி!

என்ன மிச்சம்?:—“ அரசாங்கத்தின் கணக்கிலிருந்து சில புள்ளி விவரம் சொல்லுகிறேன், பாருங்கள். ஒரு ஜில்லாவிலே சகல செலவும் போக மிராசுதார்களுக்கு மிஞ்சுவது ரூ. 16 தான்; தொழிலாளுக்கோ 13 ரூபாயே. இந்த வருமானம் ஒரு வருஷத்துக்கு! மற்றொரு ஜில்லாவிலே 173 பேர் கொண்ட 30 குடும்பங்களின் மொத்த வருமானம் 2800 ரூபாய்; அவர்கள் கொடுக்கும் தீர்வையோ 1680 ரூபாய்; எனவே, 173 பேருக்கும் என்ன மிச்சம்? வருஷத்திற்கு 1120 ரூபாய்தான். தலைக்கு 6½ ரூபாய் ஆகிறது ஒரு வருஷத்துக்கு!”

மோட்ச வாசல்:—லாலா முரளீதரர் பேசியதின் சாரம் இது:—“ ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்துவிடும்; ஆனால் பணக்காரன் புகமுடியாது என்பது ஒரு பழமொழி. இங்கிலாந்திலுள்ள பணக்காரர்களைக் கண்டு நீங்கள் அசூயைப் படவேண்டாம். அவர்கள் மோட்சம் போக முடியாது. நீங்கள் தாராளமாக மோட்ச உலகில் புகுந்து விடலாம்.

'இந்தியா தரித்திரமா யிருக்கிறது', 'இந்தியா தரித்திரமா யிருக்கிறது' என்று ஏன் நீங்கள் குறை கூறுகிறீர்கள்? உங்களிடம் பணம் இருந்தால், கள்வன் வந்து கொள்ளை கொள்ளுவான்; செல்வத்தைக் காக்கும் கவலையும் பிறக்கும். இந்தச் சங்கடமெல்லாம் உங்களுக்கு இல்லையே! சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி நீங்கள் சந்நியாசிகளாகக் காட்டுக்குப் போய் விடலாம். சந்நியாச வாழ்வு வெகு சுகமாக இருக்கும். இந்தியா ஏழையாகவா இருக்கிறது? நான் ஒப்பமாட்டேன். வர வர செல்வத்தில் பெருத்து வருகிறது. சந்தேகமிருந்தால் காசி ராஜா, சிவப்பிரசாதர், மாஜி ஹைதராபாத் நவாப் இவர்களைக் கேளுங்கள்.

வறுமையில் சீமான்கள் :—"தேச பக்தர்கள் நிரம்பி யிருக்கையில் இந்தியா ஏழையா, என்ன? கொஞ்ச மாளிகைகளே இருந்த இடத்தில் ஏராளமான குடிசைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்காகவும் லட்சக் கணக்காகவும் மனிதர்கள் ஓலமிடுகிறார்கள். இன்னும் என்ன வேண்டும்? வறுமையிலே நீங்கள் சீமான்கள் அல்லவா? உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, கூழுக்கு உப்பும் இன்றி, எலும்பும் தோலுமாய் உள்ள மக்களைப் பாருங்கள். சந்நியாச கோலத்திற்கு வேறு என்ன வேண்டும்?

நன்றி கெட்டவர்கள்! :—" இங்கே வந்திருக்கும் பிரதிநிதிகள் அலங்கார உடையும், ஐரோப்பிய உடையும் தரித்திருக்கையில், தேசம் ஏழை என்று சொல்ல உங்களுக்கு வாய் உண்டா? மோட்ச வீட்டை அதிகாரிகள் உங்களுக்குத் திறந்து விட்டிருக்கையில், அவர்களின் மீது குறை கூறுவதா? நாணய மாற்றுக்காக அவர்கள் நஷ்ட ஈடுபெற்று, எவ்வளவு தியாகம் செய்திருக்கிறார்கள்! நீங்கள் நன்றி கெட்டவர்கள். உங்களையும் உங்கள் தோள் சுமையையும்

இறக்கிவிட உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இன்னும் என்ன வேண்டும் உங்களுக்கு?

மனக் கோயில் :—"கடைசியாக ஒன்று சொல்லுவேன். இரவும் பகலும் பாடுபடுங்கள். தேசத்தின் உயிர் நாடியை அரிக்கும் பூச்சியைப் போக்குங்கள். ஏழைக்கு இரங்குங்கள். அவர்களை சகோதரர்களாக எண்ணுங்கள். ஆடம்பரத்தைக் கைவிடுங்கள். யோக்கியமான வழியில் பணத்தைச் சம்பாதியுங்கள். தர்மத்தில் செலவிடுங்கள். சொல்லாலும் செயலாலும் ஏழைகளைக் கைதூக்கி விடுங்கள். ஐந்து ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வரும் நாற்காலியில் உட்காராதீர்கள். ஏழைகளின் மனக் கோயிலில் குடிகொள்ள வழி தேடுங்கள். ஆண்டவன் உங்கள் பங்கில் இருப்பான்!"

சபையின் பவிஷு :—இந்தியா மந்திரி சபையைக் குறித்த தீர்மானத்தை நார்ட்டன் பிரேரித்தார். சபையை எடுத்துவிடவேண்டும் என்பதே கருத்து. அச்சபையின் காரியங்களைக் குறித்து அவர் சொன்னது :—" கல்கத்தா ரயில்வே வேண்டாம் என்றார் லார்டு கானிங்க். 100-க்கு 5 வீதம் வட்டி கட்டித் தருவதாகச் சொல்லி, அதைப் போடச் செய்தனர். சென்னை நீர்ப்பாசன கம்பெனியின் மூலதனம் 10 லக்ஷம் பவுன்; செலவு கூட அதில் வரவில்லை. ஆயினும் வட்டி கட்டித்தருவதாக வாக்களித்தனர். மற்றொரு கம்பெனியின் பங்கு விலை 339 ரூபாயாக இருக்க, ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்து வாங்கினர். திறமை என்பது இல்லாத அச்சபை மெம்பர்களுக்கு வருஷம் 1200 பவுன் கொடுத்தல் தகாது."

எப்போதும் ஐரோப்பியரா?:—இந்தியாவின் வரவு செலவை விசாரித்துப் பார்க்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்தது. ராவ் பகதூர் ஜம்புலிங்க முதலியார் ஆதரித்

துப் பேசினர். போட்டிப் பரீட்சைத் தீர்மானம் பாபு சுரேந்திரால் பிரேரிக்கப்பட்டது. பெரிய உத்தியோகங்களில் எப்போதும் ஐரோப்பியரே இருப்பர் என்பது ஏற்காதெனப் பலரும் வற்புறுத்தினர். சட்டம் தெரியாதவர்களை ஜட்ஜிகளாக அமர்த்துவதா என்று கனம் என். சுப்பராவ் வாதித்தார். வைத்திய ஊழியத்தில் விபரீதமான வேற்றுமை இருப்பதைக் கண்டு பலரும் சகிக்கவில்லை. தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மவரின் கேவல நிலையைக் குறித்தும் ஒரு தீர்மானம் ஏற்பட்டது.

---

24. குற்றப் பத்திரிகை

ஆதியிலே பூனா நகரில்தான் முதல் காங்கிரஸ் கூடுவதாக இருந்தது. வாந்திபேதி தோன்றியதால் அப்போது அங்கே நடக்கவில்லை. 1895-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் தேதி பதினோராவது காங்கிரஸ் பூனாவில் கூடியது. வந்த பிரதிநிதிகளின் தொகை 1584; விருந்தினரோ ஆயிரக்கணக்கு; எழுபது வயதுகொண்ட ராவ்பகதூர் வி. எம். பிதன் அனைவரையும் வரவேற்றார். அவர் சொன்னதின் சாரம் இது:—

இந்திய ஜாதி:—“நூறு வருஷத்துக்கு முன்னே இந்நகரில் மகாராஷ்டிரர் ஆதிக்கம் பெற்றிருந்தனர். இமயம் முதல் குமரி வரையிலும், துவாரகை முதல் கட்டாக் நகரம் வரையிலும் மகாராஷ்டிரர் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. ஒருதலைப்பட்ட ஜன சமூகமாக இந்தியரை ஆக்கவே மகாராஷ்டிரர் கருத்துக்கொண்டர். அத்தகைய நகரில் கூடியிருக்கிறோம். இந்திய ஜாதியை ஒன்று திரட்டவேண்டும். அதுவே அல்லும் பகலும் நமது கருத்து. நமது காலத்தில்

அக்காரியசித்தி கிட்டாவிடினும், விரைவில் கிட்டுமென்பது திண்ணம்.''

சுரேந்திரநாத பானர்ஜி அக்கிராசனம் வகித்தார். கடல் மடை திறந்ததுபோல பிரசங்கம் பொழிந்தார். "காங்கிரஸ் சபைக்குரிய விதிகளை வகுக்க 1887-ம் ஆண்டிலேயே ஒரு கமிட்டியை நியமித்தோம். விதிகள் வகுத்தும், அமைப்பை ஒழுங்குபடுத்தவில்லை. பலமுறை அவ்விஷயம் ஆலோசனைக்கு வந்தது. வந்தும் ஒரு முடிவில்லை. அமைப்பை உருப்படுத்தியாக வேண்டும்'' என்று வற்புறுத்தினர்.

குற்றப் பத்திரிகை :—அரசாங்கச் செலவைக் குறித்து மக்களையும் விசாரிக்காவிடின் பயனில்லை என்பதாக ஒரு தீர்மானம் வந்தது. பண்டித மாளவியா பேசியதின் சாரம்:- "தேச நிலையைக் குறித்து விசாரிக்க வேண்டுமென நாற்பது வருஷமாகக் கேட்டுவருகிறோம். ஒவ்வொரு துறையிலும் நிர்வாகம் சரிவர இல்லையென்று குறை கூறினோம். ஸிவில் ஸர்விஸுக்கு ஏராளமான செலவை எங்கள் தலையில் கட்டியிருப்பதாக இங்கிலாந்தின் மீது குற்றம் சாட்டுகிறோம். ராணுவச் செலவு அபாரமென்று குற்றம் சுமத்துகிறோம். இந்தியாவுக்கு வெளியே இந்தியாவின் பணத்தை விரயம் செய்வதாகக் குற்றம் கூறுகிறோம். பணச்செலவில் நியாயம் இல்லையென்று குற்றம் சொல்லுகிறோம். வரிச்சுமையையும் திறமையற்ற ஆட்சியையும் தாங்கமுடியாமல், பஞ்சத்திலே லட்சோப லட்சம் மனிதர் மாண்டுவிட்டதற்கு இங்கிலாந்தே ஜவாப் என்று புகார் சுமத்துகிறோம். ஆண்டவனுக்கும் மனிதருக்கும், இங்கிலாந்து பதில் சொல்லியாக வேண்டும். இத்தகைய குற்றச் சாட்டு இருக்கையில், சரிவர விசாரணை நடத்த வேண்டாமா? குற்றச்சாட்டோ சாமானியம் அன்று. இலேசாகவும் சாட்டி விடவில்லை.''

வாய்ப்பூட்டு :—"ஜூரி விசாரணையை விசாரிக்கவேண்டும்" என்றார் உமேச சந்திர பானர்ஜி. "சமஸ்தானங்களிலே பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு இடுவது ஏற்காது" என்றார் ஸிமூர் கே என்பவர். போட்டிப் பரீட்சையைக் குறித்து மறுபடியும் பேசினார் காளி சரணர். தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மவரின் நிலைமை மறுபடியும் ஆலோசனைக்கு வந்தது. விவசாயிகளின் கடன் சுமை, வைத்திய இலாகா முதலிய பல விஷயங்களில் ஜனங்களின் குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. கல்வித் தீர்மானத்தின்மேல் மதுரைவாசி துளசிராம் பேசினார்.

தீர்வைப் பணம் :—பன்னிரண்டாவது காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது. நான்கு நாள் சபை நடந்தது. 790 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். டாக்டர் ராஷ்விகாரி கோஷ் எல்லாரையும் வரவேற்றார். கனம் முகம்மது ரஹிம்துல்லா ஸயாணி அக்கிராசனம் வகித்து அழுத்தமாகப் பேசினார். இந்தியாவின் கேவல நிலையை எடுத்துக் காட்டினார். வரிச் சுமை தாளாது என்றார். பஞ்சம் சகிக்க முடியவில்லை என்று கூறினார். நிலவரியைப் பணமாகக் கொடுப்பது மிகவும் கஷ்டம் என்றார். வழக்கப்படி பல தீர்மானங்கள் நிறைவேறின.

கணவன், மனைவி:—பண விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிக சுதந்திரம் வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் வந்தது. கனம் பால கங்காதர திலகர் பேசியதின் சாரம் இது :—"இந்தியா கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுக்கும் உள்ள நிலைமை ஒரு கணவன் மனைவியை ஒத்ததாம். கணவனோ குடிகாரன். எல்லாவற்றையும் செலவு செய்துவிடுவான். உடனே மனைவியிடம் வந்து உன்னிடத்தில் என்ன இருக்கிறது கொடு என்று கேட்பான். இப்படி இருந்தால் முடியுமா? இப்போதுதான் முதன்

முதலாக இந்த விஷயத்தை காங்கிரஸ் மகா சபை கவனிக்கிறது. மிகவும் முக்கியம் இது.''

கல்வி இலாகா ஊழியத்தைத் திருத்தி அமைப்பதாகச் சொல்லி உயர்பதவிகளில் இந்தியரை அமர்த்தாமல் இருந்தனர். இதைக் கண்டித்து ஆனந்த மோகன் போஸ் பேசினார். பின்பு தென் ஆபிரிக்கா இந்தியரின் விஷயம் ஆலோசனைக்கு வந்தது. பரமேசுவரம் பிள்ளை பேசியது இது:—

சாதலே மேல் :—''இந்தியாவிலே, இந்தியா சட்ட சபையிலும் ஸ்தானம் வகிக்க நமக்கு அனுமதி உண்டு. காமன்ஸ் சபையிலும் நாம் ஸ்தானம் வகிக்கலாம். தென் ஆபிரிக்காவிலோ, 'பாஸ்' இல்லாமல் நம்மவர் பிரயாணம் செய்ய முடியாது; இரவில் நடமாட முடியாது. ஒரு மூலையில் ஒதுங்கி வசிக்கவேண்டும். ரயிலிலே ஒன்று, இரண்டு வகுப்புகளில் போகமுடியாது. டிராம் வண்டியிலிருந்து நம்மைக் கீழே தள்ளிவிடுவர். கிளப்புகளில் நுழைய முடியாது. ராஜ பாட்டையில் நடக்க ஒண்ணாது. நம்மைக் கண்டால் காறித் துப்புவர். 'எட்டிப் போ, எட்டிப் போ' என்பர்; திட்டுவர். எந்த மனிதனும் சகிக்க முடியாத சிறுமை செய்வர். அங்கே சென்றதற்கு இதுதான் பலன். கவர்ன்மெண்டு காப்பாற்றாது போனால், பஞ்சமும் கொள்ளை நோயும் அன்புகொண்டு வாரிக்கொண்டு போகும் வரையில் நம்மவர் இங்கேயே வசிப்பது மேல்.''

அநாகரிகம் அடுக்காது :—அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளருக்குப் பரிந்து ஒரு தீர்மானம் ஏற்பட்டது. அதன் மீது ஜோகேந்த்ர சந்திர கோஷ் பேசியது :—''தேயிலைத் தோட்டங்கள் வாசத்துக்கு வசதியல்ல. கங்காணிகள் ஆசைவார்த்தை காட்டியும், ஏமாற்றியும் ஆட்களைக் கொண்டுபோகிறார்கள். தோட்டத்திலே ஆணையும் பெண்ணையும் அடிக்கிறார்கள். கூலியோ

மிகவும் கம்மி. வேலையில் சிறிது தவறினாலும் அபராதம், சிறைவாசம் இவையே கதி.'' "இந்த அநாகரிகம் அடுக்காது,'' என்றார் பாபு விபின சந்திர பாலர்.

சம்மானம் :—" அடிக்கடி நிலத்தீர்வையை உயர்த்தக் கூடாது. உயர்த்துவதானால் 60 வருஷத்துக் கொருதரம் யோசிப்பதே மேல்,'' என்று சென்னை ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசினார். சமஸ்தான் மன்னரைப் பகிரங்க விசாரணை இல்லாமல் பதவியை விட்டுத் தள்ளக்கூடாது என்று ஒரு தீர்மானம் வந்தது. முகம்மதியர் பலரும் சேர்ந்து அக்கிராசனர் ஸயானிக்கு ஒரு தங்கக் கடிகாரமும் சங்கிலியும் சன்மானம் செய்தனர்.

25. தேசத்தில் கொதிப்பு

அடுத்த காங்கிரஸ் அமராவதி நகரில் நடைபெற்றது. சென்னை சங்கரன் நாயர் அக்கிராசனராக விளங்கினார். 692 பிரதிநிதிகளே வந்திருந்தார்கள். காரணம் தேசத்தில் ஏற்பட்ட நெருக்கடியும் அதிகாரிகளின் போக்கும் ஆகும். மகாசபையே நடக்கமுடியாது போய்விடுமோ என்று பலரும் அஞ்சினர். பூனா நகரிலே இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்டுப் போனார்கள். அதுவே பலருக்கும் திகைப்பு ஊட்டியது.

கிலி பிடித்தல் :—கபர்தே என்பார் எல்லாரையும் வரவேற்றார். அப்போது அவர் சொன்னது இது :—" பிரஸ்தாப வருஷத்திலே தேசத்தில் கொடிய பஞ்சம். என்றும் இல்லாத பிளேக் நோயும் தோன்றியது. எல்லைப்புறச் சண்டையால் ஏராளமான செலவு. வெள்ளப்பாழ், தீப்பாழ், பூகம்பம் இவையும் கூடிக்கொண்டன. ஜனங்களும் அரசாங்கத்தாரும் சேர்ந்து இயற்கை விபத்துக்களைப்

போக்க முயன்றனர். இதற்கிடையில் பூனாவிலே இரண்டு அதிகாரிகள் கொலையுண்டனர். மிகவும் பரந்த சதியாலோசனை உண்டென்பதாக அரசாங்கத்திற்குக் கிலி பிடித்து விட்டது. பலர்மீது கேஸ்கள் ஏற்பட்டன. இரண்டொருவரை நாடு கடத்தினர். இந்நிலையில் நாம் கூடுகிறோம்.''

வாள்முனையில் ஆளல் :—விக்டோரியா மகாராணியின் ஜூபிலியைக் குறித்து அக்கிராசனர் பேசிவிட்டு, மேலும் பேசியது :—" பிரதிநிதித்துவம் வாய்ந்த சபைகள் இந்தியாவுக்கு இல்லை என்றால், அது இங்கிலாந்துக்குச் சிறுமை ஆகும். இங்குள்ள பள்ளிக்கூடங்களை மூட முடியுமா? பத்திரிகை பரவாமல் தடுக்க முடியுமா? கொடுமை இழைக்கப்படும் கூக்குரலையும் தணிக்க இயலுமா? இந்தியாவில் பஞ்சம் நேர்வதற்கு மூல காரணம் வறுமையே. சாசுவத நிலத்தீர்வையும் மிதமான செலவுமே பரிகாரங்களாம். 'வாள் முனையால் இந்தியாவை ஆளுகிறோம், எனவே இந்தியர் எங்களுக்குச் சமமா?' என்று ஆங்கிலேயர் கர்வம் கொள்ளுவது கூடாது. ஆங்கிலேயரைப் போல் எதிலும் நமக்கு சரி சமத்துவம் வேண்டும்.

அதிக்கிரமங்கள் :—" பூனா நகரிலே பிளேக் நோயைத் தடுக்க அதிகாரிகள் மேற்கொண்ட வழியில் ஜனங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. இந்து முகம்மதியரின் வீடுகளிலே மாதர் இருக்கும் இடங்களில் ஸோல்ஜர்கள் வலுக்கட்டாயமாய்ப் புகுந்தார்கள். கோவில்களிலும் நுழைந்தார்கள். இது கண்டு ஜனங்கள் சகிக்கவில்லை. பூனாவில் பிரபல சர்தாரான நாட்டு என்பார் ஆக்ஷேபித்து அரசாங்கத்திற்கு எழுதினார். அதிக்கிரமங்கள் ஓயவில்லை. பிளேக் கமிஷனர் என்னும் அதிகாரி கொலை செய்யப்பட்டார். அதுகண்டு ஆங்கிலேயரின் பத்திரிகைகள் வெறி கொண்டு விட்டன. அதன் பலன் என்ன? நாட்டு சோதரர்கள் விசாரணையில்லாமல் பந்தோ

பஸ்தில் இருக்கிறார்கள். திலகர்மீது கேஸ் நடந்தது. 18 மாதம் தண்டனை விதித்துவிட்டனர். இன்னும் இரண்டு பத்திராசியரும் தண்டனைக்கு ஆளானார்கள்.

சும்மா இருப்பதா?:—" நமது கேவல நிலை கண்டு நாம் சும்மா இருப்பதா? தேசத்தை உன்னத நிலைக்கு உயர்த்த வேண்டாமா? நெடு நாளாக அடிமையாகக் கிடப்பதால், இந்திய ஜாதியின் பலம் குறைந்துவிட்டது; வளர்ச்சி மங்கிவிட்டது; பெருமை யெல்லாம் போய்விட்டது. நல்ல நிலை அடைய வேண்டுமானால் படித்த இந்தியர் முனைந்து முயலவேண்டும்."

பழங்காலச் சட்டம்:-வழக்கமான தீர்மானங்கள் நிறைவேறியபின் பழங்காலத்திய சட்டங்களை பம்பாய்க் கவர்ன்மெண்டார் கையாளுவது பற்றி மகாசபை கண்டித்தது. பாபு சுரேந்திர நாத பானர்ஜி பேசியது இது:—" நாட்டு சோதரர்களை 5 மாத காலமாக விசாரணை இல்லாமல் காவலில் வைத்திருப்பது தகாது. ஒன்று, விசாரணை நடத்த வேண்டும்; இல்லாவிட்டால் விடுதலை செய்யவேண்டும். பூனாவிலே தண்டப் போலீஸ் போட்டிருப்பது தப்பு. பழங்காலத்திய ரெகுலேஷன் சட்டங்களைக் கையாளுவதோ?

என்ன ஆவது?:—" திலகரையும், வேறு இரண்டு பத்திராசிரியர்களையும் தண்டித்திருத்தல் பெரிய தப்பு. திலகரின் நிலை கண்டு பெரிதும் பரிதபிக்கிறேன். ஆ! அவர் சிறையில் கிடக்கிறார். தேசமே கண்ணீர் வடிக்கிறது. பிரிட்டிஷ் பிரஜைகள் என்பதற்கு ஏற்ற உரிமைகள் நமக்கு வேண்டும். அவற்றை நாம் அடைந்தே தீருவோம். சபையும் சரி, விரதம் கொள்ளவேண்டும். சொத்தும் சுதந்திரமுமே முக்கியம். திடீரென்று இரண்டையும் இழக்க நேர்ந்தால் என்ன பயன்? சொத்தைப் பறிமுதல் செய்து, நம்மையும் கைது

செய்து விசாரணை செய்யாமல் காவலில் போடுவது என்ருல், சொத்து சுதந்திர உரிமை என்ன ஆவது?"

தேசத்தில் கோதிப்பு:—ராஜத்துவேஷ சம்பந்தமான சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகள் நடந்தன. "அவ்விதம் திருத்திஞல், பேச்சு சுதந்திரமும், எழுத்து சுதந்திரமும் போய்விடும்," என்று உமேச சந்திர பானர்ஜி அழுத்தமாகப் பேசினர். பலரும் அவ்விதமே பேச, தீர்மானம் நிறைவேறியது. வேறு பல தீர்மானங்கள் நிறைவேறின. பூனவில் அடக்குமுறை கையாளப் பட்டதனுல் தேசத்திலே கொதிப்பும், கலக்கமும், திகைப்பும் தோன்றி வளரலாயின. காங்கிரஸ்காரருக்குள்ளே அவை பிரதிபலிக்கலாயின.

26. வாக்குறுதி குப்பையிலா?

பஞ்சம் ஒரு பக்கம், பிளேக் ஒரு பக்கம், பதட்டம் ஒரு பக்கம், அரசின் அசட்டை ஒரு பக்கம், இன்னும் என்ன வேண்டும்? தேசத்திலே திகைப்பும் தவிப்பும் தோன்றிவிட்டன. நம்பி நம்பி ஏமாறிப் போனுலும், இன்னும் பார்ப்போம் என்றனர் சிலர். வேறு சிலரோ, 'இனியும் கை ஏந்தி நின்று என்ன பயன்? மனுச் செய்து மன்ருடியது போதும்; கார சாரமாகப் பேசவும் தயங்குவதா? என்ன நிலைமை இது?' என்று பேசினர்.

இந்நிலையில், பதினன்காவது காங்கிரஸ் சென்னையிலே கூடியது. மக்களின் மனநிலைமை காரணமாகப் பிரதிநிதிகள் குறைந்தனர். கனம் என். சுப்பராவ் பந்துலு அனைவரையும் வரவேற்றுப் பேசியது இது:—"அதிகாரிகளின் மனப்பாங்கு மாறவில்லை, சதி, சதி என்றே பேசுகின்றனர். சரீர சுதந்திரத்தைக் குறைத்து விட்டனர். ஆங்கிலேயர்,

இந்தியர் என்று வேற்றுமை காட்டுகின்றனர். அரசின் கொள்கைப்படி நடப்பதே அதிகாரிகளின் கடமை. அரசின் கொள்கையை வரையறுப்பதா அவர்களின் வேலை? அரசியலில் அவர்கள் தலையிடுவதைத் தடுத்தாகவேண்டும்.''

புதிய விலங்குகள்:—கல்கத்தா வாசியான ஆனந்த மோகன் போஸ், அக்கிராசனம் வகித்து அருமையாகப் பேசினார். அதன் முக்கிய சாராம்சம் இது:—''ராஜப்பிரதிநிதியாக லார்டு கர்ஸான் வந்திறங்கியிருக்கிறார். தேசத்தின் அபிமானத்தைப் பெற ஆசை யென்றும் பேசுகிறார். சென்ற இரண்டு வருஷகாலமாக, அரசின் போக்கு விபரீதமாயுளது. முன்னம் கிடைத்த உயர் பதவிகள்கூட இப்போது இந்தியருக்குக் கிடைப்பதில்லை. அந்தஸ்துங் குறைகிறது; சம்பளமும் அப்படியே. ரூர்க்கி நகரிலுள்ள எஞ்சினீயரிங் கலாசாலையில் பரிசுத்தமான ஆசியாக்காரரைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்களாம். பதினெட்டு மாத காலமாக, விசாரணையின்றி 'நாட்டு' சோதரர்களைக் காவலில் வைத்துளர். இராஜத்துவேஷத்தைப்பற்றிப் புதிய சட்டம் செய்கின்றனர். காவலாளிகளையும் போக்கிரிகளையும்போல், பத்திராசிரியரையும் பிரசங்கிகளையும் நடத்தப் போகின்றனர். நன்னடத்தை ஜாமீன் கட்ட வேண்டுமாம். கல்கத்தா நகர சபையில் பிரதிநிதிகளின் தொகை குறைக்கப்படுகிறது. அரசாங்கம் ஆங்கிலேயரிடம் நமக்குள்ள நம்பிக்கை பறக்கும் நிலைமை ஏற்பட்டுளது. ஜனங்களை நம்பி, சுதந்திரத்தை விரிவாக்குதல் இருவருக்கும் நலம் பயக்கும். புதிய விலங்குகளைப் போடாமல், ஏற்கெனவே உள்ள விலங்குகளைப் போக்கவேண்டும்.''

ஆழ்ந்த மனக் கசப்பு:—ராஜத்துவேஷச் சட்டத் தீர்மானம் முக்கியமானது. கனம் ஜம்புலிங்க முதலியார் பேசியது:—

"ஜனப் பிரதிநிதிகள் பிடிவாதமாக எதிர்த்தும், சட்டம் பிறந்திருக்கிறது. தேசத்திலே என்றுமில்லாத கிளர்ச்சி தோன்றியும், அதனை அரசாங்கம் சட்டை செய்யவில்லை. அரசியலைக் குறித்துக் குறை கூறினால், அதுவும் அரசின் மீது விரோதமாம்; அரசுக்கு அவமதிப்பாம். வெளி தேசங்களில் ஏதேனும் பேசினால், இங்கு வந்ததும் இந்தியருக்கு அதுபற்றித் தண்டனை கிடைக்கும். இதன் பலாபலன் என்ன? நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்டு கிளம்பிய அரசு, இப்போது அவநம்பிக்கைக்கும் சமுசயத்துக்கும் ஆளாகிறது. தேசத்திலே மனக் கசப்பு வேரூன்றிவிட்டது."

குப்பைக் காகிதம்:—லார்டு கர்ஸனாது வருகையை வரவேற்று ஒரு தீர்மானம் பிறந்தது. இங்கிலாந்தில் அவர் பேசி யிருப்பதைப் பார்த்தால், நல்ல காலம் பிறக்கலா மென்று பாபு சுரேந்திர நாதர் பிரமாதமாகப் பேசினார். நிலத் தீர்வை விஷயமாய் அரசாங்கம் தந்த வாக்குறுதி குப்பைக் காகிதம்போல் ஆகிவிட்டதே என்று வருந்தினார் வேங்கடரத்தினம்.

"எழுநூறு ரூபாயே வரும்படி கிடைத்த ஒரு கிராமத்திற்கு, இரண்டாயிரம் ரூபாய் தீர்வை செலுத்த நேர்ந்ததால், மக்கள் கிராமத்தையே விட்டுவிட நேர்ந்தது. அரசாங்கத்தார் அதைக் கட்டிக்கொண்டனர்" என்று ஒருவர் ஓலமிட்டார்.

மனம் கோணின்:—இந்தியாவின் எல்லைப்புறத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து, சென்னை ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசியது இது:—

"உள்நாட்டிலோ அடக்குமுறை. வெளியிலோ நாடு பிடிக்கும் ஆசை. அந்த ஆசையில் பணம் போய்விடுவதால் நாட்டிலே சீர்திருத்தம் செய்ய முடியவில்லை. எல்லாம் வாடி வதங்குகின்றன. ஏகாதிபத்திய நன்மைக்காகச் சண்டை

நடப்பின், அதன் செலவை இங்கிலாந்து ஒப்புக்கொள்ளட்டும்." "மக்களின் மன எல்லை அல்லவோ ஒழுங்காய் இருக்கப் பார்க்கவேண்டும்" என்றார் சாரு சந்திர கோஷ்.

ஆட்சிக்கு அவமானம் :—பத்திரிகைகளில் வெளியாகும் வியாசங்களைக் கண்டறிந்து, அரசாங்கத்துக்கு அறிவிக்க இரகசிய கமிட்டிகளை அதிகாரிகள் ஏற்படுத்தினர். ஆங்கிலேயர் ஆளும் நாட்டில் இத்தகைய கமிட்டி ஏற்படுவது ஆச்சரியமே என்றார் (ஆங்கிலேயரான) சேம்பர்ஸ் என்பவர். ஆங்கில ஆட்சிக்கே அவமானம் என்று என். சி. கெல்கார் கூறினர். ஸ்தல சுய ஆட்சி சபைகளை ஒடுக்குவது தவறென்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. தென் ஆபிரிக்காவிலுள்ள இந்தியரின் விஷயம் ஆலோசனைக்கு வந்தது. அதன்மேல் பரமேசுவரம் பிள்ளை பேசியதின் சாரம் இது:-

காட்டு மிராண்டிகள் :—"இந்தியர் காட்டு மிராண்டிகளாம். ஆதலினுல் உதவிபுரிய முடியாதாம். இந்தியா மந்திரி என்பவர் இப்படிப் பேசுகிறார். ஆங்கிலப் பிரஜைகளாயுள்ள நாம் குடியேற்ற நாடுகளிலுள்ள வெள்ளை ஜாதியருக்குத் தண்ணீர் தூக்கிகளாகவும், விறகு வெட்டிகளாகவும் இருக்க வேண்டுமாம். கடைப்பட்ட மனிதர்களாம். இது நிலையான அவமானம். தாங்க முடியாத தாழ்வு ; சகிக்க முடியாத அக்கிரமம்." தீர்மானம் நிறைவேறியது. காங்கிரஸ் மகாசபையின் அமைப்பை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானம் பிறந்தது. மாமூல் தீர்மானங்கள் நிறைவேறியபின், சபை கலைந்தது.

---

27. திருத்தமா புரட்சியா?

பதினெந்தாவது காங்கிரஸ் இலட்சுமண புரியில் நடந்தது. 740 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களில் 300 பேர் முகம்மதியர். பண்ஸிலால் சிங் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "அதிகாரிகாள்! படித்த இந்தியரிடம் நீங்கள் காட்டும் பான்மை மோசமே. எங்களுக்கு எதிராக உள்ள அதிகாரிகளே! நீங்கள் அன்னியர். நீங்கள் தூர விலகி நிற்பதால், எங்கள் மனத்தை நீங்கள் அறிய முடியாது. நாங்களும் உங்கள் மனத்தை அறிய முடியவில்லை" என்று குறிப்பிட்டார்.

குளிக்கப்போய் சேறு:—ராமேச சந்திர தத்தர் அக்கிராசனம் வகித்துப் பேசியதின் சாரம் இது:—"ராஜத்துவேஷ சட்டத்தின் பலாபலன் யாது? தாராளமாக ஜனங்கள் பேசுவதையும், பத்திரிகைகள் பிரசுரமாவதையும், கூட்டங்கள் நடப்பதையும் தடுப்பின், ராஜத்துவேஷம் ஏற்படுவதற்கு வேறு சாதனம் வேண்டுமோ? தாங்கமுடியாத நிலத்தீர்வை, கிராமக் கைத்தொழில்களின் அழிவு முதலியனவே பஞ்சத்திற்கு மூலகாரணம். ஆறிலொன்று கடமை வாங்கினல் பஞ்சம் தோன்றாது. இப்போது போலீசாரே ஆட்சி புரிகின்றனர். துன்பத்தையும், அனர்த்தத்தையும் தடுக்க வேண்டுமானல், சுய ஆட்சி அளித்தல் வேண்டும். அளித்தால் ஆங்கில ஆட்சி உருப்படும்."

"இந்தியாவிலே ஏராளமான ஆங்கிலத் துருப்புகள் இருக்கும் செலவை, இங்கிலாந்தே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கார்லண்டு எனும் மாது பேசினுள். ஸ்தல சுய ஆட்சி சபைகள் ஒடுக்கப்படுவது கண்டு சுரேந்திர நாதர் பேசியதின் சாரம் இது:—

இரண்டி லொன்று :—"ராஜ பக்தி இல்லாதார் யார்? அரசாங்கத்துக்கு 'ஜே' சொல்லி அவர்கள் இஷ்டப்படி கை தூக்குகின்றவர்களா? அல்லது நாமா? குறைகளை எடுத்துச் சொல்லுகிறோம். அபாயம் உண்டாகும் என்று எச்சரிக்கை செய்கிறோம். பரிகாரம் செய்யுங்களென அரசாங்கத்தைக் கேட்கிறோம். மக்களின் திருப்தியே எந்த அரசுக்கும் தக்க பாதுகாப்பு. குறைகளை நீக்காமல் ஜனங்களைத் திருப்திசெய்ய முடியுமோ? ஒன்று, சட்ட சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும்; அல்லது புரட்சி முறைகளைக் கையாளவேண்டும். புரட்சி முறைகளை வெறுப்பதால் சீர்திருத்தம் வேண்டு மென்று கோருகிறோம். சட்ட சம்மதமான வாழ்வே மேலெனத் தேர்ந்துள்ளோம். நமது எதிரிகள் தங்களுக்கு உசிதமானதைத் தேர்ந்து கொள்வாராக. சீர்திருத்தம், புரட்சி, இரண்டுக்கும் இடையான வழி கிடையாது. எனவே ஒன்று சீர்திருத்த முறை, ஒன்று புரட்சி முறை. இரண்டி லொன்றை அதிகாரிகள் கொள்ளுதல் வேண்டும்."

270 கோடி :—ராஜீய இயக்கங்களில் கலந்து கொள்ளக் கூடாது, ராஜீயக் கூட்டங்களுக்குப் போகக்கூடாது என்று பள்ளிக்கூட மானேஜர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்குத் தாக்கீது வந்தது. காளீசரண பானர்ஜி, டாக்டர் டி. எம். நாயர் இவர்கள் ஆதரித்துப் பேசினர். காங்கிரஸ் அமைப்புக் கான விதி முறைகள் அங்கீகாரமாயின. பஞ்சம் நீங்க வேண்டுமானால் செலவைக் குறைக்க வேண்டும், தொழில் களை விருத்தி செய்ய வேண்டும், நில வரியைக் குறைக்க வேண்டும் என்னும் தீர்மானம் வந்தது. அறுபது வருஷத் துக்குள்ளே தேசக் கடன் 26 கோடியிலிருந்து 270 கோடி யாகி விட்டதே என்று ஒருவர் வருந்தினர். பழைய தீர் மானங்களுடன் காங்கிரஸ் கலைந்தது.

அன்னிய அரசு:—இந்தியாவின் வடமேற்குக் கோடியி லுள்ள லாகூர் நகரில், பதினாறாவது மகாசபை நடந்தது. பிராட்லாவின் பெயரால் அங்கே ஒரு மண்டபம் கட்டினர். அதில் நடந்தது காங்கிரஸ். 567 பிரதிநிதிகள் வந்திருந்த னர். காளி பிரஸன்னராய் உபசரணைத் தலைவர். அவர் பேசியது:—"நமது ஆட்சியிலும் சரி, கிளர்ச்சி செய்ய அவசியம் இருக்கவில்லை. காலமோ மாறிவிட்டது. அன்னிய அரசு நம்மை ஆளுகின்றது. இங்கிலாந்திலோ ஆங்கில அரசில் ஜன நாயகம் உண்டு. இங்கோ யதேச்சாதிகாரந் தான். நாம் இரண்டுவேளை சாப்பிட வேண்டுமானால், தீவிர மாகவும் இடைவிடாமலும் கிளர்ச்சி செய்தாகவேண்டும்."

எலும்பும் தோலும்:—பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜி சந்திரவர்க்கர் அக்கிராசனத்தில் அமர்ந்தார். இந்தியாவின் செலவு நிலையைக் குறித்து விசாரிக்க வேண்டுமென்று ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசுகையில், "இங்கே பிழைப்பு இல்லாததால், பலர் பிற நாடு சென்று, அதனை வளம்படுத்து கின்றனர். அங்கோ அவர்களைக் கொடுமையாகத் துன் புறுத்துகிறார்கள். லட்சோப லட்சக் கணக்கான ஜனங்கள் பஞ்சத்தில் மாண்டு போயுளர். இன்னும் லட்சோப லட்சம் பேர்களோ எலும்பும் தோலுமாக ஆகிவிட்டார்கள்" என்று சுட்டிச் சொன்னார்.

சீக்கியர் சிறப்பு:-சேனையிலே உத்தியோகங்கள் கிடைக்க வேண்டும், ராணுவ கலாசாலைகள் ஏற்படவேண்டும் என்று ஒரு தீர்மானம் ஏற்பட்டது. "சிப்பாய்க் கலக சமயத்திலே சீக்கியர் 22 நாளில் 508 மைல் நடந்துவந்து டில்லியிலே ஆங்கிலேயரைக் காத்தனர். நெடுந் தூரம் நடந்து வந்த களைப்பைச் சட்டை செய்யவில்லை. உடனே போரில் இறங் கித் தலை கொடுத்தோம்" என்றார் குருசரண சிங்.

உள்ள நிலை:—பல உத்தியோகங்களில் இந்தியரை அமர்த்துவது இல்லையே என்று சபை வருந்தியது. அப்போது பானர்ஜி காட்டிய புள்ளி விவரம்:—"காட்டிலாகாவில் உயர்ந்த உத்தியோகங்கள் 24; இந்தியர் 2 பேர்; அபினி இலாகாவிலே 77 உத்தியோகங்களில் இந்தியருக்கு 1 தான். துறைமுக இலாகாவிலே 157 உத்தியோகங்கள். இந்தியருக்குப் பூஜ்யம். அந்த இலாகாவில் வேலை பழகுவோர் 100 பேர். இந்தியர் ஒருவரும் இல்லை. சிறைச்சாலை அதிகாரிகளாக ஓர் இந்தியர் கூட இல்லை. போலீஸிலே 102 உத்தியோகங்கள். இந்தியருக்கு ஒன்றே. விக்டோரியா மகாராணியின் வாக்குறுதி இருந்தும் இந்தியருக்குள்ள நிலைமையைப் பாருங்கள்."

காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானங்களை எடுத்துரைக்க ராஜப்பிரதிநிதியிடம் ஒரு தூது அனுப்பவேண்டுமென்று வாச்சா வாதித்தார். பஞ்சாபைத் தனி மாகாணமாக்க வேண்டிக்கொள்ளப்பட்டது.

எங்கே உண்டு:—இந்திய சுரங்க மசோதாவின்மேல் பூபேந்திரநாத வஸு பேசியதின் சாரம்:—"காங்கிரஸ் சபையைக் கட்டிவிடுங்கள். பத்திரிகைகளை மூடிவிடுங்கள். தொழிலபிவிருத்தியைக் கவனியுங்கள் என்று சொல்லுகிறார்கள். நல்லது. அன்னியத் துணிக்கு எதிர்வரி போடுவது எங்கேயாவது உண்டா? அன்னிய வியாபாரிகளுக்கு லாபகரமாக இருக்கும் வண்ணம் சர்க்கரை போன்ற சாமான்களுக்கு வரி போடுவதும் எங்கே உண்டு? தொழிற்சாலைகள் இங்கே தலைதூக்கா வண்ணம் அடக்கி ஒடுக்கச் சட்டம் செய்வதும் எந்தத் தேசத்திலாவது உண்டா? ராஜீய சுதந்திரம் இல்லாவிடின், தொழிலபிவிருத்தி எவ்விதம் ஏற்படும்?"

28. இருப்பதா இறப்பதா?

பதினேழாவது காங்கிரஸை கல்கத்தா நகரம் நடத்தி வைத்தது. 896 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நாட்டூர் மகாராஜா ஜகதீந்திர நாதர் அனைவரையும் வரவேற்றார். "தேச நலத்தை நாடும் நல்லோருடன் சேர்ந்திருப்பதே என் வாழ்வின் நோக்கம். இந்திய மக்களின் ராஜ்ய ஆசாபாசங்களைப் பூர்த்தி செய்யக்கூடியது காங்கிரஸ் மகாசபையே. கல்கத்தாவிலும் பிளேக் தோன்றியிருக்கிறது. அதிகாரிகள் அபிமானம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆதலின் பட்ட வேட்டை ஆடுவோரும் பணக்காரரும் காங்கிரஸைச் சாராமல் அதிகாரிகளையே சார்ந்து நிற்கின்றனர். முதன் முதலாக கைத்தொழில் காட்சி இங்கே ஏற்பட்டுள்ளது. இனி வருஷா வருஷம் நடக்குமென நினைக்கிறேன்" என்று பேசினார்.

சுதந்திரம் இருந்தால் :—வாச்சா என்பார் அக்கிராசனம் வகித்துப் பேசியதின் சாரம் இது :—"ராஜ தந்திரம் என்பது ஆங்கிலேயரின் மாமன் காணியன்று. நம்மவரிலும் ராஜதந்திரிகள் பலர் உளர். பஞ்சத்தால் வருந்தும் மக்கள் 47 கோடி வரி செலுத்துகின்றனர். ரயில் பாதை போடுவதால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நீர்ப்பாசன வசதிகள் அமைக்கவேண்டும். இந்தியாவைப் போன்ற பரம ஏழ்மை தேசத்தை உலகிலே எங்கும் பார்க்க முடியாது. பிரதிபலன் என்பதே இல்லாமல் ஆண்டுதோறும் 40 கோடி ரூபா கப்பலேறிவிடுகிறது. நமக்குச் சுதந்திரம் இருக்குமானால், அரசை அடியோடு ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். நம்மவரையே நியமித்துக்கொள்ளலாம். இந்தியாவுக்குச் சுதந்திரம் இல்லையே."

இறந்துபோவதா?:-இங்கிலாந்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிக்கும், இந்தியா பத்திரிகைக்கும் பணம் கொடுத்து உதவ வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. இந்தியாவின் வறுமையைக் குறித்துப் பேசுகையில், "பஞ்சத்தால் ஜனத் தொகை குறைந்துவிட்டது; பரம தரித்திரத்தில் ஜனங்கள் தத்தளிக்கிறார்களே" என்று மூதோல்கர் மனங் கரைந்தார். "ஆடு மாடுபோல் வாழ்ந்து சாவதா இந்திய விவசாயிகளின் கதி? அவனும் மனித ஜன்மம் அல்லவா? 20 கோடி ஜனங்கள் பசியால் வாடி, ஊக்கம் குன்றி, உற்சாகம் இன்றி உலகில் பிறந்துவிட்டதனால், விதியின்றி வாழ்ந்து, உயிர் வாழ வகையில்லாமல் இறந்து போவதா?" என்று ஜி. சுப்பிரமணிய ஐயர் புழுங்கினார்.

காந்தி வாதாடல் :—இங்கிலாந்திலுள்ள பிரிவி கௌன்ஸில் எனும் நியாய சபையில், இந்திய வக்கீல்களை நீதிபதிகளாக அமர்த்தவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. சிவசுவாமி ஐயர் ஆதரித்துப் பேசினார். தென் ஆபிரிக்காவிலே ஒரு லட்சம் இந்தியர் திக்கின்றிக் கிடப்பதாக மோகனதாஸ் காந்தி வாதாடினார். போலீஸ் திருத்தம் அவசியம், பஞ்ச நிவாரணம் முக்கியம், உயர்ந்த உத்தியோகங்களில் இந்தியர் அதிகமாக இருக்கவேண்டும் என்னும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

ஹோம் ரூல் :—இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளின் செலவை இங்கிலாந்தே ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது ஒரு தீர்மானம். அயர்லாந்து வாசியான ஸ்மெட்லி என்பார் பேசியது :—"அயர்லாந்துக்கு எப்படி சுயராஜ்யம் (ஹோம் ரூல்) அவசியமோ அப்படியே இந்தியாவுக்கும் அவசியம். இளைஞரே! எழுந்திருங்கள். தீர்மானம் கொள்ளுங்கள். ஹோம் ரூல் கேளுங்கள். உத்தியோகங்கள் வேண்டும் என்று கேட்டால் போதாது. ஹோம் ரூலே

கேளுங்கள். முயற்சி செய்யுங்கள். ஆண்டவன் ஆதரவு கிட்டும். வெற்றியும் பெறலாம்.''

பின்பு, கல்வியை தாராளமாகப் பரப்பவேண்டும் என்னும் தீர்மானம் வந்தது. அஸ்ஸாமிலே தோட்டத் தொழிலாளரின் கூலியை உயர்த்தவேண்டும் என்று மகாசபை வற்புறுத்திற்று. மாமூல் தீர்மானங்கள் நிறைவேறின.

---

29. இளைஞர் எழுக!

அடுத்த 1902-ஆம் வருஷம் ஆமதாபாத் நகரில் பதினெட்டாவது காங்கிரஸ் கூடியது. கைத்தொழில் மகா நாடும் அதனுடன் இரண்டாவது தடவையாக நடந்தது. பரோடா மகா ராஜா அக்கிராசனம் வகித்துப் பேசினார். காங்கிரசுக்கு 471 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். திவான் பகதூர் அம்பாலால் தேசாய் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் சொன்னதின் சாரம்:—

எல்லோரும் ஏழை:—“வியாபாரத்திலும், தொழிலிலும், பெருத்தது கூர்ஜரம். சமீபத்திலே இரண்டு பஞ்சங்கள் நேர்ந்தன. கோரம் தாங்க முடியவில்லை. ஒரு கோடி மக்களில் 25 லட்சம் மாண்டு போயினர். தேசத்திலிருந்து ஏராளமான செல்வம் கப்பலேறி விடுகிறது. இது ஒரு காரணம் பஞ்சத்துக்கு. ராஜீய சுதந்திரம் இல்லாததால், வர்த்தகம் ஓங்கவில்லை. நெசவாலைகள் பல இருந்தும் என்ன? அநியாயமான உள்நாட்டு எதிர் வரி கொடுக்கவேண்டி யிருக்கிறது. எல்லாரும் ஏழையாக இருப்பதால், காங்கிரஸ் சபையை நோக்கி நிற்கின்றனர் கூர்ஜர வாசிகள். அச்சபையே கதி மோட்சம் தேடித் தரவேண்டும்.''

அச்சம் பிறத்தல்:—சுரேந்திர நாத பானர்ஜி அக்கிராசனம் வகித்தார். அப்போது அவர் பேசியதின் சாரம்

இது:—"யூனிவர்ஸிடி கமிஷனது சிபார்சுகள் நமக்கு அச்சத்தை ஊட்டுகின்றன. உயர்தரக் கல்வி பரவுவதை ஒடுக்கப் பார்க்கின்றனர். இந்தியாவின் நிர்வாகத்தை இரண்டு தரம் ஆராய்ந்து பார்த்தனர். அதன் முடிவுகளை இன்றளவும் வெளியிடவில்லை. ஏன்? பழைய தொழில்களை உயிர்ப்பிக்க வேண்டும்; புதிய தொழில்கள் ஏற்படவேண்டும். நிலத் தீர்வை குறையவேண்டும். தேசச் செல்வம் கப்பலேறுதல் நிற்கவேண்டும்.

சுதந்திர தேவதை:—"சுதந்திரம் ஒரு நாளில் கிட்டி விடாது. சுதந்திர தேவதை சாமானியமானவள் அன்று. பரம பக்தியும், தியாகமும் வேண்டுவாள். சரித்திரமே சாட்சி. நமது தேச சரித்திரத்தின் படிப்பினை என்ன? தன்னையே தியாகம் செய்து கொள்வதல்லவா? பழைய பெருமை, தற்காலப் பொறுப்பு, வருங்கால உயர்வு எல்லாவற்றையும் எண்ணி, உற்சாகத்துடன் நாம் ஊழியம் புரிய வேண்டும். தியாகம் ஊழியம் இரண்டினும் இந்தியாவை விடச் சிறந்த தேசம் ஒன்றுண்டோ? இந்தியாவே உலகின் ஞான ஒளிக்குத் தாயகம். நம்மிடமிருந்து எல்லாம் கற்றுக் கொண்ட மேனாட்டினர் நம்மை மிஞ்சி விட்டனர். நாமோ தயங்கியும், திகைத்தும் நிற்கிறோம்.

தட்டி எழுப்பு:—"தியாகத்திற்கு ஏற்ற பலன் உண்டா என்று கணக்குப் பார்த்துக் கலங்கி நிற்பதோ? அவ்விதம் நின்றால் சுதந்திர வெற்றி கிட்டுமோ? ஜப்பான் தேசத்தைப் பாருங்கள். பரமத் தியாகம் செய்தது; இடைவிடா ஊக்கம் கொண்டது; முனைந்து முயன்றது. காரிய சித்தியும் அடைந்தது. ஆட்கள் உளர். சக்தி இருக்கிறது. சாமர்த்தியமும் உண்டு. தட்டி எழுப்பும் மனிதரே தேவை. எழுப்பினால் மேலான வாழ்வு கிட்டும். மகிமையான பதமும் வாய்க்கும். மங்கி மடிதல் மறையும்.

எல்லாம் வீண்:—“சத்தியமே நாடுகின்றோம். சுதந்திரமே வேண்டுகின்றோம்; சரி நிகர் சமானமாக வாழ விரும்புகின்றோம்; ஏகாதிபத்தியத்திலே தகுந்த அந்தஸ்து கோருகின்றோம். எல்லாம் வீணாகுமா, என்ன? வேண்டியது கிட்டினால், ஆங்கில ஏகாதிபத்தியம் ஓங்கும், உயரும், வலுக்கும்; நமது நன்றி வளரும், திருப்தி பெருகும். இந்தியாவும் இங்கிலாந்தும் இணையும்.” அக்கிராசனர் பேசியதைக் கேட்டு அனைவரும் பரவசம் ஆயினர். ஆனந்த ஆரவாரம் அடங்க நெடுநேரம் பிடித்தது.

பலி கொடுத்தனர்:—தேசத்தின் வறுமையைக் குறித்து ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசியது இது:—“இந்தியாவின் பெரு வாழ்வு கண்டு, இதரர் அனைவரும் அசூயை கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு. கிழக்கிந்திய கம்பெனியாரோ இங்கிலாந்தின் வியாபாரத்தை மதித்து, இந்தியாவை வேண்டுமென்றே பலி கொடுத்து விட்டனர்; தொழில்களை அழித்து விட்டனர். விவசாயத்தையே பலரும் நம்பியிருக்கும்படி செய்தனர். என்? இங்கிலாந்தில் தொழில்கள் பெருக, மூலப்பொருள்கள் வேண்டும் அல்லவா? கம்பெனிக்குப் பின் ஆட்சியை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் அந்தக் கொள்கையை மாற்றி அமைக்கவேண்டும். ஆயினும் என்ன நடக்கிறது? கோலார் தங்கச் சுரங்கங்கள் ஐரோப்பியருக்கே கிடைத்துள்ளன. ஆண்டு தோறும் 20 கோடி விலையுள்ள தங்கம் அகப்படுகிறது. அத்தங்கம் வேறு தேசத்துக்குப் போய்விடுகிறது. 20, 30 வருடத்தில் எல்லாத் தங்கமும் வெட்டி எடுக்கப்பட்டு விட்டால், மைசூர் வாசிகளுக்கு என்ன மிஞ்சும்? கல்லுதான்.”

இளைஞருக்கு அழைப்பு:—ரயில் பாதைகளும், தடையில்லா வியாபாரக் கொள்கையும் கூடிக்கொண்டு, தேசக் கைத்தொழிலாளரை அழித்துவிட்டன என்று எம். கே.

பட்டேல் பொருமினர். தென் ஆபிரிக்கா இந்தியரின் இழி நிலையைக் குறித்துப் பலர் கண்டித்தனர். ஆங்கில சோல்ஜர்களுக்கு இன்னும் அதிகச் சம்பளம் கொடுப்பதா? அவர்களின் தொகையையும் அதிகரிப்பதா?" என்று சமாத் சிந்தாகுலம் கொண்டார். உப்புவரி கூடாதென்றார், சிந்தாமணி. ரயில்வேயில் இந்தியரை அமர்த்த வேண்டாமா என்று கோவிந்த ராவ் கேட்டார். உள்நாட்டு எதிர் வரி அக்கிரமம் என்று வாச்சா வாதித்தார். "இளைஞர் முன் வந்து, காங்கிரஸ் வேலையை எடுத்துக்கொண்டு தேசத்தின் கதி மோட்சத்தைப் பார்க்கவேண்டும்," என்று அக்கிராசனர் முடிவுரை கூறினர்.

---

30. வேதவாக்கு, ராஜவாக்கு

நமது சென்னையில் 1903-ஆம் ஆண்டிலே மீண்டும் மகா சபை கூடியது. தேனும்பேட்டையிலே பெரிய பந்தல் போட்டனர். 538 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். முதன் முதலாக பர்மாவிலிருந்தும் பிரதிநிதிகள் வரலாயினர். விருந்தினராக வந்தோர் ஆறாயிரம்பேர். நவாப் சையத் முகம்மது எல்லாரையும் இனிமையாக வரவேற்றார். இந்துக்களும் முகம்மதியரும் ஒரு மனங்கொண்டு வாழ்வதே உயர்வுக்குக் காரணம் என்றார். ராஜீயமே சமூக சுகவாழ்வுக்கு அடிப்படை என்றார். குணதோஷம் கூறுகையில் அதிகாரிகளுக்குக் கோபம் வரினும் நாம் கூறியாகவேண்டும் என்றார்.

ஈசன் செயல்:—லால் மோகன் கோஷ் அக்கிராசன பீடத்தில் அமர்ந்தார். "ஆங்கில ஆட்சி இந்தியாவுக்குக் கிட்டியது ஆண்டவன் செயலே என்றார் லார்ட்டு கர்ஸான். நாமும் ஆண்டவன் என்கிறோம். அவர்களும் ஆண்டவன் என்கிறார்கள். அவனே பார்த்துக் கொள்ளட்டும். ஆங்கில

ஆட்சி ஏற்பட்டது ஆண்டவன் செயல்தான். பரம வறுமையும், தாங்க முடியாத வரிச் சுமையும், ஓயாப் பஞ்சமும், தேசச் செல்வம் கப்பலேறுவதும் ஆண்டவன் செயல்களோ?

வாறி இறைத்தல் :—"லார்டு கர்ஸான் டில்லியிலே தர்பார் நடத்தினர். அதன் செலவோ அபாரம்; இந்திய மன்னருக்கோ என்றுமில்லாத அவமானம். இந்தியருக்கோ ஜாதி வேற்றுமை கண்டு மனக்கசப்பு. இவையே தர்பாரின் பலன். நமக்குச் சுய அரசு இல்லை. ஆதலின் ஓட்டபலத்தினுல் அரசை மாற்ற முடியவில்லை. பார்லிமெண்டு சபையையே நம்பிக் கிடக்கவேண்டி யிருக்கிறது. இந்திய அதிகார வர்க்கமோ வரவர அபிமானம் அற்றுப் போகிறது. வெறும் ஆடம்பரத்திலே எந்தத் தேசமாவது ஏராளமான பணத்தை வாறி இறைக்குமா? பஞ்சமும் கொள்ளை நோயும் தாண்டவம் ஆடுகையில், உயிரை வாங்கும் யமன் கூத்தாடுகிற்கையில், பணத்தை வாறியா இறைப்பது? கூடாது, கூடாது என்று அனைவரும் கண்டித்தும் என்ன? பெரிய தமாஷா நடந்து தீர்ந்துவிட்டது. பிறருடைய பணத்தை அதிகாரிகள் தாராளமாக வீணாக்கி விட்டார்கள். அவர்களை யார் கேட்பது? அவர்கள் யாருக்கும் ஜவாப் சொல்ல வேண்டியதில்லை. டில்லி தர்பார் செலவில் பாதியைக் கொண்டு பஞ்சத்தைப் போக்கியிருக்கலாம். லட்சோப லட்சம் ஜனங்களைச் சாகாமல் காத்திருக்கலாம்."

பாருங்கள் :—பெரிய உத்தியோகங்களில் தகுந்த அளவு இந்தியரைச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று வாச்சா பேசியது இது :—"(1) ஸர்வே இலாகாவில் மாதம் 300 முதல் இரண்டாயிரம் வரையில் சம்பளமுள்ள உத்தியோகங்கள் 132; அதில் 300 ரூபா சம்பளத்தில் இரண்டே இந்தியர். (2) தந்தி இலாகாவில் 500 க்கு மேல் 52; அதில் ஒன்றுதான் நமக்கு. (3) தந்தி இலாகாவிலே இன்னொரு இனத்தில் 500

ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்கள் 13; ஒன்று கூட இந்தியருக்கு இல்லை. (4) நாணய சாலையில் 6 உத்தியோகங்கள். இந்தியருக்கு ஒன்றுகூடக் கிடையாது. (5) தாவர ஸர்வே ஊழியத்தில் இந்தியர் இல்லவே இல்லை. (6) காட்டு இலாகாவில் 22 உத்தியோகங்கள்; இந்தியருக்கு மூன்று தான். (7) வேறு ஓர் இலாகாவில் 22 உத்தியோகங்கள். இந்தியரே கிடையாது. (8) வரவு செலவு இலாகாவில் 500-க்கு மேற்பட்ட சம்பளமுள்ள உத்தியோகங்கள் 59; இந்தியருக்கு 14 தான்.

கோபமேன்?:—"உள்ள விஷயத்தை எடுத்துச் சொன்ன உடனே, கோபாலகிருஷ்ண கோகுலர்மீது லார்டு கர்ஸானுக்குக் கோபம் வந்துவிட்டது. மாமியார் உடைத்தால் மண் கலம்; மருமகள் உடைத்தால் பொன் கலம். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நாம் வாய் திறக்கக் கூடாது. கம்பெனியாரின் ஆட்சிக் காலம் முதல், நம் செவிக்கு இனிமையாக வாக்குறுதி தருகின்றனர். காரியத்திலோ ஒன்றும் இல்லை. நமது மனம் ஒடிகின்றது, வெடிக்கின்றது. எதிலும் இப்படித்தான். இதுவே நமது குறை. நியாயமான குறை."

அடிமைத்தனம்:—சென்னை ஜி. சுப்பிரமணிய ஐயர் பேசியது:—"வரவர நம்மைத் தள்ளிவிடுவதோடு இருக்கிறதே ஒழிய வேறில்லை. நமது உடம்பில் அடிமைத் தன்மை ஊறுகிறது. நமது தேசத்தில் நம்மை நம்புவதில்லை. உயர்ந்த உத்தியோகங்கள் கொடுப்பதில்லை என்றால், அது என்ன? அடிமைத்தனம் அல்லவா? பிரமாதமாகத் தேன் சொட்டப் பேசுகின்றனர். காரியத்திலோ கசப்புத்தான். நூறு வருஷங்கள் ஆகிவிட்டன. ஓர் அங்குலம் கூட நாம் முன்னேறவில்லை. ஆனால், வெகுதூரம் பின்னே போயிருக்கிறோம்."

பானர்ஜியும் பின்பு வாசாமகோசரமாகப் பேசினர்.

நம்மவரின் மஹஜர் :—இங்கே பிழைப்பு இல்லாததனால் ஆஸ்டிரேலியாவுக்குச் சென்ற நம்மவரோ, "எங்களால் தாங்க முடியவில்லை; நிபந்தனைகளோ பல. அவமானமும் விளைகின்றன" என்று வருந்தி, மஹஜர் ஒன்று வரைந்து, மகாசபைக்கு அனுப்பினர். ஸீரைட் என்பவர், அம்மஹ ஜரை சமர்ப்பித்தார். பர்மாவிலிருந்து வந்த முதல் பிரதிநிதியான வி. ஜி. வாசுதேவ பிள்ளை ஆதரித்துப் பேசினர்.

ஏகாதிபத்திய எடுப்பு :—'சர்வ கலாசாலைகளின்' விஷயத்தைக் குறித்து சுரேந்திர நாத பானர்ஜி பேசியது :—

"கார்ப்பொரேஷன்களின் சுதந்திரத்தை அரசாங்கம் குறைத்தது ஒரு பக்கம் இருக்க, இப்போது உயர்தரக் கல்வி பரவுவதையும் ஒடுக்கப் பார்க்கிறது. ஏகாதிபத்தியம் என்பது சிறகை விரித்து, மனித சமூகத்தின் சுதந்திரப் பிரகாசத்தை மறைக்க முயலுகின்றது. படித்த வகுப்பார் அனைவரும் ஒரு மனதாகக் கண்டித்தும், பிற்போக்கான சட்டமே செய்தார் லார்டு கர்ஸான் என்பது என்றும் அழியாமல் இருக்கும். கல்வி நிபுணர்கள் 1901-ஆம் ஆண்டில் கூடி, அரிய ஆலோசனை சொன்னர்களாம். அதன்படி சீர்திருத்தம் செய்யப்படுகிறதாம். அப்பேர்வழிகள் அந்தரங்கமாகவே கலந்துபோயினர்போலும்! பிற்போக்கான நிலையைக் கண்டு, யூனிவர்ஸிடிகளின் செனேட் சபையும் ஒப்பவில்லை; சர்வகலாசாலையை அரசாங்கத்தின் ஓர் இலாக்காவாகச் செய்து விடவே உத்தேசம்போலும்! அவ்விதம் ஆகிவிடின், ஜனங்களால் நடத்தப்படும் கலாசாலைகளும், பள்ளிக்கூடங்களும் அழிந்துபோம்; கல்வி பரவுதல் ஒடுங்கி விடும்."

பயங்கரச் சட்டம் :—அரசாங்க இரகசியங்கள் வெளியாவதைத் தடுப்பதற்காக என்று சொல்லி, அரசாங்கம் ஒரு

சட்டம் செய்தது. அதன் ஷரத்துக்களோ மோசமானவை. உதாரணமாக, அரசாங்க காரியாலயங்களிலே அனுமதி யின்றி ஒருவன் புகுந்தால், உடனே அவனை வாரண்டு இல்லா மல் யாரும் கைது செய்யலாம். விசாரணை செய்வதா, வேண் டாமா என்று ராணுவ அதிகாரிகள் தீர்மானிப்பார்கள். நெடு நாள் அவன் காவலில் கிடக்க நேரும். தவிர, இரகசியம் என்று அரசாங்கம் கருதுவதை வெளியிட்டால், பத்திராசிரி யர்களுக்கும் தண்டனை கிடைக்கும். இத்தகைய சட்டம் கூடாதென்று சட்ட சபையிலே நவாப் ஸையத் முகம்மதும், கோபாலகிருஷ்ண கோகுலரும் கண்டித்தனர். லார்டு கர்ஸான் கவனிக்கவில்லை. கோகுலர்மீது கோபமும் கொண்டார்.

பொறுமை ஏது:—அம்மசோதாவைக் குறித்து விஷ்ணு நாராயண தரர் பேசியதாவது:—“மசோதாவோ பொது நலத்துக்கு நேர்மாறானது. தனி மனிதனது சுதந்திரத்துக்கு ஆபத்து விளைவிக்கும்; பிற்போக்கும் கொண்டது. தேசம் ஒரு முகமாகக் கண்டித்துளது. ஆங்கிலேயரின் பத்திரிகை களும் கண்டித்துள. மசோதாவின் விபரீதத்தை மதிக்கை யில், பொறுமையாகவோ நிதானமாகவோ பேசுவதற்கில்லை. அரசாளும் இனத்தாரிடம் நியாயமும் நேர்மையும் இல்லை யெனவும் எண்ண நேரும். அடக்கி ஒடுக்கும் தன்மை வாய்ந் துள்ளது அம்மசோதா.”

அதோகதி:—லாலா முரளீதரர் பேசியதாவது:—“‘சத்தியமே பேசு; முழுவதும் சத்தியமே பேசு; வேறு எதுவும் பேசாதே’ என்கிறது தெய்வம். சிறிதும் சத்தியம் பேசாதே என்கிறது அரசாங்கம். நாமோ ஆண்டவன் மக் கள்; அரசின் பிரஜைகள். இருவருக்கும் அடங்கி நாம் நடக்க வேண்டும். சத்தியம் பேசு என்று தெய்வமும், சத்தியம் பேசாதே என்று அரசும் சொன்னால், எதன்படி நடப்பது என்று தெரியவில்லை. நல்லது. மசோதாவோ வாயையே

திறவாதே என்கிறது. அரசின் இரகசியத்தை அறிந்து கொள்ள நாம் முயலுவதேன்? இரகசியமாக யோசித்து, அடி கொடுக்கப் பார்த்தால், அதனைத் தடுத்துக்கொள்வதற்கே. அரசின் எண்ணத்தை அறிந்து அம்பலத்துக்குக் கொண்டு வந்தால், அவர்கள் வெட்கமடைந்து, அரசாங்கம் கவிழ்ந்து விடும் என்று அஞ்சிப் புதிய விலங்குகளைப் பூட்டப் பார்க்கின்றனர். என்ன செய்வது? இந்த மசோதா தொலையாது போனால், கதி அதோ கதிதான்."

மோசடியே:—சென்னை நகர முனிசிபல் மசோதாவைக் குறித்து, கனம் கிருஷ்ணன் நாயர் பேசியது:—"முன்னம் கார்ப்போரேஷனிலே ஜனப்பிரதிநிதிகள் 25 பேர்; நியமனப் பேர்வழிகள் 8 பேர். இப்போதோ பிரதிநிதிகளை 16 ஆகக் குறைத்து, ஐரோப்பிய சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப் பார்க்கின்றனர். இம்மாதிரி ஒரு மசோதா வந்து, கல்கத்தா முனிசிபாலிடியைக் கெடுத்துவிட்டது." எ. சி. பார்த்தசாரதி நாயுடு பேசுகையில் ஸ்தல சுய ஆட்சி சபை என்பது மோசடியே என்றார்.

ஏழைகளின் பரிவு:—சென்னை காங்கிரஸ் அறிக்கையில் காணும் விஷயம் இது:—"தேச அரசாங்கமும், ஆங்கிலேயரும் காங்கிரஸுக்கு ஆதரவாயிருப்பரென எதிர்பார்த்தோம். ஆயினும் என்ன? விரோதமும், கெட்ட எண்ணமுமே கிட்டின. அதனால் நம்மவரிலே சிலர் காங்கிரசில் வேலையை நடத்துவது கஷ்டமாகிவிட்டது. எதிரிகள் இருத்தல் ஒருவிதத்தில் நமக்கு நன்மைதான். செலவுக்குரிய பணம் சேர்த்தல் பிரயாசையாக முடிந்தது. நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் தாராளமாகப் பணம் கொடுத்து உதவினார்கள். சில்லரை சில்லரையாக ஏழை மக்கள் கொடுத்த பணமோ கொஞ்சம் அன்று.

தேச மாதா:—"வீடு வீடாகச் சென்று காங்கிரஸுக்குப் பணம் சேர்த்தோம். உள்ளன்புடன் அனைவரும் கொடுத்து உதவினர். காங்கிரசின் லட்சியத்தை மகா ஜனங்கள் ஒப்பு வதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ? அரசாங்கத்தின் மனப்பான்மை ஆச்சரியமேயாம். மகா சபையை முன்னின்று நடத்திய ஸர் மித்திரர், ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர், தேலங்கர், தயாப்ஜி, சந்திரவர்க்கர், ஸர் குருதாஸ் பானர்ஜி, சங்கரன் நாயர் முதலியவர்களுக்கு அரசாங்கம் பெரும் பதவி அளித்திருக்கையில், காங்கிரஸைக் கண்டு அவநம்பிக்கையும், அருவருப்பும் கொள்ளுவது ஏன்? தேசத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரையில் மக்கள் அனைவரும் காங்கிரஸை நோக்கியிருக்கிறார்கள் கதிமோட்சத்தை நாடி. தேச மாதா, தேச மாதா என்று எல்லோருக்கும் புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது."

31. சொல்லும் செயலும்

இருபதாவது காங்கிரஸ் பம்பாயில் கூடும் சமயம் தேசத்திலெங்கு பார்த்தாலும் முணு முணுப்பு, மனக் கசப்பு. காங்கிரஸ் அறிக்கை கூறும் வண்ணம் லார்டு கர்ஸான் நண்பராக இல்லை; எதிரியாகவே இருக்கிறார் என்று ஜனங் கள் அதிருப்தி கொண்டனர். அதிருப்தியே ஆழ்ந்த ஆத் திரமாக மாறியது. காரணம் பலவாறான அடக்குமுறைச் சட்டங்கள் ஏற்பட்டதாம். மகா ஜனங்கள் மிக உக்கிரமாக எதிர்த்தும் பலனில்லாது போயிற்று. படித்த வகுப்பாரின் ராஜீய ஆசைகளை அவர் அலட்சியம் செய்வது மட்டும் அன்று, ஒடுக்கவே செய்வர் என்றே எல்லாரும் எண்ணி விட்டனர். எனவே, இருபதாவது காங்கிரஸ் மிக்க முக்கிய

மானதாகும். 1904-ஆம் வருஷம் டிசம்பர் 26, 27, 28-ந் தேதிகளில் சபை நடந்தது.

புட்டியில் அடைப்பதா?:—ஆயிரத்துப் பத்துப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். கனம் ஸர் பிரோஸ் ஷா மேத்தா உபசரணை சபைத் தலைவர். அவர் பேசியதின் சாரம்:—"தேசம் உள்ள நிலைமையில், கேள்வி என்ன? நமது உணர்ச்சி, ஆசை, பாசம், குறைபாடு இவற்றை நாமும் ஜனங்களும் புட்டியில் போட்டு அடைத்து விடுவதா? அல்லது பட்டப் பகலில் பகிரங்கமாக எடுத்துச் சொல்வதா? ஆங்கில மகா ஜனங்களின் நியாயத்திலும் விவேகத்திலும் நேர்மையிலும் நமக்கு நம்பிக்கை உண்டு. ஆதலின் பகிரங்கமாக எடுத்துச் சொல்லவே துணிந்துள்ளோம்."

குஜராத்தி பத்திரிகையின் ஆசிரியர் தேசாய் நாலாயிரம் ரூபாய் வசூலித்து மகா சபைக்குக் கொடுத்தார். தவிர அக்கிராசனரான ஸர் ஹென்றி காட்டன் என்பவருக்கு வெள்ளிக் கோப்பை யொன்றும் சம்மானம் பண்ணினர். அக்கிராசனத்தில் அமர்ந்து, காட்டன் பேசியதின் சாரம்:—

தேசத்தின் மூளை:—"தேசத்தின் வாக்கும் மூளையும் போன்றது இம் மகா சபை. அயர்லாந்திலே உள்நாட்டுக் கிளர்ச்சி ஆதியில் அதிகமாக இருந்தது. அதனால் காரிய சித்தி ஏற்படவில்லை. எனவே இங்கிலாந்தின் ராஜ தந்திரிகளிடமும் கிளர்ச்சி செய்ய அவசியம் உண்டாயிற்று. அதன் மேல்தான் கொஞ்சம் சீர்திருத்தங்கள் கிடைத்தன. இந்தியாவும் அவ்விதம் இங்கிலாந்தில் கிளர்ச்சி செய்தாகவேண்டும். வேறுபட்ட மதமும் கொள்கையும் பழக்க வழக்கமும் வாய்ந்த ஒரு சிறிய வகுப்பார், ஜனங்களுடன் நெருங்கிப் பழகாமல், நெடுநாள் ஒரு பெரிய தேசத்தை ஆண்டுவர முடியாது. சுதேசிகளிடம் கல்வி பரவி வருவதையும் பார்த்

தால் ஒரு சிறிய வகுப்பார் நெடுக ஆட்சி நடத்துவதும் முடியாத காரியம். நீங்கள் மனமொடிய வேண்டாம்."

வாக்கும் செயலும் :—உத்தியோகங்களிலே இந்தியரின் நிலை என்பதுபற்றி பாபு சுரேந்திர நாதர் பேசியதின் சாரம் இது :—"ஜாதி மத வித்தியாசத்தைப் பாராமல், தகுதியை மதித்தே உத்தியோக நியமனங்கள் நடைபெறும் என்பது மகாராணியின் வாக்கு. லார்டு கர்ஸானது நிர்வாகப் போக்கைப் பார்த்தாலோ, ஜாதியே ஆதாரம் என்று ஏற்படுகிறது. முன்னம் தகுதியே யோக்கியதையாக இருந்தது. ஆங்கில ஆட்சியிலே உயர் பதவி வகிக்க நமக்குத் தகுதியே இல்லை என்கிறார் கர்ஸான். இம்மாதிரி எந்த ராஜப்பிரதிநிதியும் மகா ஜனங்களை முகத்தில் அடிப்பதுபோல் பேசியது கிடையாது. வாக்குறுதி ஏது என்று மறுப்பது பெருந் தப்பு. அதோடு குதிரை தூக்கிப் போட்டது மல்லாமல், குளமும் பறித்தது என்றபடி, நம்மை அவர் அவமதிப்பாகவும் பேசுகிறார். நாம் என்ன தாழ்ந்தவர்களோ? ஐரோப்பியருக்கு ஆசியாக்காரர்கள் குறைந்தவர்களோ? ஜப்பான் தேசம் சரியான பதில் சொல்லும். இந்தியர் ஐரோப்பியருக்குச் சளைக்கார். ஐரோப்பா எங்கும் அஞ்ஞானத்தில் மூழ்கி, அந்தகாரத்தில் கிடந்தபொழுது, நமது முன்னோர் உலகினுக்கே ஞான ஒளி தந்தனர். அத்தகைய பரம்பரையில் வந்த நாம் தாழ்ந்தவர்களாம்! நல்லது."

திறமை ஏது:—"ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளமுள்ள உத்தியோகங்களில் 100-க்குப் பதினொலே நமக்கு. 500-க்கு மேற்பட்ட சம்பளமுள்ள உத்தியோகங்களிலே நூற்றுக்குப் பதினேழுதான் நமக்கு. தேசம் நமது. பணம் நமது. தேசமக்களும் நாமே. ஆட்சி திறமையாக இருக்க வேண்டுமாம். ஜனங்களுக்குத் திருப்தி இல்லாமல் போனால் திறமை ஏது?"

ஒன்றரையணு:—மக்களின் ஏழ்மை நிலையைக் குறித்து முதோல்கர் பேசியதாவது :—"ஆங்கிலேயர் வருமுன்னே தேசத்தில் அராஜகமே தாண்டவம் ஆடியதாம். நல்லது. அக்காலத்திலே ஜனங்களின் வாழ்வுக்குக் கஷ்டம் இல்லை. உண்ண உணவும் உடுக்க உடையும் இருந்தன. தவிர, வெளி நாடுகளுக்கும் ஏராளமாக சரக்குகளை அனுப்பி வந்தோம். இப்போதுள்ள நிலைமை என்ன? கர்ஸானது கணக்கின்படி, மக்களின் சராசரி வருஷ வருமானம் முப்பது ரூபாயே. அதாவது, ஒரு நாளைக்கு ஒன்றரை அணு. அந்த முப்பது ரூபாயில் மூன்றரை ரூபாய் வரி கொடுத்து விடவேண்டும்."

"சாசுவத நிலத்தீர்வை அவசியம். விவசாயிகளின் கடன் சுமை ஒழியவேண்டும்; வெளிநாட்டு இந்தியரின் நிலை சீர்படவேண்டும் என்று பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. இந்திய கவர்ன்மெண்டார் கடுகடுப்பாக இருக்கின்றனர். ஆதலின், இங்கிலாந்திலே நாம் நிரந்தரமாகப் பிரசாரம் செய்யவேண்டும். ஏனெனில், அவர்களே மேலதிகாரிகள்" என்றார் பால கங்காதர திலகர். 'இந்தியா மந்திரியின் சம்பளத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று ஒரு தீர்மானம் ஏற்பட்டது. "சம்பளம் கொடுக்கும் இந்தியருக்கு அவர் ஜவாப்தாரியாக இல்லை. இது தகாது" என்றார் ஒரு பிரதிநிதி.

படையெடுப்பு :—இந்தியத் துருப்புகளை வெளியிடங்களில் போருக்கு அனுப்பக்கூடாது என்று ஒரு தீர்மானம் வந்தது. அதன் மீது என். ஏ. வாடியா பேசியதாவது :—"திபேத்தின்மீது ஒரு படையை அனுப்பி யிருப்பதேன்? அந்நாட்டு மக்கள் என்ன செய்தார்கள்? அன்னியர் வரக் கூடாதென்றே அவர்கள் போராடுகிறார்கள். அவர்களின் தேசாபிமானம் மெச்சத்தக்கது. சுதந்திர உணர்ச்சியும் இருந்தது. ஆபத்து என்பதை அவர்கள் சட்டை செய்ய

வில்லை. சாவு என்றால் தயங்குவதுமில்லை. எனவே அங்கே படையை அனுப்புதல் குறும்புத்தனம்."

ஆடுகளின்மீது சீறல்:—லாலா முரளீதரர் பேசியதின் சாரம்:—"திபேத்தின் மீது படைகள் போன காரணம் தெரியுமா? அவர்களுடைய ஆடுகள் நமது எல்லையைத் தாண்டி வந்து மேய்ந்தனவாம். ஆடுகளுக்குத் தெரியுமா வல்லமைசாலியான கர்ஸானுக்குக் கோபம் வருமென்று? நமது துருப்புகளின் திறமும் எப்படித் தெரியுமா? திபேத்து மக்களிடம் தக்க ஆயுதம் இல்லை. நம் துருப்புகளிடம் தக்க ஆயுதங்கள் உண்டு. நம் துருப்புகள் வீரம் காட்டி இங்கும் அங்கும் வாளை வீசினர். அவர்கள் ஓடவில்லை. துருப்புகளோ வெட்டி வீழ்த்தினர். திபேத்தின் தலைவருடன் சதிசெய்ய ருஷியா முயன்றதாம். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? அவர்களுடன் நேசம் கொள்ளுவது மேல் அன்றோ?"

பின்பு, வழக்கமான தீர்மானங்கள் நிறைவேறின. வங்காளப் பிரிவினை கூடாதென கனம் அம்பிகா சரண மஜூம்தார், சௌத்ரி முதலிய பலர் பேசினர். காங்கிரஸ் அமைப்பை ஒழுங்குபடுத்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

புரட்சி:—மைனராக இருந்தவன் மேஜரானால், புதிய பான்மைகொள்ள விரும்புவான். காங்கிரசுக்கும் வயது இருபது ஆகிவிட்டது. அது வரையில் தீர்மானங்கள், மனுக்கள், மஹஜர்கள், கண்டனங்கள் எல்லாம் செய்து பார்த்தது. ஒன்றும் பலிக்கவில்லை. எத்தனை நாள் பொறுப்போம் என்னும் ஏக்கம் மேலிட்டது. ஆயினும், மகா சபை அந்த ஏக்கத்தில் ஆழ்ந்துவிடவில்லை. மற்று புத்துயிர், புதிய உணர்ச்சி, தீவிர முயற்சி, திடசித்தம், விடாப்பிடி, ஆள்வினை முதலிய அருங்குணங்கள் கொள்ளலாயிற்று. அக்குணங்களைக் கண்டு அமைதி யின்மை, புரட்சி உதித்து விட்டன என்று, விரோதிகள் கூக்குரல் போட்டார்கள். இங்

நிலையில் காசிமா நகரிலே இருபத்தொன்றாவது காங்கிரஸ் மகா சபை கூடியது.

அவமதிப்பு:—அவ்வருஷ மகா சபையின் அறிக்கை கூறுவது:—"மகத்தான, ராஜீய நெருக்கடியின் இடையே காங்கிரஸ் கூடியது. முன்னம் லார்டு லிட்டனது ஆட்சிக் காலத்தில், தேசத்திலே அதிகார ஆவேசமும் இருளும் சூழ்ந்துகொண்டது உண்மைதான். அப்பால் அப்படியில்லை. எனினும், (லார்டு கர்ஸானது ஆட்சிக் காலம்) இச் சமயத்திலோ அதிருப்தி ஓங்கியது; மனக்கலக்கம் மிஞ்சியது; பலவாறான துரதிருஷ்டங்கள் நேர்ந்தன. பெரிய அதிகாரிகளும் அலட்சியப் புத்தி காட்டினர்; அவமதிப்பும் செய்தனர். மகா சபையின் மிகமிக மிதமான கோரிக்கைகள் எள்ளனஞ் செய்யப்பட்டன. நியாயமான மனுக்கள் புறக்கணிக்கப்பட்டன: பெருந்தன்மையான லட்சியங்கள் உதவாக்கரை என்று உதறித் தள்ளப்பட்டன.

சாபத்தீடு:—"லார்டு கர்ஸானது ஆட்சிக்காலம் சாபத்தீடாக முடிந்தது. தேசம் ஒரு மனமாக ஆட்சேபித்தும், வாய்ப்பூட்டுச் சட்டம் ஏற்பட்டது. கல்வி பரவுவதைச் சின்னாபின்னஞ் செய்தனர்; மாணவர்கள் அபாரமான சம்பளங் கொடுக்க நேர்ந்தது. தேசிய நலபலத்தை அடிமையாக்கும் நோக்குடன் சர்வ கலாசாலைச் சட்டம் உதித்தது. கடந்த ஐம்பது வருஷங்களாகக் கிடைத்த நன்மைகளைப் பழிக்கும் முயற்சி தலையெடுத்தது. ஸ்தல சுய ஆட்சி சபைகளில் ஜனங்களுக்கு இருந்துவந்த உரிமைகளும் பறிக்கப்பட்டன. ராஜீய இயக்கத்துக்கும் புத்துயிருக்கும் பிறப்பிடமான வங்காளத்தைத் துண்டாக்கவும் வழி தேடப்பட்டது.

32. வங்கம் திரளல்

புண்ணிய காசியில் 1905-ஆம் ஆண்டு டிசம்பர் 27, 28, 29, 30 தேதிகளில் மகா சபை நடந்தது. 758 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். முன்ஷி மாதவலால், அனைவரையும் அன்புடன் இரண்டொரு வார்த்தையில் வரவேற்றார். இந்தியாவின் ராஜீய செல்வக் குமாரனாக விளங்கிய கனம் கோபால கிருஷ்ண கோகலர், அக்கிராசனத்தில் அமர்ந்தார். அப்போது அவர் பேசியதின் முக்கிய சாரம் :-

கொந்தளிப்பு:—" காங்கிரஸ் கப்பலை நடத்திச் செல்லும் பொறுப்பு என் மீது சுமந்துளது. கடலிலே பாறைகள் அதிகம். கொந்தளிப்பும் மிகுதி. ஆண்டவன்தான் துணை நிற்கவேண்டும். புதிய ராஜப்பிரதிநிதி லார்டு மிண்டோவுக்கு நல்வரவு கூறுவேன். எதற்கும் ஒரு முடிவு உண்டல்லவா ? லார்டு கர்ஸானது ஆட்சியும் முடிந்துவிட்டது. ஏழு வருஷ காலமாக அனைவரும் கர்ஸான், கர்ஸான் என்றே நோக்கி நின்றனர். ஒரு சமயம் புகழ்ச்சி, ஒரு சமயம் பிரமிப்பு ; பல சமயங்களிலும் கோபம், துக்கம். அத்தகைய ஆட்சி அவுரங்கஸீபின் காலத்தில்தான் இருந்திருக்கலாம். கர்ஸானை வானளாவப் புகழ்வோரும் சரி, ஆங்கில ஆட்சியின் அடிப்படையை கர்ஸான் பலப்படுத்தினார் என்று சொல்ல முடியாது. எப்போதும் ஆங்கிலேயருக்கு ஏகபோகமாக இந்தியா விளங்கவேண்டும் என்பதே கர்ஸானின் கருத்து.

கடலில் மூழ்கவா ?:—" அடங்கி ஒடுங்கிக் கிடக்கவே இந்தியர் இஷ்டப்பட வேண்டும் ; ராஜீய ஆசை கொள்ளுதல் தெய்வத் துரோகம். இதுவே அவர் எண்ணம். படித்த வகுப்பாரைப்பற்றி அவருக்குச் சிந்தனை கிடையாது. சாரமற்ற ஒன்றைக் காட்டி அவர்களைக் களிப்பிக்கப் பார்த்தார். காரியம் பலிக்கவில்லை. முடிவில் அவர்களை அடக்கி மடக்கி

விட முயன்றார். ஊருக்குப் போகும் சமயத்திலும் அவர் என்ன சொன்னார்? ஆங்கிலேயர் ஆண்டு அனுபவிக்கவே இந்தியா இருக்கிறதாம். பாமர மக்களைப்பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. படித்த வகுப்பாரோ கடலில் முழுகிப் போய்விடுவதே மேலாம். வங்காளப் பிரிவினை மகா கொடுமையான குற்றம். வங்கமாகாணம் கொதிப்புக்கொண்டு நிற்கிறது.

ஆடு மாடுகளா?:—"இந்தியர் அனைவரையும் ஆடு மாடுகள் போல் நடத்துவது என்றால் அதிகார வர்க்கத்துடன் ஒத்துழைப்பது முடியாத காரியம். ஆட்சிக்கு வேறு மாசு, குற்றச்சாட்டு வேண்டுமோ? வங்கத்தில் தோன்றியிருக்கும் பிரமாதமான எழுச்சி, ராஜீய முன்னேற்றத்தில் மைல்கள் போலாகும். ஜாதி மத வகுப்பு பேதம் இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து, பொதுவான தீமையை எதிர்க்க நிற்கின்றனர். இன்றளவும் இத்தகைய காட்சி கிடையாது. உண்மையான உயரிய விழிப்பு வங்கம் எங்கும் ஓங்கிப் பரவியுளது. வங்கத்தின் வீரங் கண்டு இந்தியா வியக்கிறது. வெள்ளம் புரண்டு வருமானால், இங்கு மங்கும் கரையிலே சிறு சிறு உடைப்புகள் நேரும். இந்தியா அனைத்தும் வங்கத்தை வாழ்த்தவேண்டும்.

தேச மாதா!:—"சுதேசியம் என்பது தேச மாதாவினிடம் மிகுந்த பக்தி கொள்வதாம். அப் பக்தி முதிர முதிர, பரவசம் பிறக்கும். நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்; அனைவரும் தம்மை மறந்து தியாகத்தில் இறங்குவர். இத்தகைய பக்தியே இந்தியாவுக்கு இச்சமயம் மிகமிக அவசியம். தோட்டி தொண்டைமான், கிழவன் குழந்தை, ஆண் பெண், மேலோர் கீழோர் ஆகிய அனைவருக்கும் அப்பக்தி புகட்டப்படவேண்டும். புகட்டினால் தேச மாதாவுக்கு கைங்கரியம் செய்வதில் தம்மை மறந்து இறங்கி முயல்வர்.

மகத்தான தீமை:—“ஆங்கில ஆட்சி ஏற்பட்டு ஒரு நூறு வருஷம் ஆகிறது. ஆகியும் என்ன? இந்தியாவின் நலத்தைக் குறித்தே இந்தியா ஆளப்படவில்லை. அரசியலில் நமக்கு செல்வாக்கு இல்லாமல் போனால் நாம் என்ன செய்வது? இத் தேசத்திலே நம்மீது ஆங்கிலேயர் ஆதிக்கம் வகிப்பதனால் ஆயிரம் விதத்தில் நமக்கு மகத்தான தீமை நேர்கிறது. தக்க திறமையுள்ள மனிதரும் பெரும் பதவி வகிக்க முடியாததால் அவர்களுடைய மதிவன்மை தேசத்திற்குப் பயன் படுவதில்லை. இது ஒருபுறம் இருக்க, தேசமோ வர வர பயங்கரமான தரித்திரத்திற்கு ஆளாகி வருகின்றது. இங்கே உத்தியோகம் பார்த்து பணத்தைச் சேர்த்துக் கொண்டு ஊருக்குப் போய்விடும் பேர்வழிகளே நம்மை ஆண்டு வருகிறார்கள்.

நூறு கோடி பவுன்:—“பல வருஷ காலமாக, இவ்விதம் ஏராளமான செல்வம் கப்பலேறிப் போய்விடுகிறது. சென்ற 40 வருஷ காலத்திலே 100 கோடி பவுன் போய்விட்டது. மரண விகிதம் ஏறி வருகிறது. இந்தியாவின் நலத்தையும், இங்கிலாந்தின் கண்ணியத்தையும் மதிப்பதானால் ஆங்கிலேயரும் இந்தியரும் சரி நிகர் சமானமாக இருத்தல் வேண்டும். அதிகார வர்க்கத்தாரோ மேன்மேலும் சுயநலத்தையே கொண்டு, தேசிய ஆசாபாசங்களுக்கு பகிரங்கமான விரோதிகளாய் இருக்கிறார்கள். முன்பு இப்படி இருக்கவில்லை.”

வங்கத்தின் வீரம்:—நிறைவேறிய தீர்மானங்களில் இரண்டு முக்கியமானவை. அவற்றில் ஒன்று வங்காளப் பிரிவினையைப் பற்றியது. பாபு சுரேந்திர நாத பானர்ஜி அதன் மீது வெகு உருக்கமாக, ஆத்திரமாக ஒன்றையும் ஒளிக்காமல் பேசினார். அவர் பேசியதின் சாரம்:—“வங்காளத்திலே சந்தைப்பேட்டை, தெரு வீதி, மூலை முடுக்கு, அடுப்பங்கரை ஆகிய எந்த இடத்திலும் வங்காளப் பிரி

வினையா, வங்காளப் பிரிவினையா என்பதே பேச்சு. வங்காளத்தை இரண்டாக்கி, மக்களைப் பிரித்து வைத்து, மகாஜன ஒற்றுமையை முறித்து விடலாம் என்று லார்ட் கர்ஸான் நினைத்தார். ஆனால் முன்னிலும் அதிகமாக வங்காளிகள் ஒருமனம் கொண்டுளர். சோதர சிந்தை ஓங்கி உளது. வெகு ஜனவாக்கும் வானை எட்டி உளது. இயற்கையாகவே இணைந் திருப்போரை யாவர் பிரிக்க முடியும்? இயற்கைச் சக்திக்கு முன்னே அரசின் சக்தி எம்மாத்திரம்? எவ்வளவோ மனுச் செய்து பார்த்தோம், பலன் இல்லை. 'பகிஷ்கார'த்தில் இறங்கியுள்ளோம். சாத்வீக எதிர்ப்பையும் கைக்கொள்வோம். நம்முடைய ராஜீய வாழ்வில் இது ஒரு புதிய முறை அல்லவா?

வந்தே மாதரம் :-"அடக்கு முறைகள் கொண்டு ஒடுக்கி விடப் பார்க்கின்றனர். பொதுக் கூட்டம் நடக்கக் கூடாதாம். ஈட்டியும் துப்பாக்கியும் கொண்டு காவல் புரிகின்றனர். பஜனை கோஷ்டியும் கூடாதாம். வந்தே மாதரம் என்று வாழ்த்தக் கூடாதாம். கூர்க்க சோல்ஜர்கள் இங்கும் அங்கும் உலாவுகின்றனர். சில நகரங்களில் பயங்கரம் தாண்டவமாடுகின்றது. பள்ளிக்கூடப் பையன்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். வங்கம், வீரவங்கம், தலை சாயாது."

பகிஷ்கார ஆயுதம் :—வங்காளத்தில் அடக்கு முறை கையாளப்படுவது பற்றி பண்டித மதன மோகன மாளவியா பேசியதின் சாரம் :—"பகிஷ்காரம் என்பது வங்கத்துக்கு மட்டுந்தான். மனுக்களும், மகஜர்களும் பயன் படாததால் பகிஷ்காரத்தை ஏற்க நேர்ந்தது. பகிஷ்காரம் வேறு, சுதேசியம் வேறு. சுதேசியம் என்பது 30 வருஷமாக உள்ள உயர்ந்த கொள்கை. வங்காளப் பிரிவினை பிரமாதமான விஷம வேலை. ஆதலின் அப்பிரிவினையை அரசாங்கம் ரத்து செய்யுமாக. ரத்து செய்தால் பகிஷ்காரம் என்பது நாளையே நின்றுவிடும்."

லஜபதியின் கர்ஜனை:—பூனா சம்பவங்களை மக்கள் மறக்கவில்லை. பால கங்காதர திலகரைக் கண்டதும், சபையோர் ஆரவாரம் செய்தனர். "வங்க வீரர்களே! ஆண்மைத்தனமான தீர்மானம் செய்திருக்கிறீர்கள். இனிமேல் பின்வாங்காதீர்கள். கோழைகளாக நடவாதீர்கள். சுதந்திர தேவி சாமானியமானவள் அல்லள். இணையிலா வீரமும் விழுமிய தியாகமும் கண்டால்தான் அவள் கருணை கொள்வாள். பரிசுத்த புருஷர்களாக இருந்தால்தான் அவளுடைய ஆலயத்தில் நுழையலாம். அவளுடைய கோயிலில் புக இது வரையில் நாம் தகுதி கொள்ளவில்லை. அதை நினைக்க வெட்கம் அடைகிறேன். சூரியோதயம் தோன்றுகிறது. வங்க மக்களிடமிருந்து இந்திய மக்கள் பாடம் கொள்ளவேண்டும். 5 லக்ஷம் சோல்ஜர்கள் கொண்ட அரசாங்கம் நம்முடைய குழந்தைகளை அடிக்கப் பார்க்கின்றது. மகா வல்லமையுள்ள அரசாங்கம் குழந்தைகளுடன் சண்டை செய்வது? உரக்கப் பேசிப் பயனில்லை. ஆத்திரம் காட்டியும் பயனில்லை. ஆனால் நாமோ சத்திய சந்தராய், தேச மாதாவின் உண்மைப் புதல்வராய், ராஜீய கதி மோட்சத்தில் கருத்து உடையவராய் விளங்குதல் வேண்டும்." இவ்விதம் லஜபதிராய் பேசினார்.

படிப்புக்குமா பாடு?:-கல்வி பரவுதலைத் தடுக்கக்கூடாது என்ற தீர்மானத்தின்மேல் ஹேரம்ப சந்திர மித்திரர் பேசியதின் சாரம் இது:—"ஒரு சிலர், மிகச் சிலர் நல்ல படிப்பாளிகளாக இருந்தால் போதும் என்று யூனிவர்சிடி கமிஷன் சொல்லுகிறது. நல்லது. ஒரு சிலர் மட்டும் திகட்டத் திகட்டத் தின்று கொழுக்க, லக்ஷோப லக்ஷம் பேர் பசியால் வாடுவதோ? எல்லோருக்கும் சாப்பாடு கிடைக்கப் பார்ப்பது நன்மை அல்லவா? ஒரு சிலர் மட்டும் தேசத்திலே பயில்வான்களாக விளங்க, மற்றையோர் எலும்பும் தோலுமாக இருப்பதா? ஒரு சிலர் துறவிகளாக இருக்க, மற்றை

யோர் கொலைகாரராக இருப்பதா ? இனி, தென் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா இந்த இடங்களில் நம்மை வரக்கூடாது என்றார்கள். கல்வியைக் கற்பதிலுமா தடைவேண்டும் ? கலைமகளின் அருளைப் பெறுவதிலுமா தடங்கல் செய்வது ? கலைஞானமே, அறிவு வளர்ச்சியே, எதற்கும் மூலாதாரம். இதையும் இங்கிலாந்து மறுக்குமேயானால் கொடிய குற்றத்திற்கு அது ஆளாக வேண்டும்.'' "யதேச்சாதிகார புருஷர் தேசத்தை அடித்துச் சாப்பிட அவர்களுக்கு ஏவலாளாக இருக்கக் கூடியவர்களை உண்டுபண்ணுவதுதான் கல்வியின் நோக்கமோ ?'' என்றார் டி. ஜி. பாண்டியர்.

வழக்கம் போல் பல தீர்மானங்கள் நிறைவேறின. அக்கிராசனருக்கு வந்தனோபசாரம் செலுத்தினர் பண்டித மாளவியா. மறுவருஷம் கல்கத்தாவில் கூடுவதென்று தீர்மானித்து மகாசபை கலைந்தது.

---

33. கர்ஸான் கோலம்

புலியின் வாலை முறுக்கிவிட்டால் என்ன ஆகும்? வங்காள வேங்கையின் வாலை முறுக்கி விட்டார் லார்டு கர்ஸான். விழித்தெழுந்து நின்ற அவ்வேங்கை உறுமத் தலைப்பட்டது ; தனது இனத்தாரையும் கூவி அழைத்தது. பலாபலனை எதிர்பாராமல் வங்காளப் பிரிவினையில் இறங்கினர் அந்த ராஜப்பிரதிநிதி.

வங்கம் வெகுண்டெழும் என்பதை அவர் அறியவில்லை. வெகுண்டெழுந்த பின்பும், அதன் விடாப் பிடியை அவர் மதிக்கவில்லை ; எல்லாம் ஆரம்ப சூரத்தனமாகவே முடிந்துவிடும் என்று இலேசாக எண்ணிவிட்டார்! வங்கத்தில் எழுந்த வீரக் கிளர்ச்சி காட்டுத் தீபோல் தேசமெங்கும்

பரவிற்று; காங்கிரஸ் மகா சபையையும் தாக்கியது. ஆதலின் வங்காளப் பிரிவினையின் விருத்தாந்தத்தை இங்கே சுருங்கச் சொல்லுதல் அவசியம்.

கிலி பிடித்தல் :—இந்தியா தேசம் வசமான பின்பே, இங்கிலாந்தின் தொழில்கள் பெருகின; வியாபாரம் வளர்ந்து செல்வம் குவிந்து, ஆங்லேயருக்கும் வாழ்வு கிட்டியது. இங்கிலாந்து என்பதாக எல்லாரும் ஏத்திப் புகழ்ந்தனர். பிரிட்டிஷ் மகுடத்தின் மாமணி இந்தியாவே என்று எண்ணி, இங்கிலாந்தும் இறுமாப்புக் கொண்டது. செல்வப் பெருக்கினுல் சிறப்பு ஓங்குவது ஒருபுறம் இருக்கட்டும். சிந்தனையும் பிறக்குமல்லவா ! புலி அடித்தது பாதி, கிலி அடித்தது பாதி என்பர். கிலியே பெரிதும் பிடித்தாட்டியது. மகுடத்தின் மாமணியை ருஷியா பிடித்துக்கொள்ளுமோ என்று இங்கிலாந்துக்குக் கவலை உதித்தது.

திபேத்தில் சதி :—ஆதலின்தான், வடமேற்கு எல்லைப் புறத்தில் துருப்புகளைக் குவித்து வைக்கவும், போக்கு வரவு சாதனங்களை ஒழுங்கு படுத்தவும், எல்லைப்புற மக்களுடன் மல்லுக்கு நிற்கவும், ஆப்கானிஸ்தானத்துடன் அரும் போர் விளைவிக்கவும் ஆதிமுதல் ஆங்கில அரசாங்கம் முயலா நின்றது. ருஷியா படையெடுத்து வருவதாக இருந்தால், வடமேற்கெல்லை வழியாகவே வருதல் வேண்டும். இந்தியாவுக்கு வடக்கேயுள்ள திபேத் தேசத்துடன், ருஷியா சதி செய்வதாகத் தோன்றியது. அதுபற்றியே லார்டு கர்ஸான் ஒரு படை வகுப்பை அத் திபேத்தின்மீது அனுப்பலானுர். வடகிழக்கு எல்லைப்புறத்திலும் தக்க காவல் இருத்தல் வேண்டுமென்பது அவர் கருத்து. வங்காள மாகாணத்தில் பீஹார், பீரார், அஸ்ஸாமின் சில பாகங்கள் முதலியன அப்போது அடங்கியிருந்தன.

தாயகம் அடங்க :—இனி, தேசிய உணர்ச்சி ஓங்குவதற்கு வங்கமே தாயகம். தாயகமான அவ்விடத்தை அடக்கி மடக்க வேண்டுமென்பதும் ஆவல். எனவே கல்கத்தா கார்ப்பொரேஷனை ஒடுக்குதல், உயர்தரக் கல்வியைக் குறுக்குதல் முதலிய பல காரியங்கள் நடந்தன. அத்துடன், மதத்தால் வேறுபட்டிருப்பினும், பாஷையால் ஒன்றாகவேயுள்ள வங்கவாசிகளைப் பிரித்து வைக்க வங்காளப் பிரிவினையே ஏற்றதெனத் தோன்றியது. முகம்மதியர் வசிக்கும் பாகம் தனி, ஹிந்துக்கள் வசிக்கும் பாகம் தனி என்பதுபோல், கிழக்கு வங்காளம் என்றும், மேற்கு வங்காளம் என்றும் இரண்டு துண்டாக்குவதாக 1903-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் தேதி ஓர் உத்தரவு பிறந்தது.

மன வெழுச்சி :—திடீரென்று உத்தரவு பிறக்கவே வங்காளிகள் பிரமித்தார்கள். ஆனால் மங்கி மனமொடிந்து விடவில்லை. மாகாணமெங்கும் மக்கள் மன எழுச்சி கொண்டனர்; கிளர்ச்சியில் முனைந்தனர். ஏழை பணக்காரன், உழவன் அரசன், படித்தவன் படிக்காதவன், ஹிந்து முகம்மதியன், இளைஞன் கிழவன் என்னும் வித்தியாசம் இல்லாமல் எல்லாரையும் அக்கிளர்ச்சி கவர்ந்தது. 'தலைமுறை தலைமுறையாக ஒன்றாயிருந்த மாகாணத்தைத் துண்டாக்குவதா? எல்லோரும் ஓரினம் எனும் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவதா?' என்று ஆவேசம் பிறந்தது. மக்கள் ஆங்காங்கே கூட்டங்கள் கூடினர்; உத்தரவைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்தனர். மனுக்களும் மகஜர்களும் தயாரித்தனர். ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரம், பதினாயிரம், ஐம்பதாயிரமாகவே ஜனங்கள் கூடியிருந்தார்கள். 1903 டிசம்பர் முதல், 1905 அக்டோபர் வரையில், வங்காளத்திலே இரண்டாயிரம் பொதுக்கூட்டங்கள் நடந்தன. மனவெழுச்சிக்கு ஒரு கங்கு கரை இல்லை.

பழி சுமத்தல் :—உணர்ச்சி ஓங்கி, கிளர்ச்சி வலுத்து, ஆவேசம் மிஞ்சுவதைக் கண்டு, கலங்கா நெஞ்சம் படைத்த கர்ஸானும் கலங்கலானார். சும்மா இருத்தலாகாது என்று தாமே பல இடங்களில் பிரசாரஞ் செய்யவும் முயன்றார். 1905-ஆம் ஆண்டு பிப்ரவரியில் கல்கத்தா யூனிவர்ஸிடியின் பட்டமளிப்பு விழா நடந்தது. அப்போது, "தூசி நிரம்பிய வயல்களான கல்வியைப்பற்றிப் பேசப்போவதில்லை. ஆனால், மேனாட்டாருக்கும், கீழ் நாட்டாருக்கும் சன்மார்க்கத்தில் வேற்றுமை உண்டு. கீழ் நாட்டினருக்கு சன்மார்க்கம் போதாது; சத்தியமென்பது கம்மியே," என்று அவமதிப்பாகப் பேசலானார். குதிரை தூக்கிப் போட்டது மல்லாமல், குழியும் பறித்தது என்பது பழமொழி.

யார் பொய்யர்?:—தன் முதுகு தனக்குத் தெரியாது என்பர். அதுபோல் கீழ் நாட்டினர் அனைவரையும் லார்ட் கர்ஸான் பொய்யர் என்று இழித்துப் பேசினார். கல்கத்தாவில் பிரசுரமாகும் 'அமிருத பஜார்' பத்திரிகை சும்மா இருக்கவில்லை. கீழ் நாடுகளில் முன்பு அவர் பிரயாணம் செய்த பொழுது, தமது வயதைப் பொய்யாக உயர்த்திச் சொன்னதை அப்பத்திரிகை கண்டு பிடித்து, "பொய்யர் யார்? கீழ் நாட்டினரா? மேல் நாட்டினரா? லார்ட் கர்ஸான் பதில் சொல்லவேண்டும்," என்று விசேஷ அநுபந்தம் ஒன்று வெளியிட்டது. அதில் இலட்சக்கணக்கான பிரதிகள் செலவாயின. வங்கம் அனைத்தும் துள்ளி எழுந்தது.

முதல் தடவை :—அதன்மேல் 1905-ஆம் ஆண்டு மார்ச் 11-ந் தேதி கல்கத்தாவிலே பிரமாண்டமான மகாநாடு நடந்தது. லார்ட் கர்ஸானைக் கண்டித்துப் பேசப் பதினாயிரக் கணக்கில் ஜனங்கள் கூடினார்கள். வக்கீல் தொழிலில் பணத்தை மலைபோல் திரட்டி வந்து, வேறு ஒன்றிலும் கவலை கொள்ளாத டாக்டர் ராஷ் விகாரி கோஷ் என்பார்

அக்கிராசனம் வகித்தார். லார்ட் கர்ஸானுடைய ஆட்சியின் போக்கை ஆதி முதல் ஆராய்ந்து அவரது துடுக்குப்பேச்சை யும் குறிப்பிட்டு, கண்டனத் தீர்மானங்கள் செய்து, வங்காளி கள் ஆரவாரம் செய்தார்கள். ராஜப்பிரதிநிதியான ஒரு வரை ஜனங்கள் ஒரு முகமாகத் திரண்டு கண்டித்தது அதுவே முதல் தடவை.

பிரித்தாள :—அது கண்டு கர்ஸான் சகிக்கவில்லை. அவரும் எட்டிக்குப் போட்டியாக கிழக்கு வங்காளத்திலே கூட்டங்கள் போட்டுப் பேசலானார். ஜனங்களின் புத்து யிரைக் குலைக்க வேண்டும் என்று அவருக்கு ஆத்திரம் மிகுந்தது. கிழக்கு வங்காளத்திலே முகம்மதியரைக் கூட் டங்கள் போடச்சொன்னார். அவற்றில் பிரசன்னமாகி, "வங்காளப் பிரிவினையின் ஒரு கருத்து என்னவென்றால். முகம்மதியரே அடங்கிய மாகாணம் ஒன்று காணவேண்டும் என்பதாம். அம்மாகாணத்தில் இஸ்லாம் எடுப்பாக ஓங்கும். இஸ்லாமியரின் செல்வாக்கு பரவும்," என்று தட்டிக் கொடுத்து, முகம்மதியரைப் பிரிக்கப் பார்த்தார்.

தாளம் போடல் :—அதற்கு முன்னம் ஹிந்துக்களுடன் ஒருமை கொண்டு நின்ற முகம்மதியரில் சிலர் அப்பசப்பு வார்த்தையில் ஈடுபட்டனர். டாக்கா நவாப் வம்சத்தைச் சேர்ந்த ஸலிமுல்லா என்பவர் உடனே தேச நலத்தை மறந்தார். வகுப்பு நலம் கைகூடிவிட்டது என்று எண்ணி னார். ஒரு சிலரைக் கூட்டிக்கொண்டு லார்ட் கர்ஸானைத் தாங்கிப் பேசினார். வங்காளப் பிரிவினை சரிதான் என்றார். அந்த நவாப் ஸலிமுல்லாவுடன் ஒத்து தாளம் போட்ட முகம்மதியர் ஒரு சிலரே. ஆயினும் வெகு பலர் என்று ஆங்கிலேயரின் பத்திரிகைகள் எழுதிவந்தன.

கூடாது கூடாது :—அந்த நவாப் ஸலிமுல்லாவின் சகோதரரான அதிகுல்லா என்பார் சொன்னது இது :—

"வங்காளப் பிரிவினைக்கு கிழக்கு வங்காள முகம்மதியர் சாதகமாக உளர் என்பது சரியன்று. உண்மை என்னவென்றால், முகம்மதியப் பிரமுகரில் சிலர் தங்கள் சுய நலத்தையே மதித்து அரசாங்கத்துக்குச் சாதகமாகப் பேசி வருகின்றனர்." கல்கத்தா மத்திய முகம்மதிய சங்கம் சொல்லியது இது :—"வங்க பாஷை பேசும் மக்களை அதி அவசியம் இருந்தால் அல்லாமல் பிரித்து வைக்கக் கூடாது. இப்பொழுது அவ்விதம் பிரித்து வைக்க அவசியமே இல்லை."

செங்கோல் :—வங்காளப் பிரிவினை கூடவே கூடாது என்னும் கிளர்ச்சியோ வலுத்துக் கொண்டே வந்தது. இந்தியா மந்திரிக்கும் மகஜர் மேல் மகஜர் போயிற்று. கிழக்கு வங்காளத்திலிருந்து 70 ஆயிரம் மக்கள் கையெழுத்திட்டு ஒரு மகஜர் அனுப்பினர். அரசாங்கமோ எதற்கும் வாய் திறக்கவேயில்லை. ஜனங்களின் கண்டனம், தீர்மானம், மகஜர் இவற்றிற்கு பதிலே கூறவில்லை. திடீரென்று 1905 அக்டோபர் 16-ந் தேதி செங்கோல் ஒன்று பிறந்தது. வங்காளப் பிரிவினையை இந்தியா மந்திரி அங்கீகரித்து விட்டார் என்பதேயாம்.

சரியான மாற்று :—முயற்சியும், கிளர்ச்சியும் பலிக்கவில்லையே என்ன செய்வோம் என்று வங்காளிகள் ஏங்கவில்லை. மற்று, தைரியம் கொண்டு முன்னையிலும் மும்முறமாக முனையலாயினர். சுதேசத் தொழில்களைக் காக்கவேண்டுமென்னுமுணர்ச்சி நெடுநாளாகவே உண்டு. அத்துடன் ஆங்கில சாமான்களை அடியோடு பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் ஆவேசம் தோன்றியது. பிரசித்திபெற்ற கிருஷ்ண குமார மித்திரர் என்பார் பகிஷ்காரமே பரம ஆயுதம் என்று தமது 'சஞ்சீவினி' என்னும் பத்திரிகையில் எழுதினர். வங்கத் தலைவர்களில் பன்னிருவர் 'இந்திய சங்க'த்தில் கூடி

வங்காளப் பிரிவினைக்கு மாற்றாக பகிஷ்காரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

தேசீய விரதம் :—கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் இரண்டிற்கும் மத்தியிலே ஓரிடத்தில் பிரம்மாண்டமான, என்றும் நடைபெற்றிராத கூட்டம் ஒன்று நடைபெற்றது. பதினாயிரக் கணக்கில் வங்காளிகள் கூடினார்கள். ஆண், பெண், குழந்தை, குட்டி அடங்கலும் சுதேச சாமானையே கையாளுவதாக விரதம் பூண வேண்டும். ஆங்கில சாமான்களை அடியோடு பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டார்கள். அக்டோபர் 16-ந் தேதி வங்காளச் சரித்திரத்திலே குறிப்பிடத் தக்க சம்பவம் நேர்ந்தது. அன்றைய தினம் ஒருவர் தவறாமல் அனைவரும் அதிகாலையில் எழுந்து காலில் பாதரட்சை இல்லாமலும், உடம்பில் சட்டை இல்லாமலும் துக்க கோலம் பூண்டு, நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும், பதினாயிரக் கணக்கிலும் ஊர்வலமாகப் புறப்பட்டு, மந்திரங்கள் ஓதிக்கொண்டும், சுலோகங்கள் சொல்லிக் கொண்டும், தேசீயப் பாடல்கள் பாடிக் கொண்டும் தங்கள் தங்கள் வாசஸ்தலத்துக்கு அருகேயுள்ள குளமோ, குட்டையோ, ஆறோ, நதியோ சென்று நீராடி, நித்திய கடனை முடித்து, "வங்காளிகள் அனைவரும் ஒருவரே. எல்லாரும் சோதரர்கள். எந்த சக்தியும் நம்மைப் பிரிக்க முடியாது. ஆண்டவனும் தேச மாதாவும் சாட்சி. ஒற்றுமையே உயர்வளிக்கும். வங்காளப் பிரிவினை அமுலில் இருக்கும்வரையில் ஆங்கில சாமான்களைக் கையால் தொடுவதும் இல்லை," என்று ஒருவர் கையில் ஒருவர் ரக்ஷாபந்தனம் கட்டிக்கொண்டார்கள்.

கீத கோஷம்:—வந்தே மாதர கோஷம் செய்துகொண்டு துக்க கோலத்துடன் ஊர்வலமாக வீடு திரும்பினார்கள்.

அன்று முழுவதும் பட்டினி கிடந்தார்கள். எல்லாக் கடைகளும் மூடப்பட்டன. வர்த்தகம், வியாபாரம் ஒன்றும் நடத்தவில்லை. ஜன நடமாட்டமும், வியாபாரமும் இல்லாமல் போகவே, இறந்து கிடந்த பட்டணங்களாகவே எல்லாம் காணப்பட்டன. ஸ்திரீகளும், குழந்தைகளும் அதில் கலந்து கொண்டு உண்ணு நோன்புகொண்டனர். இப்படி மாகாணமெங்கும் ஒரே கொந்தளிப்பு இருப்பதை அறிந்து, ஏதேனும் கலகம் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி ஆங்காங்கே போலீஸும் பட்டாளமும் தயாராக இருந்தன. ஆனால், ஜனத் தலைவர்களோ சாத்வீகமான முறையையே மேற்கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி யிருந்தார்கள். அதனால், ஓர் இடத்தில் கூட விபரீதம் நேராமல் எங்கும் அமைதியே நின்று நிலவியது.

ஏன் வந்தார்?:—மகா ஜனங்களின் மன நிலை கண்டு அதிகாரிகளும், ஆங்கிலேயரும் அவர்களின் பத்திரிகைகளும் உள்ளூர உதைப்புக்கொண்டன. அவர்களின் பத்திரிகைகளில் சிலவோ கர்ஸானைக் கண்டித்து எழுதின. "கர்ஸான் ஏன் வந்தார்? ராஜப்பிரதிநிதியாக வராதிருந்திருந்தால் நலமாக இருந்திருக்கும்" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதியது. "தலைக்குமேலே ஆபத்து அதிகம்" என்று எழுதியது 'இங்கிலிஷ்மன்' எனும் பத்திரிகை. "ராஜீய அதிருப்தி ஓங்கி வளருவதற்கு வேறு வினை வேண்டாம்" என்று 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகை வருந்தியது. "இந்தியாவோ தற்சமயம் பணமுடையால் சிரமப்படுகிறது. வங்காளத்தைத் துண்டாக்கிப் புதிய மாகாணம் ஒன்று சிருஷ்டிப்பதில் 30 லட்சம் பவுன் அதிகச் செலவு ஏற்படும். வங்காளப் பிரிவினையை ரத்து செய்தால் எல்லாருக்கும் நன்மையுண்டு" என்று லண்டன் 'டெய்லி நியூஸ்' எனப்படும் பத்திரிகை எழுதியது.

தீக்கு இரை :—பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றபடி வங்காளத்தை இரண்டாக்கினர். கிழக்கு வங்காளத்துக்குத் தனியே ஒரு கவர்னர் ஏற்பட்டார். அவர் பெயர் ஸர் பி. புல்லர். மக்களின் மனவெழுச்சியைச் சாந்தம் செய்ய வகை தேடவில்லை. தண்டோபாயத்தில் இறங்கினர். தண்டோபாயம் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் மனவெழுச்சியும் விடாப் பிடியும் பெருகின. சுதேசிய விரதம் எங்கும் பரவியது. பிறதேச ஆடைகள் மலைபோல் குவிந்து தீக்கு இரையாயின. அந்நியத் துணி, சர்க்கரை, உப்பு முதலிய சாமான்கள் கப்பலில் வந்தால் அவற்றை இறக்கக் கூலியாட்கள் கிடைக்கவில்லை.

ஜாதிக் கட்டு :—அன்னிய உப்பு ஒரு கப்பலில் வந்தது. நாலைந்து நாள் கப்பல் காத்து நின்றும் கூலியாள் அகப்படவில்லை. டிப்டி கலெக்டர் விரைந்து வந்தார். கூலி மேஸ்திரியைக் கூப்பிட்டுக் கேட்டார். "ஐயா, நான் என்ன செய்வேன் ? வேலை செய்ய மறுக்கிறார்கள்," என்றான் மேஸ்திரி. "நீதான் தூண்டியிருப்பாய்" என்று அதட்டினர். "நல்லது, நீங்களே கூப்பிட்டுக் கேளுங்கள்," என்றான் மேஸ்திரி. சரி என்று அவர் கூப்பிட்டார். "ஏன் வேலை செய்ய மறுக்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஐயா! அந்நிய உப்பைத் தொடக்கூடாது என்று உத்தரவு" என்றனர் கூலிகள். "யாருடைய உத்தரவு?" என்று வினவினர் அந்த அதிகாரி. "குலத் தலைவன் கட்டளை ; புரோகிதரின் கட்டளை. அந்நிய சாமானைத் தொட்டால் ஜாதிப் பிரஷ்டம் வந்துவிடும்" என்று கூலிகள் எல்லாரும் உரைத்தனர்.

உயிருக்கு உலை :—'உருவாகும் ஜன சமூகம்' என்று பாபு சுரேந்திர நாத பானர்ஜி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் பானர்ஜி சொல்லியுள்ள விஷயம் இது :—"ஒருநாள் இரண்டு வாலிபர் என் வீட்டுக்கு வந்தனர். 'அந்தரங்க

மாகப் பேச வேண்டும், கதவைச் சாத்தி விடுதல் நலம்' என்று சொல்லினர். 'என்ன விஷயம்?' என்றேன். 'இன்று இரவு ஸர் பி. புல்லரைச் சுடப்போகிறோம். எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டோம்' என்றார்கள். 'ஏன் சுடவேண்டும்?' என்றேன். 'பவானிபுரத்தில் உள்ள கூர்க்க ஸோல்ஜர்களோ எங்கள் மாதரில் சிலரைக் கற்பழித்து வரு கின்றனர். ஆதலின், பழிவாங்கவேண்டும்,' என்றார்கள். 'உங்களைப் பிடித்துத் தூக்கில் போட்டுவிடுவர்' என்றேன். 'பார்க்கிறோம். அவசியமானால் உயிரை விடுகிறோம்' என்றனர்.'' இத்தகைய கொதிப்பு வங்க இளைஞருக்குள்ளே தோன்றிவிட்டது.

அனர்த்தம் :—கோபால கிருஷ்ண கோகுலர் சொல்லிய வண்ணம், பெரு வெள்ளம் புரண்டு வருமானால், இங்கும் அங்கும் கரையிலே சில உடைப்புகள் ஏற்படும் என்பது உண்மைதான். ஆயினும் வெள்ளமே வேறு வழியாகத் திரும்பிவிடுதல் அனர்த்தம் அல்லவா? தலைவர்கள் மிக ஜாக் கிரதையாக இருந்தார்கள். வரம்பு மீறக்கூடாதென வற் புறுத்தி வந்தார்கள். அடக்கு முறை ஒடுங்கினபாடில்லை. வந்தே மாதரம் என்று கூவினால் தண்டனை. பள்ளிக்கூடக் குழந்தைகளின் மீதும் அடக்குமுறை தாவியது. சென்னை மாகாணத்திலும் தூத்துக்குடி முதலிய இடங்களில் அதன் அதிர்ச்சி தாக்கிற்று.

நாளை நமக்கு :—பொதுவாக தேசத்தைப் பாதிக்கும் விஷயத்தையே காங்கிரஸ் மகா சபை கவனிக்கும். வங் காளப் பிரிவினை விஷயம் ஒரு மாகாணத்தைப் பற்றியதாயி னும், அதன் பலா பலனை மகா சபை எண்ணிப்பார்த்தது. தேச விஷயம் என்றே கொண்டது. ஆதலின் 1903-ஆம் ஆண்டு முதல் அதனைக் கண்டித்து வரத் தவறவில்லை. வங் காளத்துக்கு இன்று நேர்ந்த நிலைமை, நாளை இதர மாகாணங்

களுக்கும் ஏற்படலாம் என்பதே காங்கிரசின் கருத்து. வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் எல்லா மாகாண வாசிகளும் வங்காளப் பிரிவினையைக் கண்டித்து வந்தார்கள்.

இத்தகைய நிலையிலே 1906-ஆம் வருஷம் டிசம்பர் கடைசியில் காங்கிரஸ் மகா சபை கல்கத்தாவில் கூடியது.

---

34. சுயராஜ்ய காங்கிரஸ்

கல்கத்தாவிலே 1906-ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28, 29-ந் தேதிகளில் கல்கத்தாவிலே காங்கிரஸ் மகா சபை கூடலாயிற்று. பிரம்மாண்டமான கொட்டகை போட்டனர். இருபதாயிரம் பேர் உட்காரக்கூடியது. பிரதிநிதிகள் 1663 பேர். மற்றையோர் விருந்தினர். சென்னையிலிருந்து 221 பேர் பிரதிநிதிகளாகப் போனார்கள். அக்கிராசனரான தாதாபாய் நௌரோஜிக்குக் கிடைத்த உபசாரம் ராஜோபசாரமே. டாக்டர் ராஷ் விகாரி கோஷ் உபசரணை சபையின் தலைவர்.

ருஷிய ஆட்சி:—அவர் பிரசங்க சாரம்:—"வெள்ளம், பஞ்சம், இத்துன்பங்கள் போதாவென்று ராஜீயத் துன்பங்களும் நேர்ந்துள. லார்டு கர்ஸான் போகும்பொழுது, கொதிப்பையும் புரட்சியையும் மூட்டிப்போனார். வங்காளப் பிரிவினையையும் பரிசாக அளித்திருக்கிறார். அதன் பின் ருஷிய ஆட்சி முறை இங்கே ஏற்பட்டுளது. தேசிய கீதம் பாடினாலும், வந்தே மாதர கோஷஞ் செய்தாலும் பிரமாதமான தண்டனை. பள்ளிக்கூடப் பையன்களின் மீதும் நடவடிக்கை. பல இடங்களில் தண்டப் போலீஸ், ராணுவ ஆர்ப்பாட்டம். பொதுக் கூட்டங்கள் பலாத்காரமாகக் கலைக்

கப்படுகின்றன. அவைகளுக்கெல்லாம் சிகரம்போல், பாரிஸால் நகரில் கூடிய மாகாண மகா நாட்டைப் போலீஸார் கலைத்துப்போட்டனர்.

"அம் மகா நாடு கலைக்கப்பட்ட நாளை நாம் என்றும் மறக்க முடியாது. நினைக்க நினைக்க இழிவும் வெட்கமும் மிகும். கோழைத்தனங் கொண்டு நம் இளைஞர் ஏட்டிக்குப் போட்டி செய்யாமல் இருந்தனர் என்பதில்லை. தலைவர்களிடம் பக்தி கொண்டிருப்பதால் அவர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே இளைஞர் அடங்கி யிருந்தனர். ஆங்கிலேயரின் பத்திரிகைகளோ பழியும் அபாண்டமும் சுமத்தத் தலைப்பட்டுள. பழிக்கும் அபாண்டத்துக்கும் ஓர் எல்லை இல்லை. நாம் ராஜ விசுவாசம் அற்றவர்களாம்; ராஜத்துவேஷிகளாம். நல்லது!

புதிய இந்தியா:—"சுதேசியத்தில் புதிய இந்தியா தவழ்கிறது. சுதேசியக் கிளர்ச்சியை ராஜ விசுவாசமற்ற செயலென்று கூறுவது சுத்தப் பொய்; பழியுமாகும். பிழைகள் நிரம்பியிருப்பினும் இங்கிலாந்தினிடம் நமக்கு அபிமானம் உண்டு. இந்தியாவினிடமோ மிகுந்த அன்புண்டு நமக்கு. இது ராஜ விசுவாசமற்ற செயலா? செயலாயின் ராஜ விசுவாசமற்றவர்கள் எனும் பெயர் வாங்குவதில் நமக்குப் பெருமையே. இழைக்கப்பட்ட துன்பமும் அவமானமும் கண்டு இளைஞர் துடிக்கின்றனர். சாந்தங் கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை சொல்லுவேன். இங்கிலாந்துக்கும் பிரமாதமான எச்சரிக்கை செய்வேன்."

முதல் வேலை:—ஆனந்த ஆரவாரத்துக்கு இடையே தாதாபாய் நௌரோஜி அக்கிராசனத்தில் அமர்ந்தார். வயது 82 ஆகிவிட்டதால், 20 ஆயிரம் பேருக்கும் கேட்கும்படி பிரசங்கத்தைப் படிக்க முடியவில்லை. ஆதலின் கோபால கிருஷ்ண கோகுலரைப் படிக்கச்சொன்னார். அதன் சாரம்:—

"இனிமேல் இந்தியா எவ்விதம் ஆளப்பட வேண்டும் என்பதைக் கவனிப்பதே மகா சபையின் முதல் வேலை; மிகவும் முக்கியமான வேலையுமாம். நாம் பிரிட்டிஷ் பிரஜைகள். அதற்கு ஏற்றவாறு எல்லா உரிமைகளும் இருத்தல்வேண்டும். முதலாவது உரிமை சுதந்திரமே. சுவாசம் போன்றது சுதந்திரம். அதனையே வேண்டி நிற்கிறோம். கொள்கையும் அதுவே. இங்கிலாந்துடன் சம்பந்தங் கொண்டு இருநூறு வருஷமாகியும் நமக்கு இன்னும் சுய ஆட்சி கிடைக்கவில்லை.

ராணி வாக்கு :—"இங்கிலாந்திலே காமன்ஸ் சபைக்கு நான் ஓர் அபேட்சகனாக நின்றபொழுது, இந்தியன் ஆனதால் என்னை பிரிட்டிஷ் பிரஜை இல்லை என்றனர். அப்பால் அந்த ஆட்சேபம் செல்லவில்லை. பிரிட்டிஷ் பிரஜைகளுக்குள்ள 'சகல உரிமைகளும் கிடைக்குமாறு விளம்பரம் வரைக' என்றாள் விக்டோரியா மகா ராணியார். மற்றப் பிரஜைகளுக்குக் கட்டுப் பட்டிருப்போம் என்றும் ராணி கூறினாள். சுதந்திரம், சமத்துவம், சத்தியம் இந்தப் பிரமாதமான லட்சியங்களை தர்பாரில் அறிவிக்கும்படியும் தந்தி பேசினாள். சுயேச்சைக்குரிய ஸ்தாபனங்கள் எங்கும் ஏற்படுமென எட்வர்ட் சக்கரவர்த்தியும் இசைத்தார்.

சுயராஜ்யம் :—"இந்த உரிமைகளெல்லாம் நமக்குக் கிடைக்க வேண்டும். நாம் பட்ட கஷ்டங்களுக்கு ஈடாகவாவது கிடைக்க வேண்டாமா? நூற்றைம்பது வருஷ காலமாய் இயற்கைக்கு மாறான அரசியலுக்கு உட்பட்டிருக்கிறோம். ஒரு நாளாவது ஆங்கிலேயர் உட்பட்டிருப்பார்களா? இங்கிலாந்தில் ஆங்கிலேயருக்கு இருப்பது போன்ற உரிமை எல்லாம் இங்கே நமக்கு இருத்தல் வேண்டும். இது மிகவும் அவசியம். இல்லாவிட்டால் பரம தரித்திரம் தொலையாது. ஓரே வார்த்தையில் சொன்னால் நமக்குச் சுயராஜ்யம் வேண்டும்."

பேராயுதம்:—“கிளர்ச்சியினாலேயே ஆங்கிலேயர் அனைத்தையும் சாதித்துக் கொண்டனர். கிளர்ச்சியே மகத்தான ஆயுதம். மிருக பலத்தினும் உயர்ந்தது. உரிமைகள் என்னென்ன? அவைகளை எப்படி அடையவேண்டும்? ஏன் அடையவேண்டும் என்று இந்தியருக்கு எடுத்துரைத்துக் கிளர்ச்சி செய்ய வேண்டும். நாம் வாய்மூடியிருந்தால், திருப்தியுடன் இருப்பதாக ஆங்கிலேயர் கருதி விடுகின்றனர். சுய ஆட்சியே எதற்கும் பரிகாரம்; முக்கிய பரிகாரமுமாம். சுய ஆட்சியில்தான் நமக்கு நம்பிக்கையும் பலமும் சிறப்பும் உண்டு. ஒரு மனங்கொண்டு நில்லுங்கள்; விடா முயற்சி செய்யுங்கள்; சுய ஆட்சி எய்துங்கள். எய்தினால் லட்-சோப லட்சம் மக்களை வாரிக் கொண்டு போகும் தரித்திரமும் பஞ்சமும், கொள்ளை நோயும் தொலையும். உலகிலே நாம் உயர்ந்த நிலையும் எய்தலாம். தொண்டு கிழவனாகிய நான் உங்களுக்குச் செய்யும் உபதேசம் இதுவே!”

காணிக்கை:—உடனே பெண்கள் பலர் சேர்ந்து வந்தே மாதர கீதம் பாடினர். சபையோர் அனைவரும் அப்போது எழுந்து நின்றார்கள். இங்கிலாந்திலிருந்து ‘ஸ்டேட்’ எனும் பத்திரிகைப் பெருமான், ரூதர்போர்டு எனும் நண்பர், பார்லிமெண்டு அங்கத்தினர் இவர்கள் அபிமானத் தந்தி அனுப்பினர். திரான்ஸ்வால், நேட்டால் இந்த இடங்களிலுள்ள நம்மவர் ஒரு சிறு தொகை காணிக்கை அனுப்பினர். தேச மாதாவின் நலங் கருதி ஜெர்மன் தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மவர் 286 ரூபா அனுப்பினர் பேரன்புடன். தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மவரின் திக்கற்ற நிலைக்கு வருந்தி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

கோடி மரணம்:—இந்தியாவின் செலவைக் குறைக்க வேண்டுமென்று கனம் பி. என். சர்மா ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது, “1893-ஆம் ஆண்டில்

தேசச் செலவு 90 கோடி; 1906-ஆம் ஆண்டிலோ 134 கோடி. 1884 முதல் 1904 வரை இருபது வருஷத்திலே ராணுவச் செலவோ 17 கோடியிலிருந்து 32 கோடியாக உயர்ந்து விட்டது. இந்தியாவிலே இதனுல்தான் பஞ்சங் கள் ஏற்படுகின்றன. 110 லட்சம் பேர் மாண்டு போயுளர். இங்கிலாந்திலே கல்விச் செலவு 160 லட்சம் பவுன். இந்தி யாவிலோ 20 லட்சம் தான்" என்று குறிப்பிட்டார்.

மகாராஜா விஜயம்:—மூன்ருவது தினம் பரோடா மகாராஜா தமது முதன் மந்திரி ராமேச சந்திர தத்தருடன் மகா சபைக்கு விஜயம் செய்தார். ஆனந்தத்துடன் அவரை அனைவரும் வரவேற்றனர். வங்காளப் பிரிவினை கூடா தென்று டாக்கா நவாப் அதிகுல்லா ஒரு தீர்மானம் பிரேரித் தார். இந்துக்களும், முகம்மதியரும் ஒரு முகமாய் நிற்ப தைச் சுட்டிச் சொன்னுர். பாபு சுரேந்திர நாத பானர்ஜி பேசியதின் முக்கிய சாரம்:—

கை கட்டியா?:—"பொறுத்துப் பாருங்கள் என்கிருர் ஒரு நண்பர். பொறுக்காமல் என்ன செய்ய முடியும்? அதி காரிகளுக்கு நல்ல மனம் பிறக்காதா என்று 300 வருஷ மாகப் பொறுத்து நிற்கிறோம். இதுவும் நம் தலை விதி. இன் னும் பொறுப்போம். ஆனுல், கைகட்டி வாய் புதைத்துப் பொறுத்து நிற்க மாட்டோம். மற்று விதியையும் வென்று, கதி மோட்சத்தைத் தேடியடையும் மன உறுதியுடன் பொறுத்திருப்போம். புதிய உணர்ச்சி தோன்றியிருப்பதை அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். அந்த உணர்ச் சியோ நம் உள்ளத்தில் துடித்துக் கொண்டிருக்கிறது. ராஜீய முயற்சியிலே உயர்ந்தபடியிலும் நம்மைக் கொண்டுபோய் வைத்துளது. விதி, விதி என்று இனி எண்ணிக்கிட வோம். சீனு, ஜப்பான், பெர்ஸியா முதலிய தேச மக்கள் புத்துயிர் கொண்டு கிளம்பி யிருப்பதுபோல் நாமும் கிளம்பு

வோம். எல்லாம் அவரவர் கையில் இருக்கிறது. பிறர் கையை எதிர்பார்த்து நிற்பதில் பயனில்லை.''

பகிஷ்காரம் :—பின்பு, முதோல்கர் பேசுகையில், "வங்காளத்தின் ராஜீய தீவிரத்தை அதிகார வர்க்கம் சகிக்க முடியவில்லை. ஆதலினால்தான், அது துண்டாக்கப்பட்டுளது. பிரிவினையை ரத்து செய்யும் வரையில் நாம் கிளர்ச்சி செய்து கொண்டும் முயன்றுகொண்டு மிருப்போம்'' என்று குறிப்பிட்டார். தீர்மானம் நிறைவேறியது.

'தேச நிர்வாகத்தில் மக்களுக்குச் செல்வாக்கே இல்லை. ஜனப் பிரதிநிதிகளின் வாக்கை அரசாங்கம் மதிப்பதுமில்லை. ஆதலின் வங்காளப் பிரிவினையைக் கண்டிக்க பகிஷ்காரம் என்பது நியாயமான ஆயுதம்' எனும் தீர்மானம் பிறந்தது. அம்பிகா சரண மஜூம்தார், வேறு வழியில்லாமல் பகிஷ்காரத்தை மேற்கொள்ள நேர்ந்ததென்று வாதித்தார். பின்பு பாபு விபின சந்திர பாலர் பேசியதின் சாரம் இது :—

கவர்னர் நிலை :—"பகிஷ்காரம் என்றால் சாமான்களின் பகிஷ்காரம் அன்று. இன்னும் அதிகமும் உண்டு. பிரிட்டிஷ் சாமான்களை மட்டும் அல்லாமல், அரசாங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் கௌரவ பதவிகளையும் சம்பந்தத்தையும் பகிஷ்கரித்துள்ளோம். ஜனத்தலைவரில் எவரும் சட்டசபை வேலையில் கவர்னருடன் சம்பந்தங்கொள்வதே இல்லை. பகிஷ்காரம் என்பது வரவர எதிலும் வளர்ந்துகொண்டே போகும். பகிஷ்காரம் வலுத்ததனால் ஸர் பி. புல்லர் என்பார் தம் பதவியை விட்டுப்போக நேர்கிறது. அவர் போய்விட்டாலும் பகிஷ்காரம் போய்விடாது. பகிஷ்காரம் என்னும் பொழுது, விரோதம் வெறுப்பு என்பன கிடையாது.

பலாபலன்:—"நமது சக்தி அனைத்தும், முயற்சி அனைத்தும் தேசமாதாவின் சேவைக்கே உபயோகமாக வேண்டும். ஆதலின், நமக்கு எதிராக இருப்பவர்களிடம் விரோதங்

காட்ட எனக்கு அவகாசமும் இல்லை; சக்தியையும் செலவு செய்யமாட்டேன். நமது எதிரிகளை நேசிக்கவும் எனக்கு அவகாசம் கிடையாது. எனது நேரம், உங்கள் நேரம் தேச சேவைக்கே போதாது. ஆதலின், ராஜீய விஷயத்திலே விரோதம் என்பதை விலக்கி விடுவோமாக. பகிஷ்காரத்தில் முகம்மதியரும் முனைந்துள்ளர். அதில் அவர்களுக்குப் பலன் உண்டு. முகம்மதிய நெசவாளரில் பலர் வேறு வழியின்றி விவசாயத்தில் இறங்கினர். இப்போதோ பகிஷ்காரம் தோன்றிய பிறகு கைத்தறியில் பிழைப்புக் கிடைக்கிறது. ஆதலின் பகிஷ்காரத்தினுல் முகம்மதியரின் பொருளாதா ரத்தை விருத்தி செய்துவருகிறோம்.

தடுத்தால் :—"பகிஷ்காரம் என்பது தெய்வீகமான இயக்கம். அதற்கு அனைவரும் ஆசி கூறுவராக. ஆசி கூறி, அதனிடமிருந்து ஆசியும் பெறுவராக. ஜகந்நாதர் தேர் முன்னேற்றத்திற்கு உரியது. மெதுவாகத் தான் அது நகரும். ஆயினும் கட்டாயம் நிலை வந்து சேரும். தெய்வத் தையும் வந்தே மாதரத்தையும் துணைகொண்டு, தேரின் வடத்தை இழுப்பின் அனைவருக்கும் நலமே. முன்னேறிச் செல்லும் தேருக்கு யாரேனும் முட்டுக்கட்டை போடின், போடுவோர் முகம்மதியராயினும் சரி, ஹிந்துக்களாயினும் சரி, வங்காளிகளாயினும் சரி, இதர மாகாண வாசிகளாயி னும் சரி, தேர்க்காலின் கீழ் சிக்கிக்கொண்டு நசுங்கிப் போக நேரும். ஆண்டவன் பெயரால், தேசத்தின் பெயரால், வருங் கால வாழ்வின் பெயரால், நமது தேச கதிமோட்சத்தின் பெயரால், உங்கள் அனைவரையும் வேண்டிக்கொள்வேன். நீங்கள் இந்த இயக்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்."

இருவர் நிலை :—தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. சென்னை பி. ஆர். சுந்தரமய்யர் எதிராக ஓட் கொடுத்தார். கனம் பி. என். சர்மாவோ ஒரு பக்கமும் ஓட் செய்யவில்லை.

மற்றைய அனைவரும் ஒருமனதாக ஓட் செய்தனர்; தீர்மானம் நிறைவேறியது. பின்பு தேசீயக் கல்வியே தேவை என்னும் தீர்மானத்தை ஹிரேந்திரநாத தத்தர் பிரேரித்தார். அவர் பேசியதின் சாரம் :—

மூன்று முகம் :—“சுயராஜ்யமே எதற்கும் சஞ்சீவி என்கிறார் நமது தலைவர். சுயராஜ்ய தேவிக்கு மூன்று முகங்கள். ஒன்று ராஜீய முகம்; மற்றொன்று தொழில் முகம்; இன்னொன்று கல்வி முகம். தேச மக்களுக்கு உயிர் போன்றது கல்வி. தேசீய வாழ்வெனும் போர்க்களத்தில் கல்வி எனும் கருவியே கைகொடுக்கும். இத்தேசத்துக் கல்வி முறை வெறும் மோசடியே யன்றி வேறில்லை. குமாஸ்தாக்களை உண்டுபண்ணவே உள்ளது கல்வி முறை. இங்கிலையில் வீரர் எங்ஙனம் உதிக்க முடியும்? ஆதலின் வங்காளத்திலே தேசீயக் கல்வி முறை ஏற்படுத்தியுள்ளோம். இரண்டாயிரம் மாணவர் படித்து வருகின்றனர்; உங்கள் கல்வி முறையை அன்னியரிடம் ஒப்படைக்கவேண்டாம்.” பலர் பேசியதும் தீர்மானம் நிறைவேறியது.

பணக்காரரின் கடமை :—சுதேசியத்தைப்பற்றி ராவ் பகதூர் அனந்தாசார்லு பேசியதின் சாரம் :—“நெடுநாள் நாம் தூங்கிவிட்டோம். தேவ லோகத்திலிருந்து வந்த நற்செய்திபோல் சுதேசியத்தை நாம் தேசமெங்கும் போதிக்க வேண்டும். நம்மில் பணக்காரராக உள்ளோர் முன் வந்து தேசக் கைத்தொழில்களுக்குத் திரவிய சகாயம் செய்ய வேண்டும். மேனாட்டுப் பொருள்களின் போட்டியால் நஷ்டமடையும் தொழில்களுக்கு ஈடு செய்யவேண்டும். ஏழைகளுக்கு மலிவான விலைக்கு சாமான்களை விற்க நாம் வழி தேடவேண்டும்.”

என் செய்வது ? :—பண்டித மதனமோகன மாளவியா பேசியது :—“அன்னிய நாட்டுச் சாமான்கள் ஏராளமாக

வந்து இங்கே குவிகின்றன. அவைகளின் மூலம் பணம் போய்விடுகிறது. இனி இங்கிருந்து மூலப் பொருள்கள் அன்னிய தேசங்களுக்குப் போய் அங்கிருந்து கைத்தொழில் பொருளாக இங்கே மீண்டும் வருகின்றன. அவைகளின் மூலமாயும் ஏராளமான பணம் போய் விடுகிறது. இதனால், தேச மக்களின் உயிர் நாடி ஒடுங்கி வருகிறது. இங்கிலாந்திலே மக்களின் சராசரி வருமானம் தலைக்கு நாற்பது பவுன். நமது தேசத்திலோ இரண்டு பவுன்தான். நாம் என்ன செய்வது? சுதேசியத்தை மேற்கொள்வதே சிறந்த வழி.''

கடைசி காங்கிரஸ்?:—பால கங்காதர திலகர் பேசியதின் சாரம் இது:—"காங்கிரசுக்கு மேஜர் வயது வந்துவிட்டது; வயதோ இருபத்திரண்டு; இனிமேல் சபை நில்லாது; இதுவே கடைசி காங்கிரஸ் என்று ஆங்கிலேயர் சோதிடம் சொல்கின்றனர். நமது அபிப்பிராய பேதங்கள் நீங்கி விட்டன. இரண்டு கட்சியாரும் சமரசம் கொண்டுளர். ஹிந்துக்களும் முகம்மதியருங்கூட இவ்விஷயத்தில் ஒற்றுமை கொண்டுளர். சுதேசியத்தைக் கொள்ளாமல பாவிகளாக இருப்போர் மத்திய வகுப்பாராகிய நாமேயாம். ஏழைகளுக்கு அன்னிய சாமான்கள் வேண்டியதே இல்லை. அன்னிய சாமான்களை அதிகம் உபயோகிப்போர் நாமே. தன் கைதான் தனக்கு உதவி.''

தியாகம்:—லாலா லஜபதிராய் பேசியதின் சாரமிது:— "தியாகம் என்பது அவசியம் என்று திலகர் வற்புறுத்தியுள்ளார். தியாகம் இல்லாமல் சுதேசியம் கை கூடாது. பூண்ட விரதத்தின்படி நாம் நடக்க வேண்டும். தேசத்தினிடம் உள்ளன்பு வேண்டும். தியாகமும் அவசியம்.'' பின்பு தீர்மானம் நிறைவேறியது. குடியேற்ற நாடுகளில் இருப்பது போன்ற சுய ஆட்சி முறை இங்கே ஏற்படவேண்

டும் என்னும் தீர்மானத்தை சௌத்ரி பிரேரித்துப் பேசினர். பலர் ஆதரித்துப் பேசினர். தீர்மானம் நிறைவேறியது.

குடை நிழல்:—முடிவில் பூனு நகரவாசிகள் சுதேசி குடையொன்று அக்கிராசனருக்கு சன்மானம் செய்தனர். அதை பாபு பானர்ஜி விரித்துப் பிடித்து, தேச மக்கள் அனை வரும் இக்குடை நிழலில் ஒன்று சேர்ந்து உயரவேண்டும் என்று துதித்தார். அக்கிராசனரின் முடிவுரை இது:—

இளைஞர் கடமை :-"சென்ற ஐம்பது வருஷ காலமாக நாம் செய்த முயற்சி நல்ல பலன் தந்துளது. இந்தக் காங் கிரசில் நாம் புதிய போக்கை மேற்கொண்டுள்ளோம். சுய ராஜ்யம் என்பது நமது லட்சியமாகியுளது. இளைஞரும் கிழவரும் ஒன்று சேர்ந்து உழைப்பாராயின், பலன் கிட்டும். நிச்சயம். இனி இளைஞருக்குத்தான் மிக்க பொறுப்பு. அவர் கள் உற்சாகமுடன் இருப்பது கண்டு களிக்கிறேன். நமது லட்சியம் இன்னதென இப்போது வரை யறுத்து விட் டோம். இது மிகவும் முக்கியம். அடுத்த காங்கிரஸ் நாக புரியில் கூடும்."

---

35. இரண்டு கட்சிகள்

ஆங்கில ராஜதந்திரம் பல சமயங்களிலும் தவறு வதுண்டு. ஆயினும் கடைசி முடிவில் சீராகிவிடும்; எனவே, ஆங்கிலேயரிடம் நடுக்கண்ட நியாயம் கிடைக்கும் என்றே இந்தியரில் பலரும் எண்ணி யிருந்தனர். ஆதலால் ஆங்கிலேயரை வேண்டிக் கொண்டும், ஆங்கில அரசினிடம் விசுவாசம் காட்டியும், இருபது வருஷமாக வேண்டி நின்று காங்கிரஸ் அடைந்த பலன் ஓரளவு சட்டசபைத் திருத்தமே. 1892-ம் ஆண்டில் அத்திருத்தம் கிட்டியது.

அதிருப்தி:—கிட்டியும் என்ன? அத்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்குடன் எழுந்த விதி முறைகளோ அத்திருத்தத்தை ஒடுக்குவனவாக இருந்தனவேயன்றி வேறன்று. சட்ட சபைத் திருத்தத்தைத் தவிர வேறு பல திருத்தங்களும் மகாசபை விரும்பியது. அவற்றிற்கு அரசாங்கம் செவி சாய்க்கவில்லை; மரியாதையான பதில்கூட கிட்டவில்லை. ஆங்கில அரசினிடம் ஜனத் தலைவர்களுக்குப் பிரமாதமான நம்பிக்கை இருந்தும் தேச மக்களுக்கோ அவ்விதம் நம்பிக்கை இல்லை. மற்று பட்டமும் பதவியும் வழங்கிச் சிலரை மயக்கி இங்கும் அங்கும் இரண்டொரு உத்தியோகம் கொடுத்து அரசியலைத் தன் கைக்குள் என்றும் அடக்கிக்கொண்டிருக்கவே அரசாங்கம் கருதியுளது என்றே எல்லாரும் எண்ணி அதிருப்தி கொள்ளலாயினர்.

உடம்பில் ஊறல்:—அந்த அதிருப்தி ஓங்கி வளர்ந்து கொண்டே வந்தது. இந்துக்களையும், முகம்மதியரையும் பிரித்தாளும் முயற்சியையும் அதிகாரிகளில் சிலர் கையாண்டு வந்தனர். ஏகபோகமாகவும் மாமன் காணி போலவும் அனுபவித்துவரும் நலபலங்களை விட்டுக் கொடுக்க ஆங்கிலேயர் மனங்கொள்ளவில்லை. மகா ஜனங்களின் மனக் கருத்தையும், இந்தியப் பத்திரிகைகளின் அபிப்பிராயத்தையும் மதிக்காவிடினும், அலட்சியஞ் செய்தல் குறைந்தபாடில்லை. ஜனங்களின் அதிருப்தி உடம்பில் ஊறிப்போகும் வண்ணமே அதிகாரிகளில் சிலர் நடந்துவந்தார்கள்.

அதிகார எடுப்பு:—லார்டு எல்ஜின் ராஜப்பிரதிநிதியாக இருந்த காலத்திலே அதிகார வர்க்கமே கைமேலாகி, இஷ்டப்படி ஆட்சியை நடத்தி வந்தது. போதாக்குறைக்கு லார்டு கர்ஸானது விபரீதப் போக்கும் கூடிக்கொண்டது. கர்ஸானது காலத்தில் நலம் பல கிட்டுமென எதிர்பார்த்தும், விபரீதங்களே விளைந்தன. விபரீதங்களில் மகா விபரீத

மானது வங்காளப் பிரிவினை. ஐந்து வருஷத்துக்கு ஒரு முறை ராஜப் பிரதிநிதியை நியமிப்பதென்பது கூடாது; நிரந்தரமாக ஒருவரை நியமித்து விடவேண்டும் என்றும் கர்ஸான் பிரியப்பட்டார். தமக்கே அப்பதவி கிடைக்க வேண்டுமென அவர் கருதினாரோ, என்னவோ? அவருடைய ஆட்சிக் காலத்தில் காங்கிரஸின் செல்வாக்கு ஓங்காமல் சிறுமையடைய நேர்ந்தது. அதனால் பலரும் மகா சபையி னிடங்கூட—அதாவது ஜனத் தலைவர்களிடம்—நம்பிக்கை இழக்கலாயினர்.

இரு பிரிவு:—மண்டியிட்டு மனுச் செய்தல் வேண்டாம், வேறு வழியைப் பார்ப்போம் என்று தலைவர்களிலே ஒரு சாரார் வற்புறுத்தினர். இளைஞரிலும் பலர் தலைவராக வந்த தால், அவர்களுக்குள்ளே துடிப்பு மிஞ்சியது. தீவிர நோக்கமுடைய தலைவர்களை அமிதவாதிகள் என்று அதிகார கோஷ்டியார் பெயரிட்டார்கள். 1904-ஆம் ஆண் டிலே அவ்விதம் பிரிவு ஏற்பட்டது. 1905-ஆம் ஆண்டிலோ காசி காங்கிரஸில் தலை தூக்கியது. கல்கத்தா காங்கிரஸிலே 1906-ஆம் ஆண்டில் சுயராஜ்யம், சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக் கல்வி ஆகிய நான்கு விஷயங்களைக் குறித்து விஷயாலோசனைக் கமிட்டியிலே மிக்க அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. கல்கத்தா காங்கிரஸில் சிலர் மனத்தாங்கல் கொண்டு சபையை விட்டும் எழுந்து போயினர். அப்போது அவ்வளவாக அது கவனிக்கப்படவில்லை.

கண் மூடுமுன்:—தேச மக்களின் நிலையையும் அதிகாரி களின் போக்கையும் மதித்தே தாதாபாய் நௌரோஜி அந்த நான்கு தீர்மானங்களுக்கு உட்பட்டார். இளைஞரும் அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சுட்டிச் சொன்னார். கண் மூடுமுன் கதிமோட்சம் கிட்டுமென நம்பு வதாகச் சொல்லி உற்சாகம் ஊட்டினார். அத்தொண்டு

கிழவரின் அரிய சேவை ஒரு புறம், அவரது இனிய வார்த்தை ஒரு புறம், நான்கு தீர்மானங்கள் ஒரு புறம், இவை எல்லாங் கண்டு தீவிரக் கட்சியார் வேற்றுமையை வளர்க்காமல் வாளா இருந்தனர். கல்கத்தா காங்கிரஸ் மிகவும் சிறப்பாக நடந்தது.

தீவிரக் கட்சி:—கல்கத்தா காங்கிரஸ் முடிந்ததும் தீவிரக் கட்சியார் பிரசங்க மூலமும் பத்திரிகை மூலமும் பெருங் கிளர்ச்சி செய்துவந்தனர். சுய ஆட்சி அல்லது சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதே ஆதிமுதல் காங்கிரசின் கருத்து. ஆயினும் அதனை மனம் விட்டுச் சொல்லவில்லை. கல்கத்தா காங்கிரஸ் பகிரங்கமாகச் சொல்லியது கண்டும், சுயராஜ்யம் என்று நெளரோஜி கூறியது கண்டும் தீவிரக் கட்சியார் களிப்புக்கொண்டு 'சுயராஜ்யம்' 'சுயராஜ்யம்' என்று மந்திரம் போல் சதா சொல்லி நின்றனர். சர்வ கலாசாலைகளை லார்டு கர்ஸான் சட்டமூலம் அடக்கி யொடுக்கியதால் தேசியக் கல்வி அவசியமாயிற்று.

பக்க பலம்:—இனி, "தேசத் தொழில்கள் அழிந்து பரம தரித்திரம் தாண்டவமாடியதால், சுதேசியம் ஒரு பாது காப்பாகும். சுதேசியம் பெருகின் செல்வம் பெருகும்; செல்வம் பெருகவே மக்களின் வல்லமை வளரும். வல்லமை வளரின் சுயராஜ்ய சித்திக்குரிய சித்தம் ஓங்கும்," என்று தீவிரக் கட்சியார் ஓயாமல் உரைத்து வந்தனர். வெகு ஜனவாக்கை அரசாங்கம் நெடுக அசட்டை செய்து வந்தது ஒன்று; எல்லாவற்றிற்கும் மேலாக சுதேசியத்திற்குப் பக்கபலம் இருக்க வேண்டும் என்பது ஒன்று; ஆதலினால் தான் பகிஷ்காரம் அவசியம் என்றனர் தீவிரக் கட்சியார். அத்துறையில் பிரமாதமாகவும் கிளர்ச்சிசெய்தனர்.

மனப் போக்கு:—ஆங்கில அரசையே நம்பிக்கிடந்த மிதவாதிகளுக்கு எடுப்பான அத் தீர்மானங்கள் கண்டு

கூச்சம் பிறந்தது இயற்கை தானே! தவிர அவற்றிற்குத் தீவிரக் கட்சியார் கொள்ளும் அர்த்தமும், செய்யும் பிரசாரமும் நடுக்கம் ஊட்டின. எஜமானரை நேர் நின்று நிமிர்ந்து கேட்பது எப்படி? கேட்டால் கோபம் பிறக்குமே. அதனை நாம் தாங்க முடியுமோ? நமக்கு என்ன வல்லமை உளது என்று எண்ணுதல் மனித சுபாவம். இதனை மிதவாதிகள் உதறித் தள்ள முடியவில்லை. மேலும் ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை என்ன, இந்தியா மந்திரியின் சபை என்ன இவற்றில் இந்தியர் நியமிக்கப்பட்டனர்; காங்கிரஸின் முன்னணியில் நின்ற தலைவர்களில் பலருக்குப் பட்டமும் பதவிகளும் கிடைத்தன. இவை கண்டும் மிதவாதிகளுக்கு ஓர் ஆனந்த ஆறுதலும் நன்றியறிவும் தலை சிறந்து நின்றன. இவையெல்லாம் நாய்க்குத் தேங்காய்க் கீற்று, ரொட்டித் துண்டு, மாமிசத் துணுக்கு எறிவது போலாகுமே யன்றி, வேறன்று என்பதே தீவிரக் கட்சியார் எனும் அமிதவாதிகளின் கருத்து. இவ்விதம் இருசாராரின் மனப் போக்கும் வெவ்வேறு திசையில் விரிந்துகொண்டே போக 1907-ஆம் வருஷம் சூரத் நகரில் காங்கிரஸ் சபை கூடலாயிற்று.

36. சூரத்தில் முறிதல்

இருபத்து மூன்றுவது காங்கிரஸ் நாகபுரியில் கூட வேண்டும் என்பதே கல்கத்தா காங்கிரஸின் தீர்மானம். நாகபுரியிலோ கட்சிப் பிரதி கட்சிகள் தோன்றி விட்டன. தீவிரக் கட்சியார் கைமேலா யிருந்தனர். சூரத் நகரில் கூடுவதே மேலென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது. கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களே கதிமோட்சத்துக்கு மார்க்கமென்று தீவிரக் கட்சியார் எண்ணியிருக்கையில், ஒரு வதந்தி கிளம்பியது. கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்கள் கைவிடப்படும் என்பதே வதந்தியின் சாரம். காங்கிரஸ் சபையின் நிர்வாகத்தில் தீவிரக்கட்சியாருக்குச் செல்வாக்கு கம்மி. தவிர, சூரத் காங்கிரஸின் உபசரணை சபையில் மிதவாதிகளே மிகுதியாக இருந்தனர்.

மன வேற்றுமை :—தீவிரக் கட்சியாருக்குத் திகைப்பு உண்டாகிவிட்டது. டாக்டர் ராஷ் விகாரி கோஷ் என்பவரை அக்கிராசனராகக் கொள்ள உபசரணை சபை தீர்மானித்தது. இதற்கு இடையில், லாலா லஜபதிராய் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருந்தார். அரசாங்கத்தின் அநீதச் செயலைக் கண்டிக்கவும், லஜபதியினிடம் தேசத்தாருக்குள்ள மதிப்பைக் காட்டவும், அவரையே அக்கிராசனராகக் கொள்ளவேண்டுமென்று தீவிரக்கட்சியார் சொல்லினர். கோபால கிருஷ்ண கோகுலர், ஸர் பிரோஸ் ஷா மேத்தா இவர்களின் கருத்து வேறு விதமாக இருந்தது. தமது பெயரைச் சொல்லி, இரு கட்சியும் அபிப்பிராய பேதம் கொள்ள விரும்பாத லஜபதி தமக்கு அப்பதவி வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

நம்மவர் :—தேசத்தின் கொதிப்பு ஒரு புறம், கல்கத்தா தீர்மானங்களின் கதி ஒரு புறம், இரண்டும் சேர்ந்து கொள்ள, 1600 பிரதிநிதிகள் பல இடங்களிலிருந்தும் போயிருந்தார்கள். சென்னையிலிருந்து சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவம், சிதம்பரம் பிள்ளை, சக்கரைச் செட்டியார், சுரேந்திரநாத ஆர்யா, எஸ். துரைசாமி, காஞ்சீபுரம் ஆர்யா, தஞ்சை என். கே. ராமசுவாமி ஐயர், திருமலாச்சாரி முதலிய தீவிர வாதிகள் போயினர். வங்காளத்திலிருந்து வந்த அரவிந்த கோஷ், விபின சந்திர பாலர், மோத்திலால் கோஷ், அசுவினி குமார தத்தர் இவர்களும் தீவிர வாதிகள். தீவிர வாதிகள் எல்லாரும் காங்கிரஸ் பந்தலுக்கு மூன்று மைல் தூரத்தில் தனியே தங்கி, என்ன செய்வதென்று ஆலோசிக்கலானார்கள். அப்போது பால கங்காதர திலகரே அவர்களின் அரிய தலைவர்.

பேச்சில் குற்றம்:—தலைவரான ராஷ் விகாரி கோஷ் வருகையில், வழி நெடுகப் பலர் அவருக்கு உபசாரம் புரிந்தனர். அக்கிராசனம் வகிக்காதீர்கள் என்றும் சிலர் அவருக்குத் தந்தி கொடுத்தனர். காரணம் (1) ராஜப் பிரதிநிதியின் சட்டசபையில் அமிதவாதிகளை அலட்சியஞ் செய்வதுபோல் பேசியது ஒன்று; (2) அவரது அக்கிராசனப் பிரசங்கத்தில் அமிதவாதிகளைக் கண்டித்துப் பேசியிருந்தது மற்றொன்று. ஜனக் கொந்தளிப்பைக் கண்டு உபசரணை சபைக்கும் உள்ளூர அச்சம் இருந்தது. போலீஸுக்கு முன்னதாகவே தகவல் கொடுத்திருந்தனர். தடி தாங்கிய பேர்வழிகளும் தயாராக அமர்த்தி யிருந்தார்கள்.

ஏதோ விளையும் :—1907-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ந் தேதி பிற்பகல் 2-30 மணிக்கு மகாசபை கூடியது. பிரதிநிதிகளும் விருந்தினருமாக 6 ஆயிரம் பேருக்குமேல் கூடி இருந்தனர். பிரபல தலைவர்கள் பந்தலுக்குள் புகுந்ததும்

ஆனந்த ஆரவாரம் ஓங்கியது. அக்கிராசனரைக் கண்டதும் அந்த ஆரவாரத்திற்கு ஓர் அளவே இல்லை. ஆயினும் ஏதோ விபரீதம் விளையுமென்று இரண்டொருவர் பேசிக் கொண்டனர். உபசரணை சபைத் தலைவர் திரிபுவனதாஸ் என்பார் பேசியதின் சாரம் இது :—

திண்டாட்டம் :—"சென்ற வருஷம் காங்கிரஸ் கூடிய பின் இதற்குள் எவ்வளவோ கஷ்டங்கள் நமக்கு நேர்ந்துள. பிரபல இந்தியத் தலைவர்களின் மீது அதிகாரிகள் சந்தேகம் கொண்டு ராஜத்துவேஷ குற்றமும் சாட்டலாயினர். பெரிய சிப்பாய்க் கலகம் நடந்து இன்றோடு 50 வருஷம் ஆவதால் பெரிய கலகத்திற்கு இந்தியா ஏற்பாடு செய்வதாக அதிகாரிகளுக்குக் கிலி பிடித்து விட்டது. அதிகாரிகள் தங்கள் மனப் பிராந்தியில் தோன்றிய அக்கலகத்தை அடக்க வேண்டுமென்று க்ருதி, பலவாறான அடக்கு முறைகளைக் கையாண்டனர். காலங் கடந்த சட்டங்களை உபயோகித்து, ஏதேதோ எண்ணம் கொண்டு, பல தலைவர்களை மடக்கியுளர். சதியாலோசனைகள் உண்டென்று கருதி, சில ஜில்லாக்களிலே பொதுக் கூட்டங்களைத் தடுத்தனர். இப்பொழுதோ ராஜத் துவேஷ சட்டம் என்பது பிறந்துள்ளது. தேசமெங்கும் அதைப் பிரயோகிக்க அதிகாரிகள் முயலின் அது ஆச்சரியமாகாது. கிலி பிடித்த அதிகாரிகளின் கையில் தனி மனிதரின் சுதந்திரம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. நிலைமை இது. எனினும் காங்கிரஸ் மகாசபையானது நிதான புத்தியிலும் ராஜ பக்தியிலும் குன்றாது."

ஆட்சேபம் :—இவ்விதம் அவர் சொல்லியதும் சபையின் ஒரு மூலையிலே 'இல்லை, இல்லை' என்ற சப்தம் கிளம்பியது. அவர் உட்கார்ந்ததும் திவான் பகதூர் அம்பாலால் தேசாய் எழுந்து, டாக்டர் ராஷ் விகாரி கோஷைப் புகழ்ந்து பேசினர். உடனே 'இல்லை, இல்லை' என்று மறுபடியும் கூச்

சல் கிளம்பியது. பிறகு பாபு சுரேந்திர நாத பானர்ஜி எழுந்து தமது பிரசங்க வன்மையைக் காட்டத் தொடங்கினார். பேசவும் முயன்றார். அவரும் பேச முடியவில்லை. சென்னைப் பிரதிநிதிகளும் மகாராஷ்டிரப் பிரதிநிதிகளும் வீற்றிருந்த இடத்திலிருந்துதான் ஆட்சேபம் அதிகமாக ஓங்கியது. "திலகர் பேசட்டும், லஜபதி பேசட்டும்" என்று பலரும் உரக்கச் சொல்லினர்.

ஒரே சந்தடி :—மிதவாதிகளோ, "பானர்ஜியே! பேசுங்கள்" என்று கூவினார்கள். உரத்த குரல் எடுத்து பானர்ஜி பேசப் பார்த்தும் பலிக்கவில்லை. அது சமயம் உபசரணைத் தலைவர் எழுந்து, "அமிதவாதிகள் இவ்விதம் கூச்சல் போட்டால் காங்கிரஸை நிறுத்திவிட நேரும்" என்று எச்சரிக்கை செய்தார். அதுவும் பலிக்கவில்லை. மறுபடியும் பானர்ஜி பேச முயன்றார். முடியவில்லை. "தாங்கள் தலையிட்டு சந்தடியை சாந்தம் செய்யவேண்டும்" என்பதாகத் திலகரையும் அவர் சகாவான கபர்தே என்பாரையும் சிலர் வேண்டிக் கொண்டனர். அவ்விருவரும் முயன்றும் முடியாது போய் விட்டது. பந்தல் முழுவதும் ஒரே கூச்சல், ஒரே சந்தடி. ஒன்றும் நடக்க முடியவில்லை. சபை அத்துடன் கலைந்தது. தலைவர்கள் எழுந்து போய்விட்டார்கள்.

சமரஸப் பேச்சு :—அன்று மாலையிலே மிதவாதிகள், அமிதவாதிகள் ஆகிய இரு கட்சியாருக்கும் இடையே சமரஸப் பேச்சு நடக்கலாயிற்று. கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களை அப்படியே சூரத் காங்கிரசில் நிறைவேற்றுவதாக மிதவாதிகள் ஒப்புக் கொண்டால், அமிதவாதிகளென்போர் ஆட்சேபம் ஏதும் செய்யாது இருப்பர் என்று தீவிரக் கட்சியார் சொல்லினர். அப்படியில்லையானால் அக்கிராசனரின் தேர்தலை கிரமப்படி ஆட்சேபித்து, ஓட்செய்து, தங்கள் மனக் கருத்தை வெளியிடுவது; வேறு எந்த சந்தடியிலும்

கலந்து கொள்வதில்லை என்றும் தீவிரக் கட்சியார் தீர்மானித்தனர். இது இப்படியிருக்க, இரண்டு கட்சிக்குமுள்ள அபிப்பிராய பேதத்தை திலகரும் கோகுலரும் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வருதல் நலமென்று சிலர் சொன்னார்கள். இதற்குத் திலகர் சம்மதித்தார்; எப்பொழுது கூப்பிட்டாலும் வரத் தயார் என்றார். ஆயினும், இருவரும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாட்டை ஒருவரும் செய்யவில்லை.

திலகர் கருத்து :—மறுநாள் (அதாவது, டிசம்பர் 27-ந் தேதி வெள்ளிக்கிழமை) சுனிலால் என்பார் திலகரையும் கபர்தேயையும் ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றார் சமரஸம் பேச. சமரஸம் உண்டுபண்ண முயலுவதாக வாக்களித்த டாக்டர் ரூதர்போர்ட் அவ்விடம் வந்து சேரவில்லை. அப்போது அங்கிருந்த டாக்டர் கஜ்ஜார் என்பவர், "திலகரே! உமது கருத்து என்ன?" என்று கேட்டார். "சமரஸம் ஏற்படாவிட்டால் அக்கிராசனப் பிரேரணையை ஆட்சேபித்து, சபையையும் சிறிது நிறுத்தி, இரு கட்சியாருக்கும் சமரஸம் உண்டுபண்ண முயலவேண்டும் என்று ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வருவேன்," என்றார் திலகர். "நல்லது உங்கள் கருத்தை ஸர் பிரோஸ் ஷா மேத்தாவுக்கும், டாக்டர் ரூதர்போர்டுக்கும் அறிவிக்கிறோம். விரைவில் உங்களுக்கு பதில் வரும். நீங்கள் உங்கள் ஜாகைக்குப் போகலாம்" என்றனர் கஜ்ஜாரும் சுனிலாலும்.

பிணக்கு நேராது :—அவ்விதமே திலகரும் கபர்தேயும் தங்கள் ஜாகைக்குத் திரும்பினர். சிறிது நேரத்திற்கெல்லாம் கஜ்ஜாரும் சுனிலாலும் திலகரிடம் வந்து, "சமரஸத்திற்கு வழியைக் காணோம். ஆனால் இரு கட்சியாரும் கிரமமாக நடந்துகொண்டால், பிணக்கு நேராது" என்று சொல்லிப்போயினர்.

37. திலகர் நிலைமை

அப்போது பகல் மணி பன்னிரண்டரை. ஒரு மணிக்கு மகாசபை கூடவேண்டும். ஆதலின், "ஐயா! அக்கிராசனப் பிரேரணை ஆனதும் அதன்மீது இரண்டொரு வார்த்தை பேச உத்தேசம். உருவான யோசனை சொல்லி சபையைச் சிறிதுநேரம் நிறுத்தி வைக்க வேண்டுமென்பதாக பிரேரணை செய்ய எண்ணியுள்ளேன். திலகரும் பேசுவார் என்று அறிவியுங்கள்" என்று உபசரணை சபைத் தலைவருக்கு திலகர் எழுதினார். அக்கிராசனருடன் உபசரணை சபைத் தலைவர் காங்கிரஸ் பந்தலுக்குள் நுழைகையில் அக்கடிதம் அவர் கைக்கு எட்டியது.

வழி மறித்தல்:—டிசம்பர் 27-ந் தேதி பகல் ஒரு மணிக்கு மகாசபை மறுபடியும் கூடிற்று. சுரேந்திர நாத பானர்ஜி எழுந்து, அக்கிராசனப் பிரேரணையை ஆதரிக்கத் தொடங்கினார். தமது கடிதத்திற்குப் பதில் வருமென்று திலகர் எதிர்பார்த்தும், ஒன்றும் வரவில்லை. உடனே கெல்காரைக் கூப்பிட்டு, உபசரணை சபைத் தலைவருக்கு ஞாபகம் ஊட்டச் சொன்னார் திலகர். அவ்விதமே, "தமது கடிதத்திற்கு திலகர் பதில் விரும்புகிறார்," என்று கெல்கார் எழுதிக் கேட்டார். இதற்கும் பதில் இல்லை. மேடையின் படிக்கட்டில் வீற்றிருந்த திலகர் மேடையின்மீது போகலானார். தொண்டர் ஒருவர் வழிமறித்தார். போக உரிமையுண்டென்று திலகர் சொல்லி, அவரை ஒதுக்கிவிட்டு மேடை சேர்ந்தார். அப்பொழுதுதான் அக்கிராசனர் ஆசனத்தில் அமரப்போகும் சமயம்.

வாக்கு வாதம்:—கிரமப்படி பார்த்தால் திலகரின் கடிதத்திற்கு உபசரணை சபைத் தலைவர் பதில் சொல்லி

இருக்கவேண்டும். அல்லது அவருடைய கடித விவரத்தை சபைக்கு அறிவித்து அது ஒழுங்கற்றது என்று கூறி, சபையின் கருத்தை அறிந்திருக்கவேண்டும். அவ்விதம் செய்யவில்லை. திலகர் மேடைமீது ஏறி நின்றதும் உபசரணை சபையார் அனைவரும் பிரமாதமாக ஆட்சேபித்தார்கள். இதர மிதவாதிகளும் கூடிக்கொண்டார்கள். பிரதிநிதிகளைப் பார்த்துப் பேசத் தமக்கு உரிமை உண்டென்று திலகர் வற்புறுத்தினர். டாக்டர் கோஷ் தலையிட்டுப் பேச ஆரம்பித்தார். திலகரோ, அக்கிராசனத் தேர்தல் சரிவர முடிய வில்லை என்று சென்னர்.

தள்ள முயற்சி:—உபசரணை சபைத் தலைவரோ திலகரை நோக்கி, "உமது திருத்தம் ஒழுங்கற்றது," என்றார். பிரதி நிதிகளுடன் பேசுவதற்குத் தமக்கு உரிமை யுண்டென்று திலகர் கூறினர். இதற்குள் பிரமாதமான சந்தடி கிளம்பியது. "உட்காரு, உட்காரு" என்று மிதவாதிகள் கூவினர்கள். தீவிர வாதிகளில் பலரும், "பேசு, பேசு" என்றார்கள். அச்சமயத்தில் திலகரை மேடையிலிருந்து அகற்றிவிட வேண்டுமென்று உபசரணைத் தலைவர், அக்கிராசனர் இரு வரும் சொன்னர்கள். உடனே உபசரணை சபைக் காரியதரிசி ஒருவர் எழுந்து, திலகரைத் தொட்டுத் தள்ளப்போனர். திலகரோ, அவரை எட்ட ஒதுக்கிவிட்டு, "பிரதிநிதிகளிடம் பேச எனக்கு உரிமை உண்டு; இந்த இடத்தைவிட்டு நகர மாட்டேன்," என்றார். அப்போது "திலகரைத் தொடாதே! தள்ளாதே!" என்பதாக கோபால கிருஷ்ண கோகுலர் கூறினர். இதற்குள் பலர் திலகரைத் தாக்கவும், துன் புறுத்தவும் எழுந்து வந்தார்கள். திலகரோ சிறிதும் கலங்கவில்லை. பிரதிநிதிகளைப் பார்த்துக் கையைக் கட்டிக் கொண்டு, மிக்க பொறுமையுடன் மேடைமீது நின்றுகொண் டிருந்தார்.

ஜோடு பறத்தல் :—திலகரைத் தாக்கித் துன்புறுத்தப் பலர் முன் வருவதைக் கண்டு திலகரைக் காப்பதற்காக கோகுலர் விரைந்து எழுந்தார். இதற்குள் தீவிரவாதிகளில் பலர், திலகருக்கு ஆபத்து நேருமென்று அஞ்சி மேடையை நோக்கி ஓடிவந்தனர். அந்தச் சமயத்தில் ஜோடு ஒன்று மேடையை நோக்கிப் பறந்து வந்து, ஸர் பி. மேத்தாவின் கன்னத்தை உராய்ந்துகொண்டு பானர்ஜியின் மீதும் பட்டுக் கீழே விழுந்தது. அவ்விருவருக்கும் சமீபத்தில்தான் திலகர் நின்றுகொண்டிருந்தார். பின்பு மேடையின் மீதும் கீழிருந்தும் பலர் நாற்காலிகளைத் தூக்கித் திலகரின்மீது வீசினர். தீவிரக் கட்சியார் அந்த நாற்காலிகள் வந்து திலகரைத் தாக்காமலிருக்க முயன்றார்கள்.

இதற்கு இடையில் அக்கிராசனர் தமது பிரசங்கத்தைப் படிக்கத்தொடங்கினர். "வேண்டாம், வேண்டாம்" என்று பந்தலின் நான்கு பக்கத்திலிருந்தும் கூச்சல் கிளம்பிற்று. சந்தடியும் கலவரமும் மிகுந்தன. உபசரணை சபையாரும் தலைவர்களும் பந்தலுக்குப் பின்னேயிருந்த ஒரு கூடாரத்திற்குப் போய்விட்டார்கள். தயாராக வெளியே காத்து நின்ற போலீசார் உடனே உள்ளே நுழைந்து எல்லாரையும் வெளியே போகச் சொல்லினர். திலகருக்குத் துன்பம் நேராமல் தீவிரவாதிகள் அவரை அருகேயிருந்த கூடாரத்திற்குக் கூட்டிச் சென்றனர். திலகரைத் தாக்கி எழுதிய குஜராத்தி துண்டுப் பிரசுரங்கள் அன்று காலை பந்தலிலே அனைவருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

கடைசி முயற்சி :—அக்கிராசனர் டாக்டர் கோஷ் தமது பிரசங்கத்தைப் படிக்கா விட்டாலும், வழக்கம் போல் முன்னதாகவே பத்திரிகைகளுக்கு அனுப்பி யிருந்தார். குழப்பம் நேர்ந்தது தெரியு முன்பே கல்கத்தா பத்திரிகைகள் அப்பிரசங்கத்தை அப்படியே வெளியிட்டு

விட்டன. அப்பிரசங்கத்தில் தீவிரக் கட்சியாரைக் குறித்துத் தாக்கிச் சொல்லியிருந்தார். தந்தி மூலம் சூரத்துக்கு அத்தகவல் உடனே கிட்டியது. அது கேட்டதும் தீவிரக் கட்சியார் இன்னும் ஆத்திரம் கொண்டனர். மோத்திலால் கோஷ், லாலா ஹரிகிருஷ்ணலால் முதலிய சிலருக்கோ இன்னும் சமரஸத்தில் நம்பிக்கை யிருந்தது. மறுதினமாவது காங்கிரஸ் நடக்க வேண்டுமென்பது அவர்களின் ஆவல். ஆதலின் திலகரை அடைந்து அவர் கருத்தை அறிந்தனர். அப்போது திலகர் எழுதிக்கொடுத்தது இது:—

திலகர் எழுத்து:—"காங்கிரஸ் மகாசபையின் நலத்தில் எனக்கும் என் கட்சியாருக்கும் மிக்க அக்கறை உண்டு. சமரஸத்தை உத்தேசித்து, டாக்டர் கோஷ் அக்கிராசனராக இருப்பதை நாங்கள் ஆட்சேபிக்காமல் சும்மா இருக்கத் தயார். ஆனால் சுயராஜ்யம், சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக்கல்வி ஆகிய நான்கு தீர்மானங்களையும் உறுதி செய்ய வேண்டும். தீவிரக் கட்சியாரைப் புண்படுத்துவதாக உள்ள பாகங்களை அக்கிராசனப் பிரசங்கத்திலிருந்து எடுத்துவிட வேண்டும்."

அடிதடி:—மோத்திலாலும், லாலா ஹரிகிருஷ்ணனும் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு, மிதவாதத் தலைவர்களுடன் பேசினர். ஆயினும் சமரசம் எதுவும் ஏற்படவில்லை. சூரத் காங்கிரஸ் இவ்விதம் முடிவடைந்தது. சூரத் ஜில்லா மாஜிஸ்திரேட் அன்றையதினம் மாலை இந்தியா கவர்ன்மெண்டுக்கு இந்த மாதிரி தந்தி கொடுத்தார்:—"காங்கிரஸ் மகா சபையின் கூட்டம் இன்றைய தினம் சந்தடியில் முடிந்தது. அடிதடியும் நிகழ்ந்தது. பந்தலுக்கு உள்ளும் வெளியும் உள்ள மனிதர்களை அப்புறப்படுத்துமாறு போலீஸாரை அக்கிராசனர் கேட்டுக் கொண்டார். அவ்விதமே போலீஸார் செய்தனர். இப்பொழுது எல்லாம்

அமைதியாக உள்ளது. ஒருவரும் கைது செய்யப்பட வில்லை. ஒருவருக்கும் பலத்த காயமும் இல்லை.''

உண்மையில் சிலரைப் போலீஸார் கைதுசெய்தனர். அவர்களின்மீது நடவடிக்கை நடத்த உபசரணை சபை யாருக்கு இஷ்டமில்லை. ஆதலின் கைது செய்த நபர்களை போலீஸார் விடுவித்து விட்டார்கள். தீவிரக் கட்சியாரை யும் பால கங்காதர திலகரையும் நமது சென்னைப் பிரதி நிதிகள் பெரிதும் ஆதரித்து நின்றார்கள்.

38. எஜமானிடம் முறையிட

காங்கிரஸ் மகா சபையும் ஜனத் தலைவர்களும் இந்தியாவில் மட்டுமல்லாமல், இங்கிலாந்திலும் கிளர்ச்சி செய்தனர். அங்கு நடந்த கிளர்ச்சியையும் முயற் சியையும் கவனிப்போம். 1832-ஆம் ஆண்டிலேயே ராஜா ராம் மோகன ராய் இங்கிலாந்து சென்றார்; டில்லி ராஜ வமிசத்தின் சார்பாக அங்கே வாதாடினார்; தேச மக்களுக் காகவும் பரிந்து பேசினார். காங்கிரஸ் மகாசபை உதிப் பதற்குச் சிறிது நாள் முன்னதாக ஹியூம் என்பவர் இங்கிலாந்து சென்று, அங்குள்ள பிரமுகரையும் பத்திரிகா சிரியரையும் சிரத்தை கொள்ளுமாறு தூண்டினார்.

"இந்தியாவின் ஆட்சிக்கு நானே பொறுப்பாளி. பார்லி மெண்டு சபை மூலம் கவனித்து வருகிறேன். தர்மகர்த் தாத் தன்மையும் பொறுப்பும் எனக்கே'' என்று அன் றும் சரி, இன்றும் சரி, இங்கிலாந்து உரிமை கொண்டாடு கிறது. தவிர இங்கிலாந்தின் சம்மதம் இல்லாமல், இந்தியா கவர்ன்மெண்டார் காரியஞ் செய்வதும் கிடையாது. ஆதலி னால் இங்குள்ள அதிகார வர்க்கத்துக்கு எஜமானர்களாகவும்,

மக்களுக்குத் தர்மகர்த்தாக்களாகவும் உள்ள இங்கிலாந்தின் ஜனங்களிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டும் என்று ஆதியிலேயே நமது மகாசபை தீர்மானித்தது.

இருவர் சிரத்தை:—வியாபார நிமித்தம் 1845-ஆம் வருஷமே ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி லண்டனுக்குப் போனார்; பல்லாண்டு அங்கேயே வசித்து வந்தார். அப்போது இந்தியாவின் விஷயத்தை அங்குள்ள ஆங்கிலேயருக்கு அவர் எடுத்துச் சொன்னார். காங்கிரஸ் மகாசபை ஏற்பட்டதும், அதன் ஏஜண்டுபோல் அங்கிருந்து உழைக்க அவர் ஆவல் பூண்டார். 1888-ஆம் ஆண்டில் உமேச சந்திர பானர்ஜி, பாரிஸ்டர் நார்ட்டன் ஆகிய இருவரும் லண்டன் போயினர். மூவரும் சேர்ந்து சொல்லவே சார்லஸ் பிராட்லா என்பார் அக்கறை கொள்ளலானார். அப்போது தான் அவரை "இந்தியாவின் மெம்பர்" என்று பரிகாசமாக ஆங்கிலேயரில் சிலர் அழைத்தனர். பரிகாச வார்த்தையைப் பரம உபசார வார்த்தையாகவே கொண்டார் பிராட்லா.

பிரிட்டிஷ் கமிட்டி:—இங்கிலாந்திலே 1889-ஆம் வருடம் ஜூலை மாதம் இந்திய காங்கிரஸ் மகாசபையின் "பிரிட்டிஷ் கமிட்டி" என்பது ஏற்பட்டது. உடனே அதன் செலவுக்காக மகாசபையார் 45 ஆயிரம் ரூபா கொடுத்தனர். அங்குள்ள இந்தியா மந்திரியின் சபையில் (இங்கு வேலை பார்த்து உபகாரச் சம்பளம் பெற்ற) சிவில் ஸர்விஸ்காரரே வேலை பார்த்து வந்தனர். இனத்தை இனம் காக்கும் என்பது பழமொழி. இங்குள்ள ஆட்சி முறையையும், மேற்படி சிவில் ஸர்விஸ்காரரின் போக்கையும் பிரிட்டிஷ் கமிட்டியார் அங்கே எடுத்துச் சொன்னால், இந்தியா மந்திரி சபை மெம்பர்களோ அப்படி யில்லை என்பார்கள். என்ன செய்வது? காங்கிரஸ் மகாசபை பார்த்தது; பார்லிமெண்டு மகாசபை மெம்பர்களிலே பலரின் ஆதரவை நாடியது.

அன்பர் கூட்டம் :—பார்லிமெண்டு சபை மெம்பர்களில் இந்தியாவினிடம் அபிமானங் காட்டுவோரைக் கொண்டு "இந்தியா பார்லிமெண்டு கமிட்டி" என்ற கமிட்டி 1893-ஆம் வருஷம் ஏற்படலாயிற்று. பார்லிமெண்டு சபையில் அப்போது அங்கத்தினராக இருந்த ஸர் வில்லியம் வெட்டர்பர்ன், கெயின் என்னும் இருவரும் அக்கமிட்டி ஏற்படப் பேராதரவாயிருந்தனர். 1894-ஆம் ஆண்டிலே ஹியூம் என்பாரும் இங்கிலாந்துக்குச் சென்று முயன்றார். 154 மெம்பர்கள் அக்கமிட்டியில் சேர்ந்தார்கள். பார்லிமெண்டு சபையில் இந்தியாவைக் குறித்துக் கேள்வி பிறந்தது. இதற்கு இடையில் தாதாபாய் நௌரோஜியும் அச்சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

வெல்பி கமிஷன் :—லார்டு எல்ஜின் என்பார், இங்கே ராஜப்பிரதிநிதியாக இருந்த சமயம், அதிகார வர்க்கத்தார் கை மேலாகி, இஷ்டப்படி காரியம் நடத்தி வந்தனர். தேசத்தின் பண நிலைமையோ பரம சீர்கேடாகக் கிடந்தது. அதனைக் குறித்து விசாரிக்க வேண்டுமென்று காமன்ஸ் சபையிலே நமது நௌரோஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். பார்லிமெண்டு கமிட்டியார் அதனை ஆதரித்தனர். உடனே இந்தியாவின் பண நிலையை ஆராய்ந்து அறிவிக்க "வெல்பி கமிஷன்" என்னும் ஒரு சிறு கூட்டத்தார் நியமனமாயினர். தாதாபாய் நௌரோஜி, வாச்சா, கோகுலர், சுப்பிரமணிய ஐயர், சுரேந்திரநாத பானர்ஜி ஆகிய ஐவரும் அக்கூட்டத்தாரின் முன்பு புள்ளிக் கணக்குக் காட்டி வாதாடினர். பின்பு ஒன்பதாண்டு அக்கமிட்டி ஓய்ந்து கிடந்தது.

அதிகார வேத வாக்கு :—அப்பால் 1906-ஆம் ஆண்டிலே, அக்கமிட்டிக்கு உயிர் ஊட்டினார் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன். பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டிக்கு உயிர் நாடி போல் விளங்கியவர் ஸர் வில்லியமே. 200 மெம்பர்கள்

அப்பார்லிமெண்டு கமிட்டியில் சேர்ந்து, சபையில் வாதாடி வந்தார்கள். நாளடைவிலே, ஆங்கில அன்பர்களான காட்டன், வெட்டர்பர்ன் இவர்களும், நௌரோஜியும் அச்சபையை விட்டு விலக நேர்ந்தது. பிராட்லா, கெயின் முதலிய ஆங்கில அன்பர்கள் காலகதி ஆயினர். ஆகவே, பார்லிமெண்டு கமிட்டி படுத்துவிட்டது. இந்தியாவின் தர்மகர்த்தா என்று இங்கிலாந்து மார்தட்டிப் பேசினாலும், ஆங்கில மகாஜனங்களிலும் சரி, பார்லிமெண்டு மெம்பர்களிலும் சரி, அநேகமாக அனைவருக்கும் சிரத்தை என்பது கம்மி. இந்தியாவின் விஷயத்தைக் கவனிக்க அவகாசமும் கிடையாது. இங்கே வேலையை விட்டு விலகிய அதிகாரிகளின் வாக்கே வேத வாக்காக விளங்கும்.

'இந்தியா' பத்திரிகை:—ஆதலின், அங்கே ஓயாமல் பிரசாரஞ் செய்ய 'இந்தியா' என்னும் பத்திரிகையைப் பிரசுரிக்க நமது மகா சபையார் ஏற்பாடு செய்தனர். அதன்படி பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவிலே 'இந்தியா' என்ற பத்திரிகை 1900-ஆம் வருஷம் உதயமாயிற்று. வில்லியம் டிக்பி என்பார் முதலில் அதனைத் திறமையாக நடத்தி வந்தார்; பின்பு காட்டன் என்பார் நடத்தி வரலானார். இந்தியாவின் நிலையை உள்ளது உள்ளபடி புள்ளிக் கணக்குடன் அப்பத்திரிகை பிரசுரித்து வந்தது. அது கண்டு, "இந்தியாவின் நிலை இப்படியா?" என்று ஆங்கிலேயரில் சிலர் பிரமித்தனர்; பரிவு கொண்டனர். பதினாயிரக் கணக்கில் அப்பத்திரிகைக்குச் செலவாயிற்று. அச் செலவை நமது சபையாரே ஏற்று நடத்திவந்தனர். ஆங்கில மகாஜனங்களுக்கு ஓரளவு விழிப்புண்டாயிற்று. இங்குள்ள இந்தியா கவர்ன்மெண்டும் முன்போல் இருக்க முடியவில்லை.

இட்டது சட்டம்:—தேயிலைத் தோட்டங்களிலே ஐரோப்பிய மானேஜர்கள் 'இட்டதே சட்டம்', செலுத்தி

யதே செங்கோல்' என்றிருக்கும். ரயில் வண்டிகளிலே முதல் வகுப்பில் பிரயாணஞ் செய்யும் இந்தியருக்கும் ஐரோப்பியரால் அவமதிப்பு நேரும்; போலீஸாரின் ஊழலும் தலைமிஞ்சி நிற்கும். சில அதிகாரிகளோ பெரும் பிழைகள் செய்வர். இவற்றிற்கு ஏற்ற பரிகாரம் கிடைப்பதும் அருமை. பிரிட்டிஷ் கமிட்டியும் இந்தியா பத்திரிகையும் சும்மா இரா. விஷயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வரும். பார்லிமெண்டு சபையிலே கேள்வி பிறக்கும். ஸிவில் ஸர்விஸ் என்ன, நீதி நிர்வாகப் பிரிவினை என்ன, சட்டசபைத் திருத்தமென்ன, அரசாங்கத்தின் அபாரமான செலவென்ன முதலிய பல விஷயங்களையும் ஆங்கில மகா ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கண்டுகொள்ளலாயினர்.

மற்றோர் உபாயம்:—இங்கு நம்மவரின் திக்கற்ற நிலையையும் ராஜீய ஆசாபாசங்களையும், ஆங்கில மகா ஜனங்களுக்கு அவ்வப்போது அறிவிக்க, மகாசபை மற்றோர் உபாயத்தையும் மேற்கொண்டது. வர்த்தக நிமித்தம் லண்டனில் வசித்து வந்த தாதாபாய், தம்மாலான பிரசாரம் செய்து வந்தார். இங்கிருந்து தூதுகோஷ்டியும் அங்கே போயிற்று. முதன் முதல் 1885-ஆம் ஆண்டு தூதுக் கோஷ்டியை 'நாஷனல் யூனியன்' என்னும் சபை அனுப்பியது. அக்கோஷ்டியில் சென்றோர் மூவர். அவர்கள்:— (1) வங்காளத்திலிருந்து மனமோகன கோஷ்; (2) பம்பாயிலிருந்து கணேச நாராயண சந்தாவர்க்கர்; (3) சென்னையிலிருந்து சேலம் ராமசுவாமி முதலியார். காங்கிரஸ் மகா சபையின் தூதுக்கு அம்மூவரையும் முன்னணி எனலாம்.

தூதுக் கோஷ்டி :—காங்கிரஸ் மகாசபையின் சார்பாக முதன் முதல் 1889-ஆம் ஆண்டில், தூது சென்றோர் பதின்மர். அவர்கள்:— (1) ஆண்ட்ரூ யூல்; (2) ஹியூம்;(3) ஜான் ஆடம் ; (4) பாரிஸ்டர் நார்ட்டன் ; (5) பிரோஸ் ஷா

மேத்தா; (6) சுரேந்திரநாத பானர்ஜி; (7) மனமோகன கோஷ்; (8) மூட்தால்கர்; (9) உமேச சந்திர பானர்ஜி; (10) ஷர்புத்தீன். இவர்கள் அங்கே செய்த வேலை அபாரம். முதலாவதாக, பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி ஏற்பட்டது. இரண்டாவதாக, பானர்ஜியோ, தமது பிரசங்க வன்மையினால் ஆங்கிலேயரின் மனத்தைக் கவர்ந்தார். அன்னியர் இவ்வளவு அழகாக ஆங்கிலம் பேசுகிறாரே என்று அனைவரும் வியந்தனர்.

உயர்ந்த கௌரவம்:—அந்தத் தூதுக் கோஷ்டியின் வேலையினால்தான், இந்திய அரசியலைத் திருத்த பிராட்லா என்பவர் கொண்டுவந்த மசோதாவுக்கு ஆதரவு கிட்டியது. அதைக் கண்டே ஆங்கில அரசாங்கம் தானே ஒரு மசோதா கொண்டுவந்து, சட்டசபைகளில் நம்மவரை நியமன மூலம் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள இசைந்தது. அப்போது கிளாட்ஸ்டன் என்பார் பேசியதாவது:—

"இந்தியாவில் தோன்றியுள்ள தேசிய இயக்கம் சட்ட சம்மதமானது; ராஜ பக்தி வாய்ந்ததுமாகும். காங்கிரஸ் மூலம் இந்திய மக்களின் நியாயமான தேவைகளை நாம் அறிய முடிகிறது. எனக்கு அதனிடம் மனப்பூர்வமான அபிமானம் உண்டு. அதனுடன் சம்பந்தப்படுதல் உயர்ந்த கௌரவமேயாம்."

சதா தேச நிலை:—அப்பால் 1890-ஆம் வருஷம் மற்றொரு தூதுக்கோஷ்டி, மகா சபையின் சார்பாகச் சென்றது. அதில்:—(1) ஆண்ட்ரூ யூல்; (2) பிரோஸ் ஷா மேத்தா; (3) உமேச சந்திர பானர்ஜி; (4) ஜான் ஆடம்; (5) மனமோகன கோஷ்; (6) ஹியூம்; (7) காளி சரண பானர்ஜி; (8) தாதாபாய் நௌரோஜி; (9) கரே, ஆகிய தலைவர்கள் போயினர். நௌரோஜியும், உமேச சந்திரரும் லண்டனிலேயே வசித்து வந்தார்கள். சதா இருவருக்கும் அங்கே

தேச நினைவுதான். தூதனுப்பவேண்டும் என்று சொன்னவர்களும் அந்த இருவரேயாம். பணத்தையும் சிரமத்தையும் பாராமல், இருவரும் தமது வாழ்வை தேச சேவைக்கே அர்ப்பணம் செய்த புண்ணிய புருஷர்கள். இக் கோஷ்டியாரும் அங்கே பிரமாதமாகக் கிளர்ச்சி செய்தனர்.

கணக்கில் புலிகள்:—பின்பு 1898-ஆம் ஆண்டு மற்ருெரு கோஷ்டியார் போயினர். அவர்கள்:—(1) வாச்சா; (2) கோகுலர்; (3) சுரேந்திர நாத பானர்ஜி. இந்தியாவின் செலவைக் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கமிஷன் முன்பு, அம் மூவரும் ஆணித்தரமாக சாட்சியங் கொடுத்தனர். இம்மட்டோ! கோஷ்டியின் மேல் கோஷ்டி வருவதும், பிரசாரம் செய்வதும் கண்டு, ஏற்கெனவே ஆங்கிலேயருக்கு நமது மகா சபையிடம் ஓரளவு மதிப்பு இருந்தது. அம் மூவரின் சாட்சியமும் பேச்சும் அம் மதிப்பைப் பெருக்கின; வாச்சாவும், கோகுலரும், புள்ளிக் கணக்கில் புலிகள்! பானர்ஜியோ காளமேகம்போல் பிரசங்கம் பொழிவதில் நிகரற்றவர்.

வணங்காமுடி மன்னன்!:—அதற்கு அடுத்தபடியாக 1904-ஆம் ஆண்டிலும் இருவர் இங்கிருந்து தூதுபோயினர். இருவரும் கோபால கிருஷ்ண கோகுலர், லாலா லஜபதிராய். லஜபதியும் நல்ல பிரசங்கி; வாத பூர்வமாக விஷயத்தை வற்புறுத்துவதில் கோகுலர் மிக வல்லவர். இவரது சொல் வன்மை கண்டு, வணங்காமுடி மன்னவன்போல் விளங்கிய லார்டு கர்ஸானும் பிரமித்துப் போனர்; வாதத்துக்கு வாதம் சொல்ல இயலாமல், கோபமே காட்டினர். மறு வருஷம், (அதாவது 1905-ஆம் ஆண்டிலும்) கோகுலர் தூது சென்று அங்கே பிரசாரம் புரிந்தார். இது நிற்க.

39. புதிய இந்தியா பேசுகிறது!

சூரத் நகரில்தான் ஆங்கிலேயர் ஆதியில் முதல் பண்டசாலை கட்டிக் கொண்டனர். மொகலாயரின் ஆட்சிக் காலத்தில், மேனாட்டு வியாபாரத்துக்கு அந் நகரமே நாயகம். அங்குத்தான் கப்பல் படை கொண்டும் கை மேலாகப் பார்த்தான் சிவாஜி சத்திரபதி. அத்தகைய நகரில் மிதவாதிகள், அமிதவாதிகள்—ஆகிய இருவரும் கைகலந்து சண்டை செய்தனர். அடிதடியும் கொஞ்சமல்ல. காரணம் சுயநலமன்று; தேச நலமேயாம். அன்னிய அரசை அண்டி நின்று, சிறிது சிறிதாகச் சீர்திருத்தம் பெறலாம் என்பதே மிதவாதிகளின் கொள்கை. அண்டி நின்று மண்டியிட்டது போதும் என்பதே அமிதவாதிகள்—(அல்லது தேசியக் கட்சியாரின்) நோக்கம். தேசியக் கட்சியின் திலகமான திலகர் கூறியதாவது:—

பரிகார மார்க்கம்:—"தற்போதுள்ள அரசு நமக்கு ஏற்கவில்லை. ராஜ்யத்திலே தயை அல்லது தர்மம் என்பது ஏது? இங்கிலாந்திலுள்ள ஆங்கில மக்களுக்கு 25 வருஷ காலமாகச் சொல்லிப் பார்த்தார் தாதாபாய் நௌரோஜி; கிடைத்த பதில் என்ன? வங்காளப் பிரிவினை, தேசப் பிரஷ்டம், சிறைவாசம், ஆயுதச் சட்டம், வாய்ப்பூட்டுச் சட்டம், ரெகுலேஷன் சட்டம்! 82-வது வயதில் தாதாபாய் ஏமாற்றம் அடைந்தார். கோகுலருக்கு இன்னும் ஏமாற்றம் பிறக்கவில்லை. இன்னும் 80 வருஷம் காத்திருக்கப் போகிறார்! பின்பே ஏமாற்றம் கொள்வார்போலும்! புதிய கட்சி அவ்விதம் காத்திருக்கப் போவதில்லை. மனுச் செய்து நிற்பதில் பரிகாரம் பிறக்காது. பகிஷ்காரம், சுதேசியம், தீவிரக் கிளர்ச்சி இவற்றில் கதிமோட்சம் காணலாம்."

மார்லி கருத்து :—பஞ்சத்தால் தேசம் பரிதபிக்கிறது, மக்களுக்கு மனத் தாளாக் குறைகள் உள என்றால், அவ்விஷயம் உடனே இங்கிலாந்துக்கு எட்டாது. சூரத்தில் பிளவு, காங்கிரசில் அடிதடி எனும் விஷயம் உடனே தந்தி மூலம் இங்கிலாந்துக்குப் பறந்தது. "சூரத் நகரம் உண்மையில் கள்ளுக்கடை" என்று தந்தி பறக்க, 'பால்மால் கெஜட்' எனும் பத்திரிகை கொட்டை எழுத்தில் பிரசுரித்தது. அப்போது இந்தியா மந்திரியாக இருந்தவர் லார்டு மார்லி. இவர் தமது குறிப்பு நூலில் கூறியிருப்பது இது:—"காங்கிரஸ் படுத்துப்போகும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் கொந்தளிப்பில் முடிந்துளது. அதன் பலன் என்ன? மிதவாதிகள் தோற்று விழ, அமிதவாதிகள் வாகை சூடிவிட்டார்கள். காங்கிரஸ் சிதறிப்போய்விடவில்லை. வருங்காலத்தில் அமிதவாதிகளின் சபையாகவே ஆகிவிடும்."

நிருபரின் வர்ணனை :—சூரத் காங்கிரஸிலே மேடைமீதேறித் திலகர் பேசத் தொடங்கியதை, "புதிய இந்தியா பேசத் தொடங்கியது" என்று ரூதர்போர்டு எனும் ஆங்கிலேயர் வர்ணித்தார். அச்சமயம் அங்கிருந்த நேவின்ஸன் எனும் ஆங்கில நிருபர் தாம் எழுதியுள்ள 'இந்தியாவில் புதிய உணர்ச்சி' எனும் நூலில் இவ்வாறு கூறியுள்ளார் :—

"திடீரென ஒன்று ஆகாயத்திலே பறந்து வந்தது. அது ஒரு ஜோடு, மகாராஷ்டிர ஜோடு, சிவப்பு நிறம் வாய்ந்தது, அடியிலே இரும்பாணி வைத்துத் தைத்தது! பானர்ஜியின் கன்னத்தில் அது தாக்கியது; ஸர் பிரோஸ் ஷா மேத்தாவின் தலையை உராய்ந்துகொண்டு சென்றது. பறந்து சென்று அப்பால் போய் விழுந்தது; உடனே, சொல்லிவைத்ததுபோல் வெள்ளைத் தலைப்பாகைக்காரர் குதித்துக்கொண்டும், தாண்டிக்கொண்டும், கோபக்குறி கொண்டும் நீண்ட தடிக் கம்புகளை வீசி மிதவாதிகளாகத்

தோன்றுவோரை அடித்துக்கொண்டும் மேடையை நோக்கி வந்து குவிந்தனர். புதிய இந்தியா பிறந்துளது என்பதற்கு ஓர் அறிகுறி கண்டேன்.''

இரு பெரிய சமூகம் :—மகாசபை கலைந்ததும், அரவிந்த கோஷின் தலைமையில் தீவிரக் கட்சியார் கூடினர். கட்சியின் நோக்கத்தையும் வேலையையும் கோஷ், திலகர் இருவரும் எடுத்துரைத்தனர். திலகரோ பெரிய கல்விமான்; இரும்பு நெஞ்சு படைத்தவர்; பேச்சு வன்மை வாய்ந்தவர்; கிளர்ச்சி செய்வதில் ஈடும் எடுப்பும் இல்லாதவர்; மகாராஷ்டிரத்தின் ஆண்மைக்கு அடையாளமானவர். அந்த மகாராஷ்டிரர்தாம் மொகலாய வல்லரசுடன் முடிவு வரையில் மல்லுக்கு நின்றார்கள். ஆங்கிலக் கம்பெனியார், அரசாங்கத்தார் இவர்களுடனும் கடைசி வரையில் கடும் போரும் விளைத்தார்கள். ''மொகலாய அரசைக் கவிழ்க்க சித்பவன் பிராமணர் அன்று முயன்றது போலவே, இன்றும் பிரிட்டிஷ் அரசை எதிர்க்கின்றனர். பண்டிதர் எனும் பிராமண சமூகம், சித்பவன் பிராமண சமூகம் இரண்டையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சமாளிக்க வேண்டும்,'' என்று ஓர் ஆங்கில நூலாசிரியர் எழுதியுள்ளார்.

இந்திய மயமாக்க :—''காங்கிரஸ் மகாசபைப் பிரமுகர்களின் மனம் மேனாட்டு மோகத்தில் மூழ்கிக் கிடந்தது. படித்த வகுப்பாரையே கொண்டதாகவும் இருந்தது. பார்த்தார் திலகர்; அம்மோகத்தை நீக்கி, தேச இயற்கைக்கு ஏற்ப மாற்றியமைக்கவே பெரிதும் விரும்பினார்; அதாவது காங்கிரஸை இந்திய மயமாக்க விரும்பினார். பாமரர் என்போரையும் கொண்டுவந்து சேர்க்கக் கருதினார்'' என்று அரவிந்த கோஷ் வரைய நேர்ந்தது. புதிய தேசீயக் கட்சியின் நோக்கம் என்னவென்றால்:—

(1) காங்கிரஸ் மகாசபை படித்த வகுப்பாரின் சபையாக இருத்தலாகாது; படித்தோர், பாமரர் ஆகிய அனைவரும் அடங்கிய மகா சபையாக விளங்குதல் வேண்டும். (2) மனுப் போட்டு வேண்டிக்கொள்வதை விடுத்து, சட்ட வரம்புக்கு உட்பட்ட புதுமாதிரியான கிளர்ச்சி செய்தல் வேண்டும். (3) பாமர மக்களைத் தட்டி எழுப்ப உருவான நிர்மாண வேலைத் திட்டம் வேண்டும். (4) தேசத்தின் பொருளாதார மூலம் மக்களுக்குப் பயன்பட வேண்டும்; அதாவது சுதேசியம். (5) ராஜீயத் துறையில் இங்கிலாந்தை எதிர்க்கவும், இந்தியக் கைத்தொழில்களைப் பாதுகாக்கவும், பகிஷ்காரத்தை ஓர் ஆயுதமாகக் கொள்ளவேண்டும். (6) பாமர மக்கள், ராஜீயத்திலும் பொருளாதாயத்திலும் முன்னேற்ற மடைய தேசத்திலே வெகு தீவிரமான கிளர்ச்சி செய்தல்வேண்டும்."

மிதவாத ஒழுங்கு:—மிதவாதிகளும் சும்மா இருக்கவில்லை. சூரத்தில் மகாசபை குலைந்ததும், மறுதினம் (அதாவது டிசம்பர் 28-ந் தேதி, 1907) மேத்தா, கோகுலர், வாச்சா, பானர்ஜி, மாளவியா, லஜபதி, வி. கிருஷ்ணசாமி ஐயர் முதலிய நூறு பேர்கள் கூடினர். ராஷ் விகாரி கோஷ் தலைமை வகித்தார். அப்போது, தங்கள் கொள்கையை இவ்வாறு வகுத்தனர்:—"(1) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் குடியேற்ற நாடுகளில் இருப்பதுபோன்ற சுய ஆட்சி முறை அடைவதே நமது ராஜீய ஆசையின் லட்சியம். (2) தற்போதுள்ள அரசியலில் நிலையான திருத்தங்கள் ஏற்படவும், தேசிய ஒற்றுமை உண்டாகவும், பாமரரின் நிலை உயரவும், கண்டிப்பாய் சட்ட சம்மதமான வழியிலேயே அந்த லட்சியத்தை நோக்கி முன்னேறுதல். (3) இக் கருத்து கைகூடுவதற்காக நடக்கும் கூட்டங்கள் எல்லாம் ஒழுங்காக நடக்கவேண்டும்.''

சபைக்குரிய விதிமுறை:—காங்கிரஸ் மகா சபையின் நோக்கமும் லட்சியமும் 'அவையாம்' என்று மிதவாதத் தலைவர்கள் அறிக்கை செய்தார்கள். சூரத் காங்கிரஸுக்கு வந்திருந்த 1600 பிரதிநிதிகளில் சுமார் 900 பேர்கள் அதற்கு ஒப்பினர். அதன்மேல் காங்கிரஸ் மகா சபைக்கு விதிமுறைகள் தயாரிக்கும் வண்ணம் ஒரு கமிட்டி ஏற்பட்டது. அக் கமிட்டியார் 1908 ஏப்ரல் 18, 19-ந் தேதிகளில் அலகபாத் நகரில் கூடினர். விதிமுறைகள் தயார் ஆயின. குடியேற்ற நாடுகளில் இருப்பதுபோன்ற ஆட்சிமுறை ஏற்படுவதே மகாசபையின் லட்சியம் என்பதில் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் கையெழுத்துப் போடவேண்டும் என்பதே, விதிமுறையில் முக்கியமானது. சூரத்தில் கூடாது போன 23-வது காங்கிரஸை எங்கே கூட்டுவதென முதலில் திகைப்பாய் இருந்தது. கோபால கிருஷ்ண கோகுலர் வேண்டிக் கொள்ளவே, நமது சென்னை வி. கிருஷ்ணசுவாமி ஐயர் முன் வந்து, மகா சபையை நடத்த ஒப்புக்கொண்டார். 1908-ஆம் வருஷக் கடைசியில், சென்னையிலே காங்கிரஸ் கூடு முன்பு, தேசக் கொதிப்பையும் கூறுதல் அவசியம்.

---

40. வங்கத்தின் தீரம்

வங்காளப் பிரிவினையே சுதேசி இயக்கத்துக்கு மூலாதாரம். உண்மையிலே ஒரு நாழிகையில் 70 ஆயிரம் ரூபாய் கல்கத்தாவிலே வசூலாயிற்று. ராஜாக்களும் ஜமீன்தார்களும் ஒரு சிறிதே கொடுத்தனர். ஏழைகளில் அனைவரும் ஒருவரும் தவறாமல் தந்துதவினர். சுதேசிய இயக்கம் எல்லாரையும் (குழந்தைகள் உள்பட) கவர்ந்தது. இரண்டு மூன்று உதாரணங்கள் தருவோம்:—

ரிப்பன் கலாசாலையிலே பரீட்சை நடந்தது. மாணவர் அனைவரும் காகிதத்திலேயே விடை எழுதவேண்டும். பரீட்சாதிகாரிகள் அன்னிய தேசக் காகிதங் கொடுத்தார்கள். ஒரு பையன்கூட அக் காகிதத்தில் எழுதவில்லை. எல்லாரும் மறுத்தனர். முடிவில் வேறு சுதேசி காகிதங்கள் கொடுத்தார்கள் அதிகாரிகள்.

குழந்தைகளின் ஆவேசம்:—சுரேந்திர நாத பானர்ஜி யின் பேத்தி யொருத்தி. (வயது ஐந்துதான். வங்கத்திலே பெண்ணும் குழந்தையும் காலில் ஜோடு அணிந்துகொள்வது வழக்கம்.) அக்குழந்தைக்கு ஒருவர் ஒரு ஜோடி ஜோடு அனுப்பினார். அதை அக் குழந்தை உற்றுப் பார்த்தது. "தாத்தா! வேண்டாம்; இது அன்னிய ஜோடு! எனக்கு ஏன்?" என்று எறிந்துவிட்டது.

ஆறு வயதுக் குழந்தை யொருத்திக்கு ஒரு வைத்தியர் சிகிச்சை செய்துவந்தார். குழந்தைக்கு ஜன்னி கண்டது. ஜன்னி கண்டால் வாய்க்கு வந்தவாறு பேசுதல் இயற்கை. ஜன்னி கண்ட அக் குழந்தையோ, "ஐயா! எனக்கு வேண்டாம் அன்னிய மருந்து; வேண்டாம் அன்னிய மருந்து!" என்று பிதற்றியதாக வைத்தியர் தம்மிடம் கூறியதாய், சுரேந்திர நாத பானர்ஜி தமது நூலில் எழுதியிருக்கிறார்.

பகிஷ்கார வேகம்:—வங்காளப் பிரிவினையின் காலத்தில் கிழக்கு வங்காள கவர்னரா யிருந்த ஸர் புல்லர் என்பார் ஒரு சமயம், "எனக்கு இரண்டு பெண்டாட்டிகள். ஒரு பெண்டாட்டி ஹிந்து; மற்றொரு பெண்டாட்டி முகம்மதியர். இரு பெண்டாட்டிகளில் முகம்மதியரிடமே எனக்குப் பிரியம் அதிகம்" என்று பேசினார். ஒரு சமயம் பரீத்பூர் எனும் நகருக்கு விஜயம் செய்தார். அந்த நகரில் ஜனத் தலைவராக விளங்கியவர் பாபு அம்பிகா சரண மஜும்தார். ரயிலடி சேர்ந்ததும், ஒரு போர்ட்டர் கூடக் கிடைக்கவில்லை கவர்ன

ரின் மூட்டை முடிச்சுகளைத் தூக்க. பின்பு போலீசாரே கவர்னரின் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச் சென்றனர்.

மகாநாட்டைக் கலைத்தல்:—அவ்விதம் சுதேசிய இயக்கமும், பகிஷ்காரமும் முற்றவே, அடக்குமுறைகள் ஆர்ப்பரிக்கலாயின. பாரிஸால் நகரிலே வங்காள மாகாண ராஜீய மகாநாடு நடைபெற்றது. அக்கிராசனர் அப்துல் ரஸூல். பலாத்காரமாக அம் மகாநாட்டைக் கலைத்தனர். நீண்ட தடிகொண்டு ஒரு பையன் தாக்கப்பட்டான்; உடம்பெல்லாம் காயம். அவனைத் தூக்கி அருகே இருந்த குளத்தில் எறிந்து விட்டனர். நல்லவேளையாக ஒருவர் அப்பையனை எடுத்துக் கரையில் போட்டார். இல்லாவிட்டால் பையன் மாண்டே போயிருப்பான். அத்தகவல் எட்டியதுதான் தாமதம்.

சென்னையில் கூட்டம்:—நமது சென்னைமா நகரிலே எஸ்பிளனேட் மைதானத்தில் பிரமாண்டமான கூட்டம் கூடியது. கூட்டம் கூடுவதற்கு வெகு நேரத்துக்கு முன்னிருந்தே மக்கள் வந்து குவியத் தலைப்பட்டனர். பதினாயிரம் பேருக்கு மேல் வந்து குவிந்தனர். வந்தே மாதர கோஷம் வானை முட்டியது. பாரிஸால் மகாநாட்டைக் கலைத்ததும், அடக்குமுறையைக் கையாளுவதும் தகாது தகாது என்பதாக கனம் நவாப் ஸையத் முகமது பிரேரிக்க, டாக்டர் டி. எம். நாயர் ஆதரித்துப் பேசினார். இந்தியா மந்திரிக்கும் உடனே தந்தி பறந்தது.

புரட்சி இயக்கம்:—பாரிஸால் மகாநாடு கலைக்கப்பட்ட பின்பே, வங்காளத்தில் புரட்சி இயக்கம் உதிக்கலாயிற்று. இரண்டு இளைஞர் வந்து, கவர்னரைச் சுட விரும்பியதை சுரேந்திரநாத பானர்ஜிக்கு அறிவித்தனர். அவரோ வேண்டாம் என்று தடுத்தார். அத்துடன் அவ்விளைஞர் அடங்கினர். "ஆயினும் புரட்சி இயக்கம் அடங்கவில்லை. ஸர் புல்லருக்குப் பின் கவர்னராக வந்தவர் ஸர் ஆண்ட்ரூ

பிரேஸர். வங்காளப் பிரிவினைக்குக் காரணபுருஷரில் அவர் ஒருவர்; தவிர, ஜனபிமானம் என்பதைச் சிறிதும் பெருத வர். அவருடைய நிர்வாகப் போக்கோ வெகு விபரீதம்; அவர் ஏறி வந்த ரயில் வண்டி வெடித்துப் போகவேண்டும் எனும் நோக்கத்துடன் வெடி குண்டு சம்பவம் நடக்க லாயிற்று.''

வெடி குண்டு கிளம்பல்:—1908-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி கல்கத்தா வாசிகள் திக்பிரமை கொண்டார்கள். இரண்டு ஐரோப்பிய ஸ்திரீகள் வெடி குண்டுக்கு இரை ஆயினர். அந்த இருவரும் காங்கிரசினிடம் அபிமான முள்ள கென்னடி எனும் ஆங்கிலேயரின் மனைவியும், மக ளும் ஆவர். புரட்சியாளருக்கு கிங்ஸ்போர்டு எனும் ஜில்லா கலெக்டர் மீதே கண். சுதேசிய ஊழியருக்கு இவர் கடுமையான தண்டனை விதித்தவர்; ஓர் ஊழியரைப் பிரம்பு கொண்டு அடிக்கும்படி தண்டனை கொடுத்தவர். இவரைக் குறிவைத்த புரட்சிக்காரர் தவறிப்போய் அம்மாதரின் மீது குண்டு போட்டனர்; வெடி குண்டு போட்டவரிலே ஒருவ ரான குதிராம்போஸ் தூக்கி லிடப்பட்டார். மற்ருருவ ரான பிரபுல்லா என்பவரோ தன்னைப் போலீசார் பிடிக்க வரும்பொழுது, தாமே சுட்டுக்கொண்டு இறந்தார்.

நாடு கடத்தல்:—வெடி குண்டு சம்பவத்துக்குப் பின், சில சதிகள் நடந்தன. அவற்றை அதிகாரிகள் கண்டு பிடித்து, சதிகாரருக்கு மிகக் கடுமையான தண்டனை விதித் தார்கள்; உடனே அதிகாரிகளுக்கு அச்சமும், திகிலும் உதித்து விட்டன. ஒன்றன்பின் ஒன்ருக அடக்கு முறை கள் தோன்றின. ராஜத்துவேஷ குற்றத்திற்காக இருபது பேர் தண்டிக்கப் பட்டனர். பத்திரிகைச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எல்லாம் ஒடுங்கிவிட்டன. ரெகுலேஷன் எனும் சட்டத்தைக் கொண்டு வங்கத் தலைவர்களிலே ஒன்பதின்மர்

நாடு கடத்தப் பட்டனர். அவர்களில் ஒருவர் அசுவினி குமார தத்தர்; பாரிஸால் ஜில்லாவின் தலைவர். சுதேசிய இயக்கத்தின் உயிர்நிலை போன்றவர். மற்றொருவர் கிருஷ்ண குமார மித்திரர். இவர் பரம சாது. புத்தரைப்போல் அஹிம்சா வாதி. மகாஜனங்களுக்குத் தந்தை போன்றவர். இன்னொருவர் சதிஷ் சந்திர சட்டர்ஜி. இவர் பிரம்மசாரி; தேச சேவைக்கே வாழ்வை அர்ப்பணம் செய்தவர். பேராசிரியர். வேறொருவர் சுபோத மல்லிகர். இவர் பெரிய பணக்காரர்; ஒன்பதின்மரிலே எவரும் புரட்சி என்பதைக் கனவிலும் கருதாதவர்; பாபு சுரேந்திர நாத பானர்ஜி பூபேந்திரநாத வசு இவர்களையும் நாடு கடத்துவதாக யோசனை இருந்தது.

அதிகாரிகளைக் கடத்தலாம்:— அடக்கு முறையும், புரட்சி இயக்கமும் போட்டி போட்டுக் கொண்டு ஓங்கி வருகையில், இந்தியா மந்திரியான லார்டு மார்லியும் பிரமித்துப் போனார். ராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு மிண்டோவுக்கு அவர் எழுதியது:-"ஒன்று உங்களை வேண்டிக் கொள்வேன். எதிரியின் முன்னிலையில் அல்லாமல் விசாரணை என்பது நடக்கக்கூடாது. நாம் பிரமாதமாகத் தாங்கிப் பேசலாம்; ஆயினும் அது ருஷிய முறை. பலரும் கண்டு அவலட்சணமாக நினைப்பர்."

தலைவர்களை நாடு கடத்தும் யோசனையைக் குறித்து அவர் எழுதியது இது :—" துருப்பிடித்த ஆயுதமான ரெகுலேஷன் என்னும் வாளாயுதம் உளதே. அதைக் கொண்டு அந்த இரண்டு அதிகாரிகளையும் (அதிகாரிகள் யார் என்று அம்பலத்துக்கு வரவில்லை. ஆனால் அந்த இருவரும் ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை அங்கத்தினர் என்பது மட்டும் வெளிப்படை.) நாடு கடத்திவிட்டால் என்ன? உங்கள் கருத்து யாது? அவ்விதம் செய்யின், அந்த நடவடியை

நான் உற்சாகத்துடன் பலமாக ஆதரிப்பேன்!" தக்க காரணம் இல்லாமல், யாரையும் நாடு கடத்தக்கூடாது என்பதே மார்லியின் கருத்து.

சீர்திருத்த யோசனை:—ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது என்பர். காங்கிரஸில் பிளவு தோன்றியது கண்டு, அதிகாரிகளில் சிலர் ஆனந்தம் அடைந்தனர். அடக்கு முறைகளுக்கும் காரணராயினர். என்றாலும், மார்லியோ வேறுவிதமாக நினைத்தார். சூரத் பிளவில் அமிதவாதிகளுக்கே எடுப்பு என்பது அவர் கருத்து. புரட்சி இயக்கம் உலக சரித்திரத்திலே இயற்கை என்பதும் அவர் அபிப்பிராயம். ஆயினும் மிதவாதிகளைச் சரிப்படுத்தி அணைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமென அவர் முற்பட்டார். உடனே ராஜப்பிரதிநிதியான லார்டு மிண்டோவுடன் கலந்து அரசியலில் திருத்தம்செய்ய உத்தேசித்தார். அதன் சாரம்:—(1) இந்தியா மந்திரியின் சபையிலும், ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையிலும் இந்தியனை நியமித்தல்; (2) சட்ட சபைகளிலே ஜனப் பிரதிநிதிகளை அதிகமாக நியமிப்பது; (3) வரவு செலவைக் குறித்துப் பேசும் உரிமை தருதல்.

41. மிதவாத காங்கிரஸ்

இத்தகைய நிலையில் நமது சென்னை நகரிலே 1908-ஆம் ஆண்டு டிசம்பர் 28, 29, 30 தேதிகளில் 23-வது (மிதவாத) காங்கிரஸ் நடைபெற்றது. மௌண்ட் ரோட் எல்பின்ஸ்டன் தோட்டத்தில் பெரிய பந்தல் போட்டனர். புதிய விதிகளின்படி 626 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். திவான்பகதூர் கிருஷ்ணசுவாமி ராவ் உபசரணை சபையின் தலைவராக இருந்தார். டாக்டர் ராஷ் விகாரி கோஷ் அக்கிராசனம் வகித்தார். கோஷ் பேசியதின் சாரம்:—

கோஷின் பேச்சு:—"காங்கிரசைக் காக்கவே புதிய விதி முறைகள் செய்தோம். தேசத்திலே ஒன்றன்பின் ஒன்றாக அடக்கு முறைச் சட்டங்கள் உதித்துள. சட்டமில்லாச் சட்டத்தினால் பலர் நாடு கடத்தப்பட்டுளர். சீர்திருத்தம் தர லார்டு மார்லி எண்ணியுள்ளார். பொறுப்பில்லாத யதேச்சாதிகாரமான ஆட்சிக்குப் பதிலாக சட்ட சம்பந்தமான அரசியல் போன்ற ஒன்று நமக்குக் கிடைக்கப் போகிறது. சதியாலோசனைக் குற்றங்கள் காரணமாக அடக்கு முறைச் சட்டங்கள் தோன்றியுள. அடக்கு முறையின் பலனாக அவநம்பிக்கையும் சந்தேகமுமே உதிக்கும். ராஜத்துவேஷத்திற்காக 20 பேர் தண்டிக்கப்பட்டுளர். உணர்ச்சி ஓங்குகையில் அவ்விதம் தண்டனை யடைந்தோர் வீரத் தியாகிகளாக மதிக்கப்படுகின்றனர். ராஜத்துவேஷம் என்பதில் எந்த ராஜீயக் கிளர்ச்சியையும் அடக்கிவிடலாம். ராஜத்துவேஷ விசாரணையிலே ஜூரிகளை நியமிப்பதில்லை. பழங்காலத்திய அநாகரிகச் சட்டமான ரெகுலேஷன்

ரத்தாகுமாக. ஒரு காலத்தில் சுய ஆட்சி கிட்டும். அக்காலமோ தொலைவில் உள்ளது. வாலிபர் வந்து தேச சேவையை ஏற்றுக் கொள்வரென எண்ணுகிறேன். வயோதிகரான நாங்களும், ஏதோ எங்களாலானதைச் செய்துள்ளோம் என்பதை அவர்கள் உணர்வார்களாக."

ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி முடி சூடி, விக்டோரியா ராணியின் வாக்குறுதியை மீண்டும் உறுதி செய்ததற்காக ராஜபக்தித் தீர்மானம் செய்யப்பட்டது. லார்டு மார்லியின் சீர்திருத்த யோசனைகளையும் பாராட்டி வந்தனம் கூறி ஒரு தீர்மானம் பிறந்தது. அதன் மேல் சுரேந்திர நாத பானர்ஜி பேசியதின் சாரமாவது :—

வங்கத்தின் நிலைமை :—"நடைமுறையிலும் சீர்திருத்தம் சீர்திருத்தமாக இருக்குமென நம்புகிறோம். ஆதியிலே நாம் சிறிதளவே சீர்திருத்தம் விரும்பினோம். இப்பொழுதோ உலக நிலைமை மாறிவிட்டது. ஜப்பான் தேசம் வல்லரசாகி விட்டது. சீனாவும் பாரசீகமும் ஜனநாயக ஆட்சி கொள்ள முனைந்துள. ஆதலின் வருங்காலத்திலே இந்தியாவிலும் சீர்திருத்தம் விரியுமென நினைக்கிறேன். சட்ட சம்மதமான கிளர்ச்சியில் சிறிதும் பலனில்லை என்று வங்காளத்திலே ஓர் உணர்ச்சி வலுத்து வருகிறது. வங்கத்திலே மிக்க கௌரவம் வாய்ந்த ஒன்பதின்மரை, நாடுகடத்தியுளர். குடும்பத்திலிருந்து அவர்களைப் பறித்துச் சென்று, விசாரணை ஏதும் இல்லாமல், குற்றச் சாட்டும் செய்யாமல் அடைத்து வைத்தல் அடுக்காது." பண்டித மாளவியா பேசுகையில், மேலும் மேலும் சீர்திருத்தம் கேட்கவேண்டுமென்று கூறினர்.

எங்கே போவது? :—அதிக்கிரமச் செயல்கள் நடந்து வருதல் கண்டு வெறுப்பதாக ஒரு தீர்மானம் ஏற்பட்டது. "தென் ஆபிரிக்காவிலே இந்தியரைக் கேவலமாக நடத்து

வதா?' எனும் தீர்மானத்தின்மேல், அங்கிருந்துவந்திருந்த ஹாஸன் கித்வாய் பேசியதாவது:—"ஐரோப்பாவிலே மண்ணாசை அதிகம். உலகத்திலே ஐரோப்பியர் பரவாத இடமில்லை. எல்லாம் அவர்களுக்கே வேண்டுமாம். உலகனைத்தும் வெள்ளையர் பூமியாக ஆகிவிடுமோ? அப்படியானால், கறுப்பு மனிதர் எங்கே போவது? வெள்ளையர் இருக்கும் இடத்தில் கறுப்பர் இருக்கக்கூடாது என்பதை நான் அறிய முடியவில்லை. நாங்கள் தென்னாபிரிக்காவில் அவமதிக்கப் படுவதுபோல், சீனாவிலே ஐரோப்பியர் அவமதிக்கப் பட்டால், அந்த ஐரோப்பியர் சும்மா இருப்பார்களா?"

ஆறாப்புண்!:—வங்காளப் பிரிவினையை ரத்துசெய்ய வேண்டுமென்று கனம் கிருஷ்ணன் நாயர் பேசியதாவது:—"வங்காளப் பிரிவினையைக் கண்டு எல்லா இந்தியரும் வெறுக்கின்றனர். அது ஒரு பெரிய புண்; இரத்தம் வடியும் புண்; ஆறாப் புண். அத்தகைய புண் ஆறாமல் இருக்கையில், சமாதானமோ, சாந்தியோ எங்ஙனம் இருக்கமுடியும்?"

ஐயோ!:—பாபு அம்பிகா சரண மஜூம்தார் பேசியதின் சாரம்:—"தேசத்திலே ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரையில் கொதிப்பே பரவியுளது. அதிக்கிரமங்களை நாம் கண்டிப்போம். அராஜகத்தையும் வெறுப்போம். பைத்தியக்காரத்தனம் கொண்டு வெடிகுண்டு வீசும் பேர்வழிகள் தோன்ற நேர்ந்த சந்தர்ப்பங்களை நாம் மறப்பதற்கில்லை. இதற்கு என்ன பரிகாரம் செய்துளர்? அடக்குமுறை அடக்கு முறைதான்; வேறில்லை. எங்கும் எத்தேச ஜனங்களுக்கும் அராஜகத்தினால் கதிமோட்சம் கிட்டியதில்லை என்பது மெய்தான். அடக்குமுறையும் அப்படித்தான். அடக்குமுறையினால் அமைதியும் சாந்தியும் உண்டுபண்ண முடியுமோ? தண்டனை யடைவோரை வீரத் தியாகிகளாக ஆக்குவதில் என்ன பயன்? சகிக்கமுடியாத இந்நிலைமை,

ஹோ! எத்தனை நாளைக்கு? எத்தனை நாளைக்கு? வங்காளப் பிரிவினை தீர்ந்துபோன விஷயம் என்றால், இந்தியாவில் தோன்றியுள்ள கொதிப்பும் தீர்ந்துபோன விஷயந்தான்."

சுதேசிய பலன்:—சுதேசியத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், "வங்காள முஸ்லிம் நெசவாளிகளுக்கு இப்போது பிழைப்பு கிடைத்து வருகிறது. அதனால் பஞ்சத்தையும் அவர்கள் சமாளிக்க முடிந்தது. இவ்வளவுக்கும் காரணம் சுதேசியக் கிளர்ச்சியே" என்று குறிப்பிட்டார் தீப நாராயண சிங். ராணுவச் செலவு இன்னும் 3 லட்சம் பவுன் அதிகமாகிறது என்று வருந்தினர் ஜோஸையா. 1857-ஆம் ஆண்டில் ராணுவச்செலவு 11 கோடி; இப்போதோ 33 கோடி என்றும் துக்கித்தார்.

ஆட்சிக்கு அவமானம்:—மூன்றும் நாள் கொல்லங்கோடு ராஜா எல்லாருக்கும் ஒரு தேக்கச்சேரி நடத்தினர். தென் ஆப்பிரிக்காவிலே நம்மவர் இரண்டாயிரம் பேர் தண்டிக்கப்பட்டதாகத் தகவல் கிட்டியது. வங்காள ரெகுலேஷன் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்து ஸையத் ஹஸன் இமாம் பேசியதாவது:—

"அச் சட்டம் இருப்பது பிரிட்டிஷ் ஆட்சிக்கு அவமானமேயாம். சாந்தமான தலைவர்களைப் பிடித்திழுத்து, வீட்டை விட்டுக் கொண்டுபோய், விசாரணை யில்லாமல் வைத்திருப்பதா? இதனால் சட்ட பரிபாலனத்தின்மீது நம்பிக்கை கொண்டுள்ள ராஜ விசுவாசிகளுக்கும் நம்பிக்கை பறக்கும்."

குடியன் கூற்று:—பூபேந்திர நாத வசு சொன்னதாவது:—"நம்மை இப்படியா திடீர் திடீர் என்று நாடு கடத்துவது? இப்படியா நம்மைக் கைது செய்வது? மிதுனபுரியிலே கேஸ் நடத்தினரே. வயது வாய்ந்த பிரமுகர்களைக் கைது செய்ததற்கு ஆதாரம் என்ன? குடி

காரனும் கூத்திக் கள்ளனுமான ஒருவன் வார்த்தையை நம்பியே பிரமுகர் மீது கேஸ் நடத்தினர். பிரமுகருக்குப் பெருத்த அவமானம் நேர்ந்தது. ருஷியன் வார்த்தை கட்டோடு நம்பத் தகுந்ததன்று.”

தேஜ்பகதூர் சாப்ரு பேசியது:—“பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே எந்த இடத்திலும் இந்த மாதிரி சட்டம் கிடையாது. அச்சட்டமோ நியாயம் என்பதற்கு நேர்மாறானது. ஆங்கில அரசியலுக்கும் அடியோடு ஒவ்வாதது. நமது சுதந்திரத்துக்கு அது பேராபத்து விளைவிக்கிறது. தலைக்கு மேலே மயிர் முனையில் மலை தொங்குவதுபோல் அச்சட்டம் நம்மீது நிற்கிறது.” பின்பு பல தீர்மானங்கள் நிறைவேறின.

வறண்ட போர்வழி:—வந்தேமாதரத்திற்குப் பின் அக்கிராசனர் முடிவுரை கூறியதின் சாரம் இது:—“நமது விரோதிகள், ஆங்கில ஆட்சியின் விரோதிகள், ஆங்கில மக்களின் விரோதிகள், மார்லியின் சீர்திருத்த யோசனையைப் புரட்டி பெரிய இங்கிலாந்திலே முயலுகின்றனர். இங்கிலாந்திலும் சரி, விஷமத்தனமான அதிகார கோஷ்டியின் விஷம வேலைக்கு மாற்றாக நாம் தக்க கிளர்ச்சி செய்தல் வேண்டும். சிறுத்தைப் புலியின் தோலிலுள்ள புள்ளி மாறினாலும் மாறும், வெய்யிலில் வறண்டுபோன அதிகாரியின் மனப்போக்கு மட்டும் மாறாது. சுதந்திரக் காற்று வீசும் இங்கிலாந்திலும் அவர் மனத்திலே விலங்கென்பது நீங்கவில்லை.” இத்துடன் 23-வது சென்னைக் காங்கிரஸ் முடிவடைந்தது.

42. பிரித்தாளும் முயற்சி

அன்றும் சரி, இன்றும் சரி, அனைவரும், ஜாதி மத வகுப்பு பேதமின்றி ஒரு மனங்கொள்வதாயின், சிலருக்குப் பிடிக்காது. ஒன்றுபடுவதைக் குலைப்பதிலேயே கண்ணும் கருத்தும் செல்லும். இரண்டுபட்டாலன்றி அப் பேர்வழிகள் இங்கே ஏக போகமாக எதையும் அனுபவிக்க முடியாதல்லவா? ஆதலின், இரு பெரிய இந்து-முஸ்லிம் சமூகங்களைப் பிரித்து வைக்க ஆதிமுதல் முயன்று வந்தனர் பலர். வங்காளத்தைத் துண்டாக்கும் போது, லார்டு கர்ஸானே பிரித்தாளும் தந்திரம் கையாண்டார். எஜமான் சொற்படி ஸர் புல்லரும் நடக்கலானார். 1906-ஆம் ஆண்டிலே முகம்மதியருக்குத் தனியே சபையொன்று ஏற்பட்டது. அதற்கு 'அகில இந்திய முஸ்லிம் லீக்' என்று பெயர். அதன் விருத்தாந்தத்தை இங்கே சுருங்கச் சொல்லுவோம்.

மதிப் பிசகு:—முகம்மதியரின் ஆதித் தலைவர்களில் சிறந்த ஒருவர் ஸர் ஸையத் ஆமதுகான். சிப்பாய்க் கலகத்தைக் கண்டதும், "அது அதிகாரிகளின் மதிப்பிசகு. ஜனப் பிரதிநிதிகளை அரசில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆதலின் அரசின் நோக்கு மக்களுக்குத் தெரியாது போயிற்று. போகவே விபரீத எண்ணமும் உதித்தது. முடிவில் சிப்பாய்க் கலகம் கிளம்பியது," என்று அவர் எழுதினார். காங்கிரஸ் மகாசபை தோன்றியது கண்டும், சீர்திருத்தம் விரும்புவது பார்த்தும், அவர் களிப்புக் கொண்டார். ஆயினும் அப்பாலோ, காங்கிரஸ் மகா சபையிடம் அவருக்கு வெறுப்பு பிறந்துவிட்டது. அம் மகா

சபையில் சேராதிருக்கும் வண்ணம் தமது சமூகத்தாருக்கே அறிவிக்கலானார்.

ஒருமையே உயர்வு :—ஆயினும் பத்ருதீன் தயாப்ஜி, ஸயானி, ரஸூல், நவாப் ஸையத் முகமது போன்ற பிரமுகர்களோ பரந்த நோக்கங் கொண்டவர்கள். ஆதலின், "இந்துக்களாயினும், முகம்மதியராயினும் நாம் ஒரு தேச மக்கள். அனைவரும் ஒரு மனம் கொள்வதே சிறந்தது. தனித்து நின்றால் இரு சாராருக்கும் தீமையே நேரும். எல்லாரும் காங்கிரஸ் மகாசபையிலேயே சேரவேண்டும்" என்று ஆதிமுதல் வற்புறுத்தி வந்தார்கள். எனவே, குறுகிய நோக்கங் கொள்ளாத முகம்மதிய சோதரர் மகா சபையில் சேர்ந்து, ஒற்றுமையாக உழைக்கலாயினர்.

முஸ்லிம் கலாசாலை :—பொதுவாகப் பார்த்தால், இந்துக்களை விட முகம்மதியர் ஆங்கிலப் படிப்பில் குறைந்தவர்கள். கல்வியில் உயரவேண்டி, அலிகார் நகரிலே ஸர் ஸையத் ஆமதுகான் முகம்மதியக் கலாசாலையொன்று ஏற்படுத்தினார். இது அவர் செய்த அரிய சேவை. அக் கலாசாலையில் நம் சோதர முகம்மதிய வாலிபர் பலர் சேர்ந்து, கல்வியில் உயர்வும் சிறப்பும் புகழும் கொண்டனர். காங்கிரஸ் மகா சபையின் வளர்ச்சியையும் செல்வாக்கையும், அதனால் மக்களுக்கு நேரும் நலத்தையும் கண்டு நாமும் அவ்வாறே முயன்றால் நமது சமூகத்துக்கும் நலம் பல பிறக்கும் என்று தனிச் சபை யொன்று கொள்ளக் கருதினர்.

தனிச் சபை :—தனிச் சபை வேண்டாம், காங்கிரஸ் மகாசபையே போதும் என்று பலரும் சொல்லினர். விஷம புத்தி கொண்ட தேச விரோதிகளோ இரு சமூகமும் ஒன்றுபட்டுவிட்டால், அனர்த்தம் விளையும் என்று கண்டு, சுயநலமே கொண்டு, முகம்மதியரைப் பேதித்து வந்தார்கள். கரைத்தால் கல்லுங் கரையும் என்று பழமொழி. ராஜ

விசுவாசிகளின் சபையாக ஆக்கிவிடவேண்டும் என்பதே நம் விரோதிகளின் கருத்து. முகம்மதிய சமூகத்தின் நலத்தையே மதித்து 1906-ஆம் ஆண்டு 'அகில இந்திய முஸ்லிம் லீக்' எனும் சபை ஏற்பாடாயிற்று. அச் சபையின் ஆதி நோக்கங்கள் என்னவென்றால் :—

நோக்கங்கள் :—" முகம்மதியருக்குள் ராஜபக்தியை வளர்த்தல்; அரசாங்கம் செய்யும் காரியங்களில் தப்பு அபிப்பிராயம் ஏற்படாமல் பாதுகாத்தல்; முகம்மதியரின் சொத்து, சுதந்திரங்களுக்கு யாதொரு பங்கமும் நேராமல் பார்த்துக் கொள்ளுதல்; முகம்மதியரின் ஆசாபாசங்களை நிதானமான வார்த்தையில் அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லுதல். முகம்மதியருக்கும் இதர வகுப்பினருக்கும் கூடுமானவரையில் சமரசம் உண்டுபண்ணுதல்." இந் நோக்கங்களுடன் அச் சபை நடந்து வரலாயிற்று. முகம்மதிய மதியூகிகளில் கனம் மஷ்ரூல் ஹக், பாரிஸ்டர் ரஸூல், ஸர் அலி இமாம், ஸையத் ஹாசன் இமாம் போன்ற பெரியார்கள் இரு சபையையும் சேர்த்துவிடப் பெரிதும் முதலில் முயன்றும் பலிக்கவில்லை. காக்கை உட்கார ஒரு பனம்பழம் விழ என்பதுபோல் கர்ஸானது ஆட்சிக் காலத்தில் கிட்டிய பலன்களில் ஒன்று அது.

கம்புக்குக் களை :—சூரத் பிளவு ஒரு புறம், மிதவாத காங்கிரஸ் ஒரு புறம், தேசீயக்கட்சியார் விலகி நிற்றல் ஒரு புறம், அகில இந்திய முஸ்லிம்லீக் ஒரு புறம், புரட்சி இயக்கம் ஒரு புறம் எல்லாம் கூடிக்கொள்ளவே கம்புக்குக் களை எடுத்தது போலாயிற்று நம் விரோதிகளுக்கு. லார்டு மார்லியும் லார்டு மிண்டோவும் சீர்திருத்தஞ் செய்தும் அதனை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான விதி முறைகள் குறுக்கிட்டன. எனவே சீர்திருத்தத்தின் முழுப்பலனும் கிட்டாது போயிற்று. மிதவாதிகள் தேசமெங்கும் ஓலமிடலானார்கள்.

சுவாமி வரங் கொடுத்தும் என்ன? பூசாரிக்கு மனமில்லை. ராஜப் பிரதிநிதி லார்டு மிண்டோவும், இந்தியா மந்திரி லார்டு மார்லியும் சேர்ந்து, சீர்திருத்தம் தந்தனர். அதனை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான விதி முறைகளோ மோசமாய் முடிந்தன. எங்ஙனம் என்றால், "ஜாதி, மதம், வகுப்பு, மாகாணம் இவை காரணமாக இந்தியருக்குள் வேற்றுமை இருக்கலாம். ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகி, நேசப்பான்மை கொள்ளுவதால், அவ்வேற்றுமை அகலும். அகலவே தேசீய ஒற்றுமை என்பது, அதாவது எல்லாரும் ஓர் இனம் என்பது ஓங்கும். ஓங்கவே தேசத்துக்குக் கதி மோட்சம் பிறக்கும். இதுவே மகாசபையின் மகத்தான லட்சியம்," என்று முதல் காங்கிரசிலேயே தலைவர் உமேச சந்திர பானர்ஜி குறிப்பிட்டுச் சொன்னார்.

---

43. பூசாரிக்கு மனமில்லை

அந்த லட்சியம் வர வர ஓர் உருக் கொண்டு வந்தது. இடையிலே சூரத் பிளவு தோன்றியது. மிதவாதிகள், அமிதவாதிகள் என்று இரு கட்சிகள் பிறந்தன. போதாக்குறைக்கு அகில இந்திய முஸ்லிம் லீக் எனும் சபையும் ஏற்பட்டது. மிதவாதிகளையேனும் அணைத்துக்கொள்ள வேண்டுமென்று மிண்டோ-மார்லி திருத்தங்கள் உதித்தன. உடனே பிரித்தாளும் சூழ்ச்சி ஓங்கலாயிற்று. அரசியல் திருத்தத்திற்கான விதிமுறைகளோ முகம்மதியருக்குத் தனித் தொகுதியை உண்டு பண்ணின; ஜனத்தொகைக்கு மிஞ்சிய ஸ்தானங்கள் கிடைக்கவும் வழி பிறந்தது; சுரேந்திர நாத பானர்ஜி போன்றவர்களும், படித்த வகுப்பாரான பலரும் அபேட்சகராக நிற்க முடியாவண்ணம் நிபந்

தனைகள் கிளம்பின. திண்ணையிலிருந்து கீழே விழும் குழந்தையை அரிவாளின் கூரியமுனை தோன்றித் தாங்கிக் கொண்டால் எப்படியிருக்கும்? காங்கிரஸிலே கட்சி பேதம் ஒரு பக்கம்; முகம்மதியர் தனித்து நிற்பது ஒரு பக்கம்; அடக்குமுறையின் ஆரவாரம் ஒரு பக்கம்.

சலிப்பு :—தேசத்திலே அவ்விதி முறைகளைக் கண்டு, எங்கும் ஒரே சலிப்பு. கைக்கு எட்டினது வாய்க்கு எட்ட வில்லையே என்ற ஏமாற்றம். இந்நிலையில் (1909-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ந் தேதி, இருபத்து நான்காவது காங்கிரஸ் லாகூர் நகரில் கூடியது. 243 பிரதிநிதிகளே வந்திருந்தார்கள். லாலா ஹரிகிருஷ்ணலால் அனைவரையும் வரவேற்றார். "நாலு பக்கமிருந்தும் தாக்கினால் என்ன செய்வது? சீர்திருத்த விதி முறைகளோ அநீதமானவை" என்று அவர் வருந்தினார். பண்டித மதன மோகன மாள வியா அக்கிராசனம் வகித்தார். அப்போது அவர் பேசியதின் முக்கிய சாரம் :—

ஏமாற்றம் :—"போன காங்கிரசிலே சீர்திருத்தங் கண்டு சந்தோஷம் அடைந்தோம். விதி முறைகளோ ஏமாற்றமும், அதிருப்தியும் ஊட்டியுள. ராஜீய விஷயத்திலே மதத்தைக் கொண்டு வந்து புகுத்துவதா? வகுப்பு வாரிப் பிரதிநிதித் துவம் ஏற்படுத்துவதா? மூவாயிரம் ரூபா வரும்படியுள்ள முகம்மதியருக்கு ஓட் உண்டு. மூன்று லட்சம் வரும்படி யுள்ள ஹிந்துவுக்கு ஓட் கிடையாது. ஐந்து வருஷமான முகம்மதியப் பட்டதாரிகளுக்கு ஓட்டுரிமை. முப்பது வருஷமான ஹிந்து பட்டதாரிகளுக்கு ஓட்டுரிமை இல்லை. ஜில்லா போர்டுகள், முனிசிபல் சபைகள் இவற்றின் மெம் பர்களே சட்டசபைக்கு நிற்கலாம்."

பின்பு, லண்டனிலே கர்ஸான்வைலி, லால்கா என்பா ரும், இந்தியாவிலே ஜாக்ஸன் என்பவரும் கொலை செய்யப்

பட்டதைக் கண்டு பெரிதும் வருந்தினர் அக்கிராசனர்; தலைவர்களை நாடு கடத்தியது தவறென்று கண்டித்தார்; வங்காளப் பிரிவினையை ரத்து செய்யவேண்டுமென்று வாதித்தார். அப்பால் சீர்திருத்த விதிமுறைகளைக் குறித்து சுரேந்திர நாத பானர்ஜி பேசியதின் சாரம் :—

பழி வாங்கவா ?:—"விதி முறைகளோ சீர்திருத்த திட்டத்தை நிர்மூலப்படுத்திவிட்டன. நிர்மூலம் செய்தது யார்? அதிகார கணத்தாரே! அப் பொறுப்பு அவர்களின் மீதே சுமரும். சீர்திருத்தம் பெற நாம் முயன்றதற்காக அக்கணத்தார் நம்மீது பழி வாங்குகிறார்களா என்ன? பிரபல மனிதரில் பலர் அபேட்சகராக நிற்க முடியாது. சட்டசபையில் நம்மவரே அதிகமாக இருப்பினும் என்ன ? அரசாங்கத்தால் நியமன மாவோரே பலர். இவர்கள் அரசாங்கத்தின் பக்கமே கை தூக்குபவர். நமக்கு நேர்ந்துள்ள ஏக்கமோ சொல்ல முடியாது. ஆயினும் ஒருநாள் நல்ல காலம் பிறக்கு மென நாம் நம்பியிருப்போமாக."

ஓயாது :—வங்காளப் பிரிவினையை ரத்து செய்ய வேண்டுமென்று பாபு பூபேந்திரநாத வசு பேசியதன் சாரம்:— "வங்காளிகள் என்போர் உயிரோடு இருக்கும் வரையில், வங்காள இரத்தம் எங்கள் நரம்பில் ஓடும் வரையில், இந்தியர் அனைவரும் ஓரினம் எனும் லட்சியம் உள்ளவரையில், வங்காளப் பிரிவினைக்கு நாங்கள் மன மொப்போம். கருவிலுள்ள வங்காளியருக்கும் வந்தே மாதர கீதம் ஊட்டும் வரையில், வங்காளப் பிரிவினையின் எதிர்ப்பு ஓயாது. தற்சமயம் நாங்கள் தோல்வி யடைந்திருக்கலாம். தற்சமயம் அது தீர்ந்து போன விஷயமாகவும் இருக்கலாம். ஆயினும் எங்கள் தோல்வியை வெற்றியாக நாங்கள் ஆக்கிக்கொள்வோம். ஆண்டவன் இருக்கிறார்."

தெய்வமே:—தென் ஆபிரிக்காவிலே நம்மவர் படும் பாட்டைக் குறித்து கனம் கோகுலர் பேசியது:—"கணக்கு வழக்கு இல்லாமல் எவ்வளவோ மனுச்செய்து பார்த்தனர். பயன் இல்லை. எனவே எட்டிக்குப் போட்டி நாம் செய்ய வேண்டும். காந்தி அங்கே அரிய ஊழியம் புரிந்து வருகிறார். சாத்வீக எதிர்ப்பில் இருக்கிறார். சாத்வீக எதிர்ப்பாளியோ பதிலுக்குப் பதில் செய்யாமல், கொடுமை அனைத்தையும் தெய்வமே என்று அனுபவிப்பான். மிருக பலத்திற்கு ஈடாக ஆத்ம பலத்தைக் காட்டுவான். பலம் பெரிது என்றால் சத்தியமே பெரிது என்பான். தீமைக்கு எதிர் நன்மை என்பான்."

அதிருப்தி:—இந்தியாவின் கௌரவத்தைக் காக்கத் தென்னாபிரிக்காவில் போராடும் இந்தியரிடம் அபிமானம் காட்டவேண்டுமென்று அங்கிருந்து வந்திருந்த போலக் என்பவர் வேண்டிக் கொண்டார். பானர்ஜியும் ஆதரித்தார். உடனே சபையில் இருபதாயிரம் ரூபா வசூலாயிற்று. மாமூல் தீர்மானங்களுடன் சபை கலைந்தது. சபையில் கூடியிருந்த மிதவாதிகளுக்கும் அதிகாரிகளின் போக்கைக் கண்டு அதிருப்திதான். வங்காள மாகாணத்தின் கவர்னராயிருந்த ஸர் எட்ர்வடு பேக்கர் என்பார் வேண்டிக்கொண்டும் பலனில்லை; அக் கவர்னரின் வார்த்தை:—

இழக்க நேரும்:—"சீர்திருத்தத்தின் வண்ணம் காரியங்கள் நடக்க அதிகாரிகள் ஒருப்பட வேண்டும். இது அவர்களின் மகத்தான பொறுப்பு. இது வரையில் ஆண்டு அனுபவித்து வந்த அதிகாரத்தில் ஓரளவை விட்டுக் கொடுத்தல் அவசியம். மனமில்லாமலோ அசட்டையாகவோ இருந்தால் சீர்திருத்தம் பயனற்றதாகும். ஜனப் பிரதிநிதிகளின் கூட்டுறவை இழக்கவும் நேரும். இஷ்டப்படி காரியஞ் செய்தல் இலகுதான். சமரசமாக நடத்தலே

சிறந்தது.” அதிகாரிகளின் போக்கையும் தேச நிலையையும் ஆங்கில அன்பரில் ஒருவரான ஸர் வில்லியம் வெட்டர் பர்ன் கூர்ந்து கவனித்து வரலானார். அவரையே அடுத்த வருஷ காங்கிரசுக்கு அக்கிராசனராகக் கொண்டனர் மித வாதிகள்.

---

44. வருவர், போவர்

இருபத்தைந்தாவது காங்கிரஸ் 1910-ஆம் ஆண்டு அலகபாத் நகரில் நடைபெற்றது. 636 பிரதிநிதிகள் வந்திருந்தனர். டாக்டர் சுந்தரலால் உபசரணை சபையின் தலைவரானார். மகாசபை ஏற்பட்டு 25 வருஷம் ஆனதால், பந்தலுக்கு 25 வாசல்படி அமைத்திருந்தனர். விருந்தினராக வந்தோர் நாலாயிரமாவர். இந்து-முகம்மதிய நிலையைக் குறித்து டாக்டர் சுந்தரலால் குறிப்பிட்டது இது:—

ஒருமை நிலை:—“ஐக்கிய மாகாணத்திலே முகம்மதிய ரின் தொகை 7-ல் ஒரு பங்குதான். ஜில்லா போர்டுக்கும், முனிசிபல் சபைக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமு லுக்கு வரவில்லை. இந்நிலையில் ஜில்லா போர்டுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட மெம்பர்கள் 663 பேர். இவர்களில் 445 பேர் இந்துக்கள்; 189 பேர் முகம்மதியர். முனிசிபல் சபை மெம் பர்கள் மொத்தம் 965; இதில் இந்துக்கள் தொகை 562; முகம்மதியர் தொகை 310. ஏழில் ஒரு பங்குள்ள முகம்மதி யருக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைத்துள்ளன பாருங்கள்! கூட்டுத் தொகுதியில் ஹிந்துக்களில் பலரும் முகம்மதிய ருக்கு ஓட் செய்தனர். இத்தகைய ஒற்றுமை இருக்கையில்,

தனித்தொகுதி ஏற்படுத்துதல் ஏன் ? ஏற்படுத்தினால் கெடுதல் என்பதாக நமது மாகாண கவர்னரே கூறியுள்ளார்.''

வந்த நோக்கம் :—பின்பு வெட்டர்பர்ன் அக்கிராசனம் வகித்து, அரிய பிரசங்கம் செய்தார். இந்துக்கள், முகம்மதியர் இருவரும் ஒருமைப்பட வேண்டும் என்றார் ; மிதவாதிகளும் அமிதவாதிகளும் சமரசமாக வேண்டும் என்று கூறினார். படித்த வகுப்பாரும் அதிகாரிகளும் பரஸ்பரம் நல்லெண்ணங்கொள்ள வேண்டுமென்று கோரினார். காங்கிரஸை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இந்நோக்கங்கள் ஈடேறவே, இங்கிலாந்திலிருந்து தாம் வந்திருப்பதாக சுட்டிச் சொன்னார். யுக்தாயுக்தம் இல்லாமல் வீடுகளைச் சோதனை போடுவதும், பிராஸிகியூஷன் நடத்துவதும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் விபரீத வழிகளை மேற்கொள்வதுமாக இருத்தல் சரியன்று என்றார். அடக்கமாகப் பேசி அதிகாரிகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்றார்.

உண்மை வீரர் :—பின்பு பல தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன. முக்கியமான ஒன்று, தென்னாபிரிக்காவிலே நம்மவரின் நிலையைக் குறித்தது. ஜி. ஏ. நடேசன் பேசியது இது :—“இந்தியர் அனைவரும் ஓர் இனம் எனும் உணர்ச்சி, தென்னாபிரிக்காவிலே காந்தி நடத்தும் சாத்வீக எதிர்ப்பில் உதயமாகி வருகிறது. தென்னாபிரிக்கா கவர்ன்மெண்டார் மாய வலை வீசியும், அதில் நம்மவர் மயங்கிவிடவில்லை. அவர்களோ உண்மை வீரர்கள் ; மெய்யான தேச பக்தர்கள். ஒரு சட்டிக் கூழுக்காகப் பிறப்புரிமையை விற்காதவர்கள். ஜெனரல் ஸ்மட்ஸ் வார்த்தை தவறிவிட்டார். காந்தி ஏமாந்து போனார். போன வருஷம் நாம் ஒரு லட்சம் ரூபா கொடுத்து உதவினோம். நாமோ முப்பது கோடி. பதினாயிரம் பேர் அங்கே பெரு வீரம் காட்டு

கின்றனர். இங்குள்ள கொதிப்பைவிட அங்கு நடக்கும் அநீதம் பேராபத்தாகும்.''

ஒரே நடுக்கம்:—அடக்கு முறைகள் அதிகரிப்பதைக் கண்டு கண்டித்து ஒரு தீர்மானம் வந்தது. துவாரக நாதர் பேசியதின் சாரம்:—"அடக்கு முறையின் ஒரு பலனைப் பாருங்கள்! காங்கிரஸ் மகாசபையில் சேருங்கள், பொது நலத்தைப் பாருங்கள் என்றால், ஜனங்கள் பயப்படுகிறார்கள். இரகசியப் போலீசிடம் சிக்கிக்கொள்ள இஷ்டம் இல்லை. இரகசியப் போலீஸ் என்றால், ஜனங்களுக்கு ஒரே நடுக்கம்.'' யூசுப் ஹூஸேன் பேசுகையில், "எங்கள் பீகாரில் ராஜத் துவேஷமே கிடையாதென்று கவர்னர் சொல்லி யிருக்கிறார். ஆயினும் ராஜத் துவேஷ சட்டம் எங்கள் மாகாணத்திலும் அமுலுக்கு வந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

நவாப் பேச்சு:—மற்றொரு தீர்மானம் சீர்திருத்த விதி முறைகளின் விபரீதத்தைப் பற்றியது. ஒரு சாராருக்கு மட்டும் விசேஷ சலுகை காட்டுவதான தன்மை கூடா தென்று பலர் பேசினர். நவாப் ஸதிக் அலிகான் பேசிய தின் சாரம் இது:—"முகம்மதியருக்குத் தனித் தொகுதி, சட்ட சபைகளிலே அளவுக்கு மிஞ்சிய ஸ்தானங்கள், இவை கைமேல் பலனென்று முகம்மதியர் களிக்கலாம். ஆனால் நாளடைவிலோ தீங்காய் முடியும். இந்தியர் அனைவரும் ஒரே ஜாதி என்பது எவ்வாறு கைகூடும்? இந்துக்கள், முகம்மதியர் இருவரையும் ஒற்றுமைப் படுத்துவதென்றால், இருவரையும் பிரித்து வைப்பது அன்று. தேசத்திலுள்ள ராஜீய நிலையை நோக்கினால் நாம் அனைவரும் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் ஒரு மனங் கொண்டு முயலுதல் வேண்டும். பிரிந்து நின்றால் எந்த அரசாங்கமும் நம் கோரிக்கையை மதிக்காது. காங்கிரஸைவிட்டுப் பிரிந்து நிற்பது முகம்மதியருக்கு நன்மை தராது என்று அன்பர்

ஒருவர் வற்புறுத்தியிருக்கிறார். இந்துக்களின் நன்மைகள் வேறு, முகம்மதியரின் நன்மைகள் வேறு என்று எனக்குத் தோன்றவில்லை.

வருவர், போவர்:—“ இந்து முகம்மதியருக்கு ஒற்றுமை உண்டுபண்ண வேண்டும் என்ற நோக்கத்துடன் நமது அக்கிராசனர் லண்டனிலிருந்து வந்திருக்கிறார். அவருடைய சிறந்த முயற்சி பலிக்குமாக. வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் என்பதை முகம்மதியர் விட்டுக் கொடுத்தல் வேண்டும். விட்டுக் கொடுத்தால்தான் அக்கிராசனரின் முயற்சி லகுவில் கை கூடும். எனது முகம்மதிய சகோதரர் களே! முடிவில் ஒரு வார்த்தை. சரியான காலத்தில் விவேகமாக நடந்து கொள்ளுங்கள். ராஜப் பிரதிநிதிகளும், கவர்னர்களும் வருவார்கள், போவார்கள். ஆனால் இந்தி யாவும், இந்திய மக்களும் என்றும் நிலையாக இருந்தாக வேண்டும். ஆதலின் ஒற்றுமை கொள்ளுங்கள்; தேசாபி மானிகளாக விளங்குங்கள்; தேசிய லட்சியத்தில் அபி மானம் கொள்ளுங்கள். தேசிய லட்சியம் கை கூடினால்தான் இப் பெரிய தேசத்திலே எல்லா சமூகத்தினரும் நன்மை அடையலாம். இப்பொழுது கைமேலாகச் சில பதவிகள் கிடைக்கின்றன, ஸ்தானங்கள் கிடைக்கின்றன என்று எண்ணி தேச நலத்தைப் பறிகொடுத்து விடாதீர்கள்.”

தனித்தனி:—யூசுப் ஹுஸேன் என்பவர் பேசியதின் சாரம் இது:—“ நியாயத்தையும், கிரமத்தையும் மீறி சட்ட சபைகளிலே அதிக ஸ்தானங்கள் விரும்புவது முஸ்லிம் சபைக்கு அழகு அன்று. நூறு ரூபாய் வரவேண்டுமானால் இருநூறு ரூபாய் கேட்பதா? வங்காளப் பிரிவினையைவிட இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நிலையாகி விட்டால் இந்தியாவிலே ஒவ்வொரு குடும்பமும், வீடும் தனித்துத் தனித்து நிற்க நேரும்.”

இரு கண்கள்:—சுரேந்திர நாத பானர்ஜி பேசியது இது:—“அழகு வாய்ந்த இந்தியாவுக்கு முகம்மதியரும் இந்துக்களும் இரண்டு கண்களாவர். ஒரு கண்ணுக்கு ஊனம் நேர்ந்தால், மற்றொன்றும் துன்பம் அடையும். இவ்விதம் ஸர் சையத் ஆமதுகான் முன்பே சொன்னார். நாம் பிரிந்து நின்றதனால்தான், நமது தேசம் கீழே விழுந்து தத்தளிக்கிறது. பிளவுகளையெல்லாம் நாம் ஒழித்தல் வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மிக்க தீமை விளைவிக்கும்.”

முதல் தடவை:—வழக்கம்போல் பல தீர்மானங்கள் நிறைவேறின. ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் செய்த முயற்சியினால் காங்கிரஸ் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேச ராஜப் பிரதிநிதியான லார்ட் ஹார்டிஞ்சு சம்மதித்தார். அவ்விதமே 1911-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 5-ந் தேதி 15 பேரடங்கிய காங்கிரஸ் தூதர் சென்று லார்ட் ஹார்டிஞ்சைக் கண்டு, காங்கிரசின் கருத்தையும், கொள்கையையும் எடுத்துச் சொல்லினர். எடுத்துச் சொன்ன பத்திரம் பட்டுத் துணியில் அச்சாகி, ஓரத்தில் தங்க ஜரிகை கொண்டு, தங்க முலாம் பூசிய வெள்ளிப் பேழையில் வைத்து ராஜப்பிரதிநிதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. காங்கிரஸ் தூதர்களை அவர் அன்புடன் வரவேற்றுப் பேசினார்.

என் ஆசை:—“இந்து முகம்மதிய ஒற்றுமைக்கு உங்கள் அக்கிராசனர் முயலுவது கண்டு நான் களிக்கிறேன். அம்முயற்சி பலிக்க வேண்டுமென்று எனக்கு பரிபூர்ணமான ஆசை உண்டு. என்னுடைய காலத்தில் தேசத்திலே அமைதி, முன்னேற்றம், நன்மை இவை விளங்க வேண்டுமென எனக்கும் ஆசை உண்டு. வந்தனம்,” என்று லார்ட் ஹார்டிஞ்சு பதில் சொன்னார். மகா சபை தோன்றியது முதல், ராஜப்பிரதிநிதிக்கு அச்சபை ஒரு பத்திரம்

வாசித்துக் கொடுத்ததும், காங்கிரஸ் தூதர்களை ராஜப்பிரதிநிதி வரவேற்றதும், அதுவே முதல் தடவையாம்.

---

45. வெற்றி மாலை

உடும்புப் பிடிபோல் உறுதியுள்ளவர்கள் வங்காளிகள். வங்காளப் பிரிவினையைக் கண்டு ஆறேழு வருஷ காலம் அவர்கள் ஓயாக் கிளர்ச்சி, ஒழியாக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். இங்கிலாந்திலே ஸர் ஹென்றி காட்டன், ஹெர்பர்ட் பால், கேர் ஹார்டி முதலியவர்களும் காமன்ஸ் சபையிலே கேள்விமேல் கேள்வி போட்டு வாதாடி வந்தனர். கர்ஸான் கலங்கினர். மார்லி தமது (இந்தியா மந்திரி) பதவியை ராஜிநாமா செய்தார். லார்டு க்ரூ என்பவர் அப்பதவிக்கு வந்தார். ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவுக்கு வந்து, டில்லியிலே முடி சூடிக்கொள்ளப்போவதாக ஒரு பேச்சு ஏற்பட்டது. கல்கத்தா 'இந்திய சங்கத்தார்' பூபேந்திர நாத வசுவை இங்கிலாந்துக்கு அனுப்பி, புதிய இந்தியா மந்திரியிடம் மன்றாடச் செய்தனர்.

தக்கது செய்ய :—அது சமயம் இங்கே ராஜப்பிரதிநிதியாக இருந்தவர் லார்டு ஹார்டிஞ்சு. தேச நிலையை முன்னதாகவே அவர் ஆராய்ந்து பார்த்தார். சமரஸத்திற்கு வழி தேடினலல்லாமல், கொந்தளிப்பு அடங்காதென்று அவருக்குத் தோன்றியது. புதிய ராஜப்பிரதிநிதி வந்திருப்பதால், கிளர்ச்சியை வலுக்கச் செய்ய வங்காளத் தலைவர்கள் முயன்றார்கள். அதற்குப் பிள்ளையார் வேஷம் போல் கல்கத்தா டவுன் ஹாலில் பிரமாண்டமான கூட்டம் கூட்டப்பட்டது. அதேசமயத்தில் போலீஸ் அதிகாரியொருவரை வெடிகுண்டு கோஷ்டியார் கல்கத்தாவிலே சுட்டுக்

கொன்றனர். அராஜகக் கொள்ளேகளும் கொலேகளும் அடங்கின பாடில்லே. உடனே பாபு சுரேந்திர நாதரை வருவித்தார் லார்டு ஹார்டிஞ்சு. கிளர்ச்சி வேண்டாம்; குறைகளே வகுத்துக் கூறி மகஜர் ஒன்று அனுப்புங்கள். தக்கது செய்ய முயலுவேன் என்ருர். நல்லது என்ருர் பானர்ஜி.

யாதாஸ்து :—இரகசியமாக மகஜர் தயாராயிற்று. யார் யார் கையெழுத்துச் செய்கின்றனர் என்றறிய ஒரு போலீஸ் அதிகாரி முற்பட்டார். ஆயினும் முடியவில்லே. 1911-ஆம் வருஷம் ஜூன் 12-ந் தேதி ராஜப்பிரதிநிதியிடம் சேர்ந்தது அந்த மகஜர். அதன் பிரதியொன்று இங்கிலாந்திலே ஸர் வில்லியம் வெட்டர்பர்னுக்கும் அனுப்பப்பட்டது. இந்தியாவிலும், இங்கிலாந்திலுமுள்ள பொறுப்பு வாய்ந்த ராஜ தந்திரிகளான அதிகாரிகள் சமரசஞ் செய்ய நோக்கங் கொண்டனர். 1911-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி லார்டு ஹார்டிஞ்சு மகத்தான யாதாஸ்தொன்று இந்தியா மந்திரிக்கும், ஆங்கில மந்திரி சபைக்கும் அனுப்பினுர். அதன் முக்கிய சாரம் இது :—

மாகாண சுய ஆட்சி :—"வங்காளப் பிரிவினேயை ரத்து செய்ய வேண்டும்; வங்காளத்தை ஒன்ருக்கவேண்டும்; பீஹார், ஒரிஸாவைத் தனி மாகாண மாக்கவேண்டும். தலே நகரை டில்லியாக மாற்றவேண்டும். எல்லா மாகாணங்களுக்கும் சுய ஆட்சி கொடுக்கவேண்டும். அவசியமாளுல்தான், மாகாண காரியங்களில் இந்தியா கவர்ன்மெண்டு தலேயிடவேண்டும்."

ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையில் அந்த யாதாஸ்து விஷயம் பரம ரகசியமாக இருந்தது. ஆயினும் அரசர் பெருமான் விஜயஞ் செய்யும் காலேயிலே, வங்காளப் பிரிவினே ஒருவாறு தீரும் என்று பலரும் நம்பி நின்றனர். தேச விரோதிகளோ எல்லாம் பகல் கனவுதான் என்று ஓதி

வந்தார்கள். 1911-ஆம் வருஷம் டிசம்பர் 12-ந் தேதி டில்லியிலே தர்பார் நடந்தது. மன்னரும் மக்களும் குழுமி யிருந்து மன்னர்பிரானை வாழ்த்தினர். தர்பார் தீரும்வரை யில் வங்காளப் பிரிவினையைப்பற்றி ஒரு வார்த்தைகூட அரசர்பெருமான் சொல்லவில்லை. எதிரிகள் களிக்க, வங் காளிகள் மனமொடிந்து நின்றனர்.

வெற்றி :—தர்பாரை விட்டு எழுந்து போகும் சமயம் மன்னர் பெருமான் சொன்னது இது :—“இனிமேல் இந்தியாவின் தலை நகரம் டில்லியாக இருக்கும். வங்காளம் தனி மாகாணம் ஆகும். கவர்னரும் ஆலோசனை சபையும் ஏற்படுவர். பீஹார்-ஒரிஸா தனி மாகாணமாகும். அஸ்ஸாம் தனியாக ஒரு சீப் கமிஷனரால் நிர்வகிக்கப்படும். இந்த மாறுதல்களால் தேச நிர்வாகம் சரிவர நடக்க அனு கூலம் ஏற்படுமாக. நமது பிரிய மக்களின் க்ஷேமலாபமும் பெருகுமாக!”

அவ்விதமே வங்காளப் பிரிவினை ரத்தாயிற்று. கார் மைகேல் வங்காள கவர்னரானார். வல்லமை எல்லாம் ஒருங்கே படைத்த அதிகார வர்க்கத்தின்மீது வெகுஜன வாக்கு, தேச ஒற்றுமை, வெற்றி பெறும் என்பதை அனை வரும் உணர்ந்து கொண்டனர். தேச மக்களுக்குப் புதிய ஊக்கம் பிறந்தது. வங்காளிகளின் இடைவிடாக் கிளர்ச்சி யும், காங்கிரஸ் மகாசபையின் ஆதரவுமே வங்காளப் பிரிவினை ரத்தானதற்கு மூல காரணம்.

46. திலகரின் தேச வெறி

அடுத்த காங்கிரஸ் கல்கத்தாவில் நடைபெற்றது. மன்னர் பெருமான் விஜயம், வங்காளப் பிரிவினை ரத்து, லார்ட் ஹார்டிஞ்சின் சுமுக நோக்கு, இவற்ருல் வங்காளத்திலே சிறிது ஆறுதல் பிறந்தது. 446 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். கனம் பூபேந்திர நாத வஸு அனைவரையும் வரவேற்ருர். ராம்ஸே மாக்டோனல்டு அக்கிராசனம் வகிப்பதாக இருந்தது. அவர் மனைவி திடீரென்று காலகதியானதால் அவர் வர முடியவில்லை. பண்டித விஷ்ணு நாராயணதரர் அக்கிராசனம் வகித்தார். அவர் பேசியதின் சாரம்:—

விரோதி கூற்று:—"புதிய இந்தியா வளர்ந்துவர, அதிகார வர்க்கத்தின் அபிமானமற்ற போக்கும் வளர்ந்து வருகிறது. பலவாருன தடைகளும், வாய்ப்பூட்டுச் சட்டங்களும் இருந்தாலும் படித்த வகுப்பாரோ விரிந்த ராஜீய உரிமை ஒரு பக்கம் வேண்டி நிற்க, ஜாதி மதத்தால் வேறுபட்ட அதிகார வர்க்கம் தனது ஏகபோக அதிகாரத்தை விட்டுக்கொடுக்க இசையவில்லை. போன வருஷம் கனம் ஆகாகானின் வார்த்தையை மதித்து இந்துக்களுடன் சமரஸம் பேச முகம்மதியர் முன்வந்த பொழுது, அதிகார வர்க்கத்தின் கையாளான ஓர் ஆங்கிலப் பத்திரிகை, 'இந்த இரண்டு சமூகத்தாரையும் ஒன்று படுத்த முயற்சி நடப்பதேன்? அரசாங்கத்திற்கு விரோதமாய் அணிவகுத்து நிறுத்துவதற்கேயாம்' என்று எழுதியது.

தேச வெறி:—"நமது கிளர்ச்சி பலிக்க வேண்டுமானல், ஜாதி மத வித்தியாசமின்றி அனைவரும் யாதொரு பிளவுமில்லாமல் முயலுதல் வேண்டும். ராஜீயக் கிளர்ச்சியிலே தீவிர நோக்கமுடைய ஒரு கட்சி இருந்தே தீரும். நிதான

மென்பது சில சமயத்தில் பொருந்தாது. பரம ஜாக்கிரதை என்பதும் கோழைத்தனமாகும். ஆதலின் தேச நலத்தில் வெறிகொண்ட தீர புருஷர்கள், உத்ஸாக புருஷர்கள் தேவை. ஏகாதிபத்தியத்திற்கு உள்ளடங்கிய சுயராஜ்ய லட்சியம் கொள்ளுதலே மேல்.''

வங்காளப் பிரிவினையை ரத்து செய்ததற்கு சந்தோஷம் காட்டி ஒரு தீர்மானம் நிறைவேறியது. ராஜத்துவேஷ சட்டம், பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டம் முதலியவற்றைக் கண்டித்து தீர்மானங்கள் ஏற்பட்டன. தென்னுபிரிக்காவிலே நம்மவர் படாதபாடு படுத்தப்படுவதைக் கண்டித்தும் ஒரு தீர்மானம் வந்தது.

27-வது காங்கிரஸ் 1912-ஆம் ஆண்டு பங்கிபூர் எனும் நகரில் நடைபெற்றது. அதற்கு நான்கு தினங்கள் முன்னதாக லார்ட் ஹார்டிஞ்சும், அவர் மனைவியும் புதிய தலைநகரான டில்லியில் பட்டணப் பிரவேசம் செய்யும்பொழுது (1912 டிசம்பர் 23-ந் தேதி) ஒரு வீட்டின் மாடியிலிருந்து ஒரு வெடி குண்டு எறியப் பட்டது. ராஜப்பிரதிநிதி காயமடைந்தார். அவர் மனைவி மயக்கம் கொண்டாள். இருவரும் ஏறிச்சென்ற யானையோ வெருண்டோடத் தலைப்பட்டது. ஒரே குழப்பம் உண்டாயிற்று. அந்த வெடி குண்டு சம்பவத்தால் அவருடைய சுமுக மன நிலை மாறவில்லை.

காமன்ஸ் சபையில்:—பங்கிபூர் காங்கிரசுக்கு 207 பிரதிநிதிகளே வந்திருந்தார்கள். விருந்தினர் ஐயாயிரம் பேர். முகம்மதியப் பிரமுகர் மஷ்ருல் ஹக் என்பவர் அனைவரையும் வரவேற்றார்; வெடி குண்டு சம்பவத்தைக் கண்டித்தார்; 'காங்கிரஸ் பிதா வான' ஹியூம் காலகதி ஆனதைக் குறித்துத் துக்கம் கூறினர். ராவ் பகதூர் முதோல்கர் அக்கிராசனம் வகித்தார். மாகாண சுய ஆட்சி

தரவேண்டுமென்று லார்ட் ஹார்டிஞ்சு எழுதி யனுப்பி யதைப் பாராட்டினார். காமன்ஸ் சபையில் நமக்குப் பிரதி நிதித்துவம் வேண்டுமென்று வாதித்தார். புதுச்சேரியின் பிரதிநிதி யொருவர் பிரஞ்சு சட்ட சபையிலும், கோவாவின் பிரதிநிதி யொருவர் போர்த்துகீசியச் சட்ட சபையிலும் வீற்றிருக்கையில், காமன்ஸ் சபையிலே இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவம் தரக் கூடாதோ என்று வாதித்தார்.

பாடுபட்டவர்:—வெடி குண்டு சம்பவத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் ஏற்பட்டது. பிரபல தலைவர்கள் பரிந்து பேசினார்கள். இந்து முகம்மதிய ஒற்றுமை அதி அவசியம் என்பதாக சபையோரின் மனமுருக ஓர் அன்பர் பாடினார். தென்னாப்பிரிக்கா இந்தியரின் நிலையைக் குறித்து கனம் கோபால கிருஷ்ண கோகுலர் மிகவும் அழுத்தமாகப் பேசினார். காங்கிரஸின் சுய ஆட்சி லட்சியத்தை முஸ்லிம் லீக் சபை ஒப்புக்கொள்ளும்படி பெரிதும் பாடு பட்டவர் இப்ராஹிம் ரஹீம்துல்லா. பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஏற்பட்டதைக் குறித்து சபையார் சந்தோஷமடைந்தனர். வழக்கம் போல் பல தீர்மானங்கள் நிறைவேறின.

28-வது காங்கிரஸ் 1913-ஆம் வருஷக் கடைசியில் கராச்சியில் நடந்தது. 550 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள். கோகுலர், மேத்தா, பானர்ஜி, மாளவியா இந்நால்வரும் வரவில்லை. திப்பு சுல்தானது வம்சத்தைச் சேர்ந்தவரும், சென்னை வாசியுமான நவாப் ஸையத் மகமது அக்கிராசனம் வகித்தார். அவரையும் இதர பிரதிநிதிகளையும் கனம் ஹரிச்சந்திர விஷ்ணுதாஸ் அன்புடன் வரவேற்றுப் பேசினார். அக்கிராசனப் பிரசங்கத்தின் முக்கிய சாரம் இது:—

விசேஷம்:—"மன்னர் பெருமான் இந்தியாவை விட்டுப் போகையில், எல்லாரும் ஒற்றுமையாக இருக்க வேண்டு

மென்று சொல்லிப்போனார். முகம்மதியர், கிறிஸ்தவர், பார்ஸிகள், இந்துக்கள் அனைவரும் தனிச் சபை கொள்ளாமல் ஒன்றுதல் வேண்டும். சுயராஜ்ய லட்சியத்தை அகில இந்திய முஸ்லிம் லீக் சபை அங்கீகரித்து விட்டது மிகவும் விசேஷம். பொது நல அம்சங்களில் காங்கிரஸ் சபையும், முஸ்லிம் லீக் சபையும் அடிக்கடி கலந்து பேச வேண்டுமென்று முஸ்லிம் லீகே சொல்லியிருத்தல் இன்னும் விசேஷம். தேசீய ஒற்றுமை என்னும் பேரலை கிளம்பி பெருமிதமாக வீசுகையில், ஜாதி, மத வகுப்பு, நிற பேதங்களெல்லாம் தலை சாய்ந்துபோம்."

எல்லாருக்கும் :—மகாசபைத் தீர்மானங்களில் முக்கியமானது தென்னாப்பிரிக்கா இந்தியரின் கஷ்டத்தைப் பற்றியது. இந்து-மகம்மதிய ஒற்றுமையைக் குறித்து பூபேந்திர நாத வசு பேசியது :—" இந்தியா தேசம் இந்துக்களுக்கு மட்டும் அன்று, முகம்மதியருக்குமட்டும் அன்று, எல்லாருக்கும் சொந்தமானது. நாம் அனைவரும் ஒரு மனங் கொண்டால், அசோக மகாராஜன் காலத்திலிருந்ததை விட இந்தியா இன்னும் சிறப்பாக இருக்கும். அக்பர் காலத்திலிருந்ததை விட இன்னும் ஒற்றுமையாக இருக்கும்." இன்னும் பலர் அந்த ஒற்றுமையைக் குறித்து ஆனந்தமாகப் பேசினார்கள். வழக்கம்போலுள்ள தீர்மானங்கள் நிறைவேறின. அடுத்த வருஷம் சென்னைமா நகரில் காங்கிரஸ் கூடுவதாக யிருந்தது. இதற்குள் ஐரோப்பிய மகாயுத்தம் 1914-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கிளம்பிவிட்டது. அது காரணமாக தேச மக்களின் மனப்போக்கில் பிரமாதமான மாறுதல்கள் ஏற்படலாயின.

47. தேச பூஜை

சின்ன தேசங்களின் சுதந்திரத்தைக் காக்கவும், உலகில் ஜனநாயகம் நிலைக்கவும், சத்தியம் ஓங்கவுமே போர் புரிவதாக இங்கிலாந்து சொல்லியது; ஆபத்தில் உதவி செய்யுங்கள்; அந்த உதவியை என்றும் மறவோம், நன்றி அறிவு கொள்வோம் என்றும் இந்தியாவை வேண்டிக்கொண்டது. யுத்தத்தில் இங்கிலாந்து வெற்றி அடைந்தால் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டும் என்று இந்தியர் அனைவரும் நம்பலாயினர்.

உள்ள நிலை:—இதற்கு இடையில் அன்னிபெஸண்டு அம்மை ஹோம் ரூல் இயக்கம் தோற்றுவித்தாள். சுதந்திர லட்சியத்தைப் பரப்பினாள். ஆறு வருஷம் தீவாந்திர சிட்சை போல் மாண்டலே நகரில் காவலில் கிடந்த பால கங்காதர திலகரும் விடுதலை அடைந்து, தேசியக் கட்சியாருக்குப் புதிய ஊக்கம் ஊட்டினார். வங்கத்திலே புரட்சிக் கூட்டத்தார் கப்பலில் வந்து இறங்கிய ஏராளமான துப்பாக்கிகளை அடித்துக்கொண்டு போயினர். கானடாவிலே இந்தியர் புகுவதற்குத் தடை இருப்பது கண்டு 400 பஞ்சாபிகள் 'கோமா காடா மாரு' என்னும் கப்பலை அமர்த்திக்கொண்டு நேரே கானடா சென்றும் அங்கே இறங்க முடியாததால் திரும்பி அக்கப்பலிலேயே கல்கத்தா வந்து சேர்ந்தனர். புரட்சி இயக்கத்தில் அவர்களுக்கு சம்பந்த முண்டென்று அதிகாரிகள் கருதி, கப்பலை விட்டிறங்கியதும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பஞ்சாப் சீக்கியருக்கு அது கண்டு ஆத்திரம் பிறந்தது. அதனால் பஞ்சாபிலும் வங்காளத்தைப் போல் புரட்சிக் கூட்டத்தாரின் கொள்ளைகளும், கொலைகளும் நடக்கலாயின. இத்தகைய நிலையில்

1914-ஆம் வருஷக் கடைசியிலே சென்னையில் 29-வது காங்கிரஸ் மகாசபை நடந்தது.

ஆதிக்கமா ?:—மொத்தம் 866 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் உபசரணை சபையின் தலைவராக இருந்து அனைவரையும் வரவேற்றார். பூபேந்திர நாத வஸு அக்கிராசனரானார். அவர் பேசியதன் சாரம்:- "உலகிலே புதிய நிலை தோன்றி உளது. இனிமேல் ஒரு ஜாதியார் மீது ஒரு ஜாதியார், ஒரு தேசத்தார் மீது ஒரு தேசத்தார் ஆதிக்கம் செலுத்துவதென்பது நடவாது. சுதந்திரப் பேரலை, கீழ்நாடுகளில் வீசுவதை யாவரும் தடுக்க ஒண்ணாது. இங்கிலாந்துக்கு உட்பட்டுக் கிடக்கவோ, அல்லது அதைவிட்டு விலகிப் போய்விடவோ நாம் விரும்பவில்லை. ஆனால் சரி சமத்துவமான நிலையில் இங்கிலாந்துடன் பங்காளியாக இருக்கவே விரும்புகிறோம். சுதந்திரம் வேண்டும் என்று இந்தியா வேண்டிக்கொள்ளவில்லை. மற்று, விரும்பி நிற்கிறது. வருங்காலத்தில் மகத்தான மாறுதல்கள் ஏற்படும். அப்போது இந்தியாவுக்கு ஏற்ற பதம் கிடைக்கும். ஆண்டவனையும் தேசத்தையும் நம்பி, நல்பதம் வாய்க்க நாம் அனைவரும் முயல்வோமாக."

எழுந்து நிற்றல் :—இரண்டாம் நாள் சபை நடக்கும் பொழுது சென்னை கவர்னர் லார்ட் பென்ட்லேண்டு காங்கிரஸ் மகாசபைக்கு விஜயம் செய்தார். மன்னர் பிரான் பிரதிநிதி யொருவர் நமது மகாசபைக்கு விஜயம் செய்தது அதுவே முதல் தடவை. சபையா ரனைவரும் அவர் வருகையைக் கண்டதும் எழுந்து நின்று ஆரவாரம் செய்தனர். உடனே ராஜ பக்தித் தீர்மானத்தை சுரேந்திர நாத பானர்ஜி பிரேரித்துப் பிரமாதமாகப் பேசினார். இன்னும் சிலரும் பேசினர்.

தேசமே பெரிது:—பிரான்ஸின் போர்க்களத்திலே போர் புரிய இந்தியச் சேனை போயிருப்பதைக் கண்டு சபை சந்தோஷம் கொண்டது. ஆயுதம் தரிக்கும் உரிமை வேண்டும் என்று வற்புறுத்தியது. தென்னுப்பிரிக்கா இந்தியர் விஷயத்தைப் பற்றியும் வருந்தியது. முடிவுரையாக அக்கிராசனர் பேசியதின் சாரம் இது:—"கீர்த்தி வாய்ந்த அன்னி பெஸண்டு அம்மை காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்திருப்பது கண்டு களிக்கிறேன். இந்திய மாதரும் வந்து சேர்வார்களாக. காங்கிரஸ்காரரிலே ஒரு சாராரான தேசீயக் கட்சியார் இன்னும் விலகி நிற்பது கண்டு வருந்துகிறேன். சமரஸமே எங்கள் நோக்கம். இரு கட்சியாரும் ஒற்றுமைப் படுவதே உறுதி.

தேச பூஜை:—"விலகி நிற்போர் வந்து சேர்ந்து கொள்ள வேண்டுமென்று மனமார அழைக்கின்றேன். தேசந்தான் பெரியது. மிதவாதிகளோ, அமிதவாதிகளோ எல்லாரும் சோதரரே. கடமையை நிறைவேற்றுவதில் அனைவரும் தங்களைத் தியாகம் செய்துகொள்ள வேண்டும். தேச பக்தி, தெய்வ பக்தி இரண்டையும் விடச் சிறந்த பக்தி ஒன்று உண்டோ? தேச மாதாவின் பூஜையிலே பூசாரியாயிருக்கும்படி என்னை அழைத்தீர்கள். ஆண்டவன் அருளை முன்னிட்டு ஏதோ எனக்குத் தெரிந்த வரையில் பூஜை செய்தேன். தூங்கினாலும் சரி, விழித்திருந்தாலும் சரி, தேச மாதாவின் கீர்த்தியை நிலைக்கச் செய்யும் பொறுப்பு சுமந்துளது. பூஜை ஆகிவிட்டது, இனி என்ன இருக்கிறது என்று நினைக்காதீர்கள். எதற்காக நாம் இங்கே கூடினோம் என்பதை நாம் ஒரு கணமும் மறக்கக் கூடாது. அவ்விதமானால் நாம் காரியசித்தி அடைவோம்."

தலை தூக்கி!:—அடுத்த காங்கிரஸ் பம்பாய் நகரில் கூடுவதாக ஏற்பாடு ஆயிற்று. இதற்குள் யுத்தம் மும்முரமாக

நடந்து வர, ஆளும் பணமும் பொருளும் ஏராளமாகக் கொடுத்து இந்தியா உதவி புரிந்து வந்தது. அப்போது முதல் மந்திரியாக யிருந்த ஆஸ்குவித் இந்தியாவின் பேருதவி கண்டு பரவசமாகி இந்திய விஷயங்களை சுமுக மான நோக்குடன் கவனித்தல் வேண்டும் என்று பேசினுர். ஆயினும் காரியத்தில் இங்கே ஒன்றையும் காணும். மித வாதிகளுக்கும், அமிதவாதிகளுக்கும் சமரசம் ஏற்பட வில்லை. சுயராஜ்ய மென்று சொல்லவும் மிதவாதிகள் துணியவில்லை. புரட்சிக் கூட்டத்தாரோ ஒரு பக்கம் தலை தூக்கி நின்றனர்.

---

48. சுயராஜ்ய விருந்து

சென்னையிலே அன்னிபெஸண்டு அம்மை 1913-ஆம் ஆண்டிலேயே ஒரு பத்திரிகை தொடங்கினுள்; ராஜீய விஷயத்திலும் சிரத்தைகொண்டு, கிளர்ச்சி செய்ய லானுள்; சுயராஜ்ய லட்சியத்திற்கு 'ஹோம் ரூல்' என்று பெயரிட்டாள்; சூரத் பிளவுக்குப் பின் ஒதுங்கி நின்ற தேசீயக் கட்சியாரை மீண்டும் காங்கிர சில் கொண்டுவந்துசேர்க்கப் பாடுபட்டாள். அப்போது காங்கிரஸ் காரியதரிசியாக விளங்கிய சுப்பராவ் உதவியாக நின்றுர். இருவரும் பம்பாய் சென்று, ஸர் பிரோஸ் ஷா மேத்தாவைக் கண்டு பேசினர். திலகரைச் சேர்த்துக் கொள்ளின் விபரீதம் விளையுமென மேத்தாவுக்குப் பீதி பிறந்தது. அதன்மேல் கோபால கிருஷ்ண கோகுலருக்கும் சமரஸத்தில் பற்றில்லாது போயிற்று.

ஆயினும், ஒற்றுமை முயற்சியை அன்னிபெஸண்டு கை விடவில்லை. தெய்வத்தால் ஆகாது எனினும், முயற்சி

மெய் வருந்தக் கூலி தரும் என்றே எண்ணி முயன்றனள். 1915-ஆம் வருஷக் கடைசியில் பம்பாயிலே காங்கிரஸ் மகாசபை கூடுவதாக இருந்தது. மேத்தாவும் கோகுலரும் சொன்னதை மதித்து, ஸர் ஸத்தியேந்திரப் பிரஸன்ன ஸின்ஹவை அக்ராசனராகக் கொண்டனர் நம் தேச மக்கள். ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் முதன்முதலாக ஸ்தானம் பெற்ற இந்தியர் ஸர் ஸின்ஹவே. அப்போது சேனபதியாக விளங்கிய லார்டு கிச்னரின் மனப்பான்மை கண்டு தமது பதவியை உதறித்தள்ளி வந்தவர் ஸர் ஸின்ஹ. ஆயினும் தீவிர நோக்கம் கம்மியே. சென்னையிலும் மகா ராஷ்டிரத்திலும் ஹோம் ரூல் கிளர்ச்சி நடந்துவந்ததால், தேசத்திலே சுயராஜ்ய தாகம் தலைதூக்கி நின்றது.

காலகதி ஆதல்:—ஆதலினால் பம்பாய் காங்கிரசுக்கு 2250 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். விருந்தினராக வந்தோர் எண்ணாயிரத்துக்கு மேலாகும். இதற்குமுன் எந்த வருஷத்திலும் காங்கிரசுக்கு அவ்வளவு பிரதிநிதிகள் வந்தது கிடையாது. காங்கிரஸ் மகா சபை கூடுவதற்குள், மேத்தாவும் கோகுலரும் காலகதி ஆகிவிட்டனர். வாச்சா என்பார் தமது வரவேற்புப் பிரசங்கத்தில் அம் மரண சம்பவத்தைக் குறிப்பிட்டுப் பெரிதும் வருந்தினர். அக்ராசனரான ஸர் ஸத்தியேந்திரப் பிரஸன்ன ஸின்ஹவோ, சுயராஜ்யம் அளிக்கப்படுவதே கொள்கை யென ஆங்கில ராஜ தந்திரிகள் விளம்பரஞ்செய்ய வேண்டு மென்று வற்புறுத்தினர்.

நாளடைவில் :— ஆயினும், “ விரும்பி நிற்பதாலேயே சுயராஜ்யம் கிட்டிவிடாது. ஆதலின், நம்மவர்க்கு அவசர புத்தி வேண்டாம். பொழுது விடியுமுன் விழித்துக்கொள் வதனாலேயே பொழுது விடிந்துவிடுமா ? அவசரங் கொண்ட இளைஞர் சுயராஜ்ய சித்தியின் பொருட்டு, அராஜகத்தில் இற

ங்கி, உயிரையும்விட எண்ணலாம். பழுத்த அறிவாளிகளோ பொறுமையுடன் காத்திருப்பர். காலடைவில்தான் சுயராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியும். லட்சியம் ஈடேற வேண்டின், ஆளும் பணமும் திரட்டி இடைவிடாமல் உழைத்துவர வேண்டும்" என்று பேசினர்.

அந்தரமளாவ :—ஆலோசனைக்கு வந்த சுயராஜ்யத் தீர்மானத்தின் சாரம் இது :- "மாகாண சுய ஆட்சி உடனே வழங்கப்படவேண்டும். பண சுதந்திரமும் அவசியம். நிர்வாக சபையின் மீது சட்டசபைக்கு அதிகாரம் ஏற்பட வேண்டும். இந்தியா மந்திரி சபையை ஒழிக்கவோ, திருத்தவோ வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு, இரு மகாசபைகளாலும் வேலைத் திட்டம் தயாராக வேண்டும்." தீர்மானத்தைப் பிரேரிக்கையில், சுயராஜ்யக் கொடியை அந்தரமளாவத் தூக்கவேண்டுமென்றார் சுரேந்திர நாத பானர்ஜி.

நமது காலத்தில் :—"இத்தனை நாள் தூங்கிக் கிடந்த இந்தியா இப்போது விழித்து எழுந்துவிட்டது. தாங்க முடியாத பசியும் தரித்திரமும் தொலைய சுயராஜ்யமே சஞ்சீவி. நமது காலத்திற்குள் அதை அடைந்தாகவேண்டும்" என்று அன்னிபெஸண்டு பேசினள். பண்டித மாளவியா, "மனம் போல் மாங்கல்யம் என்பது வேத வாக்கு. அடிமையென்றும், தகுதி இல்லையென்றும் எண்ணுகிறீர்கள். உலகிலே யாருக்கும் நாம் சளைக்கமாட்டோம். முனைந்து முயலின், விரைவில் காரிய சித்தி கிட்டும்" என்றார். மாமூல் தீர்மானங்களுடன் மகா சபை கலைந்தது.

சுயராஜ்ய விருந்து :—உடனே, பம்பாயில் முஸ்லிம் லீக் மகாசபையும் கூடிற்று. காங்கிரஸ் தலைவர்கள் அச்சபைக்குச் சென்றார்கள். சபையோர் பிரமாதமான உற்சாகங் காட்டி, அத்தலைவர்களை வரவேற்றனர். காங்கிரஸ் மகாசபையில்

நிறைவேறியது போன்ற சுயராஜ்யத் தீர்மானம் நிறைவேறியது. இரு மகா சபைகளும் தேச லட்சியம் கைகூடுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று உறுதி பிறந்தது. அன்று இரவு இரு மகா சபைகளின் பிரதிநிதிகளுக்கும் ஸர் ஆதம்ஜி பீர்பாய் என்பவர் பெருமித விருந்து நடத்தினர். ஐயாயிரம் பேர் வந்திருந்தனர். ஹிந்துக்களும் முகம்மதியரும் ஒன்று சேர்ந்து விருந்துண்டது போலவே, ஒன்று சேர்ந்து சுயராஜ்ய விருந்துண்ணவும் தலைப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டார்கள். இது நிற்க.

---

49. சதியும் சீற்றமும்

சுயராஜ்ய ஹோம் ரூல் கிளர்ச்சி கண்டு சிலருக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ் மகா சபையின் செல்வாக்குப் போய்விடும் என்று மிதவாதிகள் அஞ்சினர்கள். பம்பாய் காங்கிரஸ் தீர்மானத்தின்படி இரு மகா சபைகளும் சேர்ந்து சுயராஜ்ய திட்டம் தயாரிக்கவில்லை. கிளர்ச்சியும் செய்யவில்லை. மிதவாதிகள் மெதுவாகவே இருந்தார்கள். பார்த்தார் பெஸண்டம்மை. 1915-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையிலே 'ஹோம் ரூல் லீக்' என்னும் சபைகள் ஏற்படுத்தினள். பம்பாயிலும் ஒரு கிளை ஏற்பட்டது. மகாராஷ்டிரத்திலே திலகரும், அவரது வலது கை போன்ற பாரிஸ்டர் பாப்டிஸ்டாவும் ஹோம் ரூல் சங்கங்களை எங்கும் ஏற்படுத்தினர். பின்பு வங்காளத்திலும் ரவீந்திரநாத தாகூரின் முயற்சியால் ஒரு கிளை ஏற்படலாயிற்று.

அதிகாரம் சீறல்:—இதற்கு இடையில் பெஸண்டின் 'நியூ இந்தியா' பத்திரிகைக்கு அதிகாரிகள் இரண்டாயிரம் ரூபா ஜாமீன் கேட்டார்கள். அப்போது பம்பாய் கவர்ன

ராக இருந்த லார்டு வில்லிங்டனே பம்பாய் மாகாணத்திற்கு பெஸண்டம்மை வரக்கூடாது என்று ஆணையிட்டார். மத்திய மாகாணத்துக்குள் தலை காட்டக் கூடாதென்றும் செங்கோல் பிறந்தது. பின்பு 'நியூ இந்தியா' பத்திரிகையின் ஜாமீன் தொகை பறிமுதல் ஆயிற்று. மறுபடியும் பத்தாயிரம் ரூபா ஜாமீன் கட்டினுள் பெஸண்டு. திலகரும் பெஸண்டும் சேர்ந்து செய்யும் ஹோம் ரூல் கிளர்ச்சியைக் கண்டு அதிகார வர்க்கத்துக்குப் பிடிக்கவில்லை.

திலகர் மீது:—திலகருக்கு 1916-ஆம் ஆண்டு ஜூலையில் அறுபதாண்டு நிறைவேறியது. அப்போது எண்ணுயிரம் மக்கள் கூடி, அப்பெருமானை வாழ்த்தினர்; ஒரு லட்ச ரூபா காணிக்கையும் செலுத்தினர். அதில் ஒரு காசு கூட அவர் எடுத்துக்கொள்ளவில்லை. அப்படியே தேச சேவைக்கு எழுதி வைத்துவிட்டார். அறுபதாண்டு விழாவிற்கு மகாஜனங்கள் அவ்விதம் வாழ்த்துக் கூற, அதிகார வர்க்கமும் வாழ்த்துக்கூற முன் வந்தது. நன்னடக்கையுடன் இருப்பதாக இருபதாயிரத்துக்குச் சொந்த ஜாமீனும் இருபதாயிரத்துக்கு இரண்டு நபர் ஜாமீனும் தரவேண்டுமென அதிகாரிகள் ஆணை யிட்டார்கள். ஜில்லா கலெக்டர் கட்டித் தீரவேண்டுமென்ருர். பம்பாய் ஹைகோர்ட்டில் திலகர் அப்பீல் செய்தார். ஜாமீன் வேண்டியதில்லை என்று தீர்ப்பளித்தனர் ஹைகோர்ட் ஜட்ஜிகள். பின்பு சொந்த காரியமாக ஒரு நகருக்கு அவர் போனுர். பதினுயிரக் கணக்கான மக்கள் கூடி அவர் பேச்சைக் கேட்க விரும்பினர். அதிகாரிகளோ பேசக்கூடா தென்றனர். காலதேச வர்த்தமானத்தை மதித்து, அந்த உத்தரவை நம் திலகர் மீறவில்லை.

கடப்பு ஏன்?:—ராஜப் பிரதிநிதியான ஹார்டிஞ்சு 1916-ஆம் ஆண்டில் விலகிக்கொண்டார். உடனே லார்டு

செம்ஸ்போர்டு என்பார் அப்பதவிக்கு வந்தார். அவரது நிர்வாக சபையினர் நம் தேச அரசியலில் திருத்தஞ் செய்ய எண்ணி ஒரு திட்டம் தயாரித்தனர். அவை மகா மோசமாக இருந்தன. அப்போது நிர்வாக சபையில் இருந்த ஸர் சங்கரன் நாயர் அத்திட்டத்தில் கைச்சாத்திடவில்லை. மற்று ஒரு மறுப்புரை எழுதி, சரியானபடி திருத்தம் செய்யாவிடின் மக்களின் அதிருப்தி ஓங்குமென்று வற்புறுத்தினர். அது கண்டும், அவரது சுயேச்சைத் தன்மை கண்டும், அதிகாரிகளில் பலருக்குக் கடுப்பு உண்டாயிற்று.

பத்தோன்பதின்மர் :—எல்லாம் ரகசியமாக நடப்பதை யூகித்து, இந்தியா சட்டசபையிலே அங்கம் வகித்தவர்களில் பத்தொன்பதின்மர் ஒன்று சேர்ந்து, இன்னின்னவாறு சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று மனுவொன்று சமர்ப்பித்தனர் ராஜப்பிரதிநிதியிடம். இத்தகைய நிலையில், தேச ஒற்றுமை அவசியமென அன்னிபெஸண்டு அரும்பாடுபட்டாள். மேத்தாவும் கோகுலரும் காலகதியாகிவிட்டதால், இதர மிதவாதிகள் ஒருப்பட்டார்கள். காங்கிரஸ், முஸ்லிம் லீக் சபைகளுக்கும் ஒற்றுமை உண்டாயிற்று. இதற்குப் பெரிதும் பாடு பட்டவர் முஸ்லிம் பிரமுகரான மாமூதாபாத் ராஜா. 1916-ஆம் ஆண்டின் கடைசியிலே இலட்சுமணபுரியில் காங்கிரஸ் கூடுவதாக ஏற்பாடுகள் ஆயின.

கர்ட்டிஸ் சதி:—இதற்கு இடையில், இன்னொரு சம்பவம். இங்கிலாந்திலே 'ரௌண்ட் டேபிள்' என்று ஒரு சங்கம் ஏற்பட்டது. இந்தியாவின் நிலையை அச்சங்கத்தார் கூர்ந்து கவனித்தனர். இங்கிலாந்து மட்டும் ஆதிக்கம் வகித்தால் போதாது; இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளும் சேர்ந்து இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென அவர்கள் தீர்மானித்தனர். இரட்டையாட்சி முறை ஏற்படுத்த ஆலோசனை பண்ணினர். அரசாங்கத்தில் உயர்

தரப் பதவி வகிக்கும் அதிகாரிகளிலும் சிலர், அதற்கு உடந்தையாக இருந்தார்கள். நகல் திட்டமொன்று தயாரித்து அதனை அந்தரங்கமாக அனுப்பினர். அத்திட்டத்தின் மூல புருஷர் கர்ட்டிஸ் என்பவர். இந்தியாவுக்கு வந்து சில அதிகாரிகளுடன் அவர் ரகசியமாகப் பேசினர். அவரது கடிதத்தையும் அந்தச் சதியையும் 'பம்பாய் கிரானிகிள்' பத்திரிகை அம்பலத்துக்குக் கொண்டுவந்தது.

---

50. புதிய சகாப்தம்

முப்பத்தோன்ருவது காங்கிரஸ் மகாசபைக்கு 2298 பிரதிநிதிகள் விஜயஞ் செய்தார்கள். தவிர உபசரணை சபை மெம்பர்கள் 646 பேர். விருந்தாளிகளோ எண்ணுயிரம். உபசரணை சபைத் தலைவர் பண்டித ஜகத் நாராயணர். மகாயுத்த ஆரம்ப காலத்தில் வானளாவ நம்மைப் புகழ்ந்து பேசிய ஆங்கில ராஜ தந்திரிகள், இப்போது ஏதோ கருத்துக் கொண்டு கபட மௌனம் சாதித்து வருதல் அச்சம் விளைக்கிற தென்றும், நமது கோரிக்கைகளுக்கு இங்கிலாந்தை இணங்க வைக்காவிடின் நமது நலங்கள் பாழாகிவிடு மென்றும் உபசரணைத் தலைவர் வற்புறுத்தினர். பின்பு அக்கிராசனர் அம்பிகாசரண மஜூம்தார் பேசியதன் சாரம் :—

அராஜகம் :—"சூரத் நகரில் காங்கிரஸ் புதை யுண்டது. இன்றோ இலட்சுமணபுரியில் புத்துயிர் பெற்றுளது. இரு கட்சியாரும் இங்கே ஒன்று சேர்ந்தனர். ஆண்டவனை வழுத்துவோமாக. நாம் அம்புலி வேண்டியதாக லார்டு மார்லி சொன்னர். சுய ஆட்சி கிட்டினல், எல்லாக் குறைகளும் பறந்துபோம். புதிய உணர்ச்சியை ஒடுக்கமுடியாது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைக்கொண்டு 600 பேரைக் கைது செய்து, பந்தோபஸ்தில் வைத்தனர். ஒரு சிலர் குற்றம் புரியின், தேசத்தையே அடக்கு முறைக்கு இரை யாக்குவதா? நமது லட்சியத்தை ஹோம்ரூல், சுய ஆட்சி, சுயராஜ்யம், தன்னரசு என்று எப்படி அழைத்தாலும் சரி. ஜனப் பிரதிநிதி ஆட்சியே தேவை. அரசின் அமைப்பை மாற்றுவதே நோக்கம். அராஜகம் ஆட்சிப் பிசகின் விளைவேயாம். சுதந்திர நாடுகளிலும் அராஜகம் இருந்து வருகிறது.

வேண்டுவன:—"(1) இங்கிலாந்தை அண்டி நிற்கும் நாடாக இந்தியா இருத்தலாகாது; சுய ஆட்சி நாடாக ஆதல் வேண்டும். (2) ஏகாதிபத்தியத்தைப் பற்றிய ஆலோசனைகளில் இந்தியாவைக் கலந்துகொள்ளவேண்டும். (3) இந்தியா மந்திரி சபை ஒழிய வேண்டும்; அல்லது மாற வேண்டும். (4) மாகாண ஆட்சியைப் போலவே, இந்தியா கவர்ன்மெண்டிலும் திருத்தம் வேண்டும். (5) சட்டசபை மெம்பர்கள் எல்லோரையும் தேர்ந்தெடுக்கவேண்டும். (6) வரவு செலவு திட்டம் சட்டசபையின் அங்கீகாரம் பெற வேண்டும். (7) மாகாண சுய ஆட்சி வேண்டும். (8) மாகாண சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். (9) நீதி நிர்வாகப் பிரிவினை வேண்டும். (10) ஆயுதச் சட்டம் ரத்தாக வேண்டும். (11) இந்திய தேசியச் சேனை ஏற்படவேண்டும். (12) ஸ்தல சுய ஆட்சி எங்கும் விரிய வேண்டும். (13) ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைக்கவேண்டும்.

தேசப் பெருமை:—"நமது தேசத்தின் பெருமை சொல்லப்போமோ? வான்மீகியும் வியாசரும் தெய்வ தத்துவம் எழுதிய தேசம் இது. பதஞ்சலி யோக சூத்திரம் பிறந்ததும் இங்குத்தான். கீதோபதேசம் உதித்ததும்

உங்கள் நாட்டில் அன்ளே? புத்த பகவான் அன்புக் கொடி தூக்கியதும் இத்தேசமே. சைதன்யர் சோதரத் தன்மை புகன்றதும் பாரத பூமியில்தான். தற்கால விஞ்ஞான சாஸ்திரமோ அழிவுக்கான கருவிகளைக் கொண்டு, மானிட சமூகத்தை மாய்க்கையில், உங்கள் நாடோ உயர்வை புகட்டு கிறது. வருங்கால வாழ்வோ தாழ்வோ உங்கள் கையில். பாரதத்தாய் தன் மக்களிடம் வேண்டுவது என்ன? தேச பக்தியே. முக்காலும் வேண்டுவதும் அதுதான். தேசிய வாதிகளுக்கு தேசபக்தியே மதம். சுயநலத் தியாகமே சிறப்பளிக்கும். வெற்றிமாலை சூட அல்லது வீர சுவர்க்கம் புக அனைவரும் ஒரு மனங் கொள்க. திலகருக்கும் மோதி லால் கோஷுக்கும் நல் வரவு கூறுகிறேன்."

தீர்மானம்:—அக்கிராசனரின் அரிய பிரசங்கம் முடிந் ததும், ஆலோசனைக்கு வந்த முக்கிய தீர்மானம் இது:— "கூடிய சீக்கிரம் சுயராஜ்யம் தருவதாக மன்னர் பெருமான் வாக்குறுதி தருதல் வேண்டும். காங்கிரஸ் மகாசபையும், முஸ்லிம் லீக் சபையும் சேர்ந்து தயாரித்துள்ள திருத்தங் களை உடனே அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் இணங்க வேண்டும். ஏகாதிபத்தியத்திலே யாருக்கும் சரிநிகர் சமான மாக இந்தியாவை உயர்த்தவேண்டும்."

இதன்மீது திலகர் பேசுகையில் "இரு மகாசபைகளும் சேர்ந்து தயாரித்துள்ள சீர்திருத்த திட்டம் சுயராஜ்யத் திற்கு முதல் படியே. இதர சில்லரைத் திருத்தங்களைக் குறித்து இனி நாம் கவனிக்க வேண்டாம். முப்பது வருஷமாக மகா சபை உழைத்த பலன் இத்தீர்மானமே" என்று பேசினர்.

காலத்தில் சீர்திருத்தம் செய்யாவிடின் புரட்சிக்கு இடமேற்படுதல் சரித்திர உண்மை என்றார் பாபு பானர்ஜி. இந்தியாவின் ஆசை பூர்த்தியாகாவிடின் ஆபத்து ஏற்படும்

என்றார் அன்னிபெஸண்டு. தேசமனைத்தையும், திரட்ட வேண்டும் என்று மஷ்ருல் ஹக் கூறினார். இகபர வாழ்வு இரண்டினுக்கும் சுயராஜ்யம் அவசியமென்றார் பாபு விபின சந்திர பாலர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சுதினம் :—"பத்து வருஷமாகப் பிரிந்து நின்றும் ஐக்கிய மாகாணத்தில் ஐக்கியம் ஏற்படுவதைக் காண உயிரோ டிருந்தேன்" என்று திலகர் களித்தார். பத்து வருஷச் சண்டை பலன் தந்தது என்று ஆனந்தம் அடைந் தார் பாலர். காரிய சித்தியைக் கருதி இந்து முஸ்லிம் ஒற்றுமை உண்டானது கண்டு உள்ளங் களித்தார் கனம் ஸையத் நபியுல்லா. இந்து முஸ்லிம் ஒற்றுமை இன்றேல், தேச மாதா சுகமடையாள் என்று எண்ணிக் கவலை கொண்ட நான் கவலை துறந்தேன், களிப்புக் கொண்டேன் என்றார் மஷ்ருல் ஹக். தனது வாழ்வில் இன்றுதான் சுதினம் என்றார் ஸரோஜனி தேவி. காங்கிரஸிலே புதிய சகாப்தம் ஏற்பட்டுவிட்டதென அனைவரும் களித்தனர். வந்திருந்த மூவாயிரம் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் 35 வயதுக்கு உட்பட்ட வாலிபர்கள்; பல வகையிலும் சிறப்பு எய்தியது 31-வது மகா சபை.

---

51. ஆகஸ்டு அறிக்கை

முப்பத்தோன்றாவது லக்ஷ்மணபுரி காங்கிரஸுக்கு ஐக்கிய மாகாண கவர்னர் ஸர் ஜேம்ஸ் மேஸ்டன் விஜயம் செய்தார். அக்கிராசனர் அவருக்கு வந்தனம் கூறினார். அப்போது மேஸ்டன் பேசியதாவது:—"இந்த மகாசபை 1885-ஆம் வருஷம் உதித்தது. நானும் அதே வருஷத்தில் இந்தியாவில் வேலை பார்க்க ஆரம்பித்தேன். இத்தனை

வருஷ காலமாக அபிமானத்துடன் மகத்தான சபையின் நடவடிக்கையைக் கவனித்து வருகிறேன். எனவே இச்சபைக்கு சந்தோஷத்துடன் வந்தேன். உங்களது நல்வரவு கண்டு வந்தனம்."

குடி முழுகும்:—அவ்விதம் ஒரு கவர்னர் சொல்லிப் போக, மற்றையோர் எவ்விதம் நடந்துகொண்டனர் என்று பார்ப்போம். தேசத்தின் இரு மகா சபைகளும் சேர்ந்து தயாரித்த சீர்திருத்த திட்டத்தின்மேல் ஹோம்ரூல் கட்சியார் தேசத்திலே தீவிர பிரசாரம் செய்தனர். எங்கும் ஜனங்களுக்குள்ளே என்றுமில்லாத ஓர் உத்ஸாகம், ஊக்கம், சுதந்திர தாகம் உதித்தன. ராஜப்பிரதிநிதியான லார்ட் செம்ஸ்போர்டு என்பவரோ, அரசியலிலே தடபுடலான திருத்தங்கள் நாடுவதோ, குடி முழுகிப்போய் விடும் என்று பொருள்படும்படி பேசினர். இதர மாகாணத் தலைவர்கள் அவரைப் பின்பற்றத் தலைப்பட்டார்கள்.

சதிகாரர் பேச்சு:—உதாரணமாக பஞ்சாப் மாகாண கவர்னரான ஸர் மைக்கேல் ஓட்வியர் என்பவர் "சுயராஜ்யக் கிளர்ச்சி சதிகாரரின் கிளர்ச்சி" என்று இலேசாகப் பேசினர். சென்னை மாகாண கவர்னர் லார்ட் பென்ட்லெண்ட் என்பவரோ "ஜனங்களுக்கு உத்திரவாதமான ஆட்சி சடுதியில் கிடைத்துவிடும் என்ற சிந்தனையே வேண்டாம். அரசாங்கத்தின் மீது குறை கூறுவதே சிலருடைய வேலையாகிவிட்டது" என்று விளம்பினர். முன்னம் பம்பாய்க் கவர்னராயிருந்த லார்ட் ஸிடன்ஹாம் என்பவரோ "இந்தியாவில் ஆபத்து வந்துவிட்டது. அனர்த்தம் விளையப் போகிறது" என்று மேனாட்டுப் பத்திரிகையில் எழுதலானர்.

ஜஸ்டிஸ் கட்சி:—இது இப்படியிருக்க, சென்னை மாகாணத்திலே டாக்டர் நாயரையும், ஸர் தியாகராய

செட்டியையும் தலைவர்களாகக் கொண்டு 'ஜஸ்டிஸ்' கட்சி என்பது தோம்பியது. மக்களிலே ஒரு சாரரை அக்கட்சியார் வாய்க்கு வந்தபடி வைது வந்தனர். அப்போது சென்னை மாகாண நிர்வாக சபையில் அங்கம் வகித்த ஸர் அலெக்ஸாண்டர் கார்டியூ என்பவர் அக்கட்சிக்குத் தூபம் போட்டு வந்தார். சுதந்திரக் கிளர்ச்சியைச் சீரழிக்க இன்னும் பல முயற்சிகள் நடந்தன.

பெஸண்டின் கதி :—1917-ஆம் வருஷம் ஜூலை மாதம் சென்னை கவர்னர் பெண்ட்லெண்டுக்குக் கோபம் பிறந்தது. உதகமண்டலத்தை விட்டு அவர் சென்னைக்கு வந்து, "இந்தியாவை விட்டுப் போக வேண்டும். இல்லாவிட்டால் பந்தோபஸ்தில் வைக்க நேரும்" என்று அன்னி பெஸண்டுக்கு அறிவித்தார். இந்தியாவைவிட்டுப் போக அன்னிபெஸண்டு இஷ்டப்படவில்லை. உடனே அவளையும் அவள் சகாக்களான அருண்டேல், வாடியா இவர்களையும் பந்தோபஸ்தில் வைத்தார் பெண்ட்லெண்ட் பிரபு. உடனே டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் என்பவர் மிகவும் தள்ளாத வயது கொண்டிருந்தும் முன்வந்து பெண்ட்லெண்டின் செயலைக் கண்டித்து, ஹோம் ரூல் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்து, இந்தியாவிலே நடக்கும் ராஜாங்க விபரீதத்தைக் குறித்து அமெரிக்காவின் தலைவரான வில்சன் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

மந்திரி பேச்சு :—சுயராஜ்யக் கிளர்ச்சி எங்கும் வலுத்தது. பலவிடங்களில் கூட்டங்கள் நடந்தன. பெண்ட்லெண்டின் பேச்சையும் செயலையும் ஜனங்கள் கண்டித்தார்கள். கொழுந்து விட்டெரியும் பெரு நெருப்பை அணைக்க முடியுமோ? அதிகாரிகளில் சிலர் தடுத்துப் பார்த்தும் சுதந்திரக் கிளர்ச்சி அடங்கவில்லை. இதற்கு இடையில் மெஸெபொடேமியாவிற்கு அனுப்பிய படையெடுப்பு சம்பந்தமாய் உரைக்க

வொண்ணுத ஊழல்கள் நேர்ந்தன. அது விஷயமாய் இங்கி லாந்திலே பார்லிமெண்ட் சபையில் மிக்க கண்டனம் ஏற்பட்டது. அப்போது இந்தியா மந்திரியாக விளங்கிய சேம்பர் லேன் தமது பதவியை விட்டு விலகினுர். அது சமயம் மாண்டேகு என்பார் அச் சபையில் பேசியது இது :—

"இந்தியாவின் அரசியல் சுத்த மோசம். மக்களின் மனக்கருத்தை மதிப்பது கிடையாது. தங்களுடைய கதி மோட்சத்தைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ள இந்தியருக்கு ஏற்ற சமயம் கொடுக்கவேண்டும். நிர்வாக அதிகாரிகளின் மீது மேற்பார்வை செலுத்த இந்தியருக்கு உரிமை வேண்டும். இந்தியாவின் ஆட்சிமுறை காலங் கடந்த ஆட்சி முறையே. சீர்திருத்தாவிட்டால் மேலதிகாரம் வகிக்க நமக்கு யோக்யதை கிடையாது." பின்பு மாண்டேகுவே இந்தியா மந்திரியானுர்.

ஆகஸ்டு அறிக்கை :—அதன்மேல் இந்தியாவின் விஷயத்தை இங்கிலாந்திலுள்ள ராஜதந்திரிகள் கூர்ந்து கவனித்தார்கள். இந்தியாவை சாந்தஞ் செய்ய ஓர் உபாயம் தேட வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதற்கு இணங்க 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி ஒரு விளம்பரம் பிறந்தது. அதன் சாரம் இது :—

"பிரிட்டிஷ் குடை நிழலுக்கு உட்பட்டு இந்தியாவிலே ஜனங்களுக்குப் பொறுப்பான ஆட்சியை ஏற்படுத்த வேண்டி, நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் இந்தியரை வர வர அதிகமாகக் கலந்துகொள்ள வேண்டுமென்பதும், சுயராஜ்யத்திற்கு அனுகுணமான ஜன சபைகளே இந்தியாவில் படிப்படியாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கோட்பாடு. இதற்கு இந்தியா கவர்ன்மெண்டும் சம்மதித்து இருக்கிறது. அக் கோட்பாட்டின்படி எவ்வளவு சீக்கிரம் தகுந்த அளவு திருத்தங்களே

உண்டுபண்ண வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் திருத்தங்களைப் படிப்படியாகச் செய்துகொண்டு போகவேண்டுமென்பதும் தீர்மானமாகி யிருக்கிறது. இதற்காக இந்தியாவிலுள்ள அதிகாரிகளையும் ஜனப் பிரதிநிதிகளையும், இதரர்களையும் நேரில் கலந்து பேச இந்தியாவிற்கு இந்தியா மந்திரியை அனுப்புவதாகவும் தீர்மானமாகிவிட்டது."

உடனே சுயராஜ்யம்:—இவ்விதம் விளம்பரம் ஏற்பட்டும் மகாஜனங்களின் மன நிலை கொந்தளிப்பாகவே இருந்தது. காரணம் அடக்கு முறைகளின் வேகமும் கடுமையுமேயாம். ஆதலின் கொந்தளிப்பைப் போக்க வேண்டி, பெஸண்டம்மை முதலியோரை விடுதலை செய்தனர். அடக்கு முறைகளையும் அதிகாரிகள் ஓரளவு தளர்த்தினார்கள். நவம்பர் மாதம் 11-ந் தேதி டில்லி வந்துசேர்ந்தார் இந்தியா மந்திரியான மாண்டேகு. சுதந்திரக் கிளர்ச்சி செய்த அன்னி பெஸண்டை அடக்கி வைப்பதா என்று மகாஜனங்கள் ஆத்திரமடைந்து காங்கிரஸ் மகாசபைக்கு அவளையே தலைவியாகக்கொள்ள ஏற்பாடு செய்தனர். அதுவே அரசாங்க அடக்குமுறைக்கு ஏற்ற பதில் என்பது தேச மக்களின் துணிபு.

கவியின் வாழ்த்து:—1917-ம் வருஷம் டிசம்பர் மாதம் 26-ந் தேதி 32-வது காங்கிரஸ் கல்கத்தா நகரில் கூடியது. தேசீய இயக்கத்தின் தாயகம் வங்கம் அல்லவா? வங்காளிகளிடம் உணர்ச்சியும், உத்ஸாகமும் எல்லை கடந்து நின்றன. விஜயம் செய்த பிரதிநிதிகளின் தொகை 4,967. விருந்தாளிகளோ ஆயிரக்கணக்கு. உபசரணை சபையின் தலைவர் வைகுந்தநாதசேனர். ஆரம்பத்திலே கவிச் சக்கரவர்த்தி தாகூர் மகாசபையை வாழ்த்தியும் தொழுதும் ஒரு கவி பாடி வாசித்தார். உபசரணை சபைத் தலைவர் பேசியதின் சாரம் இது:—

தாம்பூலம் கோடு:—" இந்தியப் பாதுகாப்புச் சட்டம் படாதபாடு படுத்துகிறது. நூற்றுக்கணக்கான வாலிபர் விசாரணையில்லாமல் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுளர். பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்த்துவிட ஏதோ சதி நடக்கிறதாம். அதற்காக ரௌலட் கமிட்டியை நியமித்தனர். இன்னும் புதிய கொடுமையான சட்டம் செய்ய எண்ணம்போலும்! இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஒரு நிலக்கரி உத்தியோகஸ்தன் நியமனம் ஆனான். அதன் பலன் ஒரு வருஷத்திற்குள் நூறு சுரங்கங்கள் மூடப்பட்டுப் போயின. பதினாயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். ரகசியப் போலீஸ் இலாகாவை தாம்பூலம் கொடுத்து அனுப்பிவிட வேண்டும்."

பூரண சுயராஜ்யம்:—அக்கிராசனம் வகித்த அன்னி பெஸண்டு பேசியதின் சாரம்:—"ஐரோப்பிய மகா யுத்தத்தினால் ஏற்பட்ட பலன்கள்: (1) ஆசியாவிலுள்ள தேசங்கள் அனைத்தும் விழித்தெழுந்து நிற்கின்றன. (2) ஒரு தேசத்தாரை மற்றொரு தேசத்தார் ஆளக்கூடாது என்று எங்கும் ஒரே பேச்சாக இருக்கிறது. (3) மானிட கோடிகளில் வெள்ளைக்காரரே மேலானவர் என்ற நம்பிக்கை பறந்துவிட்டது. (4) பாமரர் என்போரும், ஸ்திரீகளும் உயர்நிலையடைய எண்ணி நிற்கின்றனர். இந்நிலையில் பேருதவி புரிந்து பரமத் தியாகம் செய்துள்ள இந்தியா தேசம் தனது பிறப்புரிமையான சுதந்திரம் அடைதல்வேண்டும். 1923-ல் அல்லது 1928-இலோ சுயராஜ்யம் ஏற்படும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யவேண்டும். அதற்கு முதல்படியாக 'காங்கிரஸ்-லீக்' திட்டத்தின்படி உடனே சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். 1928-க்குள் பூரணமான சுயராஜ்யம் தானாகவே ஏற்படும்படி இப்பொழுதே வழி கோலிவிட வேண்டும்."

அம்மையின் தீரம்:—ஆலோசனைக்கு வந்த முக்கிய தீர்மானங்களில் முதன்மையானது அலி சகோதரர்களைப் பற்றியது. ஐரோப்பிய மகா யுத்தத்தின் பலனாக துருக்கி யின் நிலைக்குப் பங்கம் நேராதபடி வாக்குறுதி யிருந்தும் விபரீதம் விளைந்தது பற்றி முகம்மதலியும், ஷௌகத் அலி யும் கண்டித்துப் பேசினர். அதற்காக இருவரையும் அதி காரிகள் சிந்துவாரா என்ற இடத்தில் பந்தோபஸ்தில் வைத்து விட்டார்கள். அதைக் கண்டித்து திலகர் அழுத்த மாகப் பேசினார். அதுசமயம், அலி சோதரரின் தாயார் சபைக்கு வந்தாள். முதலில் முஸ்லிம் லீக் சபைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று சிலர் சொல்லியும், "காங்கிரஸ் மகா சபைக்குச் சென்ற பின்பேதான் வருவேன்," என்று அந்த அம்மை சொன்னாள். "தேசத்திற்கும் மதத்திற்கும் மாறாக ஏதேனும் என் குமாரர் உறுதிமொழி தரின், அவர் களின் கழுத்தை முறித்து நெறித்துவிடுவேன்," என்று தீரம் பேசியவள் அந்த அன்னை.

உடனே வரவேண்டும்:—குறிப்பிட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் சுயராஜ்யம் ஏற்படும்படியான சட்ட மொன்றை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு செய்துவிட வேண்டு மென்பது சுயராஜ்யத் தீர்மானத்தின் முக்கிய சாரம். வழக்கம்போல் பானர்ஜி வாசாமகோசரமாகப் பேசினார். முகமதலி ஜின்னா ஆதரித்துப் பேசினார். விபின சந்திர பாலரோ, "உடனே ஹோம் ரூல் ஏற்பட்டுவிட வேண்டும்" என்று வற்புறுத்தினார். பல திருத்தப் பிரேரணைகள் எழுந்தன. பிளவு இல்லாமல் சமரஸம் நிலைக்கவே திலகர் வழி தேடினார். பெஸண்டு அம்மையும் வேண்டிக் கொண் டாள். இந்தியா மந்திரியான மாண்டேகு தேசமெங்கும் சுற்றி வருவதாலும், பலருடன் கலந்து பேசுவதாலும், திருப்திகரமான முடிவு ஏற்படும் என்று பலரும் நம்பினர்.

காங்கிரஸ்-லீக் சீர்திருத்த திட்டத்திற்குக் குறைவான எதையும் ஒப்புக் கொள்வதில்லை யென ராஜீய வாதிகள் அனைவரும் ஒரு மனதாகச் சொல்லினர்.

ஸ்திரீகளுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று ஸரோஜனி தேவி ஒரு தீர்மானம் கொண்டுவந்தாள். அதை அவள் வற்புறுத்தவில்லை. வழக்கம்போல் பல தீர்மானங்கள் நிறைவேறின.

---

52. மந்திரியின் தந்திரம்

சீர்திருத்தம் வழங்கும் நோக்குடன் இங்குள்ள அதிகாரிகளையும் ஜனத்தலைவர்களையும் கலந்து பேச வந்தார் இந்தியா மந்திரியான மாண்டேகு. 1917-ஆம் ஆண்டு நவம்பர் 10-ந் தேதி பம்பாயில் வந்திறங்கியதும் அம் மாகாண கவர்னராயிருந்த வில்லிங்டன் பிரபுவைக் கண்டு பேசினார் முதன் முதலாக. அனுபவத்தில் பெரியதாகத் தோன்றும்படியான சீர்திருத்தம் தரவேண்டும் என்றார் அப்பிரபு.

பின்பு மாண்டேகு டில்லிக்குச் சென்று ராஜப் பிரதிநிதியான லார்டு செம்ஸ்போர்டையும், மாகாண கவர்னர்களையும் சமஸ்தான மன்னரையும் கண்டு பேசினார். ஒவ்வொருவரும் தத்தமது யோசனைகளையே வற்புறுத்தினர். இரட்டையாட்சி முறையான கர்டிஸ் திட்டமே மந்திரிக்குப் பிடித்தமாயிற்று.

அசாத்தியமான பேர்வழி :—அப்போது ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் ஸ்தானம் வகித்த ஸர் சங்கரன் நாயரைத் தருவித்துப் பேசினார். "மகா அசாத்தியமான பேர்வழி. எந்த யோசனை சொல்லுவதாயிருந்தாலும் காங்கிரசின் கருத்தையே வற்புறுத்துகிறீரே" என்று மாண்

டேகு பிரயாணிக்க நேர்ந்தது. பின்பு காங்கிரஸ்காரர், ஹோம் ரூல் லீக் கட்சியினர் முதலிய பல ஜனத் தலைவர்களை வர வழைத்துப் பேசினார். அப்போது 1917-ஆம் வருஷத்திய கல்கத்தா காங்கிரஸ் நடைபெறும் சமயம். அன்னி பெசண்டே தலைவி ஆனாள். காங்கிரஸ் மகா சபைக்கு விஜயஞ் செய்யவேண்டுமென மாண்டேகுவை அழைத்தாள் பெஸண்டு. இது விஷயமாய் மாண்டேகுவைப் பற்றிய புத்தகமொன்றில் காணும் விஷயம் இது :—

சாக்குச் சொல்லுதல்:—"டில்லி ராஜாங்க மாளிகையில் நடக்கும் விபரீதங்கள் வெகு ருசிகரம். மகா சபைக்கு வர வேண்டுமென்று பெஸண்டு பெரிதும் வேண்டிக்கொண்டாள். இந்த விசாரணைப் பொறுப்பில் லாயிட் ஜார்ஜ் இருந்திருப்பின், அவர் அம்மகா சபைக்கு நேரே சென்று பிரமாதமாகப் பேசியிருப்பார். என்னால் அவ்விதம் செய்யமுடியவில்லை; தடை ஏற்பட்டுவிட்டது. இல்லாவிடின், அச்சபைக்குச் சென்று ராஜீய நிலையையே அடியோடு மாற்றி யிருப்பேன். இந்தியா கவர்ன்மெண்டாரோ எங்கள் பிரயாண திட்டத்தை வெகு ஜாக்கிரதையாகத் தயாரித்து விட்டனர். உண்மை யில் இந்திய ராஜீய இயக்க ஸ்தாபனமான காங்கிரஸ் கல் கத்தாவில் கூடும் சமயம் நாங்கள் பம்பாயில் இருக்கவேண்டு மென்பது சுற்றுப்பிரயாண ஏற்பாடாகும். இங்ஙனம் ஏற் பாடு செய்துவிட்டு, மகா சபையின் அழைப்புக்கு இணங்க முடியவில்லையே என்று இந்தியா கவர்ன்மெண்டார் சாக்குச் சொல்லினர்."

குலாம் சபைகள் :—இந்தியாவின் பற்பல நகரங்களுக் கும் சென்று பலரையும் அவர் கண்டு பேசினார். எல்லாரும் காங்கிரஸ்-லீக் சீர்திருத்த திட்டமாவது உடனே கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆயினும், மழைக் காலத் தில் காளான் பூப்பதுபோல் தேசமெங்கும் குலாம்சபைகள்

கிளம்பின. ஹோம் ரூல் வேண்டாமென மாண்டேகுவினிடம் சொல்லின. ஹோம் ரூல் தரின் குடி முழுகிப்போய் விடும் என்றும் கூக்குரலிட்டன. அதிகாரிகளில் சிலர் அக்குலாம் சபைகளுக்குத் தூபம்போட்டு ஆட்டிவைத்தனர்.

சரிப்படுத்திவிட்டார்:—இம்மட்டோ? இன்னும் பல சூழ்ச்சிகளும் நடந்தன. புரட்சி இயக்கத்துக்கு சித்த ரஞ்சன தாஸே தலைவர் என்றனர் சிலர். பெஸண்டையும் திலகரையும் வாரி எறிந்துவிட ஜின்னு முயலுவதாகச் சிலர் சொல்லினர். பின்பு மாண்டேகு நம் சென்னைக்கு வந்தார். வந்ததும், "என்ன பிராமணர் பயம் நிறைந்திருக்கிறதே!" என்று பிரமித்தார். சென்னை உலமாக்களில் சிலர் வந்து "காங்கிரஸ்-லீக் திட்டத்துக்கு எந்த இஸ்லாமிய நூலிலும் ஆதாரம் இல்லையே" என்றனர். "அமெரிக்காவின் ஜனாதிபதி வில்ஸனுக்கு மோசமான கடிதம் எழுதினீர்களே" யென்று டாக்டர் மணி ஐயரைக் கடிந்து கேட்டார் மாண்டேகு. பலரையும் கண்டு பேசியபிறகு, தமது உத்தேச சீர்திருத் தத்துக்குச் சாதகமாகப் பலரையும் சரிப்படுத்திவிட்டார்.

மிதவாதிகள் நடுக்கம்:—1918-ஆம் ஆண்டு ஜூலை 8-ந் தேதி மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த நகல் சட்டம் வெளியாயிற்று. உடனே மிதவாத, அமிதவாத ராஜீயக் கட்சிகள் மீண்டும் தலையெடுத்து விட்டன. காங்கிரஸ்-லீக் திட்டங்கூடக் கிடைக்கவில்லையே என்று தேசீயக் கட்சியார் வருந்தினர். இவ்வளவு சீர்திருத்தம் வழங்குவதா என்று ஐரோப்பியர் கொதித்தனர். பார்த்தனர் மிதவாதிகள்; உள்ளதும் போய்விடப் போகிறதே, கிடைத்ததைக் கொண்டு களிப்போம் என்று தீர்மானம் செய்தனர். கட்சிப் பிளவு விசாலமாகிவிட்டது.

விசேஷ காங்கிரஸ்:—இந் நிலையில் 1918-ஆம் ஆண்டு ஆகஸ்டு 29-ந் தேதி பம்பாயிலே விசேஷ காங்கிரஸ் நடை

பெற்றது. ஸையத் ஹாஸன் இமாம் அக்கிராசனம் வகித்தார். இரு கட்சியாரும் ஒத்துப்போகவேண்டு மென்று பலர் முயன்றனர். மிதவாதிகளோ பிடிவாதமாக இருந்தார்கள். விஜயம் செய்த பிரதிநிதிகள் 4,000 பேர். அவர்களில் மாதர் 500 பேர்; தாழ்ந்த வகுப்பினர் என்போர் 50 பேர். "அவரவர் தம்தம் தேச ஆட்சி முறையைத் தாங்களே வகுத்துக் கொள்ளவேண்டு மென்று, ஆங்கிலேயர் பிரமாதமாகப் பறைசாற்றினர். அதனை சுயநிர்ணய லட்சியம் என்றனர். காங்கிரஸும் முஸ்லிம் லீகும் சேர்ந்து, சீர்திருத்த திட்டம் தயாரித்தன. அதனை நாம் வற்புறுத்தினோம். மிதவாதிகளும் தாங்கிப் பேசினார்கள். இப்போதோ வேறு விஷயமாகப் பேசுகிறார்கள். என்ன செய்வது? மாண்டேகு-செம்ஸ்போர்டு திருத்தம் தோன்றி இப்படிச் செய்துவிட்டதே" என்று வருந்தினர் அக்கிராசனர். "சுய ஆட்சிக்கு நாம் தகுதி யுள்ளவர்களே; அதற்கு முதல் படியாக காங்கிரஸ்-லீக் கோரிக்கைகளை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று தீர்மானம் செய்தது நமது மகா சபை.

பானர்ஜியின் பல்டி:—வருஷ முடிவில் (1918-ஆம் ஆண்டு டிசம்பர்மாதக் கடைசியில்) கூடவேண்டிய மகா சபை, டில்லியில் நடந்தது. ஐயாயிரம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் விவசாயிகள் பலர். பண்டித மதன மோகன மாளவியா அக்கிராசனம் வகித்தார். உள்ள நிலைமையை உள்ளவாறு உரைக்க இங்கிலாந்துக்கு ஒரு தூது அனுப்பிப் பார்ப்போம் என்று யோசனை சொன்னர். பம்பாய் விசேஷ காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானங்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. இதற்கு இடையில், மிதவாதிகள் தனியே கல்கத்தாவில் கூடி,, கிடைத்ததைக் கட்டியணைப்போம் என்று தீர்மானம் செய்தனர். பாபு சுரேந்திர நாத பானர்ஜி அம் மிதவாதக் கூட்டத்துக்கு அக்கிராசனர் ஆனர்.

53. சைத்தான் சட்டம்

அடுத்த வருஷம் (1919-ஆம் ஆண்டு டிசம்பர்) அமிருத ஸரஸ் நகரில், காங்கிரஸைக் கூட்டுவதாக ஏற்பாடாயிற்று. இதற்கு இடையில் ரௌலட் சட்டமும் சத்தியாக்கிரகமும், பஞ்சாப் படுகொலையும் நேர்ந்தன. தேசத்தின் நிலைமை பயங்கரமாக முடிந்தது. தேசத்திலே அடக்கு முறைச் சட்டங்கள் ஒன்று இரண்டல்ல, ஒன்றின்பின் ஒன்றாகப் பல கிளம்பின. யுத்த சமயத்தில் எதிரிகளால் ஆபத்து நேருமோ என்று தேசப் பாதுகாப்புச் சட்டம் ஏற்பட்டது. புரட்சிக்காரர் என்று வங்க வாலிபர் பலர், பந்தோபஸ்தில் வைக்கப்பட்டனர். அடக்குமுறை ஒரு புறம் ஓங்கிவர, அராஜகக் கொள்ளைகளும், கொலைகளும் பெருகிவந்தன. இவற்றைச் சமாளிக்க ரௌலட் சட்டம் உதித்தது. அது மகா கொடுமையானது. ஆதலின் அது கூடவே கூடாது என்று, கட்சி பேதம், ஜாதி பேதம், மத பேதம் இன்றி, எல்லோரும் வற்புறுத்தினர். அரசாங்கம் லட்சியம் செய்யவில்லை. இரவு பத்து மணிக்கு அச்சட்டம் ஏற்பட்டது. மகாஜன மஹஜர் ஒன்று தயாரித்து, அரசாங்கத்துக்கு அனுப்பச் சொன்னார் மகாத்மா காந்தி. லட்சோபலட்சம் பேர் கையெழுத்திட்டு அனுப்பியும் பலன் இல்லை.

துக்க தினம்:—காந்தி பார்த்தார்! ஜனக் கொதிப்போ தலைமிஞ்சி விடும்போல் இருந்தது. நல்வழியில், சாத்விகமான வழியில் திருப்ப அவர் முயன்றார். அதற்காக 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ந் தேதி, மக்கள் அனைவரும் உண்ணா நோன்பு கொள்ளவேண்டும்; ஆலயமோ, மசூதியோ சென்று, ரௌலட் சட்டம் ஒழிய வேண்டுமென ஆண்டவனைத் துதிக்க வேண்டும்; அன்று ஒரு வேலையும் செய்யக் கூடாது; கடையடைப்புச் செய்ய வேண்டும் என்று சொன்னார்.

அவ்விதமே தேசம் நடந்தது. மிகவும் சாந்தமாக மக்கள் அனைவரும் அத் தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடியதைக் கண்டு அரசாங்கம் பிரமித்தது. பஞ்சாப் மாகாணத் தலைவரான ஸர் மைக்கேல் ஓட்வியர் என்பார், இது பிரிட்டிஷாருக்கு விரோதமான கிளர்ச்சி என்றார்; அதைக் குலைக்க வேண்டும் என்று கங்கணம் பூண்டார். பஞ்சாபுக்குச் சென்ற மகாத்மா காந்தியைக் கைது செய்து, பம்பாய்க்குத் திருப்பி அனுப்பினர்.

படுகொலை:—உடனே மாகாணத் தலைவர்களில் சிறந்த டாக்டர் ஸத்யபால், டாக்டர் கிச்சிலு இருவரையும், நாடு கடத்தினர். கூட்டங்கள் கூட்டக் கூடாது என்று செங்கோல் பிறப்பித்தார். இதனை நன்கு உணராமல் பஞ்சாபிலே அமிருதஸரஸ் என்னும் நகரில் ஜாலியன் வாலாபாக் எனும் தோட்டத்தில், ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினர். உடனே ஜெனரல் டயர் எனும் தளகர்த்தர், அந்த ஓட்வியரின் ஆணை தாங்கி, துருப்புகளுடன் அத் தோட்டஞ் சென்று, குண்டுமழை பொழிந்தார். ஜனங்கள் தப்பியோடலாம் என்றாலோ, குறுகிய ஒரே வழிதான் உண்டு. குண்டுப் பிரயோகத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் மாண்டனர்; ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்தனர்.

பண்டிதரின் பரிவு:—அவ்விஷய விவரம் வெளியே தெரியாமல், வேலி போடப்பட்டிருந்தது. பண்டித மதன மோகன மாளவியா அவ்விடஞ் சென்று, விஷயத்தை அறிந்துவந்து, ராஜப் பிரதிநிதியின் சட்ட சபையில் அடுக்கடுக்காக 99 கேள்விகள் போட்டார். அதன் பின்பே பஞ்சாப் படுகொலை விவரத்தைப் பலரும் அறியலாயினர். இனி காந்தியைக் கைதி செய்தவுடனே, சில இடங்களில் ஜனங்கள் மதி பிசகிக் கலகங்கள் செய்தனர். பஞ்சாபில் ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஜனங்கள் பட்ட கொடூரத்தை

விரித்துரைக்க இயலாது. மனமுமில்லை. இப்படி தேச மெங்கும் அமளி குமளி நடந்தது.

பரிகாரம் தேவை:—அரசாங்கத்தாரும் பிரமித்துப் போய் ஒரு விசாரணை சபையை ஏற்படுத்தினர். அதில் ஐரோப்பியர் ஒரு விதமாகவும், இந்தியர் ஒரு விதமாகவும் தீர்ப்பு எழுதினர். "சுட்டேன், சுட்டேன், குண்டு தீரும் வரையில் சுட்டேன்" என்று செருக்குடன் சொல்லிய டயர், அவருக்கு ஆணை தந்த ஓட்வியர், அனுகூலமாயிருந்த இதர அதிகாரிகள் இவர்களை உடனே வேலையை விட்டாவது போகச்சொல்ல வேண்டும் என்று நம்மவர் வற்புறுத்தினர். ராஜப் பிரதிநிதியான லார்டு செம்ஸ்போர்டையும் இங்கிலாந்துக்கு உடனே அழைத்துக்கொண்டு விடவேண்டும் என்றும் ஜனங்கள் விரும்பினர்.

---

54. நெருப்பில் நெய்யூற்றல்

அவ்விதம் காரியம் நடக்கவில்லை. சில்லரை அதிகாரிகளிலே சிலர், பேருக்கு சிட்சை அடைந்தனர். மூலபுருஷரும், முக்கிய புருஷரும் போற்றப்பட்டனர். ஜெனரல் டயருக்குப் பட்டாக் கத்தியும் பண முடிப்பும் பரிசளித்தனர் ஐரோப்பியர். ஸர் மைக்கேல் ஓட்வியர் முன் போல் மொய்ப்புடன் விளங்கி நின்றார். இது ஒரு புறம் இருக்க, தேச மக்களின் சீர்திருத்தக் கோரிக்கைகளை மதியாமல் மாண்டேகு - செம்ஸ் போர்டு திட்டத்தின்படி சீர்திருத்த சட்டம் ஏற்பட்டது. இந் நிலையில் அமிருதஸரஸ் நகரிலே 1919-ஆம் வருஷக் கடைசியில் முப்பத்தி நான்காவது காங்கிரஸ் மகா சபை நடைபெற்றது. பிரதிநிதிகளின் தொகை 7031. தவிர, விவசாயப் பிரதிநிதிகள்

1095 பேர். வரவேற்புக் கமிட்டியார் 1116 பேர். விருந்தின ராக வந்தோர் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர்.

சீர்திருத்தமா?:—காந்தியும், திலகரும் பந்தலுக்குள் பிரவேசிக்கையில், தேசீய கோஷம் வானைப் பிளந்தது. உபசரணை சபைத் தலைவர் சுவாமி சிரத்தானந்தர். அக்கிராசனர் பண்டித மோதிலால் நேரு. ராணுவச்சட்ட அமுலால் சிறையில் கிடந்து விடுதலையடைந்த பஞ்சாப் தலைவர்களும், சிந்துவாராவில் நான்கு வருஷ காலமாகக் காவலில் கிடந்த அலி சோதரர்களும் வந்திருந்தார்கள். சீர்திருத்த திட்டத்தை ஒப்புக்கொண்டு பார்க்கலாம் என்றார் அக்கிராசனர். சீர்திருத்தங்கள் அரைகுறையானவை, அதிருப்திகரமானவை என்று மகாசபை தீர்மானம் செய்தது. பஞ்சாப் படுகொலையைக் கண்டித்தது. இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

எரியும் நெருப்பு:—எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் பல காரியங்கள் நடக்கலாயின. ஐரோப்பிய மகா யுத்த சமயத்தில், ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு துருக்கி தேசம் யுத்தம் செய்தது. முகம்மதியரின் புண்ணிய ஸ்தலங்கள் அங்குதான். தவிர இஸ்லாமியரின் குருபீடமான கிலாபத்தும் அங்கேதான். துருக்கியின் அரசே குருபீடம். எனவே மத விஷயமாக இந்திய முகம்மதியர் துருக்கிக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆயினும் ராஜ பக்தியோ ஆங்கிலேயருடன் இணைத்திருக்கிறது. இருதலைக் கொள்ளி எறும்பு போல் ஆயினர் முகம்மதியர். என்றாலும் ராஜ பக்தியில் ஈடுபட்டு, துருக்கிக்கு எதிராகப் போர் புரிந்தனர்; இது கண்டு ஆங்கில மக்களுக்கு மகிழ்ச்சியும், பிரமையும் ஒருங்கே ஏற்பட்டன.

ஆளுக்குக் கோஞ்சம்:—ஆதலினால் யுத்தம் முடிவடைந்ததும், துருக்கியிலுள்ள புண்ணியஸ்தலங்கள் பாதிக்கப்படா, துருக்கியும் துண்டாகமாட்டாது என்று ஆங்கில ராஜதந்திரி

கள் வாக்குறுதி தந்தார்கள். ஆயினும் துருக்கியை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்குபோட்டுக்கொள்ளும் யோசனை அம்பலத்துக்கு வந்தது. ஆதலின் துருக்கிக்கு நேரக்கூடிய ஆபத்தைத் தடுக்கக் கருதி 1919-ஆம் ஆண்டு நவம்பர் 24-ந்தேதி கிலாபத் கமிட்டி ஏற்பட்டு அடுத்த வருஷம் முஸ்லிம் தூதர் இங்கிலாந்துக்குச் சென்று, அப்போது பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜுடன் வாதாடியும் துருக்கி விஷயம் திருப்திகரமாக முடியாமல் மனக் கசப்புக்கு இடமாகவே முடியலாயிற்று.

ஒத்துழையா இயக்கம்:—இங்கிலாந்தை நம்பிப் பிரயோஜனம் இல்லை, இந்தியாவிலேயே முயலவேண்டும் என்று இந்துக்களும் முகம்மதியரும் உணர்ந்து கொண்டனர். பஞ்சாப் படுகொலைக்குக் காரணமான ஸர் மைக்கேல் ஓட்வியரின் ஆட்சிக் காலம் நீடிக்கப்பட்டது. துருக்கியை ஆளுக்குக் கொஞ்சமாக ஐரோப்பிய தேசங்கள் பங்கு போட்டுக்கொண்டன. ஆதலால் பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் ஏற்படவும், கிலாபத்தைக் காக்கவும், சுயராஜ்யம் எய்தவும், ஒத்துழையா இயக்கத்தில் இறங்கவேண்டுமென்று ஆலோசனை பிறந்தது.

கல்கத்தாவில் 1920-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விசேஷ காங்கிரஸ் நடைபெற்றது. லாலா லஜபதி ராய் அக்கிராசனம் வகித்தார். ஆறாயிரம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். விருந்தினராக வந்தவர்களோ பத்தாயிரத்துக்கு அதிகமாகவே யிருந்தார்கள்.

55. சாத்விகப் போர்முறை

ஒத்துழையா இயக்கத் தீர்மானமே முக்கிய மானது. அன்னி பெஸண்டு, பண்டித மாளவியா போன்றவர்கள் ஒத்துழையா இயக்கம் வேண்டா மென்று வாதாடினார்கள். முடிவில் ஓட் எடுத்தனர். இயக்கம் வேண்டும் என்று 1855 பேர்கள் ஓட் செய்தனர். வேண்டாம் என்று 873 பேர் ஓட் கொடுத்தார்கள். குறைகள் தீரும் வரையில், அரசாங்கத்துடன் ஒத்துழையாமல், விலகி நின்று, சாத்வீகப் போர் புரியுங் கொள்கையை மகாசபை ஒப்புக்கொண்டு விட்டது.

அவதார புருஷன் :—உடனே மகாத்மா காந்தி தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒத்துழையாக் கொள்கையை எடுத்துரைத்தார். சைத்தான் ஆட்சி முறையை அகற்றவேண்டும் என்றார். ராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்றார். மக்கள் அனைவரும் அவரை அவதார புருஷன் என மதித்தனர், வணங்கினர். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருமுகமாகத் திரண்டு அவருக்குப் பக்கபலமாக நின்றனர். ஒத்துழையா இயக்கத்தின் அம்சங்கள் இரண்டு. ஒன்று ஆக்க முறை; வேறொன்று அழிவு முறை. அஹிம்ஸை என்பதே இயக்கத்தின் அடிப்படை. இந்து முஸ்லிம் ஒற்றுமை, பிராமணர் பிராமணரல்லாதார் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, இவை ஆக்க முறைகளாம். அழிவு முறைகளோ பாடசாலைகள், கோர்ட்டுகள், சட்டசபைகள் இவைகளை பகிஷ்கரித்தலாம்.

'வெளியே போய்விடு' :—1920-ம் வருஷக் கடைசியில் நாகபுரியிலே 35-வது காங்கிரஸ் நடை பெற்றது. சேலம் விஜயராகவாச்சாரியார் அக்கிராசனம் வகித்தார். விஜயம்

செய்திருந்த பிரதிநிதிகள் 22 ஆயிரம் பேர்கள். ஆயிரக் கணக்கான விருந்தினரும் வந்திருந்தனர். அக்கிராசனர் முடிவாகப் பேசியதின் சாராம்சமாவது :—"நம் தேசத்தின் கதி மோட்சம் இருவர் கையில் இருக்கிறது. ஒருவர் மாண்டேகு. மற்றவர் மகாத்மா காந்தி. இருவருக்கும் ஒரு விண்ணப்பம். 'ஐயா! நல்ல மனதுடன் எங்கள் கோரிக்கையை ஈடேற்றுங்கள்,' என்று இந்தியா மந்திரியை வேண்டிக் கொள்வேன். மகாத்மா காந்திக்கோ, 'பெரியாரே! வேண்டாம்,' என்பேன். நாம் அனைவரும் ஒருமுகமாக நின்றால் சுதந்திரம் அடைதல் திண்ணம். கடைசியாக இங்கிலாந்துக்கு விடுக்கும் செய்தி. 'நல்ல பையனாக இரு. அண்ணன் தம்பிபோல் நாம் இருக்கலாம். இல்லையேல் மரியாதையாக வெளியே போய்விடு. இதில் ஒரு சொட்டு ரத்தம் சிந்தவும், சிந்தவைக்கவும் மாட்டோம்.'"

யுத்த முஸ்தீபு:—ஒத்துழையாத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டபோது, இருவரே விரோதமாகயிருக்க மற்றையோர் அனைவரும், ஆதரவாக இருந்தனர். "மகாத்மா காந்திக்கு ஜே" என்னும் ஆரவாரத்துக்கிடையே தீர்மானம் நிறைவேறியது. அரசாங்கம் தந்த பட்டத்தை உதறித் தள்ளுவதுடன், வரிகொடாமல் நிறுத்திவிடுவது உள்பட பல அம்சங்களும் சேர்க்கப்பட்டன. இங்கிலாந்தில் நடந்து வந்த 'இந்தியா' பத்திரிகையை நிறுத்திவிடவும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியைக் கலைத்துவிடவும் நாகபுரிக் காங்கிரஸில்தான் தீர்மானமாயிற்று.

தேசீய வேலை சரிவர நடைபெற, தொண்டர் படை திரட்டவும், காலஞ் சென்றுவிட்ட திலகரின் பெயரால் ஒரு கோடி ரூபாய் திரட்டவும், கிராமங்கள் தோறும் காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கவும் தீர்மானமாயிற்று. ஒத்துழையாக் கொள்கையின்படி, மாணவரில் பலர் கலாசாலையை விட்டு

வெளியே வந்தனர். பண்டித மோதிலால் நேரு, சித்த ரஞ்சன தாஸர், எம். ஆர். ஜயகர் போன்ற பிரமுகர்களும், இதரரும், வக்கீல் வேலையை விட்டு தேச சேவையில் முனைந்து முயன்றனர்.

கோமகன் கூற்று:—ஒத்துழையா இயக்கப் பிரசாரம் தேசமெங்கும் தீவிரமாக நடைபெற்றது. தலைவர்களிலும் தொண்டர்களிலும் 50 ஆயிரம் பேர் சிறை புகுந்தனர்.

சட்டசபை பகிஷ்காரமும் வலுத்தது. மாண்டேகு-செம்ஸ்போர்டு திட்டத்தின்படி ஏற்பட்ட சட்டசபைகளைத் திறந்து வைக்க, கானுட்டுக் கோமகன் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்தார். பழைய சம்பவங்களை யெல்லாம் மறந்து, பரஸ்பரம் நல்லெண்ணம் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். மக்களின் மனப்புண் ஆறவில்லை.

கதர் மயம்:—36-வது காங்கிரஸ் மகா சபை ஆமதாபாத் நகரில், (1921-ஆம் ஆண்டு) நடைபெற்றது. காங்கிரஸ் பந்தல், பிரதிநிதிகளின் விடுதிகள் ஆகிய எல்லாம் சுத்தக் கதர்த் துணியினாலேயே ஆகியிருந்தன. நாற்காலி போன்ற ஆசனங்கள் இல்லாமல் தேச ஆசாரப்படி அனைவரும் கீழே உட்காரும் ஏற்பாடு அந்த மகாசபையில்தான் ஆரம்பமாயிற்று. காங்கிரஸின் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தேசபந்துதாஸ் சிறையில் கிடந்தார். காரியதரிசிகளான மோதிலால் நேருவும், ராஜகோபாலாச்சாரியாரும் அப்படியே. தேச பந்துவின் ஸ்தானத்தில் ஜனுப் ஹக்கீம் அஜ்மல்கானை நியமித்திருந்தனர். உபசரணை சபைத் தலைவரான படேல் செய்த பிரசங்கத்தின் சாரம்:—

வெற்றிகரம்:—"இந்து-முஸ்லிம் ஒற்றுமை உறுதிப்பட்டுள்ளது. அஹிம்ஸா தர்மம் ஓங்கியிருக்கிறது. வகுப்பு பேதங்கள் புதைந்துபோயுள. பகிஷ்காரவேலை வெற்றிகரமாக நடந்து வருகிறது. 31 ஆயிரம் மாணவர் தேசீயக்

கல்வி பயிலுகின்றனர். ஆயிரக்கணக்கான ராட்டைகள் சுழலுகின்றன. கதர் உற்பத்தி பெருகி வருகின்றது. மது பான மறியல் வேலை தொடங்கியுள்ளோம். தீண்டாமை வேலை திருப்திகரமாக நடக்கிறது."

---

56. மகாத்மா சர்வாதிகாரி

ஒத்துழையா இயக்கத்தின் உயர்வு குறித்து அக் கிராசனர் அழகாகப் பேசினார். "'இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்' என்று தேச பந்துவின் மனைவி வசந்தா தேவி ஒரு செய்தி அனுப்பி யிருந்தார். அதிகாரிகள் அடக்குமுறை கொண்டு அனைவரையும் அடக்கப் பார்ப்பதால் எல்லாரும் தேசத் தொண்டர் படையில் சேரவேண்டும். தேசம், மதம், இவற்றிற்காக சிறை புகவும், அடிபடவும், உயிர்விடவும் தயாராயிருத்தல் அவசியம். மகாத்மா காந்தி தேச சர்வாதிகாரியாக இருந்து காரியங்களை நடத்தி வரவேண்டும்" என்று பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இளவரசரின் வருகை:—அப்போது ராஜப் பிரதிநிதியாக இருந்தவர் லார்ட் ரீடிங். அவர் மகாத்மா காந்தியைத் தருவித்துப் பேசினார். வாக்குறுதி எதுவும் தராமல் சமரஸம் செய்துவிட முடியுமா என்று பார்த்தார். இளவரசரைத் தருவித்து, மக்களின் பரம்பரை ராஜ பக்தியைக் கிளப்பி ஒத்துழையா இயக்கத்தை நசுக்கவும் முயன்றார். இளவரசரின் வருகையையும் பகிஷ்கரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் மகாசபை கட்டளை இட்டுவிட்டது. எங்கும் அஹிம்ஸை நிரம்பியிருந்தும் இரண்டு, மூன்று இடங்களில்

கலகங்கள் நேர்ந்தன. 1921-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் மலபார் ஜில்லாவில் மாப்பிள்ளைமார் கலகம் உண்டாயிற்று.

சேனையில் சேரக்கூடாது என்று போதித்ததற்காக அலி சகோதரர்களும், இன்னும் சில முஸ்லிம் தலைவர்களும் தண்டிக்கப்பட்டனர். இளவரசர் 1921-ஆம் ஆண்டு நவம்பர் 17-ந் தேதி பம்பாயில் வந்திறங்கினார். அவர் வருவதற்கு முன் பகிஷ்காரம் தளரவேண்டுமென்று (சிறையில் கிடந்த) தாஸ் முதலியவர்களுடன் அதிகாரிகள் பேசிப் பார்த்தனர்.

சமரஸ முயற்சி:—பண்டித மாளவியா பரிவுகொண்டு ராஜப் பிரதிநிதிக்கும், மகாத்மா காந்திக்கும் இடையே சமரஸம் உண்டுபண்ணக் கருதினார். அலி சகோதரர்களை விடுதலை செய்து, மாகாண சுய ஆட்சி தருவதாக இருந்தால் சமரஸத்தைப்பற்றி நினைக்கலாமென மகாத்மா சொல்லிவிட்டார். இந்த நிலையில்தான் ஆமதாபாத் காங்கிரஸ் மகாசபை நடந்தது. அப்போது முந்திய காங்கிரசில் தீர்மானித்தபடி சுயராஜ்யம் என்பதே காங்கிரஸ் மகாசபையின் லட்சியமாக இருந்தது. அதை சுயேச்சையாக மாற்றிவிடவேண்டுமென்று மௌலானா ஹஸரத் மோகானி வற்புறுத்திப் பிரமாதமாகப் பேசினார்.

வீண் கனவு:—"ஒரு வருஷத்திற்குள் பரிகாரம் கிடைக்காவிட்டால், ஏகாதிபத்தியத்திற்கு வெளிப்பட்ட சுயேச்சை கொள்ளத் தடையிராது என்று அன்று காந்தி சொன்னார். ஒரு வருஷம் ஆகிவிட்டது. பரிகாரம் ஒரு சிறிதும் கிடைக்கவில்லை. ஆதலின் இந்த ஆமதாபாத் நகரில் சுயேச்சைக் கொடி தூக்க வேண்டும் என்பது எனது ஆவல். பரிபூரண சுயேச்சையே நமது லட்சியம் என்று ஏன் பகிரங்கமாகச் சொல்லக்கூடாது. பிரிட்டிஷ் ஆதிக்கம் முறிந்தாலன்றி, பஞ்சாப் படுகொலை, கிலாபத் இவற்றிற்குப் பரிகாரம் கிட்டாது. குடியேற்ற நாடுகளுக்கு இருப்பது

போன்ற சுய ஆட்சியை ஆங்கிலேயர் அளிப்பரெனச் சிலர் நம்புகின்றனர். அது வீண் கனவே, வேறில்லை," என்பது அவர் வாதத்தின் சாரம்.

---

57. சுயராஜ்யத் துடிப்பு

ஹஸரத் மோகானியின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று மகாத்மா காந்தி பிரமாத மாகப் பேசினர். வேல்ஸ் இளவரசர் வந்தார். அவருடைய வரவு பகிஷ்காரம் செய்யப்பட்டது. தேச ஒற்றுமையின் பலத்தை அதிகாரிகள் அறிந்து கொண்டார்கள். பெருவாரி யான சட்டமறுப்பு செய்யவேண்டுமென்று காங்கிரஸில் யோசனை பிறந்தது. கூர்ஜரத்திலே பார்டோலி என்னு மிடத்தில் நிலவரி கொடாமல் நிறுத்தி, பெருவாரியான சட்டமறுப்புச் செய்ய மகாத்மா காந்தி ஏற்பாடு செய்ய லானர். புதிய சீர்திருத்தம் வந்தது முதல் பிரிந்து நின்று தனிச்சபை கொண்ட மிதவாதிகளும் இன்னும் சிலரும் அது கண்டு திகில் கொண்டனர்.

திகிலின் விளைவு:—வட்டமேஜை மகாநாடு ஒன்று கூட்டி தேசத்தைச் சாந்தப் படுத்த வழி பார்க்கவேண்டு மென்று பண்டித மாளவியாவும், ஜின்னாவும் முயன்றனர். அதன் விளைவாக 1922-ஆம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி பம்பாயிலே சர்வகட்சி மகாநாடு ஒன்று கூடியது. அதற்கு மகாத்மா காந்தி போயிருந்தார். பெருவாரியான சட்டமறுப்பு தொடங்கக் கூடாது என்றும், சர்வகக்ஷி மகா நாடொன்றை ராஜப்பிரதிநிதி கூட்டவேண்டு மென்றும் அந்த மகாநாட் டில் தீர்மானமாயிற்று. இதற்கு ராஜப்பிரதிநிதியினிட மிருந்து பதில் கிடைக்கும் வரையில் சட்டமறுப்பை நிறுத்

திக்கொள்வதாக மகாத்மா காந்தி வாக்களித்தார். ராஜப் பிரதிநிதியின் பதிலோ திருப்திகரமாக இல்லை.

இறுதிக் கடிதம்:—அதன்மேல் 1922-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதி ராஜப் பிரதிநிதிக்கு ஓர் இறுதிக் கடிதம் அனுப்பினுர் காந்தி. ஏழு நாளைக்குள் திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால் சட்ட மறுப்பு தொடங்கப்படும் என்று குறிப்பிட்டார்; அஹிம்சை ஓங்கி நிற்கும் வரை ஒத்துழையா இயக்கத்தில் தலையிடுவதில்லை என்று வாக்குறுதி தந்துவிட்டு, அதனை மீறி அதற்கு மாறாக அரசாங்கம் நடந்திருக்கிறதே யென்றும் காந்தி சுட்டிச் சொன்னுர். கடுமையும் உறுதியும் காட்டி சட்ட மறுப்பைச் சமாளிப்போம் என்பதாக அரசாங்கம் பதில் தந்தது.

பெருந் தவறு:—இதற்கு இடையில் (அதாவது 1922-ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ந் தேதி) ஐக்கிய மாகாணத்திலுள்ள சௌரிசாரா என்னுமிடத்தில் பெரிய கலகம் நடந்தது. ஒரு போலீஸ் ஸ்டேஷனும் அதிலிருந்த 22 பேரும் எரிக்கப்பட்டுப் போயினர். இன்னும் சில சுற்றுப்பக்க இடங்களில் சில்லரைக் கலகங்கள் நடந்தன. பார்த்தார் மகாத்மா காந்தி. காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கூட்டினுர். ஒத்துழையா இயக்கத்தை நிறுத்திவிடும்படி யோசனை சொன்னுர். தாமும் சட்ட மறுப்பை நிறுத்திவிடப் போவதாக அறிவித்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி அதற்கு ஒப்புக்கொண்டது. ஒத்துழையா இயக்கம் நின்றது. அது கண்டு பலரும், "இதென்ன திடீரென்று இயக்கத்தை நிறுத்திவிடப் போவதாக அறிவித்தார்! இது பெரிய ராஜீயத் தவறு. இயக்கத்தையே மண்டையில் அடிப்பதுபோலாகும்," என்று வருந்தினர். சிலரோ தூற்றினர்.

நசுக்கிவிட:—ஐரோப்பியரோ, ஒத்துழையா இயக்கத்தை நசுக்கிவிட வேண்டுமென்று அரசாங்கத்தை வற்

புகுத்தி வந்தார்கள். தந்திரத்தில் கை வந்த ராஜப் பிரதிநிதியான லார்ட் ரீடிங் என்பார் அதுவே நல்ல சமயமெனக் கண்டு மார்ச் மாதம் முதல் தேதி அவரைக் கைதுசெய்ய உத்தரவு தந்தார். 10-ந் தேதி அவ்விதமே காந்தி கைது செய்யப்பட்டார். ராஜத் துவேஷக் குற்றத்திற்காக, காந்தியைக் கைது செய்தால் அனர்த்தம் விளைந்து விடுமோ என்று அஞ்சியே அரசாங்கம் அதுவரையில் கைது செய்யாமலிருந்தது.

அபிமானம் பாவமே :—ஆமதாபாத் நகரிலே மார்ச் 18-ந் தேதி விசாரணை நடந்தது. குற்றவாளியென மகாத்மா காந்தி ஒப்புக் கொண்டார். ராஜத்துவேஷக் குற்றத்திற்காக 6 வருஷம் தண்டனை கிடைத்தது. அப்போது அவர் கொடுத்த வாக்குமூலத்தின் சாரம் இது:—"இங்கிலாந்துடன் சம்பந்தம்கொண்டதால் ராஜீய விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் திக்கற்ற நிலைமைக்கு இந்தியா ஆளாகி விட்டது. ஆங்கில ஆட்சியின் பலனாக இந்தியா ஆண்மை குன்றிவிட்டது. இதுவே எனது எண்ணம். எனது நம்பிக்கை. ஆதலின் ஆங்கில ஆட்சியில் அபிமானம் கொள்ளுதல் பாவம்."

வேரோடுதல் :—காந்தி சிறை பட்டதும் கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்களின் ஒத்துழையா உணர்ச்சி தளர்ந்தது. ஒற்றுமை குன்றியது. சட்டசபை பகிஷ்காரத்தை விடுத்து, சட்ட சபைக்குள் புகுந்து சுயராஜ்யப் போர் புரிய வேண்டும் என்ற உணர்ச்சி ஓங்கியது. ஒத்துழையா இயக்கம் ஓரளவு தளர்ந்தபோதிலும், சுயராஜ்ய தாகமும், துடிப்பும் ஆழ்ந்து வேரோடிவிட்டன.

கனவேகமாகச் செல்லும் வாகனம். நடத்தும் ஆளும் அதிசூரன். திடீரென்று அவ்வாகனத்தை நிறுத்தினால் என்ன ஆகும்? மேலும் வண்டிக்காரனையும் கொண்டுபோய்

விட்டால், கேட்க வேண்டுமோ? ஒத்துழையா இயக்கத்தின் நிலையும் அங்ஙனமே முடிந்தது 1922-ம் ஆண்டின் மத்தியில். ஆக்க வேலைகள் தளர்ந்தன. அழிவு வேலைகளையோ காந்தி பெருமான் நிறுத்தி விட்டுப் போனார். தேசத்திலே அயர்வும்' திகைப்பும் தோன்றிவிட்டன. எனினும் சுதந்திரதாகம் தணியவில்லை.

---

58. சபையில் சமர்புரிதல்

அப்போது சட்டசபைகளிலே மிதவாதிகள் இருந்தார்கள்; மந்திரி பதவியிலும் அமர்ந்திருந்தார்கள். நமது சென்னையிலோ பிற்போக்கில் மூழ்கிய ஜஸ்டிஸ் கட்சியே சட்ட சபையில் கைமேலாக இருந்தது. தேசபந்து தாஸ், பண்டித மோதிலால் நேரு இருவரும் பார்த்தனர். அயர்வைப் போக்க எண்ணினர். புதிய முறையில் சுதந்திரப் போரை நடத்தக் கருதினர். அதற்குச் சட்ட சபையில் புகுந்து, இரட்டையாட்சி முறையை அழித்து, கோட்டைக்குள்ளேயே அதிகாரவர்க்கத்தை ஆட்டிவைக்க வேண்டுமென்று வாதாடினர். சட்டசபை பிரவேசம் பேசும் கட்சியார் சுயராஜ்யக் கட்சி என்றாயினர். சட்டசபைப் பிரவேசம் கூடாதென்போர் வைதிக ஒத்துழையாதார் அல்லது மாறுதல் வேண்டாக் கட்சியார் என்றாயினர்.

கட்சிப் பிரதி கட்சி:—கயா நகரிலே 1922-ஆம் வருஷக் கடைசியில் காங்கிரஸ் மகாசபை கூடியது. தேசபந்து தாஸ் அக்கிராசனம் வகித்தார். சட்டசபைகளிலே தடை வேலை செய்தல், மந்திரிப் பதவிகளை ஏற்க மறுத்தல், ஸ்தல சுய ஆட்சி சபைகளைக் கைப்பற்றுதல், தொழிலாளரைத் திரட்டல், அன்னியத் துணியை பகிஷ்கரித்தல்,

ஆசியாவின் தேசங்களை ஒன்று சேர்த்தல், ஒத்துழையாத் திட்டத்தின் ஆக்க வேலைகளை அபிவிருத்தி செய்தல், முதலிய பல விஷயங்களை வற்புறுத்தினார் தேசபந்து தாஸ். ஹக்கீம் அஜ்மல்கானும் ஆதரவாக இருந்தார். நமது ராஜகோபாலாச்சாரியும், மாறுதல் வேண்டாதாரும் எதிரிடையாக இருந்தனர். சட்டசபைப் பிரவேசம் அம் மகாசபையில் அங்கீகாரம் ஆகவில்லை.

காங்கிரஸின் ஆதரவு :—எனினும், பண்டிதர், தாஸ் இரு தலைவரும் தேசத்தின் முன்னே சென்று, பெருங் கிளர்ச்சி செய்தனர். தேசம் திரும்பிவிடும் போல் இருந்தது. இந் நிலையில்தான் நாகபுரி கொடி சத்தியாக்கிரகம் கிளம்பிற்று. ஜம்னலால் பஜாஜ் உள்பட ஆயிரம் பேருக்குமேல் அக் கொடிப்போரில் சிறை புகுந்தனர். ஒத்துழையாமை புத்துயிர் பெறவில்லை. 1923-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ந் தேதி டில்லியிலே விசேஷ காங்கிரஸ் நடைபெற்றது. மாறுதல் வேண்டாக் கட்சியாருக்கு மௌலானா முகம்மதலி (இதற்குள் சிறையிலிருந்து வெளி வந்து விட்டதால்) தலைவர் ஆனார். மௌலானா அபுல்கலாம் அஸாத் அக்கிராசனர். மனச்சாட்சி இடங் கொடுக்குமானால் அத்தகைய காங்கிரஸ்காரர் சட்டசபைக்குப் போகலாம் என்று விசேஷ காங்கிரஸில் தீர்மானம் ஆயிற்று.

வழிகோலுதல் :—உடனே சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் புகுந்தனர். வங்காளத்திலும், மத்திய மாகாணத்திலும் பெருமித வெற்றி கிடைத்தது. டில்லி சட்டசபையிலும், பல ஸ்தானங்கள் கிடைத்தன. 1923-ஆம் ஆண்டு டிசம்பரில் காக்கிநாடா நகரிலே காங்கிரஸ் மகா சபை நடந்தது. மௌலானா முகம்மதலி அக்கிராசனம் வகித்தார். டில்லி காங்கிரசில் நிறைவேறிய சட்டசபைப் பிரவேசத் தீர்மானம் உறுதி செய்யப்பட்டது. சட்டசபை

களிலே சுயராஜ்யக் கட்சியார் இதர கட்சியாரையும் சேர்த்துக்கொண்டு, அரசு முறையை எதிர்க்க வழிகோலலாயினர்.

மசோதா மாளல்:—இதற்கிடையில் 1924-ஆம் ஆண்டில் எர்ரவாடா சிறையிலே மகாத்மா காந்திக்கு நோய் கண்டது. அவருக்கு பம்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்து அவரை விடுவித்தனர் அரசாங்கத்தார். இதற்கு சுயராஜ்யக் கட்சியின் கிளர்ச்சியும் ஒரு வகையில் காரணம். டில்லி சட்ட சபையிலே இதர கட்சிகளின் துணைகொண்டு வரவு செலவு மசோதாவை சுயராஜ்யக் கட்சியார் அடித்துப் போட்டனர். தமது விசேஷ அதிகாரத்தைக்கொண்டு கவர்னர் ஜெனரல் அம்மசோதாவுக்கு உயிரூட்ட நேர்ந்தது. பின்பு மத்திய மாகாணத்திலும், அப்பால் வங்காளத்திலும் இரட்டை யாட்சிமுறை செத்த தென்னலாம். விசேஷ அதிகாரத்தைக்கொண்டு, நிர்வாகத்தை நடத்த முடிந்ததே யன்றி வேறன்று. எவ்வளவு தடைவேலை செய்ய முடியுமோ அவ்வளவையும் திறமையுடன் சுயராஜ்யக் கட்சியார் செய்து சாதித்தனர்.

மதிக்க வில்லை :—வரவு செலவு மசோதாவை அடித்துப் போடும்பொழுது, "இந்தியாவுக்குப் பூரணமான பொறுப்பாட்சி விரைவில் ஏற்பட வேண்டும். அதுபற்றி அரசியலை எவ்விதம் திருத்தலாம் என்று ஆலோசனை சொல்ல எல்லாக் கட்சியாரும் அடங்கிய வட்டமேஜை மகாநாடொன்று கூட்டவேண்டும்," என்று சுயராஜ்யக் கக்ஷியார் வற்புறுத்தினர். அப்பொழுது இங்கிலாந்திலே தொழில் கக்ஷியார் மந்திரி சபையை நடத்தி வந்தார்கள். முன்னம் ஒரு சமயம் காங்கிரஸ் மகாசபையில் அக்கிராசனம் வகிப்பதாயிருந்த ராம்ஸே மாக்டொனல்டு என்பவர் பிரஸ்தாப சமயத்தில் தொழில் கக்ஷியின் தலைவராய், தொழிலரசின்

முதல் மந்திரியாக விளங்கி நின்றார். அந்த அரசு சுயராஜ்யக் கக்ஷியின் மேற்கண்ட கோரிக்கையை மதிக்கவில்லை. இது இப்படியிருக்க.

ஒப்பந்தம்:—மகாத்மா காந்தி விடுதலை ஆனதும் மாறுதல் வேண்டாக் கக்ஷியினர் அவரை எதிர்நோக்கி நின்றனர் புதிய வழி காட்டுவாரென்று. தேசத்தின் சாபத்தீடு போலும் இந்து - முஸ்லீம் கலகங்கள் நிகழலாயின. வடமேற்கெல்லை மாகாணத்திலே கோஹத் எனும் நகரில் நடந்த கலவரம் மகா கோரம். அதுகண்டு 1924-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ந் தேதி மகாத்மா காந்தி 21நாள் பட்டினி கிடக்கலானார். உடனே வகுப்பு சமரச ஒற்றுமை மகாநாடு நடந்தது. இதற்குள் அக்டோபர் 25-ந் தேதி வாரண்ட் இல்லாமல் கைது செய்யவும், காவலில் வைக்கவும் அதிகாரமுள்ள அவசரச் சட்டமொன்று இந்தியா கவர்ன்மெண்டார் கொண்டனர். அதன்படி சுபாஷ் சந்திரபோஸ் முதலியவர்கள் காவலில் கிடக்க நேர்ந்தது. அதன் விளைவாக மகாத்மா காந்திக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

"அந்நியத் துணி பகிஷ்காரத்தைத் தவிர ஒத்துழையாமைத் திட்டங்களை நிறுத்தி வைத்துவிடுவது; காங்கிரஸ் வேலையை பல இலாகாக்களாகப் பிரித்துவிடுவது; அம் மகா சபையின் ஓர் இலாகாவாக சுயராஜ்யக் கக்ஷியைக் கொள்வது." இவை அந்த ஒப்பந்தத்தின் சாரம். 1924-ஆம் வருடக் கடைசியிலே பெல்காம் நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. மகாத்மா காந்தி அக்கிராசனம் வகித்தார். காந்திக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் அம்மகா சபையில் நிறைவேறியது.

இரு பிரிவு:—அதனால் காங்கிரஸிலே சுயராஜ்யக் கக்ஷியின் செல்வாக்கு ஓங்கி உயர்ந்தது. பின்பு அக்கக்ஷிக்குள்ளே இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. திலகரின் கொள்கையை

அடிப்படையாகக்கொண்ட கோஷ்டியார் ஒரு சாரார். சட்ட சபையில் புகுந்து தடை வேலை செய்வதோடு மந்திரிப் பதவிகளையும் ஏற்றுக்கொண்டு, சௌகரியமா யிருந்தால் ஒத்துழைத்து, அவசியமானபோது மந்திரி சபைக்குள் இருந்தும் தடை வேலை செய்ய வேண்டுமென்பது அக் கோஷ்டியின் கருத்து. இன்னொரு கோஷ்டியாரோ, மந்திரிப் பதவி வகிக்காமலேயே தடை வேலை செய்துகொண்டு போகவேண்டும் என்றனர்.

பதவி ஏற்றல் :—இங்கிலையில் கான்பூர் நகரிலே 1925-ஆம் ஆண்டு டிசம்பர் கடைசியில் காங்கிரஸ் மகாசபை கூடியது. இதற்கு இடையில் தேசபந்து தாஸ் காலகதி ஆகிவிட்டார். உடனே பண்டித மோதிலால் நேரு சுயராஜ்யக் கக்ஷியின் தலைமை வகித்து, பதவி ஏற்கக்கூடாது என்று காங்கிரஸில் வாதாடினர். தேச மகாசபை அவரை ஆதரித்தது. அடுத்த 1926-ஆம் வருஷம் சட்ட சபைத் தேர்தல்கள் நடந்தன. சுயராஜ்யக் கக்ஷியில் இருசாராரும் தேர்தலுக்கு நின்றனர். இருவரும் நல்ல வெற்றி அடைந்த போதிலும் தகுந்த பலம் பெறவில்லை. மத்திய மாகாணத்திலே திலகர் கோஷ்டியார் மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டு தங்கள் கொள்கையின்படி நடக்க முயன்றனர்.

அரசாங்க நினைவு:—இந்தியா கவர்ன்மெண்டார் தேச நிலையை மதித்து, மாண்டேகு-செம்ஸ்போர்டு திருத்தங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன; அரசியல் சட்டத்தை மாற்றாமலேயே என்ன சீர்திருத்தம் செய்யலாம் என்று ஆராய்ந்து சொல்ல ஒரு கமிட்டியை ஏற்படுத்தினர். அக் கமிட்டியின் முடிவு வெளியாயிற்று. அதில் உப்பு உரப்பு ஒன்றும் இல்லை. அதன்மேல் சுயராஜ்யக் கக்ஷியின் தலைவரான பண்டித நேரு டில்லி சட்டசபையில் தமது கக்ஷியின் கொள்கையை வற்புறுத்திப் பேசியதின் சாரம் இது :—

59. பரிபூர்ண சுயராஜ்யம்

"தற்பொழுது உள்ள ஆட்சி முறையை ராணுவ பலத்தைக் கொண்டுதான் நிலைநிறுத்த முடியும். இந்தியர் ஒத்துழைக்க வேண்டும் என்று புதிய இந்தியா மந்திரியான லார்ட் பர்கென்ஹெட் பேசுகிறார். அரசாங்கத்தின் மனப் போக்கு மாறினால் அல்லாமல் நானும் என் கக்ஷியாரும் ஒத்துழைக்க மாட்டோம். சீர்திருத்தம் வேண்டும் என்ற போராட்டம் ஒரு நாள் பலனடைந்தே ஆக வேண்டும். பரிபூரண சுயேச்சை அடைவதே அப் போராட்டத்தின் நோக்கம். இதற்கு இங்கிலாந்து உதவி செய்து நல்ல பெயர் வாங்கப் போகிறதா? அல்லது அதனிடமிருந்து பிடுங்கிக்கொள்ளும்படியான நிலையை உண்டு பண்ணி கெட்ட பெயர் வாங்கப்போகிறதா? தெரிய வேண்டும்."

மனச்சலிப்பு:—அரசாங்கம் செவி சாய்க்க வில்லை. தேசத்தின் முன்னே சென்று வாக்காளரின் பேராதரவு பெற்று பெருமிதமாகத் திரும்பி வந்து, சட்ட சபையில் போர் புரிந்து வெற்றி சூடுவோம் என்று பண்டித மோதிலால் வாது கூறித் தமது கட்சியுடன் சபையை விட்டு வெளியே வந்து விட்டார். இந்நிலையில் 1926-ஆம் ஆண்டு அஸ்ஸாம் மாகாணத்திலே கௌஹாத்தி எனும் நகரத்தில் காங்கிரஸ் மகாசபை கூடியது. சென்னை ஸ்ரீ. எஸ். சீனிவாசய்யங்கார் அக்கிராசனம் வகித்தார். இதற்கு இடையில் தேசத்திலே இந்து-முஸ்லீம் சச்சரவு அதிகமாக இருந்ததாலும், சட்ட சபையை விட்டு சுயராஜ்யக் கட்சியார் வெளியே வந்துவிட்டதாலும், தேச நிலைமை திருப்திகரமாக இல்லை. வகுப்புப் பிணக்கைக் கண்டு மனஞ் சலித்துப்

போன மகாத்மா காந்தி காங்கிரஸை விட்டு ஒதுங்கி விட்டது போல இருந்துவந்தார்.

சைமன் பகிஷ்காரம்:—பத்து வருஷத்துக்கு ஒரு முறை அரசியலை ஆராய்ந்து பார்த்து, அவசியமானால் மேலும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பது இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட ஷரத்துக்களில் ஒன்றாகும். அதன் படி அரசியலை ஆராய 'சைமன் கமிஷன்' ஏற்பட்டிருப்பதாக 1927-ல் நவம்பர் மாதம் அறிக்கை பிறந்தது. அக்கமிஷனில் இந்தியர் ஒருவர்கூட இல்லை. அது கண்டு தேச மெங்கும் பிரமாதமான அதிருப்தி கொழுந்து விட்டது. "நம்மைச் சேர்த்துக் கொள்ளாமல் பார்லிமெண்டு மகா சபை நம்மைப் பகிஷ்கரித்து விட்டது. நாமும் சைமன் கமிஷனை பகிஷ் காரம் செய்வோம்," என்பதாகத் தலைவர்கள் பலர் சொல் லினர்.

சென்னையில் தீர்ப்பு:—1927-ஆம் வருஷக்கடைசியில் சென்னையிலே காங்கிரஸ் மகாசபை கூடியது. டாக்டர் அன்சாரி அக்கிராசனம் வகித்தார். சைமன் கமிஷன் பகிஷ் காரத்தை மகாசபை மனப் பூர்வமாக அங்கீகரித்தது. பரி பூரண சுயேச்சைத் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. தேசத்திலுள்ள எல்லா ராஜீயக் கக்ஷியார்களும் பகிஷ்காரத் திற்குச் சாதகமாக இருந்தனர். சைமன் கமிஷன் சென்ற இடமெல்லாம் கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடந்தன. "சைமனே, திரும்பிப் போ" என்று மக்களனைவரும் சொல் லினர். எங்கும் கடையடைப்பும் செய்யப்பட்டது. டில்லி சட்டசபையிலும் பகிஷ்காரக் காற்று வீசியது. அரசாங்க மும் அதிகாரிகளும் பிரமித்தார்கள்.

திட்டம் எங்கே:—இந்தியா மந்திரியான லார்ட் பர் கென்ஹெட் என்பார் மகா கெட்டிக்காரர்; வம்புக்காரரு மாவார். ஆதலின் "எல்லோரும் ஒப்பும்படியான அரசியல்

திட்டம் யாரால் வரைய முடியும்? இந்தியத் தலைவர்கள் ஒரு மனங்கொண்டு ஒரு திட்டம் வரையட்டும், பார்க்கலாம்'' என்று பொருள்படும்படி வாது கூறினர். அதற்கு இணங்க அரசியல் திட்டமொன்று வரைவதற்கும் சென்னைக் காங்கிரசில் ஏற்பாடு ஆகியது. எல்லாக் கக்ஷியாரும் 1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் லக்னோ நகரில் கூடி அரசியல் திட்டமொன்று வரைந்தனர். அதற்கு 'நேரு திட்டம்' என்று பெயர். "இந்தியா மந்திரி வாது கூறியபடி இதோ அரசியல் திட்டம் இருக்கிறது'' என்று காங்கிரஸ் அக்கிராசனரான டாக்டர் அன்சாரி பேசினர்.

---

60. இறுதிப் பேச்சு

அடுத்த வருஷம் (அதாவது 1928-ஆம் வருஷம் டிசம்பர் கடைசியில்) கல்கத்தாவிலே காங்கிரஸ் மகாசபை கூடியது. பண்டித மோதிலால் நேரு அக்கிராசனம் வகித்தார். நேரு திட்டத்தை அச்சபை அங்கீகரித்தது. ஆயினும், "1929-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதிக்குள் அத்திட்டத்தை ஆங்கில அரசாங்கம் ஒப்புக்கொள்ளாவிட்டால், உடனே ஒத்துழையாமையில் தேசம் இறங்கும். வரி மறுப்பும் செய்ய நேரும். இதற்கிடையில் பரிபூரண சுயராஜ்யத்திற்கான கிளர்ச்சியும் நடந்துகொண்டே போகும்'' என்று அம் மகாசபையில் ஒரு தீர்மானம் வந்தது.

வாலிபரின் துடிப்பு:—வாலிபருக்கு அத்தீர்மானம் பிடிக்கவில்லை. "கலப்பற்ற பரிபூரண சுயராஜ்யமே வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இனியும் சமரஸம் பேசுவதா?'' என்று சுபாஷ் சந்திரபோஸ், ஒரு திருத்தம் கொண்டு வந்தார். மோதிலால் நேருவின் குமாரர் ஜவஹர்

லால் நேரு, அதை ஆதரித்தார். மகாத்மா காந்தி எதிர்த்தார். திருத்தத்தை ஓட்டுக்கு விட்டதில், 973 பேர்கள் சாதகமாக ஓட் தந்தனர். 1380 பேர்கள் எதிராக ஓட் செய்தனர். எனினும், பரிபூரண சுயராஜ்ய தாகம் தலைமிஞ்சி நிற்பதை மகாத்மா காந்தியும் பிறரும் கண்டு கொண்டனர். தீர்மானத்தில் கண்டபடி 'அடுத்த ஆண்டு முடிவதற்குள், குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்காவிட்டால், பரிபூரண சுயராஜ்ய இயக்கத்தில் சேர்ந்து கொள்வேன்' என்று பட்டவர்த்தனமாக மகாத்மா சொன்னார். அவரும் சரி, தேசத்தாரும் சரி, 1930-ஆம் ஆண்டு பிறக்கப் போவதை எதிர்நோக்கி இருந்தார்கள்.

இர்வின் அறிக்கை:—தேசநிலை என்ன ஆகுமோ என அப்போது ராஜப் பிரதிநிதியாக விளங்கிய லார்ட் இர்வின் கவலை கொண்டார். சைமன் கமிஷன் பகிஷ்கார வேகத்தைக் கூர்ந்து அறிந்தார். இங்கிலாந்துக்குச் சென்று, அங்குள்ள மந்திரி சபையுடன் கலந்து பேசிவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பி 1929-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ந் தேதி ஓர் அறிக்கை செய்தார். அதன் சாரம் இது:—

"சைமன் கமிஷனுடைய சிபாரிசுகள் தெரியும்வரையில் என்ன சீர்திருத்தம் கொடுக்கப்படும் என்று சொல்ல முடியாது. ஆயினும், முடிவில் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்கும் என்பது, 1917-ஆம் ஆண்டு ஆகஸ்டு அறிக்கையிலேயே தொனிக்கும்." குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்குமென்ற ராஜப்பிரதிநிதியின் அறிக்கையைக் கண்டவுடனே தேசத் தலைவர்களில் சிலர் ஆனந்தம் அடையலாயினர்.

லஜபதி முடிவு:—சைமன் கமிஷன் பகிஷ்காரம் வெகு தீவிரமாக நடந்தது. அதிகாரிகளின் அடக்குமுறையும் ஓங்கிற்று. லாகூரிலே பகிஷ்கார ஊர்வலத்தை நடத்திச்

சென்ற லாலா லஜபதி ராய்க்கு மார்பில் அடி விழுந்தது. அதன் விளைவாக அவர் நோய் கொண்டார். பிரபல வைத்தியர் சிகிச்சைசெய்து பார்த்தும், பலனில்லை முடிவில் அப்பெருமான் உயிர் துறந்தார். மார்பில் அடிபட்டிராவிட்டால், இவ்வளவு சீக்கிரம் அவருக்குக் காலகதி நேர்ந்திராது என்பது வெகுஜன வாக்கு. பஞ்சாப் வாலிபர்கள் துடிப்புக் கொண்டார்கள். அங்கே அராஜகச் செயல்கள் நடந்தன. பலர்மீது கேஸ் ஏற்பட்டது. அடக்கு முறைகளும் அராஜகச் செயல்களும் போட்டி போட்டுக் கொள்வதுபோல் பெருகி வந்தன. ராஜப்பிரதிநிதியான லார்ட் இர்வின் ஏறிவந்த ரயில் வண்டியைக் குறிபார்த்து வெடிகுண்டு வைக்கப்பட்டது. இது நிற்க,

"பகிரங்க சதி" :—அடுத்த காங்கிரஸ் 1929-ஆம் வருடம் டிசம்பர் 29-ந் தேதி லாகூரில் நடைபெற்றது. பண்டித ஜவஹர்லால் நேரு அக்கிராசனம் வகித்தார். மகாத்மா காந்தி விஜயம் செய்திருப்பது கண்டு, பலரும் சந்தோஷம் அடைந்தனர். அக்கிராசனர் பேசியதின் சாரம்:—

"கல்கத்தா காங்கிரஸ் நடந்ததிலிருந்து இந்த லாகூர் காங்கிரஸை அனைவரும் எதிர்பார்த்து நிற்கின்றனர். தீரமுடன் உழைப்போரே வெற்றி பெறுவர். கோழைகளுக்கு வெற்றி கிட்டாது. நமது லக்ஷியமோ மகா உன்னதமானது. அதனை அடைய வேண்டுமாயின், பெருத்த ஆபத்துக்கள் நேரலாம். விரைவிலோ, நாளடைவிலோ நாம் வெற்றி பெறுவோம். நம்மை யன்றி வேறு யாரும் தடுக்க முடியாது. தேசத்திலே பல இடங்களில் சதி வழக்குகள் நடைபெறுகின்றன. அன்னிய ஆட்சியி லிருந்து விடுதலை அடைய இங்கே நாம் பகிரங்கமான சதி செய்கிறோம். எல்லோருக்கும் இதில் சம்பந்தம் உண்டு. அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்."

போர் முஸ்தீப்பு :—“ஏதோ வட்ட மேஜை மகாநாடு நடக்கப்போகிறதாம். தற்சமயம் உள்ள நிலைமையில், அதில் கலந்துகொள்வதால் பலன் இராது. சுயராஜ்யம் என்பது பரிபூரணமான சுயேச்சையாகும். இதற்கு முதல் படியாக சட்ட சபை ஸ்தானங்களை யெல்லாம் ராஜீநாமாச் செய்துவிட வேண்டும். வரி மறுப்பு உள்பட, சட்ட மறுப்புச் செய்ய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஏற்பாடு செய்யுமாக” என்று பொருள்படும் தீர்மானத்தை மகாத்மா காந்தி பிரேரித்தார். பலத்த விவாதம் நடந்தது. சாதகமாகவும் பாதகமாகவும் பலர் பேசினர். முடிவில் 12 பேர்களே எதிரிடையாக ஓட் கொடுத்தனர். இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேறின. முடிவில் ஜவஹர்லால் பேசியதின் சாரமாவது :—

“பரிபூரண சுயராஜ்யமே லக்ஷியமென இங்கே கொடி தூக்கி யுள்ளோம். இதுவே சரியான மார்க்கம். எவ்வளவோ கஷ்டங்கள் அனுபவிக்க நேரும். ஆயினும், சரியான வழியில் இறங்கியிருப்பது மிகவும் விசேஷமே!”

பரிபூரண சுதந்திரமே லட்சிய மென லாகூர் காங்கிரஸில் கொடி தூக்கியாகிவிட்டது. அதனை அடைவதற்கான முயற்சி செய்ய வேண்டுமே. இந்திய வாலிபரில் சிலர் ஒரு பக்கம் அராஜகச் செயலில் முனைந்து நின்றனர். மற்றொரு புறம் அரசாங்கமோ அடக்கு முறையில் பிடிவாதமாக நின்றது. எங்கும் அஹிம்ஸையை நிலைக்கச் செய்வதே காங்கிரசின் கருத்து. காந்தியின் லட்சியமும் அதுவேயாம்.

———

61. போர்தான் கதி தரும்

பார்த்தார் காந்தி. 1930-ஆம் வருஷம் பிப்ரவரி 14-ந் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கூட்டினார். சட்ட மறுப்புப் போர் புரிய வேண்டும் என்று தீர்மானம் ஏற்பட்டது. தலைவர்கள் சிறைப்பட்டு விட்டால், மற்றையோர் முன்னின்று, போரை நடத்தவும் ஆணை பிறந்தது. காந்தி மஹான் சர்வாதிகாரி யானார். மார்ச்சு 2-ந் தேதி ராஜப் பிரதிநிதிக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். ஆங்கில அன்பரொருவர் அதனைத்தாங்கிச் சென்றார் ராஜப் பிரதிநிதியிடம். "போர்முரசு கொட்டுகின்றேன். சமரஸத்துக்கு வழி இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பின் பார்ப்போம்" என்பதே கடிதத்தின் சாரம். லார்டு இர்வினது பதிலில் ஒன்றுமில்லை.

ஐம்பது லக்ஷம் :—தண்டியிலே உப்பு சத்தியாக்கிரகஞ் செய்ய, மார்ச்சு மாதம் 12-ந் தேதி காந்தி புறப்பட்டார் கால் நடையாக. அவரைத் தொடர்ந்து சுமார் அறுபது பேர் சென்றனர். ஏப்ரல் 5-ந் தேதி எல்லாரும் தண்டி சேர்ந்தனர். உடனே கடலிலிருந்து உப்பையள்ளி சத்தியாக்கிரகம் நடந்தது. மறுதினம் தேசமெங்கும் உப்பு சத்தியாக்கிரகம் நடக்கவேண்டும் என்று அவர் அறிக்கை செய்தார். தேசமெங்கும் அவ்விதமே காரியம் நடந்தது. சுருங்கச் சொன்னால் ஐயாயிரம் இடங்களிலே, ஐம்பது லட்சம் பேர் உப்பு சத்தியாக்கிரகம் செய்தனர். அதாவது சமுத்திரக் கரை சென்று, ஜலத்தை எடுத்து உப்புக் காய்ச்சினர். உப்புக் காய்ச்ச வேண்டுமாயின் அரசினிடம் லைஸென்ஸ் பெற வேண்டும். உப்பு விளைவு அரசாங்கத்துக்கே சொந்தம்.

தலைவர்கள் சிறைபுகல் :—அவ்விதம் உப்புக் காய்ச்சுவதில், சட்டத்தை மீற நேர்ந்தது மெய்யே. அதில் அரசுக்கு நஷ்டமில்லை. எனவே, தர்சனா எனும் இடத்திலுள்ள உப்பளங்களைத் தாக்கப் போவதாக ராஜப் பிரதிநிதிக்கு மகாத்மா காந்தி நோட்டீஸ் கொடுத்தார். காற்று, ஜலம் இவை இயற்கையில் கிடைப்பவை. உப்பும் அவ்விதமே. ஆதலின் உப்பு விளைவு அரசின் ஏகபோகமாக இருத்தலாகாது என்பதே காந்தியின் வாதம். நோட்டீஸ் கண்டதும், மே மாதம் 5-ந் தேதி அரசாங்கத்தார் காந்தியைக் கைது செய்தனர். உடனே, எண்பது வயது கொண்ட அப்பாஸ் தயாப்ஜி சர்வாதிகாரியாகி உப்புச் சண்டையை நடத்தினார். அவரையும் அதிகாரிகள் கைது செய்தார்கள். இப்படி ஒருவர்பின் ஒருவராகப் பல தலைவர் சிறைபட்டனர்.

அடித்து விரட்டல் :—ஜூன் மாதம் பருவ காலம் சௌகரியமாக இல்லாததால், தரிசனாவிலே உப்புச் சண்டையை நிறுத்த நேர்ந்தது. சண்டை நடக்கையில், முள் வேலி போட்டும், துருப்புகளை நிறுத்தியும், தடி கொண்டு தாக்கியும் போரைச் சமாளிக்க அரசாங்கத்தார் முயன்றனர். தேசமெங்கும் உப்புச் சண்டை நடந்தது. ஆங்காங்கே பிரம்பு கொண்டும், கழி கொண்டும் காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டனர். தலைவர்களாக நிற்போரை மட்டும் அரசாங்கம் கைது செய்தது; மற்றையோரை அடித்து விரட்டியது.

மும்முரமான போர் :—மகாத்மா கைதியானதும், அலகாபாத் நகரில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிற்று. தேசமனைத்தும் போரில் முனையவேண்டும், அந்நியத் துணி பகிஷ்காரம், மதுபான மறியல், வரி கொடாமை முதலிய துறைகளிலும் போர் தொடங்க வேண்டும் என்று தீர்மானம் பிறந்தது. மறுபடியும் ஜூன் 27-ந் தேதி அக் கமிட்டியார் கூடி,

அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அவர்களுக்கு ஆதரவாக இருப்போர் இவர்களின் விஷயத்தில் சமூக பகிஷ்காரம் செய்யவேண்டு மென்றும் தீர்மானித்தனர். அடக்கு முறையின் விளைவான அடிதடி வலுத்தும், அதனைச் சட்டை செய்யாமல் சுதந்திரப் போர் நடத்தும் மக்களையும் கமிட்டியார் பாராட்டினர். பின்பு ஒத்துழையாப் போர் மிகமிக மும்முறமாயிற்று.

அரசின் மிடுக்கு :—ஊர்வலங்கள் தடுக்கப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. பிஷாவர், ஷோலாப்பூர் இந்த இடங்களில் ராணுவ அமுல் ஏற்பட்டது. காங்கிரஸ் மகாசபையையும் சுதந்திரப் போரையும் நசுக்க ஒன்றன்பின் ஒன்றாக 11 அவசரச் சட்டங்கள் பிறப்பித்தார் லார்டு இர்வின். காங்கிரஸ் சபைகள் சட்ட விரோதமான சபைகள் என்று செங்கோல் பிறந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் சிறைபட்டனர். பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு ஏற்பட்டது; சமாச்சாரச் செய்திகளெல்லாம் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்ட பின்பே வெளியாக வேண்டும் என்றும் உத்தரவு உதித்தது. மொத்தத்தில் சுமார் ஒரு லட்சம்பேர் குழந்தை குட்டிகள் உள்பட சிறையில் கிடக்க நேர்ந்தது. காயமடைந்தோர் ஏறக்குறைய ஐயாயிரம் பேர். இறந்துபட்டோர் சுமார் நானூறு பேர். அரசாங்கத்தாரும் சரி, சத்தியாக்கிரகிகளும் சரி, சளைக்கவில்லை.

பலாபலன்கள் :—மதுபான மறியலினால் சில மாகாண கவர்ன்மெண்டுகளின் வருமானம் நூற்றுக்கு இருபது வீதம் குறைந்தது. சீமைத் துணி பகிஷ்காரத்தினால், இறக்குமதியில் 20 கோடி ரூபாய் குறைந்தது. நம் தேசத்துக்கு வரும் சீமைத் துணிகளின் பெரும்பாகம் பம்பாய் மூலமே வருவதாம். பம்பாய் சீமைத் துணி வியாபாரிகள் பரம தேசாபிமானங் கொண்டு நடந்தனர். கஷ்ட நஷ்டத்தை

அவர்கள் பாராட்டவில்லை. பம்பாயே அப்போரில் முன்னணியில் நின்றதெனல் வேண்டும். குழந்தைகளும் ஸ்திரீகளும் போரில் கலந்து கொண்டது மிகவும் விசேஷமான சம்பவம். குழந்தைகள் "வானரப்படைகள்" என்று பெயர் தாங்கி, அரிய ஊழியம் புரிந்தனர். இளஞ்சிறுமிகள், கோடீசுவரரின் புத்திரிகள் முதலியோரும் போரில் கலந்து ஆயிரக் கணக்கில் சிறை வாசத்துக்கு முன் வந்தார்கள். அடிதடிக்கும் அஞ்சவில்லை. அவமானங்கள் நேர்ந்தும் பின் வாங்கவில்லை. இது இப்படி இருக்க.

போன மச்சான்:—லண்டனிலே வட்டமேஜை மகாநாடு நடந்தது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மிதவாதிகளும் பிறரும் போயினர். சட்ட சபைகளைக் கூடக் கலந்து கொள்ளாமல், பிரதிநிதிகள் என்போரை நியமித்தனர் அரசாங்கத்தார். போன மச்சான் திரும்பி வந்தான் என்ற பழமொழியின்படி அவர்கள் திரும்பிவர நேர்ந்தது. பூமணம் ஏது? பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் போரின் வேகத்தைப் பார்த்தனர்; காங்கிரஸின் செல்வாக்கைக் கண்டனர். ஒத்துழைக்க வேண்டுமென்று பிரதம மந்திரி நமது காங்கிரஸை வேண்டிக்கொண்டார். காங்கிரஸின் பிரதிநிதிகள் இல்லாமல் காரியம் நடவாதென்று ஆங்கில ராஜ தந்திரிகளும் பிறரும் உணர்ந்துகொண்டனர்.

62. அரசின் இறக்கம்

அதன்மேல் 1931-ஆம் ஆண்டு ஜனவரி 25-ந் தேதி மகாத்மா காந்தியை லார்டு இர்வின் விடுவித்தார். உடனே காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினரும் விடுதலை பெற்றார்கள். முதலில் அக் கமிட்டியார் கூடி, உள்ள நிலையை ஆலோசனை செய்தனர். பின்பு காந்திக்கும் இர்வினுக்கும் நீண்ட பேச்சுவார்த்தை நடந்தது. பின்னர் 1931-ஆம் ஆண்டு மார்ச்சு 5-ந் தேதி லார்டு இர்வினுக்கும் மகாத்மா காந்திக்கும எழுத்து மூலம் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அரசாங்கத்தின் பிரதிநிதியான இர்வினும், தேசத்தின் பிரதிநிதியான காந்தியும் அதில் கையெழுத்துச் செய்தனர். அதன் ஷரத்துக்களின் சாரம் :—

ஒப்பந்த சாரம்:—(1) சட்டமறுப்புப் போரை காங்கிரஸ் நிறுத்த வேண்டும். (2) அவசரச் சட்டங்களை எல்லாம் அரசாங்கம் ரத்து செய்ய வேண்டும். (3) சுதேசித் துணியை விருத்தி செய்ய சாத்வீக முறையில் அன்னியத் துணிக் கடைகளை மறியல் செய்ய காங்கிரஸுக்கு உரிமையுண்டு. (4) கடலோரங்களில் வசிக்கும் ஏழை மக்கள் தங்கள் வாழ்வுக்கு வேண்டிய உப்பை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். (5) வசூலாகாமல் பாக்கியிருக்கும் அபராதத்தையும் வரியையும் அரசாங்கம் வசூலிக்காது. (6) அரசாங்க ஊழியத்திலிருந்து ராஜீநாமாச் செய்தவர்களை முடியுமானால் அரசாங்கம் வேலைக்கு எடுத்துக்கொள்ளும். (7) ஒப்பந்தத்தின்படி இரு தரப்பாரும் நடக்க வேண்டும். தகராறு ஏற்பட்டால், கோர்ட்டுகளில் வழக்காடி நியாயம் தேடிக் கொள்ளலாம்.

இரு பக்கத்திலும்:—ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு, வட்ட மேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் மகாசபை சம்மதித்தது. பின்பு கராச்சி நகரிலே காங்கிரஸ் மகாசபை நடக்கலாயிற்று. வட்டமேஜை மகாநாட்டுக்கு காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக மகாத்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜீவாதாரமான உரிமைகள் அக்காங்கிரஸில் தீர்மானமாயின. பரிபூரண சுயேச்சைதான் லட்சியமென அப்போது மகாத்மா தெளிவாகச் சொன்னார். ஒப்பந்தத்தின்படி காரியம் நடக்குமா என்று காங்கிரஸ்காரரில் பலர் சந்தேகங் கொண்டனர். எனினும் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பரீட்சை பார்ப்போம் என்றிருந்தனர். அதிகாரிகளில் சிலரோ காங்கிரஸுடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொள்வதா என்று உள்ளூர கொதிப்புக் கொண்டனர்.

காந்தி வரவேண்டும்:—இத்தகைய நிலையில் லார்டு இர்வின் இங்கிலாந்துக்குப் போய்விட்டார். லார்டு வில்லிங்டன் என்பார் ராஜப்பிரதிநிதியாக வந்தார். ஒப்பந்தத்தின்படி சில பல இடங்களில் காரியம் நடக்கவில்லை. ஜனங்கள் காந்தியிடம் முறையிட்டுக் கொண்டார்கள். உடனே லார்டு வில்லிங்டனுக்கு எழுதினார் காந்தி. அவ்வளவாகக் காது கொடுக்கவில்லை வில்லிங்டன் பிரபு. என்றாலும், சமரஸத்திலேயே முனைந்தார் மகாத்மா. பார்டோலி விவசாயிகளின் விஷயம் சிக்கலாயிற்று. வரி கொடுக்க முடியாமல் விவசாயிகள் பெரிதும் வருந்தினர். அதிகார 'மிடுக்கு' தளரவில்லை. பட்சபாதமில்லாத விசாரணை வேண்டுமென்றார் மகாத்மா. ராஜப்பிரதிநிதி அதற்கு இணங்கவில்லை. இவ்விஷயம் திருப்திகரமாய் பைசலாகாவிடின், காந்தி லண்டனுக்குப் போதல் கஷ்டமாகும். இங்கிலாந்தின் ராஜதந்திரிகளோ, காந்தி கட்டாயம் வரவேண்டும் என்று விரும்பினர். அதன் மேல் வில்லிங்டன் பிரபு இணங்க நேர்ந்தது.

சுய நலமிகள் :—1931-ம் ஆண்டு ஆகஸ்டு 20-ந் தேதி காங்கிரஸின் ஏகப்பிரதிநிதியாக மகாத்மா பிரயாணமானூர் இங்கிலாந்துக்கு. "ஆண்டவனே கதி; இன்னும் நம்பிக்கையை இழக்கவில்லே; பார்ப்போம்" என்ற நம்பிக்கையுடன் அவர் லண்டன் சென்றூர். அப்போது அங்கே பொதுத் தேர்தல். கன்ஸர்வேட்டிவ் கட்சியார் தேர்தலில் பெருமித வெற்றி பெற்றுக் கைமேலாகி விட்டனர். இரண்டாவது வட்ட மேஜை மகாநாடு நடந்தது. காங்கிரஸின் கட்சியை மகாத்மா எடுத்துச் சொன்னூர். இரண்டுமாத காலம் அங்கே இருந்தார் காந்தி. தினம் பலதரம் பல இடங்களில் பேசினூர். எங்கும் எப்பொழுதும் இந்தியாவின் விஷயமாகவே பேச்சு. வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகளில் காந்தி ஒருவரே உண்மையில் பிரதிநிதி. மற்றையோரோ அரசாங்க நியமினிகள். ஹிந்து - முஸ்லீம் ஒற்றுமை, ஹிந்துக்கள் - தீண்டாதார் ஒற்றுமை, சமஸ்தான மன்னர் - பிரிட்டிஷ் இந்திய மக்கள் இவர்களின் ஒற்றுமை ஆகிய விஷயங்களே பெரியன வெனப் பலரும் நினைத்தனரே யன்றி இந்தியாவின் கதி மோட்சமே மிக முக்கியமென நினைக்கவில்லே. வகுப்பு நலத்தை மதித்து, அதற்காகவே பலரும் வாதாடினர்.

பிரிந்துபோக :—இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் சமரஸம் ஏற்பட வேண்டுமென்பதை யாரும் கவனிக்காமல் போயினர். பிரித்தாளும் சூழ்ச்சியே ஓங்கியது. தேசீய வாதிகளான முஸ்லீம்களே ஆங்கில அரசாங்கம் அழைக்குமென லார்டு இர்வின் மூலம் வாக்குக் கிடைத்தும் பலனில்லே. அவ்வாக்கை நம்பி மகாத்மா தம்முடன் டாக்டர் அன்ஸாரியை அழைத்துச் சென்றூர். சென்றுமென்ன? முதல் மகாநாட்டில் சமஸ்தான மன்னரில் பலர் சுமுகங் கொண்டிருந்தும், இரண்டாவது மகாநாட்டில் அச்சுமுகம் தலே காட்டவில்லே. மாறுபாடே தலேதூக்கி நின்றது. காந்திக்

கும் நம்பிக்கை பறந்துவிட்டது. அரசர் பெருமானுடன் விருந்துண்டும், ஆசார உபசாரங்களெல்லாம் எங்கும் கிடைத்தும், அவற்றில் காந்தி சிக்கிக் கொள்ளவில்லை. வந்த காரியத்திலேயே கண்ணுயிருந்தார். இரண்டாவது வட்டமேஜை மகாநாடு முடிவடைகையில், "சரி, நாம் சமரஸம் கொள்ள வகை காணேம். மீண்டும் போரே நிகழும் போலுளது. பிரிந்துபோக வேண்டியதுதான்" என்று மனமொடிந்து மகாத்மா பேச நேர்ந்தது.

---

63. அவசரச் சட்ட ஆட்சி

இதற்கு இடையில், ஒப்பந்தத்தின்படி இந்தியாவில் காரியம் நடவாமல் போகவே, இங்குள்ள தலைவர்கள் கிளர்ச்சி செய்தனர். பண்டித ஜவஹர்லால், ஷெர்வானி இருவரும் கைதியாகிவிட்டனர். எல்லைப்புற காந்தி அப்துல் காபர் கானும் அப்படியே. வங்கத்திலோ அவசரச்சட்ட ஆட்சி பிறந்துவிட்டது. இந்நிலையில் மகாத்மா வந்திறங்கினுர் பம்பாயில். என்றுமில்லாத வரவேற்பு அவருக்கு நடந்தது. உடனே காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடிற்று. விஷயங்களை எல்லாம் காந்தி அறிந்துகொண்டார். அவருக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இடையே தந்தி மேல் தந்திகள் பறந்தன. செங்கோலுக்கு முன்னே சங்கீதமா என்பர். அங்ஙனமே அரசாங்கம் ஒன்று இருக்க, அதற்குப் போட்டி அரசாங்கம்போல் காங்கிரஸ் திகழ்வதா என்று அதிகாரவர்க்கம் எண்ணிவிட்டது. மகாத்மா காந்தி, ஸர்தார் படேல் இருவரும் கைது செய்யப்பட்டனர். சுருங்கச் சொல்லின் மீண்டும் போர் மூண்டுவிட்டது. ஏற்கனவே

தயாராக இருந்த அவசரச் சட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பதின்மூன்று பிறந்தன!

ஈடு கொடுத்தல்:—பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணம் இவை மார் தட்டிப் போரில் குதித்தன. முன் போல் மாதரும் திரண்டெழுந்தனர். தேச மெங்கும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கைது செய்யப்பட்டார்கள். அடிக்கும் உதைக்கும் கணக்கில்லை என்று சொல்லும்படி காரியம் நடந்தது. அடக்குமுறை கொண்டு அலமாரச் செய்ய எண்ணினர் போலும். தேசம் அலமாரவில்லை. தலை தூக்கி நின்று எல்லா அவசரச் சட்டங்களுக்கும் தேசம் ஈடு கொடுத்தது. வங்கத்திலே சில இடங்களில் ராணுவ ஊர்வலங்கள் நடத்தினர். தேசத்தின் சாபத்தீடு வகுப்புச் சச்சரவுகளும் முளைத்தன. ஆறுமாத காலத்தில் எல்லாவற்றையும் அடக்கி விடுவதாக வில்லிங்டன் சொன்னரென்று ஒரு வதந்தி யுண்டு. போர் அடங்கவில்லை. அன்னியத் துணி பகிஷ்காரம் அதிகமும்முறமாயிற்று. நூறு கோடிக்கு இறக்குமதியாகும் சீமைத் துணிகள் இருபது அல்லது முப்பது கோடிக்கு இறங்கி விட்டன. சுதேச மில் துணியோ முன்னையிலும் மும் மடங்கு பெருகியது. ஒன்றரை வருஷகாலம் அடக்குமுறை தாண்டவமாடியும் இயக்கம் ஒடுங்கவில்லை.

வகுப்புத் தீர்ப்பு:—இதற்கு இடையில் "வகுப்புத் தீர்ப்பு" என்பதாக ஆங்கில அரசாங்கம் ஓர் அறிக்கை செய்தது. இன்னின்னருக்கு இத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும் என்பதே அத்தீர்ப்பின் சாரம். ஹிந்துக்கள், முகம்மதியர், சீக்கியர், கிறிஸ்தவர், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்போர் ஆகிய எவருக்கும் அத்தீர்ப்புக் கண்டு திருப்தி இல்லை. எல்லாரும் கண்டித்துப் பேசினர். ஹிந்து சமூகத்திலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்போரைப் பிரித்து அவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்று அத் தீர்ப்பில் இருப்ப

ளைதக் கண்டு காந்தி மனம் விண்டார். ஹிந்து சமூகத்தி லிருந்து அவர்களைப் பிரித்து வைப்பின் உண்ணு நோன்பு கொண்டு உயிர் துறப்பேன் என்று 1932-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ந் தேதி சிறைக்குள்ளிருந்த வண்ணம் ஆங் கில முதன் மந்திரிக்கு அவர் கடிதம் எழுதினுர்.

தீர்ப்பு மாறல்:—உடனே டாக்டர் அம்பேத்கார் போன்ற பிற்போக்காளர் கூட முன் வந்து, காந்தியின் உயிரைக் காக்க முற்பட்டனர். ஹிந்து சமூகப் பிரதிநிதி கள் அனைவரும் கூடினுர்கள். ஓர் ஒற்றுமை கொண்டார்கள். ஒடுக்கப்பட்ட வகுப்பினரைப்பற்றி அந்த "வகுப்புத் தீர்ப் பில் இருக்கும் அம்சத்தை எடுத்தாக வேண்டும். இல்லா விடின் அனர்த்தம் நேரும்" என்று ஆங்கில ராஜ தந்திரிகள் உணர்ந்துகொண்டார்கள். உடனே வகுப்புத் தீர்ப்பில் அந்த அம்சம் மாறியது. ஒரு வார காலத்தில் காந்தி பெருமிக வெற்றி யடைந்தார். முகம்மதியருக்கும் திருப்தி இல்லாமை கண்டு இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் ஸ்தானம் வகித்த ஸர் பஸ்லி ஹுசேன் என்பார் அந்த ரங்கமாகத் தம் இனத்தாரை வேண்டிக்கொண்டார் அத் தீர்ப்பை ஆதரிக்க. ஆயினும் முடியவில்லை.

வெள்ளை அறிக்கை:—இந்தியா மந்திரியான சர் சாமு வேல் ஹோர் என்பார் வட்டமேஜை மகாநாடு முறையை மாற்றி குறிப்பிட்ட சிலரைமட்டும் தருவித்து, சீர்திருத் தத்தை வகுத்துவிடுவதாகப் பேசினுர். மிதவாதிகளுக்கும் ஆத்திரம் வந்துவிட்டது; கண்டித்தார்கள். பலரை இங்கி லாந்துக்கு மீண்டும் அழைத்து ஆங்கில அரசாங்கம் விசாரணை நடத்தியது. குறைந்தது இவ்வளவு சீர்திருத்த மாவது தர வேண்டுமென்று குறிப்பிட்டு மிதவாதிகள் மன்றுடியும் பயங்காட்டியும் கோரினர். ஒன்றும் பலிக்க வில்லை. ஏற்கனவேயுள்ள ஆட்சி முறையினும் கேடா

யிருக்கும்படியான தன்மையில் சீர்திருத்தம் செய்யப் போவதாக "வெள்ளை அறிக்கை" என்பது பிறந்தது. எல்லாரும் கண்டித்தனர் கூடாதென்று.

---

64. காலத்தின் கோலம்

போர் தொடங்கி ஒரு வருஷத்துக்கு மேலாயிற்று. இயக்கம் ஓயவில்லை. ஆனால் சற்றே சளைத்தது. முதலாவதாகக் காலத்தின் கோலம்; அகவிலை ஏற்றம்; அடிதடி அதிகம்; அளவு கடந்த அவசரச் சட்டமிடுக்கு. அஹிம்ஸா ஆயுதத்துக்கு நிகரில்லை யாயினும், அரசின் பலங்களோ அனந்தம். ஹரிஜன இயக்கத்தில் ஆலயப் பிரவேசமும் சேர்ந்துகொண்டது. சட்ட மறுப்புக் காலத்தில், சட்டசபைகளின் உதவி தேடப்பட்டது. அபிப் பிராய பேதங்கள் ஓங்கின.

சட்டசபை விஷயம்:—1933-ஆம் ஆண்டு மே மாதக் கடைசியில் மகாத்மா காந்தி விடுதலை யடைந்தார். உடனே தேசநிலையை ஆராய்ந்தார்; மூன்றுமாத காலத்துக்கு சட்ட மறுப்பை நிறுத்தினார். மேலே என்ன செய்வதென்று ஆலோசிக்கத் தலைவர்களில் பலரையும் பூனாவில் கூட்டி வைத்துப் பேசினார். ஒத்துழையாமையை நிறுத்திச் சட்ட சபைக்குள் புக வேண்டுமென்று சில தலைவர்கள் பெரிதும் வற்புறுத்தினர். பெருவாரியான சட்டமறுப்பை நிறுத்தித் தனிப்பட்ட நபர்களின் சட்டமறுப்பு நடக்க, அவரும் காரியக் கமிட்டியாரும் சேர்ந்து முடிவு செய்தனர். மீண்டும் காந்தி சிறைபுக நேர்ந்தது. 1933-ஆம் வருஷம் ஆகஸ்டில் அவர் விடுதலையானார். ஒரு வருஷத் தண்டனைக் காலத்தில் பாக்கியுள்ள மாதங்கள் தீரும் வரையில் ராஜீய விஷயமாக

மௌனம் சாதித்தார் அப்பெரியார். ஆயினும், ஊர் ஊராகச் சென்று ஹரிஜனப் பிரசாரம் செய்கையில் தேச நிலைமை நன்கு புலப்பட்டது.

மகாசபையின் நிலை :—சட்டசபைக்குப் போக வேண்டும் என்னும் கட்சியார், கைமேலாகினர். காங்கிரஸ் செத்து விட்டது, ஜனங்களின் ஆதரவு இராது என்றனர் அதிகாரிகள். காங்கிரஸ் சாகவில்லை என்பதைத் தேர்தலில் காட்டுவோம், டில்லி சட்டசபையைக் கலையுங்கள் பார்க்கலாம் என்றனர் தலைவர்கள். டில்லி சட்டசபை கலைக்கப்பட்டது. பார்க்கலாம் தலைவர்களின் வார்த்தையை என்று லார்டு வில்லிங்டனும் கருதினார். இதற்கு இடையில் 1934-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டமறுப்பை அடியோடு நிறுத்தி விட்டார் மகாத்மா காந்தி. காங்கிரஸ் காரியக்கமிட்டியும் அதை ஒப்புக்கொண்டது. சட்டசபைக்குச் செல்லவும் அனுமதி தந்தது.

காங்கிரஸ் சாகாது :—சட்டசபைத் தேர்தலுக்குத் தலைவர்கள் நின்றார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கும் அன்பர் அனைவரும் தேர்தலில் தோற்றுப் போயினர். காங்கிரஸ் காரரே எங்கும் பெருமிதவெற்றி அடைந்தனர். அரசாங்கம் அது கண்டு பிரமித்தது. காங்கிரஸ் சாகவில்லை என்றும் கண்டு கொண்டது. ஒருநாளும் காங்கிரஸ் சாகாதென்று மகா ஜனங்கள் நிரூபித்து விட்டார்கள். இதற்கு இடையில் வெள்ளை அறிக்கையில் கண்ட வண்ணம், சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தை நிராகரிப்பதென்று சட்டசபையிலுள்ள காங்கிரஸ்காரர் சொல்லியுள்ளர்.

பதவி விஷயம்:—இந்நிலையில் 1934-ஆம் வருஷக் கடைசியிலே பம்பாயில் காங்கிரஸ் மகா சபை கூடியது. சட்டசபையில் வெற்றி பெற்ற காங்கிரஸ்காரரையும், வெற்றிக்குக் காரணமான வாக்காளரையும் அச்சபையார் பாராட்டிப்

பேசினர். பாபு ராஜேந்திரப் பிரசாத் அக்கிராசனம் வகித்து, அஹிம்ஸையின் உயர்வை விளக்கி, அரிய பிரசங்கம் செய்தார். சட்டசபைப் பிரவேசத்தையொட்டி ஸதல சுய ஆட்சி சபைகளையும் கைப்பற்ற எங்கும் ஏற்பாடாகி வருகிறது. பல இடங்களில் நல்ல வெற்றியும் கிடைத்துளது.

இனி சீர்திருத்தச் சட்டம் அடுத்த வருஷம் அமுலுக்கு வருமென அனைவரும் எண்ணியுளர் அதுபோது மந்திரி பதவியும் ஏற்றுக்கொண்டு, சுயராஜ்யத்திற்குப் பாடுபடுவதா, ஏற்றுக்கொள்ளாமல் பாடு படுவதா என்று பலரும் ஆலோசித்து வருகின்றனர். அடுத்த 1936-ஆம் வருஷ ஆரம்பத்தில் இலட்சுமணபுரியில் மகாசபை கூடப்போகிறது. அதில் என்ன தீர்மானம் ஏற்படப் போகிறதோ தெரியவேண்டும்.

முடிவுரை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம் தேசத்தின் சரித்திரமேயாம். ஐம்பது ஆண்டுகளாக அது செய்த வேலை விவரம் பாரத, ராமாயணம் போல் விரியும்; பலவாறான நீதிகளையும் புகட்டும். கால தேச வர்த்தமானத்தை மதித்தால், உள்ளதை உள்ளவாறு ஓரளவே வரைய முடியும். இந் நிலையில் அம் மகாசபையின் சரித்திரத்தைக் 'கப்பலில் பாதிப்பாக்கு போடுவது' போல் எழுதியுள்ளோம். "நான் கண்ட இன்பம் இவ் வையகமும் காண்க!" என்று ஒரு பெரியார் கூறியது போல் நாம் அறிந்ததை அனைவரும் அறிதல் வேண்டும் எனும் எண்ணமே இந் நூலின் எழுச்சிக்குக் காரணம். பொன்விழாவை மதித்து இந்நூல் நமது தேச மாதாவுக்கும் அன்பருக்கும் ஒரு காணிக்கை போல் சமர்ப்பிக்கப்படுகிறது.

வந்தே மாதரம்!

அனுபந்தம்

இன்றுவரை காங்கிரஸ் மகாசபை நடந்த நகரம், அக்கிராசனம் வகித்த தலைவர்களின் பெயர், விஜயம் செய்திருந்த பிரதிநிதிகளின் தொகை இந்த விவரங்கள் :—

ஆு	நகரம்	அக்கிராசனர்	பிரதி நிதிகள்
1885	பம்பாய்	ஸ்ரீ உமேச சந்திர பானர்ஜி	72
1886	கல்கத்தா	தாதாபாய் நௌரோஜி	434
1887	சென்னை	பத்ருதீன் தயாப்ஜி	607
1888	அலகாபாத்	ஆண்ட்ரூ ஜார்ஜ் யூல்	1248
1889	பம்பாய்	ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்	1889
1890	கல்கத்தா	ஸர் பிரோஸ் ஷா மேத்தா	677
1891	நாகபுரி	அனந்தாசார்லு	812
1892	அலகாபாத்	உமேச சந்திர பானர்ஜி	625
1893	லாகூர்	தாதாபாய் நௌரோஜி	867
1894	சென்னை	ஆல்பிரட் வெப்	1163
1895	பூனா	சுரேந்திர நாத பானர்ஜி	1584
1896	கல்கத்தா	ரஹிம்துல்லா ஸயானி	784
1897	அமராவதி	சங்கரன் நாயர்	692
1898	சென்னை	ஆனந்த மோகன் போஸ்	614
1899	லக்ஷ்மணபுரி	ராமேச சந்திர தத்தர்	739
1900	லாகூர்	சந்தாவர்க்கர்	567
1901	கல்கத்தா	வாச்சா	896
1902	ஆமதாபாத்	சுரேந்திர நாத பானர்ஜி	471
1903	சென்னை	லால் மோஹன் கோஷ்	538
1904	பம்பாய்	ஸர் ஹென்றி காட்டன்	1010
1905	காசி	கோபால கிருஷ்ண கோகுலர்	756
1906	கல்கத்தா	தாதாபாய் நௌரோஜி	1663
1907	சூரத்	டாக்டர் ராஷ் விகாரி கோஷ்	1600
1908	சென்னை	டாக்டர் ராஷ் விகாரி கோஷ்	610

௵	நகரம்	அக்கிராசனர்	பிரதிநிதிகள்
1909	லாகூர்	பண்டித மதனமோகன மாளவியா	243
1910	அலகாபாத்	ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்	636
1911	கல்கத்தா	பண்டித விஷ்ணு நாராயண தரர்	446
1912	பங்கிபூர்	முதோல்கர்	207
1913	கராச்சி	நவாப் ஸையத் முகமத்	349
1914	சென்னை	பூபேந்திர நாத வஸு	866
1915	பம்பாய்	ஸர். எஸ். பி. ஸிந்ஹா	2259
1916	லக்ஷ்மணபுரி	அம்பிகா சரண மஜூம்தார்	2350
1917	கல்கத்தா	ஸ்ரீமதி அன்னிபெஸண்டு	4967
1918	பம்பாய் (வி)	ஜனாப் ஸையத் ஹஸன் இமாம்	3845
,,	டில்லி	பண்டித மாளவியா	4865
1919	அமிருதசரஸ்	பண்டித மோதிலால் நேரு	7031
1920	கல்கத்தா(வி)	லாலா லஜபதி ராய்	6000
,,	நாகபுரி	விஜயராகவாச்சாரியார்	22000
1921	ஆமதாபாத்	ஹக்கீம் அஜ்மல் கான்	
1922	கயா	தேசபந்து ஸி. ஆர். தாஸ்	
1923	டில்லி (வி)	மௌலானா அப்துல் கலாம் அஸத்	
,,	காக்கினடா	மௌலானா முகம்மதலி	
1924	பெல்காம்	மஹாத்மா காந்தி	
1925	கான்பூர்	ஸ்ரீமதி ஸரோஜனி நாயுடு	
1926	கௌஹாதி	ஸ்ரீனிவாச ஐயங்கார்	
1927	சென்னை	டாக்டர் அன்சாரி	
1928	கல்கத்தா	பண்டித மோதிலால் நேரு	
1929	லாகூர்	பண்டித ஜவஹர்லால் நேரு	
1930	....	....	
1931	கராச்சி	ஸர்தார் வல்லபாய் படேல்	
1932	டில்லி	பண்டித மாளவியா	
1933	கல்கத்தா	ஸ்ரீமதி ஸென் குப்தா	
1934	பம்பாய்	பாபு ராஜேந்திரப் பிரஸாத்	

உலகப் பிரசித்திபெற்ற பிரேஞ்சு ஆசிரியர்,
'விக்டர் ஹ்யூகோ' வின் "Les Miserables" என்ற
கதை, நெஞ்சை அள்ளும் மகா காவியங்களுள் ஒன்றாகும்.
இந் நாவலைத் தழுவி எழுதப்பட்டது

அம்பலவாணன்

அல்லது நாவாய்க் கைதி

(துப்பறியும் நாவல்களுள் தலைமை வகிக்கும்,
'ஷண்முக சுந்தரம்' 'விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்'
'தஞ்சை நாயகர் தாழ்வு' முதலிய உயரிய நூல்களின் ஆசிரியர்)

பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., எழுதியது.

200-பக்கங்கள் கொண்ட முதல் பாகம் ரூ. 1-8-0
250 ,, இரண்டாம் பாகம் ரூ. 1-8-0

இந்நூலைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதந்திரச் சங்கு :—இத்தகைய நூல்களை நமது ஜனங்கள் படித்து, இதுபோன்ற முயற்சிகள் மேலும் மேலும் பெருகி, தமிழ் இலக்கியம் விஸ்தரித்து வளர உதவிபுரிதல் அவசியம்.

ஜய் பாரதி :—பல அரிய உண்மைகளை விளக்கும் நவீனம் இது. படிப்போர்க்குத் தெவிட்டாத இன்பமளித்து மானிட இயற்கையை விளக்குவது என்பதற்கு, இதைப் படிக்க ஆரம்பித்தவர்களுக்கு முடித்தபிறகே மறு காரியத்தில் புத்தி செல்லுமென்பதே சிறந்த சான்றாகும்.

The Hindu.—The present book is more faithful to the original and the style also is more vigorous and attractive. Not a single incident in the original has been left out and the characterisation of Ambalavanan has been done very well.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

: : "க லை ம க ள்" : :

தமிழ் மாதப் பத்திரிகைகளுள் தலைசிறந்து விளங்குவது

பிரபலஸ்தரடங்கிய கமிட்டி ஒன்றால் நன்கு நடத்தப்படுவது; பற்பல அருமையான விஷயங்கள் கொண்டது; பொருளீட்டுதலையே நோக்காகக் கொள்ளாதது; தமிழ் வளர்ச்சிக்கே அரும்பாடு பட்டுவருவது; சித்திரப்படங்கள் நிறைந்தது; ஒவ்வொரு சஞ்சிகையும் 100-பக்கங்களுக் கதிகங்கொண்டது. சிறுவரும் சிறுமியரும் உற்சாகத்துடன் படிக்கக் கூடியது.

வருட சந்தா (தபால் செலவுடன்)

இந்தியா, பர்மா, ஸிலோன்	... ...	ரூ.	4—0—0
மலாய் நாடு, தென் ஆபிரிக்கா	... ...	,,	6—0—0
தனிச் சஞ்சிகை	... ...	,,	0—6—0

சில முக்கிய அபிப்பிராயங்கள்

தனவணிகன் :— * *அறிவைப் பெருக்கும் கட்டுரைகள்; இனிய கதைகள்; கலைப்பெருக்கு மிக்க ஆராய்ச்சிகள்; நாட்டுச் சரித்திரங்கள்; சிறுவர்களுக்கான இன்றியமையாத பொருள்கள், 'கலைமகளை' அழகு செய்து நிற்கின்றன.*

The Hindu —*It has always aimed at and maintained a high cultural standard. *It is a sort of family Magazine* containing matters of interest to the father, mother and the kiddies.

The Madras Mail.—The issue is rich in contributions to all its sections. The women's section and the children's section are, as usual, well represented. Its list of contributors includes eminent scholars and professors in various subjects.

சுதேச மித்திரன் :— * *வழக்கம்போல் இதில் பல அரிய வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.*

: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை :